# நல்லாசிரியன்

1914௵ ஜூன்மீ முதல் 1915௵ மேமீ வரை

## பத்தாம் சம்புடம்

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்

வெளியிடுவோர்:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1915

விலை ஒரு ரூபாய்

PRINTED AT
THE 'CAXTON PRESS,'
MADRAS, E

165408

# CONTENTS

## பொருளடக்கம்


விஷயம் — பக்கம்

... 156
1 அசைபோடும் பிராணிகள் ... ... ... ... 85
2. அருமையாய் வளர்ந்த அன்பன் சரித்திரம் ... ... 61
3. அவாவறுத்தல் ... ... ... ... ... 206
4. அன்னை தன் அன்பு ... ... ... ... 185
5. ஆகாயம் ... ... ... ... ... ... 125
6. ஆடை ... ... ... ... ... ... 174
7. ஆடையும் ஆரோக்கியமும் ... ... ... 212, 233
8. ஆடை நெய்யும் வஸ்துவகைகள் ... ... ... 259
9. ஆஹாரம் ... ... ... ... ... ... 80
10. இடையூறுகள் ... ... ... ... 44
11. இயற்கைப் படிப்பு — அதன் நோக்கமும் முறைகளும் ... 113
12. உல்லாச சஞ்சாரம் ... ... ... ... ... 104
13. [ ]ண், இட வேலைகள் ... ... ... ... 199
14. [ ]ரு தமாஷ் ... ... ... ... 241
15. [ ]னம் கோபாலகிருஷ்ண கோகலே யவர்களின் ஞாபகச் சின்னம் } ... ... 220
16. காலஞ்சென்ற ஆனரபில் மிஸ்டர் கோகலே C. I. E. ... 20
17. காலஞ்சென்ற ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தியைப் பற்றிய சிறு சரிதை } ... 111
18. கிண்டர் கார்ட்டன் ... ... ... ... 59
19. கிண்டர் கார்ட்டன் என்பது என்ன? ... ... ... 132, 148
20. கிராம உபாத்தியாயரின் கடமை ... ... ... 178
21. கீழ்ப்படிதல் ... ... ... ... ... 48
22. குரங்கும் குருவியும் ... ... ... ... 226
23. குழந்தைகளின் குற்றங்களும் அவற்றை திருத்தும் விதமும் ... 239
24. கோகலே இறந்ததற் காற்றும லழுதகை யறவு ... ... 10
25. சமுத்திர அடித்தல் அமைப்பு ... ... ... 29
26. சன்மார்க்கம் ... ... ... ... ... 168
27. சுகாதாரம் ... ... ... ... ... 188
28. செய்யுள் போதிக்கும் முறை ... ... ... 143
29. ஞானம் ... ... ... ... ...
30. டால்ஸ்ட்டாய் பிரபு— ஓர் உபாத்தியாயர் } 25, 68, 97, 121, 164, 169, 193, 217, 244, 265

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 31. | தசாம்சத்தில் முதல் பாடம் | 284 |
| 32. | தண்ணீர் | 82 |
| 33. | தந்த சுத்தி | 14 |
| 34. | தேகதத்துவ சாஸ்திரம் | 256 |
| 35. | தொடர் முறைப் போதனை | 64 |
| 36. | தோட்டம் பயிரிடுதல் | [illegible]02 |
| 37. | நல்லாசிரியன் வாழ்த்து | 2 |
| 38. | நக்ஷத்திரங்களினுல் அறியக்கூடிய பாடம் | 252 |
| 39. | நாயின் வகைகள் | 4 |
| 40. | நாளு ஜனங்களின் நடவடிக்கை | 37, 159 |
| 41. | நித்திரை | 276 |
| 42. | நீராடல் | 88 |
| 43. | பஞ்சேந்திரியங்கள் | 182 |
| 44. | பஞ்சதந்திரம் — சுகிர்ல்லாபம் | 250 |
| 45. | பத்தாம் வருஷம் | 1 |
| 46. | பள்ளிக்கூடத்தில் தெய்வ வணக்கம் | 118 |
| 47. | பாதரசம் | 269 |
| 48. | பாலபோதனை — கதை சொல்லுதல் | 281 |
| 49. | பாலர் பாடசாலைகள் | 145 |
| 50. | பாலர் பாடசாலை | 167 |
| 51. | பூகோளம் | 13 |
| 52. | பெரியோர்களின் பால்ய சரிதம் | 137 |
| 53. | போஜன விதிக் குறிப்புகள் | 261, 271 |
| 54. | மரம் ஏறினவன் பட்டபாடு | 197 |
| 55. | மியூசியம் | 3, 286 |
| 56. | யாத்திரை | 251 |
| 57. | ராஜ வாழ்த்து | 167 |
| 58. | வாந்திபேதி | 40 |
| 59. | வாழை மரத்தைப் பற்றிய ஒரு சம்பாஷணை | 246 |
| 60. | வீடும் பாடசாலையும் | 73 |
| 61. | வீட்டுப் பாடங்கள் | 77 |
| 62. | ஜமாபந்தி | 33 |
| 63. | ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை | 49 |
| 64. | க்ஷௌரம் | 54 |
| 65. | க்ஷேத்திர கணிதம் | 208 |



# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1916௵ மே௴ | மாதம் 12.


## COMPULSORY EDUCATION

## கட்டாயக் கல்வி

சமீபகாலத்தில் மைசூர் நாட்டில் கட்டாயக் கல்வி ஆசாரத்திற்கு வந்திருக்கிற தென்பதைக் கேட்டு அளவிறந்த மகிழ்ச்சியடைகின்றோம். எல்லாச் சிறுவர்களும் 7-வயது முதல் 11-வயது வரையில் கட்டாயம் படித்தே தீரவேண்டும் என அங்கே தீர்மானித் திருக்கிறார்கள். பால போதகாசிரியர்கள் எல்லாம் சிறுவர்களுக்கு நான்கு வயது தொடங்கியே வித்தியாப்பியாசம் செய்யவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டிருக்க, மைசூர் நாட்டினர் 7-வயது முதல் என்று குறித்தது ஏதற்கென்று அநேகர் எண்ணலாம். நான்கு வயது முதலே பாலர்களுக்குக் கல்வி கற்பிக்கலாமாயினும் அதைக் கட்டாயப்-

படுத்தி ஆசாரத்திற்குக் கொண்டுவருதல் பொருந்தாததாகும். சிலர் தம்மக்களுக்குச் சுமார் 7 வயது வரையில் வீட்டிலேயே கல்விகற்பிக்கிறார்கள். அதனால் அநேக அநுகூலங்களும் காண்கின்றன. அதுவுமன்றி நமது நாட்டில் ஆரம்ப வித்தையில் அதிக காலம் செல்லுகின்றது. இதனால் ஒருவாறு பெற்றோருடைய அபிப்பிராயத்திற்கும் இடங்கொடுத்து, பிறகு கட்டாயப்படுத்துவதே உத்தமம் என்றெண்ணி, மைசூர் துரைத்தனத்தார் 7 வயது முதற்கொண்டு என்று நியமித்தனர் போலும்.

நமது இந்தியாவில் பரோடா, மைசூர் ஆகிய இரண்டு சுதேச ராஜ்யங்களில்மட்டும் கட்டாயக் கல்வி தலை காட்டிற்று. பரோடாவில் கட்டாயக் கல்வி தலைசிறந்து விளங்குகின்றது. மைசூர் நாட்டிலும் அவ்வாறே யாகுமென்பதில் சற்றும் சந்தேகமில்லை. அன்றி மைசூர் நாட்டில் உயர்தரக் கல்வியும் கலாசாலைக் கல்வியும் உச்ச நிலை பெற்று விளங்குங்காலம் வந்துவிட்டது. மைசூர் ராஜ்யத்திற்குச் சர்வ கலாசாலைச் சங்கமும் தனியே ஏற்பட்டுவிட்டது. இன்னும் என்னவேண்டும், ஆரம்ப வித்யை முதல் சர்வகலாசாலை வித்யை ஈறாக ஏற்பட்டு விட்டது. அந்நாடு நன்னாடாவதற்கு இந்நாளே நன்னாளாயிற்று.

இனி நமது தேசத்தில் அதிலும் நமது ராஜதானியில் கட்டாயக் கல்வி ஏற்படுவது எப்போது? நமது தேசம் முழுதும் கட்டாயக் கல்வி பரவுங் காலந்தான் நமது கண்திறந்த காலமாகும். ஒரேமுறையில் தேச முழுதும் பரவவேண்டும் என்று நாம் எதிர் பார்த்தால் நமது எண்ணம் எப்போது முடிவு பெறுவது. கொஞ்சங் கொஞ்சமாகச் செய்துவந்தால் விரைவில் எல்லாம் ஒன்றுகூடி நன்மை யுண்டாகும். சிறுகச் சிறுகச் செய்வதே சிறப்பு. இந்த இரண்டு சுதேச ராஜ்யங்கள் செய்ததேபோல் மற்றச் சுதேச ராஜ்யங்களும் செய்யுமானால் எவ்வளவு நன்மை யுண்டாகும். நமது ராஜதானியில் புதுக்கோட்டை, திருவாங்கூர், கொச்சி முதலிய ராஜ்யங்கள் இவ்வரிய காரியத்தை உடனே கைப்பற்றிச் செய்வார்கள் என்று நம்புகின்றோம். இப்படியே இராமநாதபுரம் முதலிய சமஸ்தானாதிபர்களும் தங்கள் எல்லை வரையில் மட்டும் ஏற்பாடு செய்து கொண்டால் அதி விரைவில் கட்டாயக் கல்வி பரவுவதற்கு ஏதுவுண்டாகுமல்லவா?



துரைத்தனத்தாரே இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். என்பது அநேகர் அபிப்பிராயம். இந்த விஷயத்தைச் சொல்லும்போது நமது இந்திய மாதாவின் அருந்தவப் புதல்வராகிய கோக்லே மகிபரின் கொள்கையும் முயற்சியையும் கூறாமல் விட முடியுமோ? அவர் தம் வாழ்நாளெல்லாம் உழைத்து இம்முயற்சியை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்று முயன்றார். துரைத்தனத்தார் அதற்குச் சில காரணங்கள் கூறி அதை உடனே நிறைவேற்றக் கூடாமையைத் தெரிவித்தார்கள். இது நிற்க, துரைத்தனத்தார் செய்வதென்றால் நாடு முழுதும் ஒரேவகையில் செய்யவேண்டும்; ஓரிடத்திற் செய்து மற்றோரிடத்திற் செய்யாமலிருக்க முடியாது. அவர்கள் ஒரு காரியத்தைச் செய்ய முயல்கையில் மற்றொரு காரியம் குறுக்கிடலாம். இப்போது ஏற்பட்டுள்ள சண்டையினால் எத்தனை அரிய காரியங்கள் தடைப்பட்டு நிற்கின்றன. அதனால் ஜனங்கள் தமக்கு முக்கியமாக வேண்டிய விஷயங்களைக் கூடிய மட்டும் தாமே செய்துகொள்ள முயலவேண்டும். தம்மால் இயலாத காரியங்களுக்குத் துரைத்தனத்தாரின் துணையை நாடவேண்டும். மேலும் ஜனங்கள் தம் குறைவுகளைத் தாமே தீர்த்துக்கொள்ள முயல்வார்களானால் தமக்கு வேண்டிய விஷயங்களை நன்கு உணர்ந்து அநுகூலமான விஷயங்களைச் செய்துகொள்ளக் கூடும். துரைத்தனத்தார் செய்வதென்றால் அந்தந்தப் பிரதேசங்களுக்கு வேண்டியவாறு அதி நுட்பமாகக் கவனித்துச் செய்வது அசாத்திய மாகுமன்றோ?

கட்டாயக் கல்வி விஷயமாகப் பொது ஜனங்கள் என்ன செய்யக்கூடும்? நமது நாட்டில் தான தர்மங்களுக்கு அளவில்லை. தானங்களில் அன்னதானம் விசேஷம், அதிலும் வித்தியாதானம் அதி விசேஷம் என்னும் கொள்கை ஏற்பட்டு இருக்கிறது. கொள்கைமட்டும் சரியே. நடப்பதுமட்டும் அநியாயம். அன்ன சத்திரங்களை அணுகி உண்டு உறங்குவோர் பெரும்பாலார் சோம்பேறிகளே. பெரும்பாலும் அன்ன சத்திரங்கள் சோம்பேறி மடங்களாகின்றன. வித்தியாதானத்தை இக் காலத்தில் கவனிப்பார் ஒருவரும் இலர். நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தாம் செய்யும் தான தருமங்கள் பத்தில் ஒரு பங்கைக் கல்வியின் பொருட்டுச் செலவிடுவார்களானால் எவ்வளவு பிர-

யோசனகரமாக இருக்கும். சென்னையிலுள்ள ஸ்ரீமான் கண்ணன் செட்டியார் ஸ்ரீமான் இராமாநுஜம் செட்டியார் ஆகிய இரண்டு சகோதரர்கள் கல்வியின்பொருட்டு தமது தனத்தைத் தண்ணீர்போல் செலவிடுகிறார்கள். இப் புண்ணிய சீலர்களைப்போல் மற்றத் தனவான்களும் கல்வி விஷயமாக மனம் வைப்பார்களானால் கட்டாயக் கல்வி அன்றே உச்சநிலை பெற்று ஓங்கி விளங்காதா? மேற்கண்ட சீமான்கள், உணர்வைப்பற்றிய அறியாமை நோயை ஒழிக்க உயர்தரப் பாடசாலைகளும் எலிமென்டெரிப் பாடசாலைகளும் அமைத்து விளங்கச் செய்வது போலவே, உடலைப் பற்றிய நோயினை ஒழிக்க ஆயுர்வேத வைத்தியசாலைகள் அமைத்திருக்கின்றனர். அன்றியும் அநேக பாடசாலைகளுக்கும் மாணாக்கர்களுக்கும் ஏற்றவாறு உதவி புரிந்து வருகின்றனர். புண்ணிய வசத்தினால் செல்வம் சிறக்கப் பெற்ற சீமான்கள் இவ்வகையான நல்லறஞ் செய்ய நாட்டங் கொள்வார்களானால் அன்றே நம் நாடு நன்னாடாகு மன்றோ.

இது நிற்க, 'கோயிலில்லா வூரிற் குடியிருக்க வேண்டாம்' என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். அதனால் நமது தேசத்தில் ஒரு கோயிலேனும் இல்லாத குக்கிராமமும் இல்லையென்னலாம். ஆலயங்களுக்குக் கால பூசைகளும் உற்சவங்களும் தவறாமல் நடத்த வேண்டுவது அவசியமேயாகும். ஆனால் அமிதமான செலவு செய்து ஆடம்பரங்கள் செய்வதும் அவசியமாகுமா என்பதை அறிஞர்கள் கவனிக்க வேண்டும். மற்றும் வீணான ஆடல் பாடல்களில் கனவான்கள் எவ்வளவோ கண் தெரியாமல் செலவழிக்கிறார்கள். இப்படி யெல்லாம் அதிக்கிரமித்துச் செய்யும் செலவுகளை ஒடுக்கி ஆராயாமற் செய்யும் தானங்களையும் அளவுபடுத்தி ஒவ்வொரு கோயிலையும் அடுத்து அந்த ஆலயத்தின் ஆதரவில் ஒரு பாடசாலை யமைத்து அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் அதில் வாசிப்பது என்று ஏற்பாடு செய்துகொண்டால் கட்டாயக் கல்வி எவ்வளவு சுலபத்தில் எவ்வளவு விரைவில் பரவிவிடும்! ஆலயங்களையும் கடவுளையும் அறிவதற்குக் கல்வியே ஆதாரம். கல்வி யறிவின்மையால் பலர் ஆலயங்களில் நடக்கும் விஷயங்களுக்குக் காரணந் தெரியாமல் தம் மனம்போனவாறு கொண்டு இன்னலடைந்து, தம்முடைய மதமே இன்னதென்று உணராது மயங்குகின்றனர். கிறிஸ்தவப் பிள்ளைகள், தம் ஆலயங்களில் நடக்கும் விஷயங்களுக்கெல்லாம் பெரும்பாலும் காரணங் கூறுவார்கள். இந்துக்களில் அநேக விருத்தர்களுக்கும் தம் ஆலயங்களில் நடக்கும் விஷயங்களுக்குக் காரணம் தெரியாமல் தம் மனம் போனவாறு ஏதாவது கற்பித்துச் சொல்லி விடுகிறார்கள். ஆலயங்களை அடுத்துக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பாடசாலை யமைப்பதனால் உண்டாகும் பயன்களைப் பாருங்கள். ஆலயங்களை யடுத்துப் பாடசாலைகள் அமைப்பதனால் கட்டாயக் கல்வி நிலைபெற்று விருத்தியாவதோடு தெய்வ வழிபாடும் பக்தியும் விருத்தியாகும் என்பதிற் றடையில்லை. அதனால் துரைத்தனத்தாரே எல்லாம் செய்ய வேண்டும் என்று இராமல் நமது நாட்டிலுள்ள சிற்றரசர்களும் ஜமீன்தாரர்களும் மடாதிபதிகளும் ஆலய தர்ம கர்த்தர்களும் தனவான்களும் இவ்வகையில் முன்னுக்கு வருவார்கள் என்று நம்புகின்றோம்.

பத்திராதிபர்.



# INFANTS' EDUCATION

## சுதேச பாலர்களின் வித்தியாப்பியாசம்

(முன் தொடர்ச்சி பக்கம் 264)

ஐரோப்பியர் தேசங்களிலுள்ள பாடசாலைகளில் லத்தீன்-பாஷையைப் படிப்பதுபோல் இங்கு எல்லாப் பாடசாலைகளிலும் ஸம்ஸ்கிருதத்தை முக்கியமாய்க் கற்பிக்கவேண்டும். ஸம்ஸ்கிருதமானது பரதகண்டத்திலுள்ள அநேகபாஷைகளுக்கும் பாலிபாஷைகளுக்கும் தாயாக இருக்கிறது. இப்பரத கண்டத்தில் உயர்ந்தகிரந்தங்களெல்லாம் அந்த வடமொழியிலேயே இருக்கின்றன. ஆகையால் இத்தேசத்தில் ஒவ்வொரு மனிதனுடைய வித்தியாப்பியாசத்துக்கும் ஸம்ஸ்கிருத பரிசயம் அங்கமாக இருக்கவேண்டும். அந்தப் பரிசயமானது இத்தேசத்தாரையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ப்பதற்குச் சகாய பூதமாயிருக்கிறது. எல்லாரும் ஒரு பாஷையாற் பேசுவது தேசத்தின் ஒற்றுமையை உண்டுபண்ணுவதற்கு முக்கிய உதவியாகின்றது.

வித்வான்களாகிய பரத கண்டத்தவர் அபாரமாகியும் அழகாகியும் காதுக்கு இனிப்பாயு மிருக்கிற ஸம்ஸ்கிருதத்தை விட்டு இங்கிலீஷையே யெல்லோரும் சாதாரணமாய்ப் பேசும்போது உபயோகிப்பது எவ்வளவும் சரியன்று. ஆனால் ஸம்ஸ்கிருதத்தை யிப்போதிருக்கும் புதிய மாதிரியாற் போதிக்க வேண்டும். இதைத் தெரிந்து கொள்வதற்கு ஏற்படுத்தி யிருக்கும் சொற்ப காலத்தில் இதைப் படிப்பதற்கும் பேசுவதற்கும் வேண்டிய வல்லமையைச் சீக்கிரம் சம்பாதித்துக் கொள்ளும்படி கற்பிக்க வேண்டும். இதைப் படிப்பதற்கு அதிக அவகாசமிருந்த பூர்வகாலத்திய போதனைகிரமமானது இக்காலத்துக்குச் சரிப்படாது. அதிக பாண்டித்தியம் உண்டாவதற்காக ஸம்ஸ்கிருதத்தையே படிப்பவர்க்கு இப்போதும் ஒரு வேளை முன் மாதிரியே போதித்தாலும் இக்காலம் இங்கிலீஷ்ப் பாடசாலைகளில் அந்தக் கிரமத்தை அநுசரிப்பது அசாத்தியமாம். ஆனாலும் முன் போலவே படிப்பிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தித்தால் ஸம்ஸ்கிருதமானது வித்வான்களாகிய ஆரியர்களிலெல்லாம் வியவகார பாஷையாகாம லிருக்கும்படி தடை பண்ணுவது போலாகிறது.

ஸம்ஸ்கிருதத்தை மாத்திரம் போதிக்கும்படியான பாடசாலைகளில் இங்கிலீஷ்ப் பாஷையின் பரிசயத்தையும் உண்டுபண்ணுவது மிகவும் ஆவசியகமாம். ஸம்ஸ்கிருதம் தெரியாமல் ஸம்ஸ்கிருதம் படித்த ஆரியர்களுக்கும் இப்போது மேன்மேலும் வளரும்படியான ஒற்றுமையின்மை, ஆரிய மதத்துக்கும் ஆரிய தேசத்தாருக்கும் அதிக அபாயகரமாம் இப்போது இவ்விரு வகையோர்க்கு மிருக்கிற ஒருவரோடொருவரது அபிப்பிராய உணர்ச்சியும் அநுகூல நடக்கையும் ஆதரவும் வரவரக் குறைந்து வருகின்றன. லௌகிகர்களுக்கு வைதிகரிடத்தில் நியாயமா யிருக்கவேண்டிய கௌரவம் தினந்தோறும் குறைந்து வருகின்றது. ஆகையால் இவ்விரு வகையோர்க்கும் எப்படியாயினும் சமாதானம் உண்டாகும்படி நடப்பதே முக்கிய கடமை. இங்கிலீஷ் தெரிந்தவரெல்லோரும ஸம்ஸ்கிருதம் தெரிந்துகொள்வதனாலும ஸம்ஸ்கிருத பண்டிதரெல்லாம் இங்கிலீஷை யறிந்து, மேல்நாட்டு வித்தியா சம்பந்தத்தைக் கொஞ்சம் அதிகமா யுண்டுபண்ணிக்கொள்வதனாலும் இப்போதிருக்கிற



வேறுபாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். பண்டிதர்களுக்கு மேல்தேசத்தவரது தத்துவ சித்தாந்தங்களைப் போதிக்க வேண்டும். இதனால் அவர்களுக்கு ஒப்பில்லாத தமது சித்தாந்தக் கிரந்தங்களைத் தெரிந்துகொள்வதற்கும் அதைச் சமர்த்திப்பதற்கும் இன்னும் அதிக சக்தி யுண்டாகும். ஆரிய சித்தாந்தத்தின் பழக்கத்தால் அன்னிய தேசத்தாரது சித்தாந்தங்களுக்கெல்லாம் ஒருவிதமான திருத்தம் உண்டாயிருக்கின்றது. ஆரிய மத சித்தாந்திகளெல்லோரும் தமது சித்தாந்தத்தின் பழக்கத்தால் அன்னிய தேச சித்தாந்திகளுக்கு நேர்ந்த பிரயோஜனத்தையும் அதன் அளவையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஒருவன் ஜனங்களை யொருவழிப்படுத்தவேண்டுமானால், அவன் முதலில் உலக நடவடிக்கையைத் தெரிந்துகொள்ளவேண்டும். இப்போதிருக்கும் பண்டிதர்களில் லௌகிக ஞானம் வரவரக் குறைந்துகொண்டே வருகின்றது. இவர்கள் இத் தேசத்து இங்கிலீஷ் வித்துவான்களை விட்டுத் தூரத்தில் விலகிக்கொண்டே வருகின்றார்கள்.

பரத கண்டத்திலுள்ள யாவர்க்கும் வட மொழியைப் போதிப்பது அசாத்தியமென்பது சரியே. ஆனாற் சிலர் இந்தக் கஷ்டத்தை அதிகமாய்த் தோற்றும்படி சொல்லுகிறார்கள். மகமதியரில் விவேகிகளாகிய ஒவ்வொருவரும் அரபி பாஷையைத் தெரிந்து குரானைப் போதித்துக்கொள்வதற்கு வல்லவராகின்றனர். ஆரியர் மாத்திரம் தமது வேதங்களைப் போதித்துக்கொள்வதற்கு ஏன் பின்வாங்கவேண்டும். தினந்தோறும் செய்யவேண்டிய கர்மாநுஷ்டான சமயங்களிற் பிரயோகிக்கிற பாஷையை அறிந்துகொள்ளாத மடத்தனம் மதத்தை யிழந்துவிடுவதற்காவது மூடபக்திக்காவது காரணமாகின்றது. பண்டிதனென்று சொல்லப்பட்டவனுக்கும் இவ்விதமான குறை யிருக்குமானால் அதைவிட வேறு அவமானமென்ன ?

ஸம்ஸ்கிருத பாஷை யெங்கும் பரவுகை யதிகமாகையால் அதிகக் கிரந்தங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. பண்டிதர் புது மாதிரியாய்ப் போதிப்பதற்கு இஷ்டப்படுவாரானால், அவர்களில் அநேகர் உபாத்தியாயராகிக் கௌரவமான ஜீவனத்தையும் தேடிக்கொள்ளத் தகுந்தவராவார்கள். இந்த

மாதிரியாய்ப் பாடசாலைகளில் ஸம்ஸ்கிருதமானது கிரமமாய்ப் போதிக்கும்படி யேற்படுத்தப்பட்டால் இப்பரத கண்டத்துக்கு அனேகவிதமான அனுகூலமுண்டாமென்பதற்குச் சந்தேகமில்லை.

பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் படிப்பதற்காகத் தூர தேசத்திலிருந்து வரும் மாணாக்கர்களுக்குப் போஜன சாலைகள் முக்கியமா யேற்படுத்தவேண்டும். அவைகளை மதாசாரங்களுக்கு அனுகுணமாகவும் நடத்தவேண்டும். ஆசார சீலரான ஆரியர் மனைகளில் நடப்பதுபோலவே அந்தச் சாலைகளிலும் பிள்ளைகள் நித்திய கர்மாதிகளைப் பண்ணிக்கொண்டு, தமது மதாசாரங்களில் வழுவாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் பிள்ளைகள் மதாசார நிஷ்டராயிருக்கும்படி பார்த்துக்கொள்வதில் மகம்மதியர் நம்மைவிட முதன்மையா யிருக்கின்றார்கள். அவர்கள் பிள்ளைகள் படிக்குந்தோறும் போஜனசாலை ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். ஆனால் ஆரியர் மட்டும் தம் மக்களிடத்திற் கொஞ்சமும் அன்பில்லாமல் உலக நடவடிக்கையை யறியாத சிறு வயதில் லௌகிக விஷயத்தை மாத்திரம் போதிப்பவர் வசத்திலும் இதர மதத்திற்கு இழுப்பவர் வசத்திலும் விட்டுப் பெருத்த அபாயத்திற்கு உட்படுத்துகின்றார்கள். ஆரியச் சிறுவர்களை இந்த அபாயத்துக்கு உட்படாமற் காத்து நன்மார்க்கத்தில் நடக்கும்படி திருத்துவதற்குச் சகாயம் பண்ணத்தக்க மதாபிமானமும் தேசாபிமானமும் உள்ள தனிகராகிய குலத்திற் பிறந்தவர் ஒருவருமில்லையா?

இனிமேற் பெண்களின் வித்தியாப்பியாசத்தைப் பற்றி விசாரிப்போம். இவர்களே யல்லவா முன்னுக்கு விவாகம் செய்துகொண்டு மக்களைப் பெற்றுக் குடும்ப யோக க்ஷேமத்திற்கும் அதன்மூலமாய்த் தேசங்களின் யோக க்ஷேமத்திற்கும் காரணமாகின்றவர்? இத்தேசத்தில் ஆதியிலிருந்து இரண்டு மூன்று தலைமுறைக்கு முன்வரையிலும் ஆரியப் பெண்களின் கல்வி விஷயத்திற் கொஞ்சமும் அனாதரம் இருக்கவில்லை. அவர்களுக்குச் சுயமதப் பழக்கமிருந்தது. அன்றியும், உயர்ந்த இதிகாசங்களான ராமாயண பாரதங்களையும் இன்னும் அனேக



புராண கதைகளையும் தெரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தேச பாஷையில் மத கிரந்தம் தெரிந்திருந்ததென்பதைச் சொல்லவேண்டியதே யில்லை. தேச பாஷையிலிருந்த அனேகமாயிரங் கவிகளும் கீர்த்தனங்களும் தோத்திரங்களும் முகபாடம் செய்திருந்தனர் ஆகையால் அவர் மக்களும் பக்தி நிறைந்த மனையிலே பிறந்து பரிசுத்தமான கீர்த்தனங்களையும் பாடல்களையும் கேட்டு வளர்ந்து வந்தார்கள். மேலும் பெண் பிள்ளைகளுக்கு வீட்டுக் காரியங்களை யெல்லாம் செவ்வையாய்ப் போதித்து வந்தார்கள். அன்றியும் வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்வதிலும், தமது பாதுகாப்பி லுள்ளவரும் வேலைக்காரர் முதலானவரும் செய்யுந் தொழிலினது சொரூபத்தைத் தெரிவிப்பதிலும் சமர்த்தரா யிருந்தார்கள். அவர்களுக்கு வைத்தியத்திலும் சாமர்த்திய மிருந்தது. தமது சிசுக்களுக்குத் தாமே சிகிச்சை செய்துகொண்டிருந்தனர். அனேகர் தையல் வேலையிலும் கானவித்தையிலும் வெகு சமர்த்தரா யிருந்தனர். முக்கியமாய் அவர்களது வித்தியாப்பியாசம், லோக வியவகாரத்திற் செய்யவேண்டிய காரியங்களை நிறைவேற்றுதற்கும் வேண்டிய சாமர்த்தியத்தை ஒவ்வொரு பெண்ணுக்கும் உண்டுபண்ணத் தக்கதா யிருந்தது.

இப்போது பழைய கர்நாடகமென்று சொல்லப்பட்ட அந்த முற்காலத்திய வித்தியாப்பியாசக் கிரமம் அனேகமாய்க் குறைந்துவிட்டது. இப்போதிருக்கிற பெண்கள், மிகவும் அசமர்த்தரும் அசக்தரும் அனேக சமயங்களில் அற்ப புத்தியர்களும் பால புத்தியர்களுமா யிருக்கிறார்கள். ஆகையால் இன்பமாகியும் மேன்மையாகியும் ஆரிய குலத்துக்குச் சகஜமாயுமிருக்கின்ற நன்மார்க்கத்தில் தம் புத்திரரையும் பெண்களையும் செலுத்துவதற்குத் தகாதவராயு மிருக்கின்றனர்.

ஆனாலும் எல்லாரும் அறிந்துள்ள இந்தத் துர்தசையை யொழிக்க அங்கங்கே பெண் படிப்பு என்று பெயர் வைத்து அநேக முயற்சியும் பண்ணுகிறார்கள். ஆனால் அந்த ஏற்பாடுகள் மூன்று பங்கு பச்சிமதேசத்தார் தங்களுக்கு முக்கியமென்று நினைத்திருக்கும் முறையை அனுசரிப்பதனால், அவை நமது தௌர்ப்பாக்கியத்தால் ஆரியகுல ஸ்த்ரீகளுக்கு உப-

காரம் பண்ணுவதற்குப் பதிலாய் அபகாரத்தைச் செய்கின்றன. படிப்பினாலாகவேண்டிய பயன்களைப் பரியாலோசனை பண்ணாமல், ஒரு தேசத்துக்கு உசிதமான கிரமத்தை ஆசார வியவகாரங்களிற் பேதப்பட்டிருக்கிற வேறொரு தேசத்தில் உபயோகிப்பது அவிவேகத்தாற் கண்களை மூடிக்கொண்டு செய்கிற காரியமாகிறது.

அவரவர் பின்னுக்கு நடத்தவேண்டிய காரியங்களை நிர்வகிக்கத் தக்க சாமர்த்தியத்தை உண்டுபண்ண வேண்டுமென்பதேயல்லவா வித்தையைச் சம்பாதிப்பதின் முக்கியக் கருத்து. அப்படிப்பட்ட சாமர்த்தியத்தை உண்டுபண்ணாமற் போகிறதாயிருந்தால், அது கல்வித் திறமேயன்று.

அது கேவலம் புஸ்தகப் படிப்பேயாகிறது. ஆனால் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பெண்களுக்குப் பெருங் கல்வி கற்பிக்கிறார்களே அதன் கருத்தென்னவென்றால், அத் தேசங்களிலுள்ள பெண்கள் புருஷருடனே கல்விப் பொறாமையோடும் நான் முன்னே நான் முன்னேயென்று போட்டியுடன் போராடிப் பரீக்ஷையில் தேறி அனேக விதமான தொழிலிலும் சர்க்கார் உத்தியோகத்திலும் சேர்ந்து, ஜீவனங்களைத் தேடிக்கொள்ள வேண்டிய சாமர்த்தியத்தை அடையும்படி செய்வதே அந்தத் தேசங்கள் இப்போதிருக்கிற நிலைமையில், அங்குள்ள குலஸ்த்ரீகளும் ஜீவனந் தேடிக் கொள்வதற்காக வீட்டைவிட்டு வெளியிற் போகவே வேண்டியிருக்கிறது. இதற்கு அனேக காரணங்களுண்டு. அங்கேயிருக்கும் யௌவன புருஷர்களில் அநேகர் இதர தேசங்களுக்குப் போய்ப் புதிதாய் ஊர்களேற்படுத்திக்கொண்டு அங்கேயே நின்றுவிடுவதனாலும், விதவா விவாகம் விசேஷமாகி ஒருத்தி தனது நாயகன் போனபின் வேறொருவனையும் அவனும் இறந்தால் அதன்மேல் மற்றொருவனையும் இப்படி இரண்டு மூன்று விவாகம் வரைக்கும் செய்துகொள்ளக் கூடுமாகையாலும், புருஷமரணம் அதிகரித்திருப்பதனாலும், இன்னும் இதர காரணங்களாலும் அத் தேசங்களில் வரன் அகப்படாமையாலே அனேக மாதர்கள் விவாகமில்லாமலிருக்கிறார்கள். அங்கே ஒருவன் விவாகம் செய்துகொண்டால் அவன் தாய் தந்தைகளின் வீட்டை விட்டுந்



தானும், தன் மனைவியும் வாசம் பண்ண வேறு இடம் தேடிக்கொள்வதுண்டு. ஆகையால், விவாகமில்லாத பெண்கள் தாய் தந்தைகள் மரித்தபின் ஜீவனம் சம்பாதிப்பதற்காக வெளியிற் போகும்படியே நேரிடுகிறது. ஆனதனாலேதான் அவர்கள் கல்விமான்களாகும் புருஷர்களுக்குச் சமானமாய்த் தாமும் ஆவதற்குப் போராட வேண்டியிருப்பதனால், இதுவரையிலும் புருஷருக்காக ஏற்பட்டிருக்கும் வித்தைகளைத் தாங்களும் படிப்பதே அவசியமாகிறது அப்படிச் செய்யாவிட்டால் இப் போராட்டத்தில் அவர்களுக்குச் சகாய சம்பத்துங் குறைவாகி அற்ப ஜீவனத்தால் வருந்தும்படி நேர்கிறது. ஆகையால் அத் தேசங்களிலுள்ள கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் புருஷர் படிக்கும் வித்தையைப் பெண்களும் படிக்கிறார்கள். பெண்கள் தாங்கள் பின்னுக்குச் சீவனத்தைத் தேடிக்கொள்ளும் விஷயத்திற் புருஷருடனே எப்படிப் போராடுகிறார்களோ அப்படியே இப்போது பரீக்ஷைகளிலும் போராடுகிறார்கள். அங்கே அனேகம் பெண்கள் வைத்தியரும் உபாத்தியாயரும் குமாஸ்தாக்களுமாயிருப்பதுண்டு. அமெரிக்காவிற் சிலர் வக்கீலாகவுமிருக்கிறார்கள். ஆசாரியராகி உபதேசமும் பண்ணுகிறார்கள்.

(தொடரும்)

ஞானபோதினி.

# HINTS ON HEALTH

## ஆரோக்கியாம்சங்கள்

(முன்தொடர்ச்சி பக்கம் - 250)

12. தொக்கினுநு மின்னுஞ் சுகபோ கமுமன்னு
மக்கினி மந்த மயலமொடு — திக்கிடுசால்
பாழை யிலைப்புமறும் பண்ணுபித்த முஞ்சமனும்
வாழை யிலைக்குணரு வாய்.

[வாழையிலையில் அன்னம் புசிப்பதனால் தேகம் மினுமினுப்புறும்; சுகபோகமுண்டாகும்; அக்கினிமந்தம், அயலம், வாயு, இளைப்பு ஆகிய இவைபோகும்; பித்தம் சமனமாகும்.]

13. தென்புவியி னூஞ் செழித்துவள ருஞ்சாலி
வன்பு புழுங்கல் வடிசாதம் — முன்புணவே
வாயுவிலை யத்தால் வலியுமவன் னோயுமிலை
நோயுடையார்க் காகும் நுவல்.

[புழுங்கலரிசிச்சோறு உண்பதனால் வாயுக்கொள்ளாது, பலமுண்டா-காது, நோயுமுண்டாகாது. அது நோயாளிகளுக்கு ஏற்ற உணவு.]

14. பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்
நிச்சயமா கப்பித்தை நீக்குங்காண் — அச்சமற
மூத்திரக்கி ரிச்சிரத்தை முன்பொழிக்குஞ் சேய்க்குமந்த
மாத்திரமுண் டாக்கும் வழுத்து.

பச்சரிசிச்சோறு பலங்கொடுக்கும், வாயுவுண்டாக்கும், பித்தத்தை நீக்கும், மூத்திரக்கிரிச்சிரத்தை ஒழிக்கும்; பிள்ளைகளுக்கு மந்தமுண் டாக்கும்.]

15. மூத்ததயி ருப்புமுண முன்பிறங்கு வத்துகளிற்
கோத்ததிரி தோடங் குடிவிலகும் — பூர்த்தியா
யுண்டபின்பு முற்குநடு வுற்றவையெ லாம்புழுக்கங்
கொண்டடரச் சீரணமா கும்.

[போசனமுடிவில் புளித்ததயிரும் உப்புஞ் சேர்த்துண்டால் திரி-தோஷம்போம், ஜீர்ணம் உண்டாகும்.]

16. மோருமன்ன மும்புசிக்கின் மூளும் பசிமேக
நீருங் குதாங்குரமு நீள்பாண்டும் — போராத
தாகங் கிராணி சலமெறு வீக்கமும்போம்
ஆகவிர ணத்தில்விலக் காம்.

[மோரும் அன்னமும் புசிப்பதனால் பசியுண்டாகும்; மேஹநீர், குதாங்-குரநோய், பாண்டு, தாகம், கிராணி, சலம், ஏறுவீக்கம் ஆகிய இவைபோம். அது இரணக்காரருக்கு ஆகாது.]

17. ஊறுகா யெல்லாம் உதராக் கினிவளர்க்கும்
வீறருசி யென்பதையும் வெல்லுங்காண் — கூறுகின்ற
ஐயமொடு பித்தம் அனிலத்தை யுந்தொலைக்குஞ்
செய்யவடி வேற்கண்ணாய் செப்பு.

[ஊறுகாய் உதராக்கினி வளர்க்கும்; அருசி, ஐயம், பித்தம், வாயு ஆகிய இவைகளைப் போக்கும்.]



18. தண்ணீர் அண்ணாந் துண்டாற் சாருஞ் செவிமந்தங்
கண்ணக் குனிந் துண்டாற் காசமுண்டாங் — தண்ணீர்
குடிக்கவென்றாற் பாத்திரத்தைக் கோதறவே வாயாற்
கடித்தருந்தத் துன்பம் இலை காண்.

[அண்ணாந்து தண்ணீர் குடிப்பதனாற் செவி மந்தம் உண்டாகும்; குனிந்து குடிப்பதனாற் காசரோகம் உண்டாகும்; நிதானமா யிருந்து பாத்திரத்தை வாயிற் கடித்துக்கொண்டு குடித்தாற் சுகமுண்டாகும்.]

19. பழஞ்சோற்றை யந்தப் பழநீரா காரக்
கொழுஞ்சேர்க்கை யோடுதயங் கொள்ளில் — எழுந்தாது
பித்தவா தம்போம் பெரும்பசியா மெய்யெங்கும்
மெத்தவொளி யுண்டாகு மே.

[பழஞ்சோற்றை நீராஹாரத்துடன் சேர்த்துக் காலையில் உண்டால், தாது எழும், பித்தவாதம் போம், பசிதீபனமுண்டாகும், உடலுக்கு ஒளி உண்டாகும்.]

20. மோரும் பழையதுமாய் மோடெடுக்க உண்டார்க்குத்
தீரும் எரிச்சலெலாம் சேயிழையே — தீராத
பித்தப் பிணியும் பிரமைநோ யும்பறக்கும்
உற்றகபந் தூக்கமிகு முன்.

[பழைய சோறும் மோரும் சேர்த்து உண்டால், எரிச்சல்கள், பித்த நோய், பிரமை நோய் ஆகிய இவை தீரும்; கபமும் தூக்கமும் உண்-டாகும்.]

21. தேகம் பலக்கும் அதி தீபனமுண் டாகும்நிறை
மோகம் பெருகுமைய மூர்க்கமறுங் — கோகமிக
வோடி யடையு முயர்கொங்கை மாதரசே
கோதி யடையைக் கொடு.

[கோதுமை யடையைத் தின்பதனால் தேகபலம், பசிதீபனம், போக-முமுண்டாகும்; ஐயம் போகும்.]

22. பாயசங் கொண்டாற் பழையமலம் வாந்திபித்தம்
ஆயாசம் போங்கூறில் அற்பமந்தந் — தூயசர்
வேந்திரிய நன்மை யெழில்வலிம னத்தெளிவோ
டார்ந்தபசி மேதையுமுண் டாம்.

[பாயசங் குடிப்பதனால், பழைய மலம் கழியும்; வாந்தி நிற்கும்; பித்தமும் ஆயாசமும் நீங்கும்; அற்பமந்தம் உண்டாகும்; பஞ்சேந்திரியங்-

களுக்கும் நன்மையுண்டாகும்; அழகும், பலமும், மனத்தெளிவும், பசியும் உண்டாகும்.]

23. உண்டபின்பு நூறடிவைத் தோங்காக் குறுநடையைக்
கொண்டவர்க்கு முன்புகுடன் கொண்டபருந்—திண்டியெலாம்
சேர்ந்தொன்றாய்ச் சீரணிக்குந் தீயமுத்தோ டங்களதி
லார்ந்தொன்ற மாட்டா வறி.

[சோறு உண்டபின்பு நூறு அடி தூரம் குறுநடை கொண்டால் உண்ட சோறு நன்றாய் ஜீர்ணமாகும், முத்தோஷமும் போம்.]

24. காலை யிளவதிகங் கட்டுச்சி நீறதிகம்
மாலை யிலையதிக மாயருந்தில் — வேல்விழியே
காலை மலங்கழியுங் கட்டுச்சி தீபனமாம்
மாலை மணங்குலவும் வாய்.

[காலையில் தாம்பூலம் தின்பதானால் பாக்கு அதிகமாகவும், உச்சியில் தின்பதானால் சுண்ணம் அதிகமாகவும், மாலையில் தின்பதானால் வெற்றிலை அதிகமாகவும் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் காலையில் மலங்கழியும், உச்சியில் பசிதீபனம் உண்டாகும், மாலையில் வாயில் மணமுண்டாகும்.]

25. வாயுமந்தம் பீநசஞ்சு வாசகா சம்மருசி
யேயுதர தோஷ மிவைபோக்குந் — தூயுடற்குக்
காந்திதரும் புத்திக்குங் கட்குநலஞ் செய்யுமணஞ்
சார்ந்தநறுந் தம்பலரசம்.

[தாம்பூல ரசத்தினால் வாயு, மந்தம், பீநசம், சுவாஸகாசம், அருசி, உதர தோஷம் ஆகிய இவைபோம்; உடலுக்குக் காந்தியுண்டாகும், புத்திக்குக் கூர்மையுண்டாகும், கண்களுக்கு நன்மையுண்டாகும்.]

26. திண்ண மிரண்டுள்ளே சிக்கவடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம,-லுண்ணுங்கா
னீர்க்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

27. பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமுமூத்த
ஏலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போம் [போம்
இரண்டடக்கோ மொன்றைவிடோ மிடதுகையிற் படுப்



மூலஞ்சேர் கறிநுகரோ மூத்ததயி ருண்போம்
முதநாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

28. உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்
உறங்குவதி ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்
பெண்கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்ந்துநீ ரருந்தோம்
மண்பரவுங் கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனிபருந்தல் செய்யோம்
நண்புபெற வுண்டபின்பு குறுநடையுங் கொள்வோம்
நமனார்க் கிங்கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

29. ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருக்காற் பேதியுற நுகர்வோந்
தேறுமதி யொன்றரைக் கோர்தர நசியம் பெறுவோந்
திங்களரைக் கிரண்டு தரஞ்சவள விருப்புறுவோம்
வீறு சதுர் நாட்கொருக்கா னெய்முழுக்கைத் தவிரோம்
விழிகளுக்கஞ்சன மூன்று நாட்கொருக்கா லிடுவோம்
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியின் முகரோம்
நமனாங்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

30. பகத்தொழுக்கு மாத ரசங் கரந்துடைப்ப மிவைத்தூட்
படநெருங்கோந் * தீபமைந்தர் மரநிழலில் வசியோஞ் †
சுகப்புணர்ச்சி யசன பசனத் தருணஞ் ‡ செய்யோந்
துஞ்சலுண விருமலஞ்சையோக மழுக்காடை
வகுப்பெடுக்கிற் சிந்துகச மிவைமாலை விடுப்போம்
வற்சலந் தெய்வம் பிதுர்சற் குருவை விடமாட்டோம்
நகச்சலமு முலைச்சலமுந் தெறிக்க மிடமணுகோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

* ஆடு - கழுதை - துடைப்பம் - இவைகளின் தூள் மேலே படும்படி நெருங்கோம். † தீபம் - மனிதர் - மரம் இவைகளின் நிழலில் இரோம் ‡ உண்டது சீரணமாகுங்காலம்.

# SOCRATES AND HIS METHOD OF TEACHING

## ஸோக்ரடஸும் அவருடைய போதனை முறையும்

ஸோக்ரடஸ் என்பவர் கி. மு. 470-ம் ஆண்டில் அத்தேனே பட்டணத்துக் கருகிலுள்ள ஒரு பட்டியில் உதித்தார். இவர் இளம்பிராயத்திலேயே தம் தந்தையரது கற்கொத்துத் தொழிலில் பழகி அதில் சிறந்தவரானார். அத் தொழிலிலும் இவரது நுண்ணிய அறிவு சிறந்து விளங்க, இவர் அவ்விளம்பருவத்தே சமைத்த சிலைகளும் யாவராலும் வியந்து கொண்டாடப்பட்டன.

### இவரது ஞானம் —

பெரியோர் கூட்டத்திற் சென்று அவர்கள் பேசும் அரிய விஷயங்களைக் கவனிப்பதும், கிரந்த கர்த்தாக்கள் தங்கள் அறிவைப் புலப்படுத்தும் பொதுப் பிரசங்கக் கூட்டங்களுக்குப்போய் வருவதும் ஸோக்ரடஸ் என்பவருக்கு சகஜமா யிருந்தது. இஃது இவரது தொழில் துறைக்கு ஏற்றதாயிராவிடினும், இதிலே இவர் தம் மனத்தைச் செலுத்தினதைக் கண்ணுற்ற ஓர் அத்தேனே பிரபு, இவரது அறிவை விருத்தி செய்யுமாறு தத்துவநூல்களை வாசிக்கவும் ஏனைய பெரிய மகான்களோடு பழகவும் இவருக்கு வழிவகை காட்டினார். ஆக இவர் சிறிது காலத்துக்கெல்லாம், தத்துவ ஞானிகளோடு பழகவும் கிரேக்கப் பள்ளிக்கூடங்களுக்குப் போய், நுண்ணிய விஷயங்களைத் தர்க்கிக்கவு மிடம் பெற்றார்.

இவர் விரிந்த, ஆழ்ந்த, எடுப்பான நெற்றியுடையவர். புடைத்த கண்களும், குறுகிய தட்டையான மூக்கும், தடித்த உதடுகளும், அகன்று வட்டமான புயங்களும் உடையவர் இவர், ஆயினும் இவர் தம் தேகக்கூறின் அந்தக் கேட்டினால் ஒருபோதும் அதைரியப்படவில்லை. இவரது குறுகிய தட்டையான மூக்கு இவரது அகன்ற மனக்கண்களுக்குத் தடையா யிருக்கவில்லை. இவரது புடைத்தகண்கள், ஒரு புறத்தை மட்டுமல்ல, நான்குபுறமும் நன்கு பார்த்து, நானா விஷயங்களை ஊகித்தறியச் செய்தபோலும் நிமிர்ந்த நாசித் துவாரங்கள் ஏனைய மனுஷரைப் போல இவரை ஜீவிக்கச் செய்யாமல், காரியங்களை தீர முகர்ந்-



தறியச் செய்து, ஞானம், அஞ்ஞானம், பாண்டித்தியம், மூடத்தனம் என்பனவற்றை வேறுபடுத்திக் காண்பித்தனபோலும் இத்தகைய மனிதனாக, ஞானமே யுருவாக அமைந்து நின்றாற்போல, அக்காலத்தே விளங்கினார் இம்மகாத்துமாவான ஸோக்ரடஸ்.

### இவரது பொறுமை —

ஸோக்ரடஸ் ஸென்றிப்பி (Xantippe) என்ற ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்தார். இவளது பிடிவாதம் அத்தேனே பட்டணத்தாருக்கு ஒரு பழமொழியாயிருந்தது. ஏனைய பெண்கள் பிடிவாதங்கொள்ளும்போது அவ்வூரார், 'நானுமுன்னை நல்லவளென்றல்லோ மதித்திருந்தேன். ஸென்றிப்பிக்கு வலத்தவருவாய்போலிருக்கிறதே' என்று ஒவ்வொருவராகச் சொல்லுவார்கள். இப்படிப் பிரக்யாதிபெற்ற 'இணங்கா நெஞ்சி'யோடு, ஸோக்ரடஸ் இல்லறம் நடாத்துவதில் இணங்கவேண்டியதிருந்ததால், இவர் தம் இல்லக்கிழத்தியிட மிருந்து, தன்னை யொறுத்தல், பொறுமை எனுமித்தகைய அரிய குணங்களை அடைய ஏதுவாயிருந்தது. ஒருநாள் ஸோக்ரடஸுக்கும் அவரது மனைவிக்கும் வீட்டுக்காரியமாக சண்டையுண்டாகி, கோபக்குறிகளுடன் அவள் வாய்கொடுக்க, பின்னர் சண்டையினிறுதியில் அப்பிடிவாதக்காரி, ஒரு பாத்திரம் நிறைந்த சாக்கடைத் தண்ணீரை யவர்மீது கொட்ட, அவர் புன்னகையுடன் 'இடித்தபின்னர் பெய்வ தியல்பே' என்றாராம். இக்காலத்தில் ஸோக்ரடஸ் பூண்டொழுகின பொறுமை யென்னுமணி, பிற்காலத்தில் இவர் தம் சிஷர்களுக்குக் கல்வியை யூட்டும் விஷயத்தில் அநுசரிக்கவேண்டிய பொறுமைக்கு வழி காட்டிற்று.

### இவரது போதனை முறை —

இந்த ஞானியிடம் இவர் தாம் கற்றுக்கொடுக்கும் சிஷர்களிடமிருந்து ஏன் உபகாரம் பெறுகிறதில்லை என்று யாராவது கேட்கநேரின், அவர் தாம் அவர்களுக்கு ஒன்றும் கற்றுக்கொடுக்கிறதில்லையே என்பாராம். ஏனெனில், இவர் வாஸ்தவத்தில் அறிகிறதற்கரிய விஷயங்களைக் கற்பித்தாரெனினும் தாமாய் நேரில் கற்பியாமல், எல்லாவற்றையும் அவர்களிடமிருந்தே வருவித்துக் கற்பிப்பார். நம்மூர் ஆசிரியர்களில் சிலரைப்போல தமக்குத் தெரிந்ததை யெல்லாம் தாமே சொல்லிக்கொடுத்துப் பின்னர் கேட்கிறதில்லை. 'பூனை அரவஞ் செய்யாது, எலியைப் பிடிக்கவேண்டிய திருப்பதால், அதன் கால்களில் மெத்தை யுண்டு' என்று சொல்லிக்கொடுத்து, பின்னர், 'பூனையின் கால்களில் மெத்தை யிருப்பானேன்?' என்று கேட்பார்கள். நம் ஆசிரியர்களில் சிறு

பான்மையோர் இது தகாது, இக்கேள்வி யறிவினால் பிள்ளைகளின் மனோதத்துவம் அணுவேனும் விருத்தியாகிறதில்லை. இதற்குக் 'கிளிப்பிள்ளைப்பாடம்' என்றும், 'குட்டிப்பாடம் போடுதல்' என்றுஞ் சொல்லலாம். அது விஷயமாய், பிள்ளைகளின் அறிவை வெளிப்படுத்த, பின் வருமாறு கேள்விகள் கேட்கலாம்.

**உபாத்தியாயர்** — தம்பீ! வேலியோரத்தில் ஒரு புட்டான் இருக்கிறதென்று வைத்துக்கொள். அதனைப் பிடிக்கவேண்டுமானால், நீ எவ்வாறு போவாய் ?

**பையன்** — மெதுவாய்ப் போவேன்.

**உபாத்தியாயர்** — ஜாடை காட்டு பார்ப்போம் ?

**பையன்** — (ஜாடை காட்டுகிறான்.)

**உபாத்தியாயர்** — மெதுவாய்ப் போவானேன் ?

**பையன்**—சத்தங் காட்டிப்போனால்தான் புட்டான் பறந்துவிடுமே.

**உபாத்தியாயர்** — மெதுவாய்ப் போகவேண்டுமானால் உன் காலில் சப்பாத்து கிடக்கலாமா ?

**பையன்** — சப்பாத்தா ! சப்பாத்து கிடந்தால் சௌகரியமாயிராது. சத்தம் லேசாய் கேட்டாலுங்கூட பறந்திடுமே பறந்து..............ஊம்.

**உபாத்தியாயர்** — சரி, உனக்குப் புட்டான் பிடிப்பதில் பிரியம், பூனைக்கு எதைப் பிடிக்க அதிகப் பிரியம் ?

**பையன்** — எலி பிடிக்க.

**உபாத்தியாயர்** — அப்படியானால் எலிகளைப் பிடிக்க எப்படிப் போகவேண்டும் பூனை ?

**பையன்** — மெதுவாய்ப் போகவேண்டும்.

**உபாத்தியாயர்** — (ஓர் பூனையைக்காட்டி) இதன் பாதங்களைப் பார், இவைகளென்ன ?

**பையன்** — சிறு சிறு மெத்தைகள் போன்றவைகள் (தடவிப் பார்த்து) மெதுவாயிருக்கின்றன.

**உபாத்தியாயர்** — ஏன் இம் மெத்தைகள் மெதுவாயிருக்கின்றன?

**பையன்** — (யோசித்து) எலிகளைப் பிடிக்கப் போகும்பொழுது சத்தங் கேளாதிருக்கும் பொருட்டு.

தவிர ஸோக்ரடஸ் என்பவரும் தாமாய் ஒன்றும் போதியாமல் சகல விஷயங்களையும் சம்பாஷணையின் மூலமாய் போதிந்தார். இவர் தம்முடைய சமயோசிதமான கேள்விகளினாலேயே தம்மிடத்தில் கல்வி பயிலும் மாணவரிடம் மறைந்து கிடக்கும் அறிவை வெளியே கொண்டுவந்தார். தமது சிஷர்கள் தம்மைக் கவரத்தக்க இனிய குரலோடு பேசுவார். ஏககாலத்தில் அவர்களைப் பெரு நகைப்புக்கும் கண்ணீருக்கும் ஆளாக்குவார். ஓர் உண்மையைத் தமது சிஷர்களுடைய மனத்தில் தீரப் பிரஸ்தாபிக்கும் வரையில் அவர்களைத் தம்முடைய கேள்விகளினாலேயே மடங் கடிப்பார்.



ஒருநாள் ஸோக்ரடஸ் ஒரு பையனைக் கூப்பிட்டுப் பின் வரும் கேள்வியைக் கேட்டார்.

**ஸோக்ரடஸ்** — பையா ! பாம்பினது அடித்தோல், மேற்றோலைவிடக் கடினமா யிருப்பானேன் ?

**பையன்** — எனக்குத் தெரியாது.

**ஸோக்ரடஸ்** — உன் தலையை அல்லது அதன் பக்கங்களைத் தடவிப்பார் ? எப்படி யிருக்கிறது ?

**பையன்** — என்ன மெதுவா யிருக்கிறது.

**ஸோக்ரடஸ்** — உன் பாதத்தைத் தடவிப்பார் ? அதெப்படி ?

**பையன்** — மெதுவாயில்லை. சற்று முரடா யிருக்கிறது.

**ஸோக்ரடஸ்** — தலைப்பாகத்தைவிட முரடா யிருப்பானேன் ?

**பையன்** — பாதங்கள் எப்போதுந் தரையில் படுகின்றன. தலை படவா செய்கிறது ?

**ஸோக்ரடஸ்**—சரி, இப்போது பாம்பின் அடித்தோல், மேற்றோலைவிட ஏன் முரடா யிருக்கிறதென்று சொல் பார்ப்போம் ?

**பையன்** — அடித்தோல் தரையில் ஊர்ந்து திரிகிறதில் படுகிறதால், அது மேற்றோலைவிட முரடாகிறது —

கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு சதுரத்திற்கு இரட்டிப்பான சம பரப்பையுடைய வேறொரு சதுரத்தின் ஒரு பக்கத்து நீளத்தைக் கண்டுபிடிக்கும்படி ஓர் பிள்ளையை ஸோக்ரடஸ் என்னமாய் வழி நடத்தினார் என்பதை அக்காலத்துப் பெரியோர் ஒருவர் குறித்திருக்கிறார். அதன் விவரமாவது:—

**ஸோக்ரடஸ்** — (ஒரு சதுரம் வரைந்து, பின்னர் பையனிடம்) பையா! இது ஒரு சதுரமென்று உனக்குத் தெரியுமல்லவா?

**பையன்** — ஆம் ஐயா.

**ஸோக்ரடஸ்** — ஏனப்பா ! சதுரமென்றாய் ?

a b c d — கொடுக்கபபட்ட சதுரம்.
A B C D — நான்மடங்கு பெரிதான சதுரம்.
a′ b′ c′ d′ — இருமடங்கு பெரிதான சதுரம்.




**பையன்.** — (அளந்துபார்த்து) இதன் நான்கு பக்கங்களும் ஒன்றுக்கொன்று சரி, இதன் கோணங்களை இணைக்குங் கோடுகளும் ஒன்றுக்கொன்று சரி.

**ஸோக்ரடஸ்** — இதன் சமபரப்புக்கு இருமடங்கு பெரிதான வேறொரு சதுரமிருக்கலா மல்லவா?

**பையன்** — ஆம் ஐயா.

**ஸோக்ரடஸ்** — இச் சதுரத்துக்கு இருமடங்கு பெரிதான அச் சதுரத்தின் ஒரு பக்கம் எவ்வளவு நீளமுள்ளதாயிருக்கும்?

**பையன்** — இச்சதுரத்தின் ஒரு பக்கத்து நீளத்திற்கு இருமடங்கு கொண்டதாயிருக்கும் அச் சதுரத்தின் ஓர் பக்க நீளம். இந்தச் சதுரத்தின் ஒரு பக்க நீளம் அதன் ஒரு பக்கத்து நீளத்திற்குப் பாதி யிருக்கும்.

**ஸோக்ரடஸ்** — (சதுரத்தைக் காட்டி) இந்தச்சதுரத்தின் ஒரு பக்கத்து நீளம் இரட்டிக்கவேண்டு மென்று சொல்லுகிறாயாக்கும், சரி (அச் சதுரத்து ஒரு பக்கத்து நீளத்தை இரட்டித்து, அதின்மேல் ஒரு சதுரம் வரைந்து) நம்முடைய முந்தின சதுரத்தை, இதனுள் வைப்போம். (ஆச்சரியத்தோடு) இஃதென்ன? இன்னும் இடம் கிடக்கிறது. இன்னும் இரண்டு சதுரங்கள் வைக்கலாம் போலும் (அப்படியே இருவரும் வைத்தார்கள்) அப்பா, இஃதென்ன உருவம்? (படம் பார்க்க.)

**பையன்** — இது ஒரு சதுரம்.

**ஸோக்ரடஸ்** — அப்படியானல் முதல் சதுரத்திற்கு எத்தனை மடங்கு பெரிது இது?

**பையன்** — நாலுமடங்கு.

**ஸோக்ரடஸ்** — நீ சொன்னபடி இருமடங்கு பெரிதல்லவே?

**பையன்** — இல்லே. நான்குமடங்கு பெரிதே.

**ஸோக்ரடஸ்** — (சதுரங்களைக் காட்டி) இம் முந்தின சதுரத்தைப் போன்ற நான்கு சதுரங்களின்மேல் உண்டாயிருக்கும் இச்சதுரத்து நான்கு மூலைகளும் பிளவுபடும்படியாக, மூலைக்குமூலை கோடுகள் வரைந்தால், அக்கோடுகள் இச் சதுரங்களொவ்வொன்றையும் எப்படி வெட்டலாம்?

**பையன்** — பப்பாதியாகவெட்டும் (அப்படியே வெட்டுகிறார்கள்)

**ஸோக்ரடஸ்** — இந்த நான்கு கோடுகளும் ஒன்றுக்கொன்று சரிசமமென்றும், இவைகளினலுண்டாகும் உருவம் சதுரமாகுமென்றுந் தெரியுமல்லவா?

பையன் — ஆம் ஐயா, அது எனக்குத் தெரியும்.

ஸோக்ரடஸ் — (பின்னர் 4 துண்டுகளை ஒன்று சேர்த்துச் சதுரமாக்கி) இந்தச் சதுரம் அந்த 4 சதுரத்தின் எத்தனை பாகங்களினால் உண்டாக்கப்பட்டிருக்கிறது ?

பையன் — உள்ளிருந்த நாலு பாதிச் சதுரங்களினால்.

ஸோக்ரடஸ் — இந்த நாலு துண்டுகளும் எதற்குச் சரி ?

பையன் — முந்தின இரண்டு சதுரங்களுக்குச் சரி.

ஸோக்ரடஸ் — முந்தின சதுரத்திற்கு எத்தனை மடங்கு பெரிதான சதுரமிது ?

பையன் — இருமடங்கு.

ஸோக்ரடஸ் — இச் சதுரம் எந்தக் கோடுகள்மேல் உண்டாக்கப்பட்டிருக்கிறது ?

பையன் — முந்தின சதுரத்தை இரண்டாகப் பிரித்த கோட்டின்மேல்.

ஸோக்ரடஸ் — கோணங்களை இணைத்த கோடுகள் மேல் தானே? (Diagnol).

பையன் — ஆம்.

JAMES G. SUNDRAM,
*Asst. Master, C. M. High School,*
*Mengnanapuram.*

# TOLSTOY AS A SCHOOLMASTER

## டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்.

### தண்டனை.

தண்டனையின் விஷயமாக மற்றும் டால்ஸ்ட்டாய் பின்வருமாறு அபிப்பிராயப்படுகிறார்: கொடுந் தண்டனைகள் விதிப்பதில் மனிதர்கள் எங்கும் வரவர அதிக வெறுப்பே யடைந்து வருகிறார்கள். தூக்குப்போடும் கொலையாளியும் தன் தொழிலைக்கண்டு சகியாமல் முகத்தை மூடிக்கொள்ளுகிறான்; அத் தொழிலானது நாய முறையில் தான் செய்யவேண்டிய வேலையாக ஏற்பட்டு இருந்தபோதிலும், அது மிகவும் பாவமான தொழில் என்று



கருதாதவனில்லை. சில வருஷங்களுக்குமுன் ஒரு பெரிய நகரத்தில் குற்றவாளி ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதற்காகத் தூக்குமரம் தயார் செய்ய அப் பெரிய நாட்டில் ஒரு தச்சனும் முன் வர இசையவில்லை. கடைசியாக வெகு தூரத்திலுள்ள ஒரு நகரத்திலிருந்து அத் தொழிலுக்கு ஏற்றவன் மனமுடைய தச்சன் ஒருவனை வரவழைக்க நேர்ந்ததாம்.

மொனாக்கோ என்னுமிடத்தில் கொலை செய்த குற்றவாளி ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்ததாம்; அந்தத் தண்டனையை நிறைவேற்ற அச்சிறு நாட்டில் ஒருவனாவது முன் வரவில்லையாம். அந்த நாட்டு துரைத்தனத்தார் கொலையாளி ஒருவனை அனுப்பும்படி பிரஞ்சு துரைத்தனத்தாரைக் கேட்டுக்கொண்டனராம். ஆனால் பிரஞ்சு துரைத்தனத்தார் அதற்காகக் கொடுக்கவேண்டுமென்ற கட்டணம் மிகவும் பெரிய தொகையாயிருக்கவே, மரண தண்டனையை மாற்றி, குற்றவாளி ஆயுள் நாள் வரையில் கைதியாகச் சிறைச்சாலையில் இருக்கும்படி விதித்தார்களாம். கொஞ்சகாலத்திற்குப் பிறகு அதுவும் அதிக செலவாக ஏற்படவே, குற்றவாளியைத் தப்பித்துக்கொண்டு வெளியே ஓடிவிடும்படி வேண்டிக்கொண்டார்களாம். அவனோ அதற்குச் சிறிதும் இணங்கவில்லை. கடைசியாக அவனுக்கு உபகாரச் சம்பளங் கொடுத்து அந் நாட்டு எல்லை ஓரத்தில் போய்த் தங்கும்படி செய்தார்கள். இது ஒரு சரித்திர சம்பந்தமான கதை என்று இதை எழுதியவர் வற்புறுத்துகிறார். இதில் எவ்வளவு உண்மையுண்டோ எனக்குத் தெரியாது.

இதற்குப் பொருத்தமாக இன்னொரு கதை உண்டு. ஜார்சி என்னும் தீபத்தில் டயின்ஸ் என்று ஒரு ஷெரிப் இருந்தார். மரண தண்டனை அடைந்த குற்றவாளிகளைத் தூக்கு போட்டு வைப்பது அவரது கடமைகளில் ஒன்று. முதல் தடவை அவருக்கு அந்தக் கடமை செலுத்த நேர்ந்தபோது அதற்காக மிகவும் மனம் வருந்தினார். அதிக திகிலடைந்தார். ஆயினும் ஏற்றுக்கொண்ட கடமையை எவ்விதத்திலாயினும் முடிக்கவேண்டுமென்று மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, அன்றையதினம் தூக்குப் போடுமிடத்திற்குச் சென்றார். வேலை முடிந்ததும் தன் உத்தியோகசாலைக்கு வந்தார். வந்தவர் நோயில் விழுந்தார். விழுந்தவர் எழுந்தாரில்லை. நோய் இன்னதென யாருக்கும் புலப்படவில்லை. பரிதாபமான அக் கொலைக் காட்சியைக் கண்டே அவர் மறித்தாரென்று பத்திரிகைகள் முறையிட்டன. அவர் இப்படி நேருமென்று முன்னமே அறிந்திருந்தால் தம் உத்தியோகத்தையே வேண்டாமென்று விட்டிருப்பார். இவ்வாறு எவரும் இவ்வேலைக்கு உடன்படாமல் நின்று

விடும் பக்ஷத்தில் மரண தண்டனை அறவே நீங்கிவிடும் என்று டால்ஸ்ட்டாய் எண்ணுகிறார்.

டால்ஸ்ட்டாய் முதல்முதல் தாம் சிறுவனாக இருக்கும்போது பாரிஸ் நகரத்தில் ஒருவன் தூக்குப் போடப்பட்டதை நேரில் பார்த்தார். அப்போதுதான் அவருக்கு மரண தண்டனை விஷயத்தில் முதல்முதல் கவனம் சென்றது. அப்பொழுதே அது அவருக்கு முற்றிலும் தவறென்று தோன்றிற்று. ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்கிறான் என்பதையல்லாமல், மரண தண்டனையில் அவருக்கு வேறு விசேஷம் தோன்றவில்லை. ராஜாங்கம் தூக்குப் போட்டது என்று நாம் பேசிக்கொள்ளுகிறோமே அது எப்படி உண்மையாகும். ராஜாங்கம் ஒரு மனிதனல்லவே; அதன் பேரால் ஒரு மனிதன் தானே அந்தத் தொழிலைச் செய்யவேண்டும். அதைச் செய்பவன் தன் வினைக்குத் தானே உத்தரவாதமாகிறானல்லவா. இது நிற்க, மரண தண்டனையால் ஏற்படும் நன்மைதான் என்ன? இந்தத் தண்டனையில்லாத நாடுகளிலும் பிராணபயம் இருப்பதாகத் தெரியவில்லையே.

மரண தண்டனையால் கொலை என்னும் கொடுந்தொழில் தடைபடுவதில்லையென்பது ‘பிரஸிடெண்ட் மகின்லே’ கொலையுண்டதனால் நன்றாக விளங்குகிறது. அவர் யூனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் பெரிய ராஜ்யத்தில் பல நாடுகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியாக அவர் கொலையுண்ண ஒரு வாரத்தின் முன்பு அவர் சுற்றிவந்த நாடுகளிலெல்லாம் மரண தண்டனை நீக்கப்பட்டிருந்தது. அவர் கடைசியாகத் தங்கின மிசிகன் என்னுமிடத்தில்கூட அந்த விபரீத தண்டனை முப்பது வருஷங்களுக்கு முன்னமே நிறுத்தப்பட்டிருந்தது. அவரைக் கொன்ற துஷ்டன் அங்கேயே தன் தீய கருத்தை முடித்துக்கொண்டிருக்கலாம். அந்த இடமோ அந்தத் துஷ்டன் வீட்டுக்கு அதிக அருகில் இருந்தது. அங்கே அவன் அத் தீத் தொழிலைச் செய்து முடித்திருப்பானானால் அவன் சுலபமாகத் தப்பித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவன் மரண தண்டனை கொடுமையாக விதிக்கப்பட்ட ஒரு நாட்டுக்குள் அவர் பிரவேசிக்கும் வரையில் காத்திருந்து அங்கே அவரைக் கொன்றான். மரண தண்டனையால் ஏதேனும் குணமுண்டென்று சொல்லக்கூடுமானால் அது கொலையென்னும் பாபத்தொழிலை வளர்ப்பதென்றே சொல்லவேண்டும்.

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAY 1916
MADRAS

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

| வகுது 11 | 1916ஷு ஏப்ரல்மீ | மாதம் 11. |
| --- | --- | --- |

## MORAL TEACHING IN ELEMENTARY SCHOOLS

## எலிமெண்டரிப் பாடசாலைகளில் சன்மார்க்க போதனை

சன்மார்க்க போதனையும் பக்திமார்க்க போதனையும் எல்லாப் பாடசாலைகளிலும் முறையாக நடைபெற வேண்டுமென்று சில வருஷங்களாக வித்யாதிகாரிகள் வற்புறுத்தி வருகிறார்கள். இந்த இரண்டு வகையான போதனைகளும் இன்னும் சரியான முறையில் நடைபெறுவதாகக் காணப்படவில்லை. கிறிஸ்தவப் பாதிரிமார்களால் நடத்தப்படும் பாடசாலைகளில் மட்டும் மதசம்பந்தமான பாடங்கள் நடைபெற்று வருகின்றன. சில இந்துப் பாடசாலைகளிலும் பக்திமார்க்கபோதனை ஒருவாறு நடைபெற்று வருவதாகக் காண்கின்றது. நல்லொழுக்-

கத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்க மதசம்பந்தமான பாடமே ஏற்றதென்று கருதி இவ்விரண்டு பாடங்களையும் ஒன்று சேர்த்துப் போதிக்கவேண்டுமென்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். இந்துமதப் பாடசாலைகளில் இவ்வாறு நடைபெறுவது சில காரணங்களால் தடைப்படுகின்றது.

இந்தியாவில், முக்கியமாகத் தென்னிந்தியாவில் மதபேதம் அதிகம். அவற்றுள் முக்கியமானவை சைவம் வைஷ்ணவம் என்பன. இவற்றுள்ளும் உட்பிரிவுகள் பல. பல மதஸ்தர்களும் ஒருபாடசாலையில் படிக்க நேரிடுகின்றது. இப்படிப்பட்ட பாடசாலைகளில் மதசம்பந்தமான போதனை நடத்துவது கஷ்டமாகக் காண்கின்றது. அந்தந்த மதத்திற்கே சிறப்பாயுள்ள விஷயங்களை நீக்கி எல்லாமதத்திற்கும் பொதுவாயுள்ள விஷயங்களை ஒன்று திரட்டி போதிப்பதே உத்தமம் என்று தோன்றுகிறது. இதை நோக்குமிடத்து சன்மார்க்க போதனையை ஒட்டிப் பக்திமார்க்கத்தைப் போதிப்பது சுலப சாத்தியமாகும். இதை விட்டு மதவிஷயம் போதிக்க ஆரம்பித்தால் அபிப்பிராயங்கள் வேறுபட்டு விரோதம் உண்டாகின்றது. இதனால் இராமாயணம் பாரதம் முதலியவற்றிலுள்ள கதைகளைப் போதிப்பது நலமென்று சிலர் கருதி நடத்துகிறார்கள். இந்தக் கதைகளைச் சிறுவர்களுக்குப் போதிப்பதில் சிற்சில இடங்களில் முட்டுப்பாடு உண்டாகின்றது. சில கதைகளைக் காரணம் கேட்காமல் சிறுவர்கள் ஒப்புக்கொண்டு கேட்டுக்கொள்ள நேரிடுகின்றது. யுக்திக்கும் அநுபவத்திற்கும் பொருந்தாத கதைகளைக் கேட்டால் சிறுவர்களுக்கு வெறுப்பு உண்டாகிறது. வெறுப்புண்டாகவே அந்தக் கதைகளில் பக்தி குறைகின்றது. அதனால் இவ்விதக் கதைகளைப் போதிக்கும் உபாத்தியாயர்கள் சற்று ஊக்கங்கொண்டு ஏற்ற கதைகளைத் தேர்ந்தெடுப்பது நலமாகும்.

சன்மார்க்க போதனை நடத்துகையில் இவ்விதக்கதைகளை உபமானக் கதைகளாகக்கொண்டு நடத்துவதனால் மிக்க நன்மையுண்டாகும். சன்மார்க்கமே தெய்வ பக்திக்கு ஆதாரமானதாகையால் முன்பு பிரத்தியக்ஷமான திருஷ்டாந்தங்களைக்கொண்டு நல்லொழுக்கத்தைப் போதித்து அதன் வாயிலாக



தெய்வ நிச்சயம், அடியார் பக்தி முதலிய பக்தி மார்க்கத்தைப் போதிக்கவேண்டும். நமது நாட்டில் சன்மார்க்கமே சிறந்த மார்க்கம் எனக்கொண்டு அளவிறந்த நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இதிகாசங்கள் புராணங்கள் ஸ்மிருதிகள் நீதிவாக்கியங்கள் முதலிய அனைத்தும் சன்மார்க்க போதனையைக் குறித்தவைகளே. இவைகளை வெறும் கட்டுரை வாக்கியங்களாகப் போதிப்பதிலும் திருஷ்டாந்தக் கதைகளைக்கொண்டு போதிப்பதே உத்தமமார்க்கமாகும்.

சன்மார்க்கபோதனை ஒருவாறிருக்க, இடையே மதுவிலக்குப்போதனை ஒன்று வந்து நின்று கூத்தாடுகின்றது. இந்த மதுவிலக்குப்போதனை பாலிகா பாடசாலைகளிலும் நடைபெறவேண்டும் என்னும் விவகாரம் இப்போது அமுலுக்கு வருவதாகத் தோன்றுகின்றது. ஆண்பிள்ளைகள் பாடசாலையிலேயே அது அனாவசியமென்றால், பெண்பிள்ளைகள் பாடசாலையிலும் அது வேண்டுமென்று வற்புறுத்துவது வியப்பினும் வியப்பன்றோ?

நமது நாட்டில் பெண்களும் குடிக்கிறார்கள் என்று கருதி அதை நீக்க முயலவேண்டும் என்பதா? புருஷர்கள் குடிப்பதைப் பெண்களைக்கொண்டு நீக்க முயலவேண்டும் என்பதா? சிறுவர்கள் குடிப்பதைத் தாய்மாரைக்கொண்டு தடுக்க முயலவேண்டும் என்பதா? எமக்கு ஒன்றும் புலப்படவில்லை. என்ன காரணங்கொண்டு மதுவிலக்குப் போதனையை இவ்வளவு வற்புறுத்தவேண்டும்? இதன் காரணங்களை அதிகாரிகள் வெளிப்படையாகத் தெரிவிப்பார்களானால் நலமாக இருக்கும். உபாத்தியாயர்களும் ஊக்கங்கொண்டு உழைப்பார்கள்.

மேல்நாடுகளில் ஒவ்வொரு விஷயத்திற்காக ஒவ்வொரு சங்கம் ஏற்படுகிறது. 'நீதிபோதனைச் சங்கம்', 'மதுவிலக்குப் போதனைச் சங்கம்', 'சைவ போஜனச் சங்கம்' முதலிய பல சங்கங்கள் அங்கங்கே உண்டு. அவைகளில் அடுத்து முயல்வோர் தம் நோக்கம் கைகூடுமாறு பலப்பல வகையில் முயல்கிறார்கள். அவர்கள் முயற்சி அந்த நாட்டோடு அடங்காமல் வெளிநாடுகளிலும் பரவி வேரூன்றவேண்டுமென்று அச்சங்கத்தார் நாடுகிறார்கள். அந்த அபிப்ராயங்கள் அதிகாரிகள் மூலமாக வெளி

நாடுகளுக்கு வருகின்றன. இங்கிருக்கும் அதிகாரிகளும் அவை-
களைப் பாடசாலைகளில் போதிக்க வற்புறுத்துகின்றனர். இவ்
விஷயங்களில் எவ்வளவு மட்டும் இந்தத் தேசத்திற்குப்
பொருந்தும் என்பதை அதிகாரிகள் கவனித்துச் செய்வது
அவர்கள் கடமையன்றோ?

நமது நாட்டில் ஏற்பட்டுள்ள சாதாரணக் குறைவுகளை
நீக்கிக்கொள்ள முயல்வது நமக்குற்ற முதற் கடமையாகும்.
பிறகு அந்நிய தேசவாசிகளுடைய சீர்திருத்தங்களை மேற்
கொள்ள முயலவேண்டும். நமது நாட்டில் ஜாதி வித்தியாசத்-
திற்கு ஏற்றதுபோல் ஆசாரங்களும் மாறுபடுகின்றன. நல்-
லொழுக்கம் எல்லோர்க்கும் பொதுவானதாக இருந்தும், சில
ஜாதியாரில் புல்லொழுக்கமும் ஒருவாறு புறக்கணிக்கப்படு
கிறது. அதனை ஆராய்ந்தால் அதிக ஆச்சரியம் உண்டாகிறது —

பொடி போடுவது, புகையிலை அடக்குவது, சுருட்டுப்-
பிடிப்பது, மதுபானம் செய்வது ஆகிய இவை முதலானவை
நம்மவர்களுக்குள் காணப்படுகின்ற சாதாரண குற்றங்களாம்.
ஜாதிவித்தியாசத்தை நோக்கிப் படிப்படியாக இவற்றின் குற்றம்
குறை வடைகின்றது.

பொடிபோடும் வழக்கம் பிராமணர் முதல் பஞ்சமர்
ஈறாக எல்லாருள்ளும் குற்றமென்று ஏற்படக் காணோம்; சர்வ
சாதாரணமாக இருக்கிறது. அது துர்வழக்கமென்றும் தோன்-
றக்காணோம். புகையிலை அடக்குவது தென்னாட்டுப் பிரா-
மணர்களுக்குள் சாதாரணமாக இருக்கிறது; புகையிலையைச்
சுருட்டாகப் பிடிப்பது மட்டும் துர்வழக்கம் அனுசாரம் என்று
கொள்கிறார்கள். பிராமணரொழிந்த மற்றைய ஜாதியாருள்
சுருட்டுப் பிடிப்பது அவ்வளவு குற்றமாக ஏற்படக்காணோம்.
சில ஜாதியாருள் ஏகதேசமாக ஒரோவொரு வேளையில் மது-
பானம் செய்வதால் அது குற்றமாகக் காணவில்லை. இழிந்த
ஜாதிகளுக்குள் தினந்தோறும் மதுபானம் செய்தாலும் குற்ற-
மாகக்காணோம். தினக்குடிக்காரர்கள் மிதக்குடி ஒப்பென்-
றும் அமிதக்குடி தப்பென்றும் கொள்ளுகிறார்கள்.

மேற்கண்ட குற்றங்கள் எவர் செய்யினும் குற்றமேயாகும்.
அப்படியிருக்க ஜாதிக்கேற்றபடி வேறுபட்டு குற்றம் குறை-



படுவானேன்? இவ்வித விஷயங்களைப் பிள்ளைகளுக்கு எடுத்-
துக் காட்டித் தடுப்பது அதிக பிரயோசனமாக இருக்கும்.
மாணாக்கர்கள் சிறுவயதில் விளையாட்டாகப்பழகும் துரப்பி-
யாசங்கள் முடிவில் வினையாக முடிந்து விடுகின்றன. பொடி
போடுவது, சிகரெட், பீடி முதலிய பிடிப்பது முதலிய துரப்-
பியாசங்கள் வேடிக்கையாக ஏற்பட்டு நாளடைவில் பிள்ளை-
களுக்கு விபத்தை உண்டாக்குகின்றன. சிறுவர்களுக்கு ஆரம்-
பத்தில் ஏற்படும் துரப்பியாசங்களை அடக்க முயல்வதே நல்-
லொழுக்க போதனையில் முதன்மையானதாகும்.

பத்திராதிபர்.

# THE LATE RAO BAHADUR C. NAGOJI RAO

## காலஞ்சென்ற ராவ் பகதூர் C. நாகோஜிராவ்

இந்த மாகாணக் கல்விஇலாகாவில் உயர்பதவி உத்தியோ-
கங்களை வகித்துவிட்டு கோயமுத்தூரில் சுகஜீவியாயிருந்துவந்த
ராவ் பகதூர் C. நாகோஜிராவ் இந்தமாதம் 13ஆந் தேதியன்று
கோயமுத்தூரில் அவருடைய சொந்த வீட்டில் இறந்துபோ-
னாரென்று . தெரிந்து விசனிக்கிறோம். காலில் காங்கிரீன்
(Gangrene) என்னும் நோய்கண்டு அவர் இறந்துபோனதாகத்
தெரிகிறது. அவருடைய குடும்பத்தாருக்கு நாம் நமது அனு-
தாபத்தைத் தெரிவிக்கிறோம். மிஸ்டர் நாகோஜிராவ் கோய-
முத்தூரிலேயே பிறந்து வளர்ந்து அவ்வூர் காலேஜிலேயே
எப். ஏ. பரீட்சை தேறும்வரை வாசித்துக்கொண் டிருந்தார்.
அப் பரீட்சை தேறினதும் அவர் இச் சென்னைக்குவந்து பிரெ-
ஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து வாசித்து 1871ஆம் வருஷத்-
தில் பி. ஏ. பட்டதாரியானார். பி. ஏ. க்கு வாசித்துக்கொண்
டிருந்தபோதே அந்த காலேஜ் பிரின்ஸிபாலின் நன்மதிப்பை
அவர் விசேஷமாகப் பெற்றிருந்தார். அதுபற்றி அப்பரீட்சை
தேறினதும் அப் பிரின்ஸிபாலின் சிபார்சின்மேல் அந்தக்
காலேஜ் ஸ்கூல் டிபார்ட்மெண்டிலேயே ராயர் அவர்கள் வேலை-

க்கு எடுத்துக்கொள்ளப் பட்டார். அதுமுதல் 35 - வருஷ காலம் மிஸ்டர் C. நாகோஜிராவ் கல்வி இலாகாவில் வேலை பார்த்தார். ஸ்கூல் டிபார்ட்மெண்டில் வேலைசெய்துகொண்டிருந்தபோது காலேஜ் டிபார்ட்மெண்டில் ஓர் உதவிபோதகர் ஸ்தானம் காலியாக, அந்த காலிஸ்தானத்தில் ஆக்ட்செய்ய அவர் நியமிக்கப்பட்டார். இப்படி 7 வருஷங்கள்போல் கழிந்தன. அப்பால் ராயர் அவர்கள் பிரெஸிடென்ஸி காலேஜிலிருந்து ராஜமகேந்திரபுரம் கவர்ன்மெண்ட் காலேஜிக்கு மாற்றப்பட்டார். அங்கே அவர் அப்போது அந்தக் காலேஜ் பிரின்ஸிபாலாயிருந்த மிஸ்டர் E. P. மெட்காப்புடன் ஒற்றுமையாக உழைத்து அந்தக் காலேஜுக்கு மிகுந்த கியாதியையுண்டாக்கினார். ஆனால், கவர்ன்மெண்டார் அந்த காலேஜிலேயே அவரை வைக்கவில்லை.

1886 ஆம் வருஷம் ஜனுவரிமாதக் கடைசியில் அவரைச் சைதாப்பேட்டை போதனைமுறை காலேஜுக்கு மாற்றிவிட்டார்கள். அந்தக் காலேஜில் அவர் 8 மாத காலம்போல் பிராக்டிஸிங்க் செக்ஷன் ஹெட்மாஸ்டராய் வேலை பார்த்தார். இதற்குள்ளாக கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்களின் தொகையை யதிகமாக்க வேண்டுமென்றும் கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களை ஒரு தனி இன்ஸ்பெக்டரின் டிவிஷனாய்ச் செய்துவிட வேண்டுமென்றும் செய்யப்பட்டிருந்த சிபார்சு சாங்கிஷனாய்விட மிஸ்டர் நாகோஜிராவ் அப் புதிய டிவிஷன் இன்ஸ்பெக்டராய் நியமிக்கப்பட்டார். இம் மாகாணக்கல்வி இலாகாவில் ஒரு பகிர ஸ்கூல்இனிஸ்பெக்டர் உத்தியோகத்தைப் பெற்ற முதல் இந்தியர் அவர்தான். அதுமுதல் பென்ஷன் பெறும்வரை அதாவது 21 - வருஷகாலம் அவர் ஸ்கூல் இன்ஸ்பெக்டராகவே யிருந்தார். ஆனால், இடையே சில வருஷங்கள் கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலாய் அவர் ஆக்ட் செய்ததுண்டு.

ஸ்கூல் இன்ஸ்பெக்டராய் வடக்கே தெலுங்கு ஜில்லாக்களிலும் தெற்கே தமிழ் ஜில்லாக்களிலும் அவர் வேலை பார்த்தார். காலேஜ் போதகராய் எடுத்தபேரைவிட ஸ்கூல் இன்ஸ்பெக்டராய் அவர் எடுத்தபேர் அதிகமென்பதில் சந்தேகமில்லை. அவரை மெச்சிப் பேசாத பிரைவேட் ஸ்கூல்மானேஜர்களே



யில்லையென்று சொல்லலாம். கல்வி இலாகாச் சிப்பந்திகளில் கியாதிபெற்ற ஒரு சிப்பந்தியாயிருந்தது போலவே ராயர் அவர்கள் சென்னை யூனிவர்ஸிடி சகாக்களிலும் ஒரு கியாதி பெற்ற சகாவாயிருந்து வந்தார்.

1906 ஆம் வருஷத்தில் சென்னை யூனிவர்ஸிடி கான்வோகேஷன் அட்ரெஸ் ராயர் அவர்களால் செய்யப்பட்டது. கவர்ன்மெண்டார் இம் மாகாண வித்தியாபி விருத்திக்காக ராயர் அவர்கள் விசேஷமாய் உழைத்து வந்ததைக் கருதி அவருக்கு 1907-வருஷத்தில் ராவ் பகதூர் பட்டம் வழங்கினார்கள். அதே வருஷத்தில் ராயர் அவர்கள் தமது உத்தியோகத்தை விட்டு நீங்கிப் பென்ஷன் பெற்றுக்கொண்டார். அதுமுதல் அவர் சென்ற 8-வருஷகாலமாய் கோயமுத்தூரில் சுகஜீவியாயிருந்து வந்தார். ராயர் அவர்கள் 1852-ல் பிறந்தவரானதால் அவருக்கு இறக்கும்போது 64-வயது. அவரை சென்னைக் கல்வி இலாகாவில் உத்தியோகஞ்செய்த இந்திய "நல்லாசிரியன்"களில் மிகக் கியாதிபெற்ற ஒரு நல்லாசிரியன் எனல் வேண்டும்.

T. S. KOTHANDARAMA IYER,
*Late of the "Swadasamitran".*

# HINTS ON HEALTH

## ஆரோக்கியாம்சங்கள்*

1. தூங்கி விழித்தவுடன் சுத்தோதக மருந்தி
லோங்கிநின்ற பித்த மொழிவதன்றித் — தேங்கு
மலமூத் திரந்தங்கா வாதாதி யுந்தந்
தலமாத் திறமுலவுந் தான்.

[தினந்தோறும் காலையில் விழிப்புற்ற வுடனே கைகால் கழுவிச் சுத்த ஜலம் குடித்து வந்தால், ஓங்கிநின்ற பித்தம் ஒழியும்; மல மூத்திரங்கள் தங்காது கழியும்; வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் தாதுக்கள் மூன்றும் தத்தம் நிலையில் நின்றிலங்கும்.]

* இந்தப் பாடல்கள் தேரனார் (தேரையர்) அருளிய பதார்த்தகுண சிந்தாமணியினின்றும் எடுக்கப் பட்டவை.

2. மிதவார்த்தைக் குள்ளறிவு மெய்ச்சுகமுங் குன்று
மதிவார்த்தைக் கவ்வுரைகெட் டப்போ — டுதிரமிவை
சுண்டும்பொங் கும்பித்தஞ் சூழுதலா லையவினை
யண்டும்பொங் கும்புனலே யாய்.

[மிதமாகப் பேசும் வழக்கத்தைக் கைக்கொண்டால், உள் அறிவும் சரீர சௌக்கியமும் உண்டாகும். அதிகமாகப் பேசும் வழக்கத்தை மேற்கொண்டால், முன் கூறிய உள் அறிவும் சௌக்கியமுங் கெடும்; ரஸ தாதுவும் ரக்த தாதுவும் சுண்டும்; அவ்விரண்டு தாதுக்களுங் குறைவதனால், பித்தம் அதிகரிக்கும்; அதனால் சிலேத்தும ரோகம் பிறக்கும்; அதனால் ஜலரோகம் உண்டாகும்.]

3. இருமலங்க டங்கா விறங்குங்கான் மூன்று
மிருமலங்க டங்கணிலை யெய்து — மிருமச்
சமனுக் கினிசாருஞ் சாராநோ யிட்டஞ்
சமனுக் கினைசாரா தாம்.

[மலத்தையும் மூத்திரத்தையும் தங்காமற் கழித்து வந்தால், வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் பெருமையுள்ள தாதுக்கள் மூன்றும் தத்தம் நிலையில் இருக்கும்; தீபனாக்கினி சமமாக இருக்கும்; நோய்க் கூட்டங்கள் அணுகா; யமனுடைய ஆக்கினை செல்லாது.]

4. கல்லு மணலுங் கரியுடனே பாளைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம் — பல்லதனைத்
தேய்த்திடுவா ராமாகிற் சேராளே சீதேவி
வாய்த்திடுவள் மூதேவி வந்து.

[கல், மணல், அடுப்புக்கரி, பாளை, வைக்கோல், ஆகிய இவைகளால் பல்லை விளக்கலாகாது.]

5. சுத்தப் புனலாடத் தொல்நமைச்சல் ஆயாசந்
தொத்தெரிச்சற் பாரிப்புந் தோன்றாவா — மெத்தனவுங்
காந்தி பலம்பசியுங் கட்டழகும் உண்டாகும்
ஏந்துமுலை மாதே இயம்பு.

[சுத்தமான ஜலத்தில் ஸ்நானம் செய்வதனால், நமைச்சல், ஆயாசம், எரிச்சல், பாரிப்பும் போம்; காந்தியும், பலமும், பசியும், அழகும் உண்டாகும்.]

6. காலைக் குளிக்குக் கடும்பசியுண் டாநோய்போ
மாலைக் குளிக்கவைகள் மத்திபமே — சோலையடை
வாசநீர் சுத்தசலம் வன்னிநீ ராங்கால
தேசமுடற் பேதமுன்னிச் செப்பு.



[காலையிற் குளிப்பதனால் பசியுண்டாகும், நோய்கள் அகலும். மாலையிற் குளிப்பதனால் பசி மந்தப்படும், நோய் உண்டாகும். காலம், தேசம், உடற்கூறு ஆகிய இவைகளை யநுசரித்துத் தண்ணீரிலாவது வெந்நீரிலாவது குளிக்கலாம்.]

7. மஞ்சட் குளிதனக்கு மாறுந்துர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியம் விட்டகலுந் — தொஞ்சலுறும்
ஐயம் ஒழியும் அடர்வியர்வுங் காணாது
வைய மதனில் வழுத்து.

[ஸ்திரீகள் மஞ்சளை யரைத்துப்பூசிக்கொண்டு குளிப்பதனால், உடம்பின் துர்க்கந்தம் போகும், முகத்திலுண்டாகத்தக்க நோய்கள் அகலும், ஐயம் (கபம்) ஒழியும், வியர்வை காணாது.]

8. நோயடருங் காந்திகெடு நுண்ணறிவும் போயொளிக்குந்
தீயகுளிர் துக்கந் தினவுசங்கை — வாய்பேசக்
கூசுதலு முண்டாகுங் கோதாரு மாசுடைக்குப்
பேசுதலு மியாதிதற்குப் பின்பு.

[அழுக்காடை தரிப்பதனால் நோய் அடரும், அழகு கெடும், புத்தி குறையும்; குளிரும் துக்கமும் தினவும் தோன்றும்; மற்றொருவருடன் பேச வெட்கமுண்டாகும்.]

9. பசியா லழகாண்மை பாழியின்பு மோகஞ்
சுசியாவி வார்த்தை இவை சோரும் — பசியாலாந்
தாதினத்தின் சீரணமுந் தள்ளு கிழத்தனமு
மோதினத்தின் பேதமுமா மோர்.

[பசியினால் அழகும் ஆண்மையும் பாழாம்; இன்பம், மோகம், சுசி, ஆவி, வார்த்தை ஆகிய இவை சோர்வுறும்; அன்னரசத்தினாலுண்டாகத்தக்க ஸப்த தாதுக்களும் * நசியும்; கிழத்தனம் மேலிடும்.]

10. தன்மயி ரண்டேயூண் தப்பிமுக்காற் கொள்ளினினன்
சின்மதலை காலைகடல் சேர்பருவ — தன்முகூர்த்த
மொன்றுக்கு ளுன்குக்கு ளோதுமிரண் டுக்குளுண்பர்
நன்றுக்குத் தீயோர் நயந்து.

[இரண்டு வேளை அன்னம் புசித்தலே நன்று; தப்பி மூன்று வேளை புசிக்க வேண்டுமானால், சூரியன் இளம் பருவமாயிருக்கும் காலை நேரத்தில் ஒரு முகூர்த்தத்திற்குள்ளும் (மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளும்),

* ஸப்த தாதுக்களாவன — 1. இரதம், 2. இரத்தம், 3. சுக்கிலம், 4. மூளை, 5. தசை, 6. எலும்பு, 7. தோல்.

காலைப் பருவமா யிருக்கும் உச்சிக் காலத்தில் பதினைந்து நாழிகைக் குள்ளும், மேற்றிசைக் கடலைச் சேர்ந்த பருவமாகிய இராத்திரி காலத்தில் ஏழரை நாழிகைக் குள்ளும் பசியாகிய தீயையுடையவர்கள் அன்னம் அருந்துவார்கள்.]

11. முக்கா லுணவன்றி யெத்தேகி கட்கு முழுவுணவி
லக்கா ரணமன்ன சாகாதிகூடி யரையதிற்பால்
சிக்கா வமுதம்பு தக்கிரங் காலுண்டிச் சேடம்வெளி
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் வளியுமின்றே.

[எவ்விதமான தேகமுடையவர்களுக்கும் முக்கால் வயிற்று உணவே தகுமல்லாமல், முழு வுணவு தகாது. ஏனெனில், அன்னமும் பதார்த்தங்களுங் கூடி அரைவயிற்று உணவாகும்; பால், மோர், ஜலம் ஆகிய இவை கூடிக் கால்வயிற்று உணவாகும்; மிகுதியாயுள்ள கால் வயிற்றை வெறுமையாக வைக்கவேண்டும். அப்படி வெறுமையாய் வைக்காவிட்டால், அன்னத்தை ஜீர்ணிப்பிக்கத் தக்க அக்கினியும் வாயுவும் சஞ்சரிப்பதற்கு இடமிராதாகையால், அன்னம் ஜீர்ணமாகாது.]

T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

# CO-OPERATION

## கூட்டுறவு

மானிடர் வாழ்விற்கு இன்றி யமையாமல் வேண்டப்படுவனவற்றுள் கூட்டுறவு சிறந்ததாகும். அஃது இல்லாதவழி, மக்கள் ஒருங்குகூடி இருக்கு மிடங்களாகிய தெருவாவது, கிராமமாவது, நகரமாவது, ராஜ்யமாவது ஏற்படுவது முடியாததாக இருக்கும். அவசியத்தினால் ஒருவரை யொருவர் நம்பியே ஆகவேண்டும். இந்த நம்பிக்கை யில்லாமல், யாருக்கும் எந்தக் காரியமும் சித்தியாவது நிச்சயமில்லை. எங்கே கூட்டுறவு பலப்பட்டிருக்கிறதோ, அங்கே நம்பிக்கை, சன்மார்க்கம், செல்வம், நாணயம், முயற்சி முதலியன மேலோங்கி யிருக்கும். ஒழுக்கத்தாலும் குணத்தாலும் தாழ்ந்தவர்களுங் கூட, கூட்டுறவின் பயனால், நல்லொழுக்கத்தையும் நல்லகுணங்களையும் உடையவராகின்றார். தங்கள் குணங்களையும் செய்கைகளையும் திருத்திக்கொள்ளாமல் இருப்பவர்கள், கூட்டுறவுச் சங்கங்களினின்றும்



விலக்கப் படுதலால், தங்களுக்கு நேரும் பொருள் முதலான விவகாரங்களை இழக்க வேண்டியது ஏற்படுவதுபற்றித் தங்களுடைய இலாபத்தை உத்தேசித்தாவது, குணத்தாலும் செய்கையாலும் நல்லவராகும்படி கட்டாயப் படுத்தப் படுகிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராக சேர்ந்திருப்பவர்கள், பொருளீட்டலினால் அல்லாமல் பிறிதொரு அங்கத்தினற்கு உதவியினால், குறிப்பிட்ட நல்ல காரியத்திற்காக உபகாரத்தைப் பெறுகிற படியால், பெற்ற அப்பொருளை வீணானதும் அதிக உபயோக மில்லாததுமான விஷயங்களில் செலவழிக்காமல், ஜீவனத்திற்காவது பொருட் சேர்க்கைக்காவது ஏதுவா யிருக்கிற, குறிப்பிட்ட தொழில் முயற்சிகளில் உபயோகப் படுத்தி, அதிக லாபத்தையும் சம்பாதிக்கின்றவர்களாக ஏற்படுகிறார்கள். அதனால், செய்வினை திருந்தச் செய்தலும், ஊக்கமுடையவ ராதலும், அளவறிந் தழித்துண்ணுதலும், நாணயமா யிருத்தலும் முதலிய பல குணங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. இச்சங்கம் தன்னிடத்து சம்பந்தப்பட்டவர்களில், பெரும்பான்மையோரைத் திருத்தி, செட்டு, தன் மதிப்பு, விடாமுயற்சி, பொருளீட்டல் முதலிய குணங்களை உடையவர்களாகச் செய்வதுபோலப் பெரிய உபகாரத்தை வேறு ஒருவரும் செய்யவில்லை. இதில் சம்பந்தப்படுகிறவர்கள் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றொருவருடைய க்ஷேமத்தையும் குணத்தையும், விரும்புகிறவர்க ளாகவும், பெருக்குகிறவர்களாகவும் இருப்பது பற்றி, ஒரு வித்துவான் சொல்லுகிறதாவது. ஆற்றிலே பிறந்து ஆற்றிலே வாழும் ஆற்றுமீனே, எல்லா ஆறிலும் பொல்லா ஆறு எது? அது வெட்டாறுமல்ல, வெண்ணாறுமல்ல, அழுக்காறு துரையே. பூவிலே பிறந்து பூவிலே வசிக்கும் பூநாகமே, எல்லாப் பூவிலும் பொல்லாப் பூவெது? அது மல்லிகைப் பூவுமல்ல, மந்தாரைப் பூவுமல்ல, எரிப்பு. ஆமையிலே பிறந்து ஆமையிலேயே வளர்ந்து ஆமை பிடித்துத் தின்னும் ஆமை குத்தியே எல்லா ஆமையிலும் பொல்லாமை எது? அது கிணற்றாமையும் அல்ல குளத்தாமையும் அல்ல, ஆற்றாமை ஐயா. அழுக்காறு என்றாலும், எரிப்பு என்றாலும், ஆற்றாமை யென்றாலும் வழக்கத்தில் குறிக்கும் பொருளை

என்பதை உணர்த்துகிற தென்பதை ஏனையோர்களும் அறிவார்கள். இப்படிப்பட்ட பொறாமை, வஞ்சகம், பொய்ம்மை, முதலியன இல்லாமல் ஒழிந்து போகின்றன. ஜாதி துவேஷம் மத துவேஷம் முதலியவற்றின் வலிமையைக் குறைத்து, சினேகத்தைப் பலப்படுத்துவதில் இதற்குச் சமானமாக வேறு ஒரு முயற்சியும் இல்லையென்றே சொல்லலாம். இது நிலை கொள்ளும் இருப்பிடமாவது மரியாதையான தொழிலாவது இல்லாத குறவர், தொம்பரவர் முதலானவர்களையும் ஒருவழிப்படுத்தி, ஸ்திரமாக ஒரு தொழிலைச் செய்து, உண்மையாகவும் மரியாதையாகவும் பிழைக்கும்படியான நிலைமையில் கொண்டு வந்திருக்குமானால், மற்றைய ஜனசமூகத்துக்கு இதனால் செய்யக்கூடிய நன்மையைச் சொல்லுதல், எளிதாகக் காணப்படவில்லை. தற்காலம் நமது தேசத்தில் கல்வியும், விவசாயமும், கைத்தொழிலும் வியாபாரமும் பெருக வேண்டியது அவசியமாக இருப்பதால், நாம் கைக்கொள்ள வேண்டிய இன்றியமையாத முயற்சி, கூட்டுறவு தவிர வேறொன்றுமில்லை. இக்காரியம் சித்திபெற வேண்டியதற்கு ஒற்றுமை அவசியம். எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம். முதலாவது, குடும்பத்தில் ஒற்றுமையில்லாமல் சில குடும்பங்கள் சீர்கெட்டுப் போயிருப்பதை யாவரும் உணர்வார்கள். இவ்வித ஒற்றுமையில்லாத பக்ஷத்தில், யாதொரு காரியமும் நடவாதென்பதையும் தெரு முதலிய கிராமங்களும் ஏற்படா வென்பதையும் முன் தெரிவித்திருக்கிறபடியால், இங்கு அதன் விவரத்தை தெரிவிக்க வேண்டியது அனுவசியமென்று விட்டு விடுகிறேன்.

பொருளையும் சரீர உழைப்பையும், பொது நன்மைக்காக உபயோகப்படுத்துகிறவர் எவ்வளவு மிகுதியாகக் கிடைத்தாலும் கூட்டுறவு என்பது ஒன்று இல்லாதிருக்குமானால், எண்ணிய நன்மை அடைய முடியாதென்பது, நம்முடைய சாமான்ய வாழ்க்கையிலேயே நிகழும் அனுபவமல்லவா? ஆகையால் நாம் எந்த வகையில் மேன்மை யடைய விரும்பினாலும், அவ்விருப்பத்தின் பயனை அடைய வேண்டுமானால், கூட்டுறவை உடையவராக இருத்தல் வேண்டும். 1904-ம் வருஷத்தில் ஐக்கிய நாணயச் சங்கச் சட்டத்தை (Co-operative Credit Societies



Act) துரைத்தனத்தார் செய்து, கொடுக்கல், வாங்கல் செய்வதற்குக் கிராமச் சங்கங்களையும், நகரச் சங்கங்களையும், அந்தந்த இடத்திலுள்ளோர் ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், தகுந்த அதிகாரிகளைக் கொண்டு அந்தச் சங்கங்களை தாங்கள் மேல் விசாரணை செய்து வருகிறோமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

மேற் சொல்லிய சங்கங்களை மேல்விசாரணை செய்வதற்குத் தகுந்த கூட்டுறவு முறைகளைப் போதிக்கவும், ரிஜிஸ்டரார் என்று சொல்லப்படும் ஒரு அதிகாரியை, ஒவ்வொரு மாகாணத்திற்கும் நியமித்திருக்கிறார்கள்.

தொழிலாளிகள் பலர் சேர்ந்து, வேண்டிய மூலதனத்தைத் தாங்களே செலவிட்டு, வருகிற லாபத்தைத் தாங்கள் பெறும் கூலிக்குத் தக்கபடி பிரித்துக் கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களை, ஐக்கிய தொழிற் சங்கங்களென்று சொல்லலாம்.

1904 ம் வருஷத்தில் ஏற்பட்ட சட்டம் நாணயச் சங்கங்களுக்கே உரியது. மேற்சொல்லிய வியாபாரச் சங்கங்களும், தொழிற் சங்கங்களும், ஜனங்களுக்கு லாபகரமாகையால், இச்சங்கங்களை ஏற்படுத்தி, நல்ல நிலைமைக்குக் கொண்டுவருகிறதற்கு 1912-ம் வருஷத்தில் மேற்சொல்லிய சட்டத்தைச் சீர் திருத்தம் செய்திருக்கிறார்கள்.

வறுமைத் துன்பத்தை அகற்றுவதற்கு வேண்டிய உதவிகளைத் துரைத்தனத்தார் செய்து வருகிறார்கள் என்பதற்கு கொஞ்சமேனும் சந்தேகமில்லை. இதனை முற்றிலும் ஒழிப்பதற்கு ஜனங்களின் ஊக்கமும் கட்டுப்பாடும் அவசியம்.

ஆதலால், நாம் அனைவோரும் ஒற்றுமையாயிருந்து ஷை கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து, ஷை கூட்டுறவுச் சங்கங்களினால் அடையக்கூடிய மேலான பயனை அடையக்கடவோம்

இந்த மேலான பயன் நமக்குச் சித்திக்கும்படி கடவுள் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

P. RATHINAM PILLAI,
*Teacher, R. C. School,*
*Kumbakonum.*

# BOTANY

## தாவரம்

"முத்து! என்ன வெகு சந்தோஷத்தோடு வருகிறாய்? பாடசாலையில் ஏதாவது பரிசு கிடைத்ததோ?" என்று கேட்டான் சாமி.

2. "சாமி! நான் என்னவென்று சொல்வேன்! உபாத்தியாயர் இன்று ஒரு புதிய பாடம் கற்பித்தார்; ஆஹா! அது எவ்வளவு ஆநந்தமாய் இருந்தது தெரியுமா! அந்தப் பாடத்தைப் படித்தால், வேறு பரிசுகூடவேண்டுமா" என்றான் முத்து.

3. "சரிதான், எனக்கும் நல்ல காலந்தான். என்ன பாடம் அது? எனக்குச் சொல்லக்கூடாதா? இப்போதுதானே கேட்டுக்கொண்டு வந்தாய்; எல்லாம் நினைவில் இருக்குமே. உடனே சொல்லு; உனக்கும் நன்றாய்ப் பதியும்" என்றான் சாமி.

4. "ஆனால் வா, சொல்லுகிறேன். யாராவது கேட்கப் போகிறார்களா என்றுதான் நானும் வருகிறேன். போகலாம் வா" என்றான் முத்து.

5. "எங்கே போவது? இங்கேயே எடு புஸ்தகத்தை, இருவரும் படிக்கலாம்" என்றான் சாமி.

6. "புஸ்தகம் ஒன்றும் கிடையாது பூமியே புஸ்தகம். புத்தியே போதகன். இன்னும் புஸ்தகம் ஏன்? நமது தோட்டத்திற்கு வா, எல்லாம் சொல்லுகிறேன்" என்றான் முத்து.

7. "இதென்ன, எல்லாம் புதுமையாக இருக்கிறது! புஸ்தகமே இல்லையாமே! என்னவோ இருக்கட்டும். அதையும் பார்ப்போம் வா" என்றான் சாமி.

[ஒரு தோட்டத்தில் புகுந்தார்கள்.]

முத்து — நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். சரியாய் பதில் சொல்லு. தெரியாவிட்டால் யோசி.

சாமி — ஆஹா, அப்படியே ஆகட்டும்.



முத்து — இயற்கையாய் உண்டாகும் பொருள்கள் சில சொல் பார்க்கலாம்.

சாமி — சில என்ன, எல்லாம் இயற்கைதான்.

முத்து — எல்லாம் எப்படி இயற்கையாகும்? அந்த வீடு எப்படி உண்டாயிற்று?

சாமி — மனிதன் கட்டினதனால் உண்டாயிற்று.

முத்து — இந்த மரம் எப்படி உண்டாயிற்று?

சாமி — அது தானாக உண்டாயிற்று.

முத்து — சரி, இப்போது தெரிந்துகொள்; தானே உண்டாவது இயற்கைப்பொருள்; மனிதர்களால் செய்யப்படுவது 'செயற்கைப்பொருள்'. இப்போது இயற்கைப் பொருள்களில் சில சொல்லு.

சாமி — மரம், மாடு, மண், கல் முதலியவைகள் இயற்கைப் பொருள்கள்.

முத்து — இந்த உலகத்தில் இருக்கும் இயற்கைப் பொருள்களை எண்ணிச்சொல்ல உன்னால் முடியுமா? பார்.

சாமி — ஓஹோ, இதென்ன சங்கதி! இது யாரால் முடியும்! உங்கள் உபாத்தியாயர் சொன்னாரோ?

முத்து — இல்லை, ஏன் அவசரப்படுகிறாய்? முடியுமா முடியாதா?

சாமி — முடியவே முடியாது, யாராலும் முடியாது.

முத்து — சரி, முடியாதுதான். இத்தனை என்று சொல்ல முடியாவிட்டாலும், இத்தனை வகையென்று சொல்ல முடியுமா?

சாமி — வகையா — சற்று இரு, அதைச் சொல்லலாம். அதுவும் யோசிக்கவேண்டும், நீயே சொல் கேட்கிறேன்.

முத்து — உன்னைச் சுற்றிலும் பார், என்ன இருக்கின்றன?

சாமி — சுற்றிப்பார்த்தால் என்ன இருக்கிறது — ஈயும் எறும்பும் — மண்ணும் கல்லுந்தான் இருக்கின்றன. வேறு ஒன்றும் தெரியவில்லை.

முத்து — வேறு ஒன்றும் வேண்டாம். இப்போது நீ கண்டவைகளையே வைத்துக் கொள்வோம்; ஈ, எறும்பு—மண், கல் — இவற்றில் வித்தியாசம் என்ன? எண்ணிப்பார்.

சாமி — ஈ எறும்புகளுக்கு உயிர் இருக்கிறது, மண், கல்லுக்கு உயிர் இல்லை.

முத்து — அதுதான் சரி, இப்போது நான்கு பொருள் எடுத்தோம். அவைகளைப்பிரித்தால் இரண்டு வகையில் அடங்கின. என்னென்னவகை?

சாமி — உயிருள்ள வகை, உயிரில்லாத வகை.

முத்து — உயிருள்ளது, உயிரில்லாதது தவிர வேறு ஏதாவது உலகத்தில் இருக்கிறதா பார்.

சாமி — இரு, பார்க்கிறேன் — ஒன்றும் காணோமே.

முத்து — சரி, இருக்கட்டும், இந்த மரம் உயிர் உள்ளதா — இல்லாததா? சொல்.

சாமி — மரம் உயிரில்லாததுதான், இதைக் கேட்பானேன்.

முத்து — அவசரப்படாதே. இந்தக் கல்லும் அந்த மரமும் ஒன்றுதானா? யோசித்துப்பார்.

சாமி — ஒன்று தான்.

முத்து — இதைக் கவனி, இந்த மரம் இப்போது இருப்பது போலவே வருகிற வருஷமும் இருக்குமா?

சாமி — இருக்காது, இன்னும் கொஞ்சம் வளரும்.

முத்து — இந்தக் கல்லும் வளருமா?

சாமி — அதெப்படி வளரும், வளராது.

முத்து — அப்படியானால் அவை இரண்டும் உயிரில்லாதவை என்பது எப்படி?

சாமி — மரம் உயிருள்ளதுதான். ஆனாலும், எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

முத்து — சந்தேகம் என்? உயிருள்ள பொருளுக்கும் இதற்குமுள்ள வித்தியாசம் என்ன? எண்ணிப்பார்,



சாமி — உயிருள்ளது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போகின்றது. மரம் இருந்த இடத்திலேயே இருக்கிறது. உயிருள்ளது பார்க்கும், கேட்கும், சாப்பிடும், மூச்சு விடும். மரம் அவைகளைச் செய்வதில்லை. ஆனால் மரம் உயிருள்ளதைப்போலவே நாளுக்குநாள் வளர்கின்றது. இது ஒன்றைக் கொண்டே மரத்தை உயிருள்ளது என்று சொல்லிவிடலாமா?

முத்து — அதென்ன, சொல்லிக்கொண்டே வந்து, விஷயத்தை மறந்துவிடுகிறாயே — மரத்திற்குப் பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி இல்லை என்பது சரிதான், சாப்பிடுவதில்லை, மூச்சுவிடுவதில்லை என்றாயே அதென்ன? செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறோமே, அது எதற்கு?

சாமி — ஆமாம், ஆமாம் மறந்து விட்டேன். அது சரி தான், மரம் மூச்சு விடுகிறதோ?

முத்து — மரம் மூச்சு விடுகிறது உண்டு. அது நமது கண்ணுக்குத் தெரியவில்லை. அதைப் பின்பு சொல்கிறேன். மரத்திற்கு உயிருண்டா? இல்லையா? சொல்லு.

சாமி — உண்டு, முழுதும் உண்டு என்று சொல்வதற்கில்லை.

முத்து — சரி, அப்படியே வைத்துக்கொள். இப்போது இயற்கைப் பொருள்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? சொல்லு.

சாமி — மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முத்து — என்னென்ன?

சாமி — உயிருள்ளது, உயிரில்லாதது, மரம் என்று சொல்லலாம்.

முத்து — சரிதான், இவைகளுக்கு உபாத்தியாயர் தனித்தனி பெயர் சொன்னார். அதைச் சொல்கிறேன், கற்றுக் கொள். உயிருள்ளவைகளுக்கு **'பிராணிவர்க்கம்'** என்றும், உயிரில்லாதவைகளுக்கு **'கனிஜவர்க்கம்'** என்றும், மரம் செடி முதலியவைகளுக்கு **'தாவரவர்க்கம்'** என்றும் சொல்வது வழக்கமாம். மற்றவைகளை நாளைக்குச் சொல்கிறேன்.

சாமி — முத்து, புத்தகமில்லாமல் படித்தாலும் வெகு ஆநந்தமாய் இருக்கிறது. தினம் உன் வீட்டண்டை வருகிறேன். உபாத்தியாயர் அன்றாடம் போதிப்பதை எனக்குச் சொல்லி விடு, போய்வருகிறேன்.

**பத்திராதிபர்.**

# TOLSTOY AS A SCHOOLMASTER

## டால்ஸ்டாய் — ஓர் உபாத்தியாயர்

### தண்டனை.

தண்டனைக்கும் உபாத்திமைக்கும் நெருங்கிய பொருத்தம் உண்டு என்பதைப்பற்றி, பலசந்தர்ப்பங்களில் இதற்குமுன் கண்டிருக்கிறோம். துஷ்டப்பிள்ளைகள் விஷயமாகத் தண்டனை என்னும் முறையானது துஷ்டமனிதர்கள் விஷயத்தில் எப்படியோ அப்படியே யாகின்றது. ஆகையால் அதைப்பற்றிச் சிறிது ஆராய்ச்சி செய்ய வேண்டுவதவசியம்

தண்டனை என்னும் விஷயத்தை டால்ஸ்டாய் முற்றிலும் ஒழிக்க வேண்டுமென்று எண்ணுகிறார். அதுபோலவே மனிதனைப் பலாத்காரம் செய்வதையும் கூடாதென்கிறார். சிறைச்சாலைகள் அறவே ஒழிய வேண்டுமென்பது அவருடைய அபிப்பிராயம். கேட்டவளவில் இது பெரும்பாலார்க்கு விபரீதமாகத் தோன்றும். ஆனால் சிறைச்சாலைகளைப்பற்றி ஆராயும் அறிஞர்கள் பெரும்பாலாரும், ஏறக்குறைய அந்த அபிப்பிராயத்திற்கு வந்து முடிகிறார்கள். அப்படிப்பட்டவர்களுள் மிகச் சிறந்தவராகிய மிஸ்டர் சாரல்ட்டன் லூயி என்பவர். யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் தேசத்தில் சிறைச்சாலைகள் விஷயமாகச் சென்ற இருபது வருடங்களாக உழைத்து வந்திருக்கிறார். அவர் 1903-வருஷம் ஓர் இடத்தில் பேசும்போது, 'நமது நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் அனைத்தும் குற்றத்துக்குக் குருபீடமாக விளங்குகின்றன. இவைகளே குற்றம் போதிக்கும் உயர்தரக் கல்விச்சாலைகளும் சர்வகலாசாலைகளும் ஆகும். இதுவரையில் நடந்திருக்கிற ஆராய்ச்சியைக் கொண்டு பார்க்கும்போது, இப்படிப்பட்ட காரியத்தை நடத்தி வருவதைவிட இவை அனைத்தையும் அறவே ஒழித்துவிடுதலே உலகத்திற்கு நன்மையைச் செய்வதாகும்,' என்று சொல்லுகிறார். பின்னும், 'சிறுகுற்றம் செய்தவர்களைச் சொற்பகாலத்திற்குச் சிறைச்சாலையில் அடைப்பதானது குற்றவாளிகளை உண்டாக்குவதேயாகும். மனிதனுக்கு இயல்பாய் அமைந்த



நிலை சுயேச்சையே அன்றி அடைபடுவதன்று. அவ்வியல்பான நிலையிலேதான் மனிதன் சீர்திருத்தம் அடைவதற்கு அனுகூலங்கள் உண்டு,'' என்று வற்புறுத்துகிறார்.

மேற்சொல்லிய அதிகாரியே வேறொரு சந்தர்ப்பத்தில் இதேவிஷயமாகப் பேசியிருக்கிறார். 'சிறைச்சாலையில் வாழ்வது மனிதனுடைய இயல்பிற்கு முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. மனிதன் பிறருடன் கூடிவாழும் இயல்புள்ளவன், அவனை அடைத்து வைப்பது கௌரவம், கடமை என்னும் எண்ணங்களை அடியோடு ஒழித்துவிடுகிறது. பிறருடன் கலந்துவாழும்போது அனுசரிக்கவேண்டிய கடமைகளையும், அதன் காரணங்களையும் மறக்கும்படி செய்கிறது. அதனால் நற்குணத்திற்கு ஆதரவான நோக்கங்களை அழித்து, சுயேச்சையோடுவாழும் சக்தியை நீங்கச்செய்கிறது. ஒருவனைச் சிறைச்சாலையில் அடைப்பதென்றால் அவனைக் குற்றவாளிகள் வகுப்பிற் சேர்த்து அவர்களோடு கற்கச்செய்வதேயாகும். நான் இதுவிஷயமாக இருபது வருஷகாலம் உழைத்திருக்கிறேன். இவ்வாராய்ச்சியினால் எனக்கு ஏற்பட்டுள்ள உறுதியான அபிப்பிராயத்தை என்னால் கூடியவளவு வற்புறுத்த விரும்புகிறேன். அதாவது, இப்போது சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் குற்றவாளிகளில் பத்தில் ஒன்பதுபேர் அங்கு அடைப்பட்டிருக்க நியாயமே இல்லை.''

மேற்சொன்ன லூயி என்பவர் தீர்மானமில்லாத தண்டனையைப் பெரிதும் நல்லதென்று எண்ணுகிறார்.

தீர்மானமில்லாத தண்டனையாவது இவ்வளவுகாலம் என்று தண்டனையை குறிப்பிடாமல், குற்றவாளிகள் குணம்காட்டக்காட்ட அவர்களைச் சிறைநீக்கித் தகுந்த பார்வையின்கீழ் வைத்திருந்து நல்வழிப்படுத்துவது. ஆனால் திருத்தமே அசாத்தியம் என்று தோற்றக்கூடிய குற்றவாளிகளை இவ்வாறு செய்யவேண்டுமென்பது என் அபிப்பிராயமன்று. நாம் செய்யவேண்டியது என்னவெனில், ஒரு சிறுவன் குற்றமான வழிகளில் தொடங்குவானால், அவன் பிறருடன் கூடிக்கலந்து வாழ்வதற்கான காரணகாரியங்களை அவன் உணரும்படிசெய்து, அதைப் பலப்படுத்தி, நாளைவருவதை இன்று யோசிக்கும் வழக்கத்தை அவ-

னிடம் உண்டாக்கி, தனது காரியங்களுக்குத் தானே உத்தரவாதமாக வேண்டும் என்னும் நல்லறிவை அவனுக்கு ஊட்டி, பிறரிடம் கௌரவமும், எல்லாமனிதரிடமும் சகோதரபாவமும், அவன் செய்கைகளில் தோன்றும்படி அவனை ஒழுகச்செய்ய வேண்டும். இக்காரியம் சிறைச்சாலையிலேயே செய்யக்கூடியதன்று, ஜனசமூகத்திலேயே செய்யக்கூடியதாகும்.

1903-வருஷம் அமெரிக்காவில் நடந்த சிறைச்சாலை சீர்திருத்தத்தைப் பற்றிய மஹாஜனப் பெருங்கூட்டத்தில், சிறைச்சாலைகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டுமென்று பேசப்பட்டது. அதில் அக்கிராசனம் வகித்த மிஸ்டர் J. O. P. ஸ்டோக்ஸ் என்பவர் சிறைச்சாலை விஷயமாக வேறுசிலரைச் சேர்த்துக் கொண்டு வெகுகாலம் உழைத்தவர். அவர் பின்வருமாறு பேசியிருக்கிறார். அமெரிக்காதேசத்துச் சுதேச சிறைச்சாலை சீர்திருத்தச்சங்கம் 32-வது வருஷத்திய மஹாகூட்டம் கூடியபொழுது ஒரு நூறுக்கு குறையாத சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களும், இச்சங்கத்தைச் சார்ந்தவர் பலரும் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தனர். அக்கூட்டம் ஐந்துநாள் நடைபெற்றது. அதில் பேசிய பல உபந்நியாசகர்களும் சிறைச்சாலைகளைக் கண்டித்தே பேசினார்கள். ஒருவராவது மறுத்துப்பேச முன்வரவில்லை. சிறைச்சாலைகள் குற்றத்தை பரிபாலிக்குமிடங்களாக ஏற்பட்டிருக்கின்றன வென்றும் அவை குணப்படுத்தும் குற்றவாளிகளைக் காட்டிலும் சிருஷ்டி செய்யும் குற்றவாளிகளே அதிகப்பட்டவர்கள் என்றும் பேசினார். அங்கே பேசியவர்களுள் பலர் இவ் விஷயத்தைப்பற்றித் திடமுடன்பேச அதிகாரமுள்ளவர்கள். அவர்கள் எல்லோரும் சிறைச்சாலைகளால் குற்றங்கள் வளர்கின்றனவென்றும் குற்றவாளிகள் அதிகமாகக் குணக்கேடு அடைகிறார்கள் என்றும் இடித்துப் பேசினார்கள்.

சிறைச்சாலைகளை நடத்துபவரும் அக்காரணத்தால் அவைகளைப்பற்றி அதிகம் தெரிந்தவர்களுமான இவர்கள், சிறைச்சாலைகளை அவ்வளவு திட்டமாகக் கண்டித்துப் பேசுவதால், ஏன் இவர்கள் சிறைச்சாலைகளை ஒழிக்கக் கூடாது என்னும் கேள்வி கேட்க நேரிடுகின்றது. ஆனால் டால்ஸ்ட்டாயின் அபிப்பிராயம் அவ்வளவு தூரம் போகவில்லை. அவர் சொல்வதாவது,



"என்னைப் போன்ற ஒருமனிதனை பலவந்தப்படுத்த எனக்கு ஏது உரிமை? குற்றவாளிகளை நேரிலாவது ஒருவர் சகாயத்தாலாவது சிறைப்படுத்த நான் மனமிசையேன். குற்றமற்ற குணக்குன்று என்று எவன் ஒருவன் சொல்லிக் கொள்ள முடியுமோ அவனே தன் சகோதரனைச் சுட்டிக்காட்டி இவன் குற்றவாளி என்று ஏசட்டும்; அல்ப மனிதனாகிய யான் என் போன்ற ஒரு மனிதனைக் குற்றவாளியாக்கி அவன்மேல் ஒரு நியாயாதிபதியாக அமர்ந்து அவனுக்குத் தண்டனை விதிக்க எனக்கு அதிகாரமில்லை. இந்த அபிப்பிராயம் நாளுக்கு நாள் பரவி மேலும் மேலும் ஜனங்கள் என் அபிப்பிராயத்திற்கு இணங்கி வருவார்களாயினர். கடைசியாகத் தூக்குப் போடும் தொட்டிகள் இன்றிக் கொடிய தண்டனைகள் நாட்டைவிட்டு ஒழியும்.

பத்திராதிபர்.

# INFANTS' EDUCATION

## * சுதேச பாலர்களின் வித்தியாப்பியாசம்

ஒவ்வொரு தேசத்திலுமுள்ள யாவரும் யோசிக்கும் விஷ-
யங்களில் தம் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதைக் காட்டிலும்
விசேஷமானது வேறொன்றுமில்லை. இப்போதிருக்கும் சிறு-
வர்களே இனிப் பெரியவர்களாகிறபடியால் இவர் இளமையில்
படிக்கும் வித்தைக்கு அனுகுணமாகவே அக்காலத்தில் அந்
தந்தத் தேசஸ்திதியுமிருக்கும். ஆகையால் அந்தந்தத் தேசத்-
தின் ஏற்றத்தாழ்வுகள் இச் சிறுவர்தம் கையிலுள்ளனவாகவே
நினைக்கவேண்டும். இப்போது பாடசாலைகளிலும் வீடுகளிலும்
படிக்கும் பிள்ளைகளே இனித் தேசகாரியங்களை யெல்லாவிதத்-
திலும் நிர்வகிக்கத் தகுந்தவர்களாகையால் இவர்களுக்கு
இம்மை மறுமைக்குரிய வொழுக்கங்களை உபதேசிக்கும் விஷ-
யத்திற் கொஞ்சமுங் கவனமின்றி இம்மைக்குரிய சுகத்தையே
கற்பித்து வந்தாற் பின்னுக்கு அந்தந்தத் தேசத்தவர் இம்மைச்
சுகத்திலேயே ஆசையுள்ளவர்களாய் நாஸ்திகராய் விடுவார்கள்.

* மாதுஸ்ரீ. ஆநிபெசன்டு அம்மையார் பேசிய விஷயத்தின் மொழிபெயர்ப்பு.

ஆனால் இப் பரதகண்டத்திலுள்ள பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எந்தவிதத்தில் வித்தியாப்பியாசம் செய்தால் இவர்கள் ஞானிகளும் புத்திசாலிகளும் நல்லொழுக்க முள்ளவர்களும் விவேக பூர்வகமா யுயர்ந்தஸ்திதிக்கு வருபவருமாகிப் பரதகண்டத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரத்தக்க யோக்கியதையுள்ள வுபாத்தியாயரும், அரசாட்சியை நடத்தத் தக்கவரும் மேலான வர்த்தகர்களும் மற்றுமுள்ள தொழிற் செய்பவரும் தாய்தந்தையருமாவார்கள்? இதே நாம் இப்போது விசாரிக்கத்தக்க விஷயம்.

இப்போது பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பாடசாலையில் நடக்கவேண்டிய வித்தியாப்பியாசக் கிரமத்தை வெவ்வேறாக விசாரிப்போம். ஆனால் இதுமாத்திரம் ஞாபகத்திலிருக்கத்தக்கது. தாய்தந்தையர் தாமும் யோக்கியராய் அப்போதுதான் புத்தி விகசிக்கத்தக்க மக்களுக்கு ஸதாசாரங்களைக் கற்பிக்கத்தக்க சக்தராயுமிருந்துகொண்டு பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு சேரத் தமது ஒழுக்கம் பாவனையென்னு மிரண்டினாலும் வீடுகளிற் சிறுபொழுதிலிருந்தே நடத்தையையும் புத்தியையும் கற்பித்துவரவேண்டும். அப்படிப் பாலியத்திற் பிள்ளைகளுக்கு வீடுகளில் தர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் கற்பிக்காமலும் அவர்களுக்குப் புத்தியையும் சமதமாதி குணங்களையும் உத்தமமான தர்மோபதேசத்தால் விருத்திசெய்யாமலும், பராக்கிரமத்தையும் பக்தியையும் பரோபகார விருப்பத்தையும் தயையையும் பிரீதியையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணத்தக்கவும் இதிகாச புராணங்களில் நிறைந்துள்ளனவும் மனோகரமுமான கதைகளால் அச்சிறுவர் மனத்தை நிறைக்காமலும் போனால், இப்படிப்பட்ட குறைகள் அப்புறம் கற்றுக்கொடுக்கும் எந்த வித்தையாலும் எப்போதும் தீராவாம். இப் பரதகண்டத்திலுள்ள புருடர்களிலும் பெண்களிலும் ருஷிகளும் வீரருமாய் விளங்கிய மகான்களின் சரித்திரங்களைப் பெண்களும் பிள்ளைகளும் தெரிந்துகொள்ளாமல் ஒருபோது மிருத்தல் ஒண்ணாது. ஆனால் இப்போது நாம் கல்விச்சாலையில் நடக்கத்தக்க வித்தியாப்பியாசத்தைப்பற்றிச் சொல்லவந்தோமாகையால் முதலிற் பிள்ளைகளின் வித்தியாப்பியாச விஷயத்தையே யெடுத்துப் பேசுகிறோம்.



உயர்ந்தவர் வீட்டுப்பிள்ளைகள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆங்கிலம் படிப்பது அவசியமே. இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் நிலைமைக்குத் தகுந்த ஜீவனத்தை அடைவது அசாத்தியமாம். இதிலிருந்து தவிர்வது கடினம். இதற்கு விரோதமான வேறு வழி தேடுகிற பேச்சும் பிரயோசன மற்றது. ஆகையால் ஆங்கிலம் பயில்வது முக்கிய மென்றே ஒப்புக்கொள்ளத் தக்கது. ஆனால் அவர்கள் இப்போது படிக்கிற புத்தகங்களிற் சிலவற்றைத் திருத்துவது முக்கியமாம்.

இப்போது அவர்கள் அதிகமாய் வாசிக்கின்ற அன்னிய தேச சரித்திரங்களுக்கும் வர்ணனைகளுக்கும் பிரதியாகப் பரதகண்டத்தின் சரித்திரங்களையும் வர்ணனைகளையும் விசேஷமாய்ப் போதிப்பதற்கே யத்தனிக்க வேண்டும். உலக சரித்திரங்களையெல்லாம் செவ்வையாயும் விஸ்தாரமாயும் தெரிந்து கொள்வதனாலே புத்திக்கு விரிவு உண்டாமென்பது நிச்சயமே. அது பாண்டித்தியத்திற்கும் அவசியந்தான். ஆகிலும் ஒவ்வொருவரும் முதலிற் சுதேச சரித்திரத்தையே நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். இதனாற் சுதேசாபிமான முண்டாவதுமல்லாமல், தந்தேசங்களில் ஏதாவது புதிய ஏற்பாடு செய்யவேண்டுமானால் அச்சமயத்தில் அதன் உசிதத்தையும் விசாரித்து, அது தன் தேசத்துக்குத் தகுந்தது அல்லதென்பதை யோசித்து நிர்ணயிப்பதற்கும் சகாயமாகும். அன்றியும் படிப்பிக்கும் புத்தகங்களில் ஆரியமதத்தையும் அவரது தெய்வத்தையும் அஞ்ஞானத்தால் தூஷிக்கின்ற ஒரு புத்தகத்தையும் சேர்க்கலாகாது. இப்போதும் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியைத் துராசாரனென்றும் ஜாரனென்றும் தூஷிக்கிற புஸ்தகங்களைத் தம் மக்களுக்குப் படிப்பிக்கும்படி அனுமதித்திருக்கிறார்களே! இப்படி தூஷிப்பது மிகவும் அநியாயம். இவ்விதமான கிரந்தங்களைப் படிப்பதனாற் பிள்ளைகளின் புத்தியும் கெடுகின்றது. ஆகையால் இனிப் பாடத்துக்கு உபயோகிக்கும் புஸ்தகங்கள் இங்கிலீஷிலுள்ள பிரசித்த காவியங்களாகவாகினும் அல்லது கேவல லவுகிகமாயும் சுலபமாயுமிருக்கிற பாலபாட புஸ்தகமாகவாயினுமிருக்கவேண்டும். ஆங்கிலேய பாஷையிற் பூர்ண பண்டிதர்களாய் மதபக்தியுள்ள இந்துக்களெழுதிய இங்கிலீஷ் கிரந்தங்க-

ளையே படிப்பித்தாற் பின்னும் உத்தமமே. மகாபாரதத்திலும் இராமாயணத்திலுமுள்ள கதைகளைப் பொறுக்கியெடுத்து இங்கிலீஷிலும் தேசபாஷையிலும் நன்றாய் மொழி பெயர்த்து அவைகளையேபடிப்பிக்கும்படியேற்படுத்தவேண்டும்; மற்றும் ஐரோப்பாவிற் சில நூல்களைப் போதிக்கும்போது சில துராசாரங்களுக்கு இடங்கொடுப்பதுபோல், இங்கும்பௌதிக சாஸ்திரங்களைப் போதிக்கையில் அப்படிப்பட்ட துராசாரங்களுக்கு இடமாகாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். பிராணிகளை உயிரோடு அறுத்துப் பரீக்ஷிப்பதற்கு எவ்வளவும் இடந்தரலாகாது. அப்படிச்செய்தால் அது மனத்திற்குக்கடினத்தையுண்டுபண்ணி புத்தியைத் துன்மார்க்கத்தில் இழுக்காமல் விடாது. சகல ஜீவராசிகளிடத்தும் பக்தி பூர்வகமான **ஆதரம்**, தயை, வருத்தாமை ஆகிய மூன்றையும் தாம் ஆசரிப்பதோடு கூடிய போதனையாற் பாடசாலையிற் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவேண்டும்.

ஸதாசார உபதேசங்கள் வித்தியாப்பியாசத்துக்கு முக்கிய அங்கமாயிருக்க வேண்டும். தினந்தோறும் ஒவ்வொரு வகுப்பிலும் யாதாயினுமொரு நல்ல கிரந்தங்களிலுள்ள சொற்ப பாகத்தைப் படித்து விவரித்து உதாரணங்களையு மெடுத்துக் காட்டி அதன் மூலமாய் நீதியைப் போதிக்கவேண்டும். அந்த நீதியின்படி நடந்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு கூட்டத்தார்க்கும் சகலதேசத்தார்க்கும் உண்டாகும் பிரயோஜனத்தை விவரிப்பதுமல்லாமல், அதற்கு விரோதமாக நடந்தால் அதனால் உண்டாகும் அநர்த்தங்களையும் விவரித்துச் சொல்ல வேண்டும். சமயம் நேரும்போது அந்தந்த ஆசாரங்களுக்கு மூலகாரணங்களையும் சாஸ்திரத்துக்கு ஒத்த யுக்திகளாற் சமர்த்தித்துப் பெரியவகுப்பிற் படிப்பவர்க்குத் தெரியப்படுத்தவேண்டும். இவ்விதமே ஆரிய மதாசாரங்களெல்லாம் நன்மைக்கே யேதுவாமென்பதை நன்றாய் விளக்கவேண்டும். இந்தப் பிரகாரமே போதித்தாற் பிள்ளைகள் தம் மதாசாரங்களின் பிரயோசனத்தை விவரமாய் அறிந்துகொள்ளச் சமர்த்தராவர்கள். (தொடரும்)

ஞானபோதினி.

REGISTRAR OF ... SOCIETIES
30 MAR 1916
MADRAS.




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1916ஆ மார்ச்சுமீ | மாதம் 10

## TOLSTOY AS A SCHOOLMASTER

## டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

### Tolstoy at home — டால்ஸ்ட்டாய் வீட்டிலிருந்த விதம்

பின்னும் டால்ஸ்ட்டாய் தம் குழந்தையைப் பார்த்துச் சொன்னதாவது:

குழந்தாய்! அந்தப் பையனை அடிக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாயல்லவா? நானானால் என்ன செய்வேன் தெரியுமா — நமது வீட்டிலுள்ள ஏதேனும் பலகாரத்தில் கொஞ்சம் கொண்டுபோய் அவனுக்குக் கொடுப்பேன். அதுவும் நானே அதை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டுபோய், அந்தப் பையனிடம் கொடுத்துச் சாப்பிடச் செய்வேன்.

இந்த வார்த்தையைக் கேட்டதும், அந்தப் பெண்ணுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவள் தன் தந்தை சொல்லியபடியே செய்தாள். அவள் ஏன் அப்படிச் செய்தாள் — அவளுக்குத் தன் தந்தையின்மேல் அன்பு அதிகம் அதனால் அவர் சொல்லைத் தட்டி நடக்கக்கூடாது என்று எண்ணி, அவர் சொன்னபடியே செய்தாளோ, அல்லது, அவ்வாறு செய்தால் அந்தப் பையன் எப்படி நடந்து கொள்வான் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று செய்தாளோ அல்லது ஒருவேளை அது அவளுக்குக் கேவலம் ஒரு வேடிக்கையாகத் தோன்றிற்றோ தெரியாது. அது எப்படி இருந்தாலும் இருக்கட்டும், அவள் வீட்டுக்குள் சென்று, ஏதோ ஒரு பலகாரத்தைத் தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு வந்து பையனுக்குக் கொடுத்தாள்.

இக்கதையில் ஒரு விசேஷம் உண்டு. அது என்னையெனின், அந்தப் பையன் அந்தப் பெண் கொடுத்த பலகாரத்தைச் சாப்பிட்டான் என்பது தவிர அச் சிறுவர்களின் விஷயமாக வேறொன்றும் வெளிப்படவில்லை.

இது நடந்து அநேக வருஷங்கள் ஆயின. அந்தப் பையன் இந்தச் சம்பவத்திற்குப் பிறகும் எத்தனையோ குற்றங்களைச் செய்திருக்கலாம். கொலைக் குற்றமும் செய்திருக்கக்கூடும். அதனால் இவ்விதமான தண்டனை அறவே பயன்படா தொழிந்ததென்றே வைத்துக் கொள்வோம். ஆயினும் இந்த அரைகுறையான கதையில் வியக்கத்தக்க இன்பச்சுவை ஒன்றில்லாமற் போகவில்லை. அதை நினைக்குந்தோறும் நமக்கு ஓர் ஆநந்தம் உண்டாகிறது. என் புத்தியானது அக்கதையை ஒருவாறு பூர்த்தி செய்து கொள்ள நாடுகிறது. அது என்னவெனில், அந்தப் பையன் மேற்சொல்லியபடி அந்தப் பலகாரத்தைச் சாப்பிட்ட பிறகு தன் குற்றத்தை நினைத்து, தன்னையே வெறுத்து, தீமைக்கு நன்மை செய்த அப்பெண்ணினிடம் அன்பு பாராட்டத் தொடங்கினான். அதுவுமன்றி அதுமுதல் அவன் குணமானது சீர்திருத்த மடைந்து, நாளடைவில் 'நல்ல குணசாலி யென்றும் புகழ்படைத்தான்' என்று அக்கதையை முடித்துக் கொண்டு மகிழ்ச்சி யடைவது வழக்கம். ஆனால் இப்படி எண்ணுவது அசாத்தியமான காரியம் அன்று. அவ்வாறின்றி, அந்தப் பையன் தன் குற்றத்திற்கு உலக வழக்கம் போல் தண்டிக்கப்பட் டிருப்பானானால் அவன் சீர்திருத்தம் அடைந்திருப்பானென்று உறுதியாகச் சொல்லமுடியாது.



ஒருவனுக்குற்ற வெறுப்பைப் போக்க முயல்வதே எல்லாச் சீர்திருத்தங்களிலும் முக்கியமான நோக்கமல்லவா? அந்த நோக்கத்தைச் சித்திபெறச் செய்வது பொறை அன்பு ஆகிய இக்குணங்களே யாகும். பலகாரம் கொடுத்த அந்தச் செய்கையினா லுண்டான உண்மைப் பயன் என்ன? அச் செய்கையானது அளவற்ற அன்பை விளக்குகிறது. அந்த அன்பானது எப்படிப்பட்ட நிந்தையாலும் கொடுமையாலும் குறையத் தகுந்ததன்று. இவ்வளவு சிறந்த நற்குணத்தைக் கண்ட அச் சிறுவன் தன்னுடைய கோபத்தையும் விரோதத்தையும் எண்ணும்போது எவ்வளவு வருந்துவான். அச்சிறுவன் டால்ஸ்ட்டாயின் குழந்தையை அடித்துக் காயப்படுத்திய பிறகு என்ன செய்திருப்பான். அவள் வீட்டுக்குள் ஓடியதைக்கண்டான், பிறகு அவ்வீட்டுக்கு எதிரில் நின்று என்ன நடக்கிறது என்று கவனிக்கிறான். ஆனால் வீட்டுக்கு அதிக சமீபத்தில் போக அவனுக்கு மனம் துணியவில்லை. எங்கே யாராவது உள்ளே இருந்து ஓடி வந்து தன்னை அடிக்கிறார்களோ என்ற பயம் அவனுக்குப் பெரிதாக இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வீட்டின் கதவைத் திறப்பதைக்கண்டான். அப்போது அவன் என்ன நினைப்பான். அடிபட்ட குழந்தையின் தகப்பனார் தடியை எடுத்துக் கொண்டு தன்னை அடிக்க வருகிறார் என்றுதானே எண்ணியிருப்பான். அதனால் உடனே ஓட்டம் பிடிக்க ஆரம்பித்துத் திரும்பிப் பார்த்தான். தன்னிடம் அடிபட்ட அப்பெண் தட்டில் பலகாரம் எடுத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் தன்னிடம் வருவதைக் கண்டான். அந்தப் பலகாரம் தனக்கு வேண்டாமென்று மறுக்க முயன்றான். எவ்வளவு முயன்றும் ஆசை விடவில்லை. தன்னைப் போல் ஏழைப் பிள்ளைகளுக்குப் பலகாரம் தினமும் அகப்படுமா! கடைசியாக மெல்ல மெல்ல நகர்ந்து வந்தான். வந்து, தட்டை வாங்கிக்கொண்டு தலை குனிந்து ஒரு வார்த்தையும் பேசாமல், பலகாரத்தைச் சாப்பிட்டான். பிறகு, மெதுவாகத் தன் வீடு நோக்கிச் சென்றான். அவனிடம் துர்க்குணம் ஏதேனும் இருந்தாலும் அப்போது

அது தலைகாட்டும் என்று எண்ண இடமில்லை. இதற்குப் பதிலாக அச் சிறுவனை அவன் செய்த குற்றத்திற்காக நன்றாய்த் தண்டித்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் தன்னைத் தண்டித்தவர்களையும் மற்றும் புல்லரையும் வெறுத்து நிந்தித்துக் கொண்டு சென்றிருப்பான். தான் செய்தது குற்றம், அதற்காகத் தன்னை அவர்கள் அடித்தார்கள், அப்படி அடித்தது நியாயந்தான் என்பது அச் சிறுவன் மனத்தில் தோன்றி யிருக்கக் கூடுமோ? ஆனால் அவன் இப்போது என்னென்ன எண்ணி யிருப்பான்? தான் செய்த தீமைக்கு நன்மை வந்ததை நினைக்கும்போது அவன் மனம் கொஞ்சம் கலவரம் அடைந்து மாத்திரம் இருக்கும். ஆனால் 'நான் துஷ்டத்தனமாக நடந்துவிட்டேன், இவ்வளவு அன்பு காட்டும் அப் பெண்ணும் அப் பெண்ணைச் சேர்ந்தவர்களும் என்னைக் காட்டிலும் எவ்வளவோ சிறந்தவர்கள்' என்று அவன் மனத்தில் தோன்றுவது நிச்சயம். அச் சிறுவனிடம் சிறிதேனும் நற்குணம் இருக்குமாயின் அதுவே கொழுந்துவிட்டுப் பிரகாசிப்பதற்குத் தடையில்லை. சிறுவர்களிடம் நற்குணம் என்பது இல்லையென்று யார் சொல்லக்கூடும்!

பத்திராதிபர்.

## A FEW QUESTIONS AND ANSWERS ON NATURE STUDY TEACHING

## இயற்கைப் பொருட்பாட போதனையைக் குறித்த சில வினா விடைகள்

எந்தப்பாடத்தையும் அனுபவ பூர்வமாக ஆராய்வதே உத்தமம். பிரத்தியக்ஷப் பிரமாணங்களைக்கொண்டு போதிப்பதே சிறந்த போதனையாகும். புத்தகங்களை எவ்வளவு வாசித்தாலும் அவற்றிலுள்ள விஷயங்களை எவ்வளவு உணர்ந்தாலும் அனுபவஞானம் இல்லாவிட்டால் அந்த ஞானம் அவ்வளவாகப் பயன்படாது. அனுமானப் பிரமாணங்களைக்கொண்டு மற்றப்பாடங்களை ஒருவாறு போதிக்கலாமாயினும், இயற்கைப் பொருட்பாடத்தைப் பிரத்தியக்ஷ பிரமாணங்கொண்டே போதிக்கவேண்டும். இந்தப் பாடத்தைப் போதிக்கையில் உபாத்தியாயர் எவ்வளவு கெட்டிக்காரராக இருந்தாலும் எவ்வளவு திறமையுள்ளவராக இருந்தாலும் சில சமயங்களில் சிறு குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கும் விடை கூற முடியாமல் மயங்கநேரிடுவதுண்டு. அதனால் இந்த இயற்கைப் பொருட்பாட விஷயமாக ஏற்படும் சிற்சில வினாக்களையும் அவற்றிற்கேற்ற விடைகளையும் இங்கே கூறுவோம்.



(1) இயற்கைப் பொருட்பாடம் போதிப்பதற்கு எந்தப் பொருள்களைத் தேர்ந்தெடுப்பது உத்தமம்?

இயற்கைப் பொருட்பாடம் போதிப்பதற்கு வேண்டிய பொருள்களை உபாத்தியாயர் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும் பிள்ளைகள் கொண்டுவரும் பொருள்களைப் பற்றிப் போதிப்பதே உத்தமம். பிள்ளைகள் தங்களுக்கு இஷ்டமான பொருள்களைக் கொண்டு வருவார்கள், அதைப்பற்றிக் கேட்கவே அவர்களுக்கு இஷ்டமும் அதிகம். அதனால் அவர்கள் இஷ்டம்போல் பொருள்களைத் தேர்ந்தெடுப்பதே நலம். பிள்ளைகள் தமக்கு இஷ்டமான பொருள்களைத் தேடிக்கொண்டு வரச்சொல்லி, அவற்றைப் பாடசாலையில் சேமித்துவைத்து, அவற்றுள் பிள்ளைகளுக்கு எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தப் பொருள்களின் மீது விருப்பம் செல்லுகிறதோ அந்தந்தப் பொருளை பற்றியே பேசவேண்டும்.

இப்படிச் செய்வதனால் சில சமயங்களில் உபாத்தியாயருக்கு ஒருவித இடையூறு நேரிடக் கூடும். அது என்னவெனில், பிள்ளைகள் விரும்பும் பொருளைப் பற்றி உபாத்தியாயருக்கு ஒன்றும் தெரியாதிருக்கலாம் அல்லது அரைகுறையாகத் தெரிந்திருக்கலாம். அப்படி நேரிடுவது நலமே. ஏனெனின் உபாத்தியாயர் தமக்குத் தெரிந்த விஷயத்தைமட்டும் போதித்துவிட்டு தெரியாத விஷயங்களைக் கைநழுவவிடும் துரப்பியாசம் ஒருவாறு நீங்கிவிடும். பிள்ளைகள் மாதிரியாகச் சேர்த்து வைத்துள்ள பொருளில் ஒன்றைப்பற்றியே கேட்பார்கள் என்று தெரிந்திருப்பதனால், அவர்கள் அவ்வப்போது கொண்டுவரும் பொருள்களைப்பற்றிய விஷயங்களை உட்டுக்குடன் தெரிந்துகொள்ள உபாத்தியாயருக்கு ஊக்கங்கொடுக்கும். பிள்ளைகள் விரும்பும் பொருள்களைப்பற்றி உபாத்தியாயருக்குத் தெரியாத காலத்தில், அந்த விஷயம் தெரியவில்லை என்று பிள்ளைகளிடம் சொல்லுவதனால் உபாத்தியாயருக்கு மதிப்புக் குறைவு ஒருகாலும் உண்டாகாது. தெரியவில்லை என்று

உபாத்தியாயர் சொன்னால் அந்த விஷயம் மிகவும் அருமையானதென்பதைப் பிள்ளைகள் உணர்வார்கள். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பிள்ளைகளும் போட்டி போட்டுக்கொண்டு முயல ஆரம்பிப்பார்கள். தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொண்டிருப்பதாகப் பாவனை காட்டிப் பிள்ளைகளை வஞ்சிப்பது பெரும் பிழையாகும். உபாத்தியாயர் தம்மை வஞ்சிக்கிறார் என்று பிள்ளைகள் கண்டுகொள்வார்களானால், பிறகு அப்பிள்ளைகளுக்கு உபாத்தியாயரிடம் நம்பிக்கையாவது நன்மதிப்பாவது உண்டாகாது. உபாத்தியாயர் உண்மையைக் கூறும் காலத்திலும் பிள்ளைகளுக்கு அதில் ருசியுண்டாகாது.

இது நிற்க, உபாத்தியாயருக்கு நன்றாய்த் தெரிந்த விஷயங்களை எடுத்துக்கொண்டு போதிப்பதும் கூடும். அப்படிப் போதிக்கையில் பிள்ளைகளுடைய அனுபவத்திலிருக்கக் கூடிய பொருள்களைப்பற்றியே போதிக்கவேண்டும். ஜந்துக்கள் இல்லாமல் ஜந்துபாடம் போதிப்பதும், செடிகள் இல்லாமல் தாவரசாஸ்திரம் போதிப்பதும் அநுசிதமான காரியங்களாகும். ஆதலின் பிள்ளைகளுக்கு இஷ்டமான பொருள்களையோ, உபாத்தியாயருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும் பொருள்களையோ பிரத்தியக்ஷபிரமாணங்களைக்கொண்டு போதிக்க எடுத்துக் கொள்வதே உத்தமம்.

பத்திராதிபர்.

## MORAL SONGS

### சன்மார்க்கக் கும்மிகள்

1. பகவானைச் சந்ததம் போற்றிடுவாய் — அவர்
பாதம் அண்டிவினை மாற்றிடுவாய்
ஜகத்தில் அவர் துதி சாற்றிடுவாய் — இந்தச்
சற்போதனை செவி யேற்றிடுவாய்.

2. என்றும் நெடுந்துயில் கொள்ளாதே — வாயால்
இழிவான சொற்களை விள்ளாதே
நன்றுரைத்தோர் மொழி தள்ளாதே — எந்த
நாளும் உன்னை மெச்சித் துள்ளாதே.



3. உடலை நீராடிச் சுத்தப் படுத்து — அழுக்
கொன்று மில்லா உடை யுடுத்து
திடமாகக் கோயிலையே அடுத்து — ஜபம்
செய்குவாய் ஸ்வாமிக்குக் கையெடுத்து.

4. காலத்தை வீணிற் கழிக்காதே — பொருளைக்
கண்டபடி செல வழிக்காதே
ஞாலத்துள் யாரையும் பழிக்காதே — சூறை
நாடுவோர் முகத்திலும் விழிக்காதே.

5. மாண்டாலும்பொய் தன்னை சொல்லாதே — உன்
மனத்தின்படி யெங்குஞ் செல்லாதே
வேண்டாம் துஷ்டர் நேசம்பொல்லாதே — துஷ்டர்
வீதியிலுமே நீ நில்லாதே.

6. திருட்டுத் தொழில்களைச் செய்யாதே — செய்து
தேம்பிமனம் வாடி நையாதே
மிரட்டி எளியோரை வையாதே — என்று
மேகெட்ட பேர்வாங்கி உய்யாதே.

7. பெரியோரின் நேசத்தை நீங்காதே — அவர்
பேச்சைத் தள்ளிப்பழி ஓங்காதே
வறியர்க்குத வப்பின் வாங்காதே — கடன்
வாங்கி எப்போதும் நீ ஏங்காதே.

8. தந்தை தாயைத் தினம் பூசிக்கவே — வேண்டும்
தர்மத்தைக் கைவிடா தாசிக்கவே
பந்து மித்திரரை நேசிக்கவே — சொன்னேன்
பாரினில் நீபிர காசிக்கவே.

9. பெற்றோர் சொல் அசட்டை பண்ணாதே — என்றும்
பிச்சை யிடாமலே உண்ணாதே
குற்றம் பிறருக்கு எண்ணாதே — நீ
கோபம் வீணாய்ச்செய்ய வொண்ணாதே.

10. கல்விப் பொருளையே தேடிடுவாய் — நல்ல
கற்றவரோடுற வாடிடுவாய்
செல்வ மிதென்று கொண் டாடிடுவாய் — தினம்
திவ்ய கவிகளைப் பாடிடுவாய்.

11\. ஆய நற்கலைகளைப் பிரியாதே — பாடம்
அநுதினம் படியாமல் திரியாதே
தீய வழியது சரியாதே — ஒரு
ஜீவனுக்கும் இடர் புரியாதே.

12\. பள்ளிக்கு வாராம லோடாதே — மது
பானத்தை எப்போதும் நாடாதே
உள்ளம் மாசுபடக் கூடாதே — நல்
லொழுக்க நெறிதள்ளி வாடாதே.

**M. அடைக்கலசாமி,**
ஹெட் மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
திருநரையூர்.

# KANA MUNI

## கானமுனி

*(An Adaptation of Permells 'Hermit')*

(முன்தொடர்ச்சி பக்கம் - 216)

### மூன்றாவது வட்டிற் களவிடு காதை

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்"
பொதியின் மாருதம் புகுந்தது சோலைவாய்;
"கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவி"
எழுந்தது தென்றல் எங்குங் கமழ்ந்தது;
நித்திரை தெளிந்துசெந் நீரர் எழுந்தார்
நித்திய கடன்களை நேருற முடித்தார்;
அன்னவர் வருமுன் னம்மனைக் கிழவன்
பொன்னொளிர் வட்டிலிற் பூமது நிறைத்து
'விருந்தினர் வாரீர் மெய்த்தவர் வாரீர்!
அருந்துமின் அருந்துமின்' என்றுப சரித்தான்
உண்டு மகிழ்ந்து நன்றியுட் கொண்டு
இண்டவன் செலவு பெற்று நடந்தான்
அக்கா லையிலவ் வில்லாற் கன்றி



மற்றூர்க் கும்மோர் மனக்கவல் பின்றால்;
அவன்வைத் திருந்த ஆடக வட்டில்
தவன்பின் வந்தான் கொண்டுடன் சார்ந்தான்.
சென்னெறி தன்னிலோர் செங்க ணரவைத்
துன்னினன் நடுங்கித் துணுக்க மெய்தி
அருகிற் செல்லவும் ஆண்டொழிந் தேகவும்
தெரிகி லாது தியங்குறு வான்போல்
மெய்த்தவன் வட்டிலின் மின்னொளி கண்டதும்
சித்தம் நடுங்கினன் செல்லான் பேசான்!
கடிந்தவன் விலக்கக் கருதின னேனும்
துணிந்துரை சொல்லான் முணுமுணுத் தெண்ணுவான்
என்னே உலகியல்! என்னே உலகியல்!
நன்னய மதனை நன்கொன் றகறல்!

### நான்காவது கயவகது இற்புகு காதை

இவ்வா றேகுழி என்றொளி குறையச்
செவ்வான் மாறிச் செறியிருள் படா
மழைக்கறி குறியா வான்நனி குமிறக்
குழைத்த வாலன கோவவை பரியக்
கண்டனர்; புகலிடம் யாதெனக் கருதுவார்
மூண்டக வனத்திலோர் மாளிகைமுற்குவார்
மேட்டில மைந்தவவ் விண்டொடர் மாடம்
கூட்டிய உறுதி கொண்டகன் றிருந்தும்,
சுற்றிடை யாங்கணும் சோபை யிழந்து
வற்றிய பாலைபோல் வறுமை யுழன்றது.
ஏனெனில் அவ்விலான் இரவலர்க் காயினும்
கானிடை வழியிழந் துழலுநர்க் காயினும்
ஈர்ங்கை விதிரான் யாவும் வவ்வும்
ஆர்வ முடையான் அஞ்சுங் கயவன்
அருளெனப் படுமோர் அன்பின் குழவியை
மருளெனும் பற்றினில் வதைக்கும் மாண்பிலான்
அன்னோன் மாளிகை அணுகுமுன் வானம்
மின்னனி பாயவும் வெங்கால் வீசவும்
கோடை யிடியொடு கொடுமழை பொழிந்தால்

வாடிய அன்னோர் வருந்தினர்; நனைந்து;
வீசும் காற்றும் வெங்கொடும் பெயற்கும்
கூசி யன்னோர் வாய்நின்று கூவினர்;
கொல்லுலைக் கூடத் தாற்புடைத் தாற்போல்
வல்லுயர் திண்கத வைத்தகர்த் தார்கள்;
யாது செய்தும் கேட்பா ரின்மையால்,
மாதுயர் கொண்டவர் வருந்துங் காலை,
மாளிகைத் தலைவன் மனத்திவர் தவத்தால்
தாள்திறக் கும்படி தயைசிறி துதித்தது.
கயவரிற் கயவனும் கடியன் கதவம்
இவரிரு வர்க்கலால் யார்க்குந்திறந் திலது
கூசிக் கூசிக் குறுகத் திறந்த
பூசற் கதவம் புண்படு மனத்தொடு
குளிர்நடுக் குறுத்துமெய் குன்றிவந் தணுகிய
வளரொளி விருந்தை வருதிரேல் வருகெனச்
செப்பவு மன்னோர் சேரிடம் இன்மையால்
உட்புகுந் தனர் உளமகிழ் விலாதார்.

(இன்னும் வரும்)

KAMBAR VILAS, MYLAPORE. — V. RAJAGOPALA AIYANGAR.

# THE TORTOISE & THE HARE

## ஆமையும் முயலும்

மெல்ல நகரும் ஆமையொன்றை
விரைந்து செல்லும் முயலொன்று
மெதுவாய்க்கிட்டி யென்னுடனே
மேன்மை யான பந்தயத்தை
வெல்ல வருவாய் என அழைக்க
விருப்பங் கொண்டந்த ஆமையுமே
முன்னந் தெரியும் மலையடியை
முன்னிக் குறியாக் கொண்டதுவே;



நல்ல வெற்றி தோல்வியுமே
நமக்குள் கணிப்பார் யாரென்று
நாடி யாமை கேட்டலுமே
நயந்தோர் நரியும் கொடிகுறியா
வல்லே நாட்ட அவ்விரண்டும்
மகிழ்கொண் டேக காலத்தில்
வரைந்த இடத்தில் இருந்துடனே
வகையாய் நன்கு புறப்பட்டவே.

2. பாதி தூரம் முயல் செல்லும்
பண்பார் ஆமை மிகமெதுவாய்ப்
பழைய இடத்தில் நகர்ந்திடுதல்
பார்த்தே முயலுந் தலையெடுப்பாய்,
ஆதி யாமை இங்குவர
அரைநாள் செல்லும் ஆமிதற்குள்
அயர்ந்தே கழிப்பன் இங்கென்று
அதிக தூக்கங் கொள்ளலுமே,
நீதி யாமை சென்றங்கே
நெடிய தூக்கங் கொண்டதனை
நேர்கண் டுடனே குறித்தஇடம்
நேய மாகச் சேர்ந்ததுவே,
மீதி தூரம் மிகவிரைவாய்
மேலே சென்றும் முயல்தோற்றதே
மேம்பா டெனுவோன் இழிவடைவான்
வெலுமே முயற்சியென் பிள்ளைகளே !

சே. ரா. திம்மப்ப ஐயர்,
தமிழ்ப் பண்டிதர், ஈரோடு.

165408
600 008
JL
TM,211,N05
N05.10

# MUSIC IN ELEMENTARY SCHOOL

## கீழ்தரப் பாடசாலையில் சங்கீத போதனை

**பாட்டென்பது என்ன ?** — சிறு பிள்ளைகளின் செவிப் புலனைக் கூர்மைப்படுத்தவேண்டியது பாலபோதனையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய அம்சங்களில் ஒன்று. செவிப்புலனை யதிகப்படுத்த பலவித அப்பியாசங்கள் கொடுக்கலாம். முதலில் பலத்த சப்தஞ்செய்து வரவரக் குரலைத் தாழ்த்திக்கொண்டே போவதால் பிள்ளைகளின் கவன சக்தி அதிகப்படுகிறது. மறுபடி குரலை உயர்த்திக்கொண்டே போவதனால் தொனிகளின் பலவித மாறுபாடுகளைப் பிள்ளைகள் நன்றாகக் கவனிக்க ஏற்படுகிறது. அப்போது அவர்கள் புலன் அதிக கூர்மையடைகிறது. இவ்விதக் குரலின் ஏற்றத்தாழ்த்திகள் பாட்டில் நன்றாக வெளியாகின்றன. பாட்டென்பது குரலைப் பலவிதமாக உயர்த்தியும், தாழ்த்தியும் சப்தஞ்செய்வது. அதையே ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களையும் படிப்படியாக உயர்த்தியும், தாழ்த்தியும் சொல்வதால் உண்டாவது என்றும் சொல்லலாம். பாட்டினால் மயங்காதவர்கள் இல்லை. பசுவென்ன, சிசுவென்ன பாம்பென்ன இவையெல்லாம் பாட்டினால் மயங்குகின்றன. கிருஷ்ணன் பசுக்களைப் பொள்ளாங் குழல் ஊதி மயங்கவைத்ததும், குழந்தைகளைத் தாய் தாலாட்டுப் பாட்டுப்பாடி தூங்கவைப்பதும், பாம்பாட்டி மகுடி என்னும் ஊது குழலை ஊதி பாம்பைப் புற்றினின்றும் வெளிப்படுத்தி யாடவைப்பதும் பாட்டினாலேயல்லவா? நாரதர் தன் வீணையின் உதவியால் பட்ட மரங்களையும் பாலாக உருகும்படி செய்ததாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. நிற்க, நாம் பாடசாலையில் உபாத்தியாயர் எவ்விதப் பாட்டுக், கற்பிக்கக் கூடுமென்று விசாரிப்போம்.

பாட்டு இயற்கையாக ஒருவனுக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட சாதனம். என்றாலும் ஒருவன் பழக்கத்தினால் கொஞ்ச அளவு பாட்டைக் கற்றுக்கொள்ளலாம். ஏதாவது வாத்தியங்களின் உதவியால் பாட்டைச் சுலபமாக கற்றுக்கொள்ளலாம். கீழ்தரப் பாடசாலைகளில் பாட்டு இராகத்தோடு கற்பிக்கப்படவேண்டுமென்று அது ஒரு முக்கியமான பாடமாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் கீழ்தரப்பாடசாலை உபாத்தியாயர்கள் கொஞ்சம் பழக்கஞ்செய்துகொண்டு பிள்ளைகளுக்குப் பாட்டுக் கற்றுக்கொடுக்கவேண்டும். இங்கு உபாத்தியாயர் கைதேர்ந்த பாடகராக இருக்கவேண்டுமென்பதோ பிள்ளைகளை அவ்வாறு செய்வதோ நோக்கமல்ல. மனோல்லாசத்திற்கும், ஓய்வுக்கும், சந்தோஷத்திற்கும் ஏற்பட்ட சாமானியப்பாட்டுகள் போதுமானவை. பார்ஸி இந்துஸ்தானி தில்லானா, தெம்மாங்கு முதலிய பாட்டுகளைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை.



**பாட்டுக் கற்றுக்கொடுக்க வேண்டிய முறை** — முதல்முதல் சிறுபிள்ளைகளுக்குப் பாட்டில் பிரியமிராது. அவர்கள் டமாரத்தின் சப்தத்தையோ, பறையின் கொட்டையோ பிரியமாகக் கேட்பார்களே யொழிய நாகரிகமான மெதுவான பாட்டில் பிரியப்படார்கள். மெதுவாக அவர்களுக்குப் பாட்டில் பிரியம் உண்டாக்கவேண்டும். உபாத்தியாயர் இலகுவான மாதிரிப் பாட்டுகளைத் தான் பாடி பிள்ளைகளை அதேமாதிரி பாடச் செய்யவேண்டும். இப்படிப் பழக்கமான பிறகு ஸ என்ற ஸ்வரத்தை ஒரு வாத்தியப்பெட்டியில் வாசித்துப் பிள்ளைகளைத் தொடர்ந்து சொல்லச் செய்யவேண்டும். வரவர மற்ற ஸ்வரங்களையும் கற்றுக்கொடுக்க வேண்டும். கடைசியாக ஸ ப ஸ என்ற மூன்று ஸ்வரங்களையும் வரிசையாக மேலே பாடியும் திரும்பக் கீழே பாடியும் பழக்கஞ் செய்யவேண்டும்.

(ஏழு ஸ்வரங்கள்மட்டும் அடங்கிய ஒரு வாத்தியப்பெட்டி 8 ரூபாய்க்கு அகப்படும். அதிக ஸ்வரங்கள் அடங்கிய பெட்டி 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விலையாகும்).

டிரில், மார்ச்சிங், ஆட்டங்கள், கதைகள் இவைகளுக்கிணங்கப் பாட்டுகள் அமைத்துக் கற்றுக்கொடுக்க வேண்டும். பாட்டுக்குத் தக்கவாறு நடப்பதும், ஆடுவதும் பிள்ளைகளுக்கு அதிக உற்சாகம் கொடுக்கும். இராஜவாழ்த்துப் பாட்டுகளும், கடவுள்வாழ்த்துப் பாட்டுகளும் அவசியமானவை.

**பாட்டுக் கற்பிக்க ஏற்றகாலம்** — தினம் பாடசாலை தொடங்குமுன் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு வெளியே நிறுத்தி 10 நிமிஷம் சேர்ந்து பாடச் சொல்வதும் கதைகள் சொல்லி முடிந்ததும் அவைகளைப்போல் நடித்துக் காட்டிப்

பாடச்செய்வதும் நலம். செய்யுட்பாடங்கள் நடத்தும்போதும் பாட்டுக் கற்பிக்கவேண்டும். சாதாரணமாக பாடசாலை ஆரம்பத்தில் 10 நிமிஷம், கதை சம்பந்தமாக 15 நிமிஷம், செய்யுட் பாடம் நடக்கும்போது 15 நிமிஷம், பாடசாலை முடியும்போது 10 நிமிஷம் பாட்டுக்காக தினம் எடுத்துக்கொள்ள வேண்டிய காலமாகும்.

பாட்டுக் கற்பிப்பதால் உண்டாகும் நன்மைகள் — பாட்டினால் பிள்ளைகள் பாஷாஞானத்தை சீக்கிரம் அடைகிறார்கள். வேதம் ஸ்வரத்தோடு பாடப்பட்டது. கடவுள் தோத்திரங்கள் பாட்டினால் நடக்கின்றன. தேவாரம் திருவாசகம் திருப்புகழ் முதலியவை கடவுளின் மகிமையை எடுத்தோதுகின்றன. பழையகவிகள் பாட்டின் மூலமாகத்தான் கதைகளைப் பாடியிருக்கிறார்கள்.

பாட்டைக் கவனிப்பதால் சப்தமிடுதலுக்கும், சுத்தமான தொனியோடு பாடுவதற்குமுள்ள வித்தியாசத்தைப் பிள்ளைகள் சுலபமாக கவனிக்கிறார்கள். பேசுவதிலேயே குரலிலுண்டாகும் வித்தியாசங்களை உணருகிறார்கள். ரஸஞானம் உண்டாக்குவது பாட்டுத்தான். நல்ல விஷயங்களைப் பகுத்தறியும் சக்தியை யுண்டாக்குவது, பாட்டுத்தான். வகுப்பில் சப்தஞ்செய்வதிலும் பெஞ்சு முதலியவைகளைத் தூக்கிப் போடுவதிலும் பிள்ளைகளுக்கு உண்டாகும் திருப்தியை மாற்ற பாட்டு மிகவும் சிறந்த கருவியாகும். பாட்டுப் படிப்பினால் வகுப்பில் சப்தமில்லாமல் ஒழுங்கான வேலை நடத்தக்கூடும். இவ்விதமாகக் கீழ்தரப் பாடசாலையில் பாட்டைக் கற்பித்து விட்டுவிட்டால் வயது வந்ததும் பிள்ளைகள் நல்ல பாட்டில் பிரியமுள்ளவர்களாகிறார்கள். ஒவ்வொரு சபையிலும் பாடத் தெரிந்தவன், பாட்டைக் கேட்கத் தெரிந்தவன் என்றால் அவனுக்கு மரியாதை யதிகம். ஆதலால் பாட்டின் அவசியத்தை யறிந்து கீழ்தரப் பாடசாலைகளில் பாட்டைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

P. C. கிருஷ்ணய்யர், B. A., L. T.,
*Second Assistant,*
*Govt. Training School, Villupuram.*



# GOOD WORDS

## நல்லுரை

(182-ஆம் பக்கத் தொடர்ச்சி)

23 பொய்ம்மையின் போலிக்கப்பால் மெய்ம்மையின் மாண்பு மிளிரும்.

24. பதறாத காரியம் சிதறாது.

25. வெகுளிக்கு எளிதில் இடங்கொடாதவன் மிகுந்த விவேகியாவன்; ஆத்திரப்படுகிறவன் படமையின் ஆட்சியை உயர்த்துவோனாவன்.

26. இருவர் யஜமானர்க்கு ஏவல் புரிவது எவராலும் இயலாது. என்னையெனின், அவர்களுள் ஒருவரை வெறுக்கவும் மற்றவரை விரும்பவும் நேரும்; அல்லது, ஒருவரைப் பின்பற்றவும் மற்றவரை இகழவும் நேரும். பகவானையும் பணத்தையும் ஏககாலத்தில் பற்றி நிற்றல் இயலாது.

27. மானிட ஜீவனுக்குக் கல்விப் பயிற்சியானது கருங்கற் பாறைக்குச் செதுக்குச் சித்திரவேலை போன்றதாகும்.

28. எத்தனையோ தத்துவஞானிகளும் ஸாதுக்களும் வீரர்களும் புத்திமான்களும் நல்லவர்களும் பெரியவர்களும் சாமானியமான பாமரத்தன்மையில் மறைந்தொளிந்து கிடக்கின்றார்கள். சரியான கல்விப் பயிற்சியினால் அவர்களை வெளிக்குக் கொண்டுவந்து பிரகாசிக்கச் செய்யக்கூடும். கல்விப் பயிற்சியினால் சிறந்து விளங்கக்கூடியவர்கள் அநேகர் கல்விப் பயிற்சிக்கு அனுகூலமில்லாததனால் மூடர்களாய் மழுங்கிக் கிடக்கிறார்கள்.

29. நீரிற் கரைக்கப்பட்ட உப்பு தான் அகப்படாது அந்நீரின் எத்துளியிலும் வியாபித்திருப்பது போல, பரமாத்மாவான ஸத்ஸ்வரூபம் ஜனோபகாரார்த்தமாய்க் கரைந்து எங்கும் வியாபித்துப் பிரேமை வடிவமாயிருக்கின்றது.

30. எந்த யுகத்திலும் ஜனஸமூகக் கட்டென்பது (Society) இன்னதென்று கவனித்தால், அது ஸ்த்ரீபுருஷர்களும் அவர்களுடைய நடக்கை முறைகளும் அடங்கியதேயாகும். ஆண்பா-

னால் மாத்திரமே ஸமூஹமென்பது ஏற்படாது; பெண்பாலினால் மாத்திரமே ஸமூஹமென்பது ஏற்படாது. ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்தே ஸமூஹ மமையும்.

31. உட்கொள்ளத்தக்க மனவிரிவும் உபகரிக்கும் சக்தியின் பெருக்கமுமே ஒருவனுடைய யோக்கியதையைச் சரியாய் நிறுத்தறியும் அளவைகளாம்.

32. உயர்தரமானிடர் நேர்நெறி யுற்றுக் கருத்திற் காந்தியின் கதிரெனக் காண்கிற்பர்.

33. ஒழுங்கு வழுவிச் சுழன்றுசுற்றி நின்றாடி எழுதிப் பேசி இழிஜனர் இச்சகச் செவிக்கு இனிமையாயிருப்பர்.

34. அறுக்கமாட்டாதவனே ஆயுதங் குவிப்பன்.

35. சினந்து எவர்க்கேனும் சீட்டெழுதுவையேல், மறுதினமட்டும் அதனை அனுப்பாதிரு.

36. கொற்றவன்றனை எதிர்க்கும் குடியும், ஆற்றினை எதிர்த்து நீந்தும் அறிவறையும், கணவனை எதிர்த்தொழுகும் கன்னியும் கன்றுவர் என்றுங் காண்.

37. இருபதாம் வயதில் இச்சையின் ஆட்சி, முப்பதாம் வயதில் முதிர்ந்த சமத்காரம், நாற்பதாம் வயதில் நலம்பெறு விவேகம்.

38. இருபதாம் வயதில் இலங்குறும் பக்தி, முப்பதாம் வயதில் முதிரும் மனநூல், நாற்பதாம் வயதில் நயமுறும் சாஸ்திரநிர்ணயம்.

39. காலவகையினாற் கைத்தொழில் மாறின், தருணமறிந்து திரிபேற்கா மந்தமதியினர் எந்த விதத்துங் கதியிழந்து கஷ்ட மெய்துவர்.

40. ஊகமும் உள்நோக்குமுற்ற கம்மியர் காலத்திற்கேற்ற கோலம் கடுகியே பூண்டு கைத்தொழில் நடாத்தி எத்திறத்தானும் இன்ப மெய்துவர்.

41. ஏற்கப் பிறந்தவர் பிராமணர், இறக்கப் பிறந்தவர் க்ஷத்திரியர், இருக்கப்பிறந்தவர் வைசியர், பொறுக்கப் பிறந்தவர் சூத்திரர்.



42. அன்பிற்கறிகுறியாய் ஆங்கிலர் முத்தமிடுவர்; என்புருகி இருவருமிசைந்து இடுவதே இனிமையாம். ஒருதலை உவப்பினால் ஊன்றும் உதடு மறுதலையார்தம் மனத்தையும் உறுத்தும்.

43. ஈகை இச்சையி லுதிப்பது. இரக்கம் இதயத்தில் இலங்குவது.

44. விஷயசூனியனுக்கு வாய் அதிகம்.

45. உலகவிவகாரமாம் உணவுக்குப் பெண்டிரே உப்பாம்.

(இன்னும் வரும்)

T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

# DISTRIBUTION OF PLANTS BY NATURE

## செடிகள் இயற்கையாகப் பரவும் விதம்

நாசரேத் என்பது தென் திருநெல்வேலியிலுள்ள ஓர் ஊர். இதற்கு 6 மைல் தெற்கேயுள்ளது மெஞ்ஞானபுரம். இங்கு ஓர் செகெண்டரி பாடசாலை உண்டு. இதில் முதலாவது பாரத்தில் வாசித்துக்கொண்டிருந்த க்ஷார்ளி என்ற சிறுவன் நாசரேத்திலிருக்கும் தன் மாமனார் இல்லத்தில் கிறிஸ்மஸ் ரஜாவை செலவழிக்கப் போனபொழுது வண்டியை விட்டிறங்கி, வீட்டிற்குள் நுழைந்ததும் நுழையாமலுமிருக்க, திடீரென்று பின் வரும் கேள்வியைக் கேட்டான்.

*க்ஷார்ளி* — (தன் மாமனாரது கையைத் தட்டி) மாமா! மாமா! இஃதென்ன விபரீதம், நான் பார்த்த அளவில் மெஞ்ஞானபுரத்தில்தான் உண்டென்று நினைத்தேன் நெட்லிங்குமரம். அது இவ்விடமும் விருத்தியாகத் தலைப்பட்டுவிட்டதோ? ஊம், இங்கு இது வந்ததின் வரலாறு என்னவோ? ஈசன் தான் கொண்டுவந்தாரோ?

*மாமனார்* — (புன்னகைகொண்டு) ஈசன் கொண்டு வந்ததாவது, வருகிறதாவது,— இதென்ன க்ஷார்ளீ, இதெல்லாம் ஈசன் கொண்டு வந்தால்...... கட்டுமா?

க்ஷார்ளி — நான் ஈசன் என்றது என்னத்திற்கு? எல்லாம் நீங்கள்தான் எங்கிருந்தாவது கன்றாகக் கொண்டுவந்திருக்க வேண்டும். அல்லது, விதையின் மூலமாய் உண்டாக்கியிருக்கவேண்டும்.

மாமனார் — ஆம், இது வாஸ்தவம்தான், (தமது தோட்டத்தைக் காட்டி) அப்படித்தானப்பா, நான் இந்த தோட்டத்திலிருக்கும் ஏனைய அயல் நாட்டுச் செடிகளைக் கொண்டுவந்தது.

க்ஷார்ளி — (சற்று நேரம் மௌனமாய் யோசித்து) ஆ, ஹா! அயல் நாட்டுச் செடிகள் நம் நாட்டிற்கு வருவதும், ஏனைய செடிகள் பரவுவதும், மனுஷனாய்த் தான் செய்கிற காரியமோ? இதெங்ஙனம்?

மாமனார் — இல்லை, இல்லவே இல்லை. இவ்வளவுதூரம் நீ ஆழ்ந்த யோசனைக்காரனா யிருக்கிறதைவிட்டு உன்னை நிரைய மெச்சுகிறேன் நான். மனுஷனால் தான் செடிகள் பரவுகின்றன என்றால்... ....அதெப்படியாகும். செடிகள் பரவ வேறு இயற்கை வழிகளுண்டு—ஆனால் என் தோட்ட விஷயமாய்ச் சொல்ல நேரின், நான்தான் இச்செடிகளையெல்லாம் கொண்டுவந்தேன் மற்ற விடங்களிலிருந்து.

க்ஷார்ளி — 'நற்சமயமிது, (சற்று சந்தோஷமாய்) நம் சம்பாஷணையை நீட்ட வார்த்தையில் விட்டுக் கொடுத்தீர்கள்.

மாமனார் — 'சரி இது போதும். பின்னால் பார்த்துக்கொள்ளுவோம் (இருவருமாகப் போய் காலைப்போஜனம் முடித்துப் பின் வருகிறார்கள்)

க்ஷார்ளி — (சற்று புன்னகையுடன் எப்பமிட்டு) மாமா! மாமா! நீங்கள் சொன்னீர்களே முன்பு, செடிகள் பரவ வேறு இயற்கை வழிகளுண்டு என்று.

மாமனார் — ஆமாம், வேறு இயற்கைவழிகளில்லாவிடில், செடி, கொடி, தழைகள் இவ்வளவு தூரம் பரவுமா? (ஒரு ஆமணக்குச் செடியின் கீழ் அவனைக் கொண்டுவிட்டு) பார்! இச்செடிகளின் கீழ் வெகு தூரத்துக்கப்பாலும் விதைகள் சிதறி கிடப்பதை. இதெப்படியென்று பார்?



க்ஷார்ளி—நல்லது யோசிப்போம். (இப்படிப் பார்த்துக்கொண்டிருக்க, சிறிது பொழுதுக்கெல்லாம், திடீரென ஒரு நெற்று வெடித்து, விதைகள் சிதறின) ஆ! ஹா! இப்போத்தானே தெரிந்தது காரியம். மாமா, பருவமுற்ற நெற்றுக்குள்ளிருக்கும் விதைகள்,— சூரிய உஷ்ணத்தினால் அக்கனியின் பீஜகோசம் உலர்ந்து வெடிக்க—தெளித்து ஓடுகின்றன.

மாமனார்— நன்றாய்ச் சொன்னாய் க்ஷார்ளி, இவ்விதக்கனிகள் வேறு அநேகமுண்டு.

க்ஷார்ளி— அநேகமா! (சற்று யோசித்து) வாஸ்தவந்தான் முருங்கைக்கனி, கொறுக்காய்ப்புளிக்கனி, உளுத்தங்கனி முதலியன இப்படித்தானே தெறித்து ஓடுகின்றன. (இன்னமும் கொஞ்சம் யோசித்து) மாமா! இந்தச் சங்கதி தெரியுமா உங்களுக்கு, வாயினுள்ளே போட்டவுடன், டப் என்று வெடிக்க, விதைகள் ஓடுமே ஒருவித கனிக்கு... ஊம்......

மாமனார்— ஓஹோ! அதுதானா, (தோட்டத்தில் ஒரு மூலை முடங்கில் அவனைக் கொண்டுபோய்) இதுதானப்பா அவ்விதை, இதை தண்ணீரிலாவது, வாய்க்குள்ளாவது போட்டுப்பார் (அப்படியே. இருவரும் போட்டுப்பார்க்க, ஒரு க்ஷணநேரத்துக்கெல்லாம், கனிவெடித்து, விதைகள் சிதறின) பார்த்தாயா க்ஷார்ளி இதை?

க்ஷார்ளி— ஆ, இது ஒரு தமாஷ்தான்.

மாமனார்— தமாஷா, தமாஷாவுங் கூடத்தான், காரியமுங் கூடத்தான்.

க்ஷார்ளி — அதென்ன? (சற்று கேலியாய்) காரியமா, வெள் ளயமா? (சற்று முன் பின் யோசித்து, பிடரியைச் சொரிந்து) ஓகோ! இப்படி வெடிக்கிறதினாலும் விதைகள் சிதறி, பரவ ஏதுவா யிருக்கின்றன என சொல்லுகிறீர்கள் போலும்.

மாமனார் — ஆம், இதோடா போயிற்று. இஃதொரு வழியினால் மட்டும் செடிகள் பரவுமா?

க்ஷார்ளி — வேறு என்ன?

மாமனார் — (அவனைத் தோட்டத்தில் ஒட்டுப் புற்கள், முட் செடிகள் அடர்ந்த இடத்தினூடாகக் கூட்டிக் கொண்டு போய், பின் ஓரிடத்தில் விட்டு) 'பார்த்தாயா அப்பா, உன் வேஷ்டிகளில் ஒட்டிக்கொண் டிருக்கிற இவ் வஸ்துக்களை — விதைகளை.........

க்ஷார்ளி — விதைகளா! நீங்கள் அந்த வழியினூடாகக் கூட்டிச் செல்லும் போதே என்னைக் குத்தத் தொடங்கின இவ் வஸ்துக்கள் என்றாலும் நான் சகித்துக்கொண்டேன்...... இவைகளும் விதைகளோ?

மாமனார் — (அவன் வேஷ்டியில் ஒட்டி யிருந்த விதைகளை எடுத்து) இதோ அப்பா, இதன் மேல்தோலை எடுக்கிறேன், பார். உள்ளே பருப்பிருக்கிறதை.

க்ஷார்ளி — இப்பொழுதுதான் நன்குணர்ந்தேன் நான். இவைகள் நிச்சயமாய் விதைகளே. இத்தகைய விதைகள் எத்தனையோ என் வேஷ்டியில் எவ்வளவு தடவையோ ஒட்டி யிருக்கின்றன. அவைக ளெல்லாவற்றையும் வெவ்வேறு இடங்களில் போட்டு மிருக்கிறேன். அவ்விடங்களி லெல்லாம் இத்தகைய செடிகள் முளைக்கக்கூடு மென்பதைக் கேட்பானேன்.

மாமனார் — சரியாய்ச் சொன்னாய் க்ஷார்ளி, செடிகள் பரவுதலின் பொருட்டுத்தான் விதைகள் இவ்வாறும் அமைக்கப்பட்டிருக்கின்றன. (வேறு ஒரு முட்செடி விதையை எடுத்து) 'பார் இதை' இதன் மேல் தோட்டில் முட்கள் இருப்பதை. மேலும் நம்மால் மாத்திரமல்ல, மிருகங்கள் மூலமாயும் இத்தியாதி செடிகள் பரவக்கூடும். அஃதெப்படி யெனில், ஜந்துக்கள் நடமாடும்போது, செடிகளின் மேல் உராய்வதால், இத்தகைய கனிகள் அவற்றினுடலில் ஒட்டிக்கொண்டு, பல இடங்களிலும் சிதறும். சில வித்துக்களின் மேல் கொக்கி போன்ற முட்கள் உண்டு. இக் கனிகள் மிருகங்கள் மேல் ஒட்டகார, பின்னர் அம் மிருகங்கள் பல விடங்களிலும் நடமாடுவதால், இவைகள் பல் வேறு இடங்களில் சிதறிப் போகும். ஆப்பிரிக்கா தேசத்தில் ஒரு செடியில் இவ்விதக் கனிகள் வளர்வதாயும், அக் கனிகள் சிங்கங்களின் உடலில் சிக்கிக்கொள்வதாயும், பிறகு அதை எடுத்துவிடப் பாடுபடுவதில், இக் கனிகள் அவற்றின் வாயினுள் சிக்கிக்கொண்டு, சிங்கங்களில் சில இறந்து போவதாகவும் சொல்லுகிறார்கள். பார்! கடவுளின் ஞானம் சிருஷ்டிப் பொருளில் விளங்குகிறதை.



க்ஷார்ளி — மாமா! கேட்க கேட்க விபரீதமாகவும் ஆனந்தமாகவு மிருக்கிறது. நானுங் கேட்டேன். இவ்வளவு தூரம் ஒருநாளும் கேள்விப் படவில்லை. (சற்று முன் பின் யோசித்து, வானத்தை அண்ணாந்து பார்த்து) கொக்கிகள் இருக்கிறதினால்தான் பரவுதல் ரொம்ப எளிதா யிருக்கிறது. அப்படியானால் பருத்தி விதையைச் சுற்றி பஞ்சு இருப்பானேன்? பருத்தி விதைக்கும் கொக்கிகளிருந்தால் நன்றாய்ப் பரவும் போலும் —

மாமனார் — எல்லாவற்றையும் சரிவரச் சொல்லுகிறேன் கேள், (பஞ்சு நீங்கின பருத்தி விதையையும், பஞ்சுள்ள விதையையும் ஓரிடத்தில் போட்டு, விசிறி எடுத்து வீசி) 'க்ஷார்ளி பார்த்தாயா? இப் பஞ்சுள்ள விதைகள் இக்காற்றுக்கு ஓடுவதையும், மற்ற விதைகள் இருந்தவாறே இருக்கிறதையும், — ஆக பஞ்சு விதையைச்சுற்றியிருப்பதும், பரவுதலின் பொருட்டே. (சில பூஞ்செடி விதைகளை எடுத்து) பார் இவ்வித்துக்களை, எவ்வளவு லேசா யிருக்கின்றன. சிறிய காற்றுக்கும் பறந்து தூரப்போகும்.

க்ஷார்ளி — பஞ்சு விதையைச் சுற்றி இருப்பதும், வித்துக்கள் தட்டையாயும் லேசாயு மிருப்பதும், அவைகள் பறந்து செல்லவே—ஆனால் காற்று இல்லாவிடில் எப்படிப் பறக்கும்? காற்றும் அவசரந்தான்—சீக்கிரம் சொல்லுங்கள் — வேறு சமாசாரமுண்டா?

மாமனார் — (தோட்டத்தில் அங்கு மிங்கும் போய் சில நாவல், அத்தி, ஆல் முதலிய கனிகளைக் கொண்டு வந்து) (பார்த்தாயா இப்பழங்களை, இவ்வத்திப் பழத்தைத் தின்று பார் — (அவன் தின்றபின்) ஆ, இவ்வத்திப் பழத்தின் விதை எங்கே?

க்ஷார்ளி — ஒகோ, வயிற்றுக்குள்ளல்லோ போய்விட்டன அவ்வித்துக்கள்.

மாமனார் — ஐயையோ! வயிற்றுக்குள் மரம் முளைத்துவிடும்— என்ன செய்வது?

க்ஷார்ளி — ஆ, இதற்குமுன் முளைத்ததோ, எத்தனை பழங்கள் தின்றிருக்கிறேன்— ஏன்? எல்லாம் மலத்தின் வழியாய் வெளியேவந்துவிடும். ஏது இந்தக்கேலி?

மாமனார் — சரி சரி, எல்லாம் சும்மாவா சொல்லுகிறேன். கணக்கு கணக்குத்தான், வழக்கு வழக்குத்தான்.

க்ஷார்ளி — 'என்ன கணக்கு'!

மாமனார் — ஆஹ, நாமும் நம்மை யறியாமலே செடிகள் பரவ காரணராயிருக்கிறோம்—நம்வயிற்றுக்குள் போகும் விதைகளும், கழிந்தபின், முளைக்கும்—மேலும் நாவல், திராக்ஷை, முறுக்கம்பழம், அத்தி, இக்கனிகளை மிருகங்களும் தின்னும். பின்பு அவற்றின் மலத்தில் வெளியாகிவிடும்—இவ்வித்துக்களின் பீஜத்துவக்கு கடினமாயிருப்பதால், இவைகள் ஜந்துக்கள் வயிற்றினுள் தங்கினும் கெடுதியை யடைகிறதில்லை—இவ்விதமாக வித்துக்கள் பல விடங்களிலும் சிதறும்.

க்ஷார்ளி — என்ன மாமா, நன்றாயிருக்கிறது, காரியங்கள் இங்ஙனமாக. செடிகள் பின்னை பரவுகிறதற்கென்ன — வேறு என்ன?

மாமனார் — 'பொறு, சொல்லுகிறேன்—காற்று உதவி செய்கிறதுபோல, பரவுதலுக்குத் தண்ணீரும் உதவுகின்றது— பார்! ஒருதென்னைமரம் ஆற்றுப்பக்கத்திலிருக்க, அதன் வித்து அதனுள்விழ,......அப்பொழுது அவ்வித்து எதுவரைக்கும் போகும்? எங்கேபோகும்? என்று நினைக்கிறாய்!—

க்ஷார்ளி — ஆற்றில் உடைப்பு நேர்ந்தால், வேறு தேசத்துக்குப் போகும், மற்றப்படி சமுத்திரத்திற்கே போகும்.

மாமனார் — ஆம், சில வித்துக்கள் சமுத்திரம் வரைக்குமல்ல, அடுத்த சமுத்திரம் வரைக்கும் போய், அங்கேயும் முளைக்கலாம் போலும். மேலும் இவ்விதைகள் எவ்வளவேனும் சேத மடைகிறதில்லை......கனத்த தோலால் மூடப்பட்டிருப்பதால்......(அதிக ஆச்சரியத்தோடு) இது எப்படி யாரானும் மனுஷனால் நடக்கிற காரியமா? கடவுள் தம்முடைய சிருஷ்டிப் பொருட்களை எவ்விதமா யெல்லாம் உடுத்தி வைத்திருக்கிறார். மனிதனுடைய பிரயோஜனத்திற்காக ...............சரி. எல்லாம் முடிந்தது இதனை யொட்டிய காரியம்.



க்ஷார்ளி — இவ்வளவு நேரம் செலவழிந்தது ஒரு பெரும் பிரயோஜனத்தின் பொருட்டு. இப்பெரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்த தங்களுக்கு நான் என்ன செய்வேன். என் மனமுவந்த வந்தனம் மாமா!

(எல்லாரும் போகிறார்கள்)

JAMES - G. SUNDRAM,
*Asst. Master, C. M. High School,*
*Mangnanapuram.*

# COMPULSORY EDUCATION IN INDORE

## இந்தூரில் கட்டாயக் கல்வி

நமது இந்து தேசத்தில் சுதேச ராஜ்யங்களில் ஒன்றாகிய பரோடா ராஜ்யத்தில் சில வருஷங்களாக கட்டாயக் கல்வி நடைபெற்று வருவது அனைவருக்கும் தெரிந்துள்ள விஷயம். இப்போது இந்தூர் மஹாராஜா அவர்கள் பரோடா ராஜ்யத்தைப் பின்பற்றி தமது ராஜ்யத்திலும் கட்டாயக் கல்வியை ஆசாரத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார் என்பதைக் கேட்டு அளவிறந்த மகிழ்ச்சி யடைகின்றோம். மைசூர், திருவாங்கூர், புதுக்கோட்டை முதலிய சுதேச ராஜ்யங்களும் இவ்வரிய விஷயத்தை மேற்கொண்டு நாட்டுக்கு நன்மை புரியுமென்று நம்புகின்றோம்.

## WOMEN EDUCATION — A ROYAL GIFT

### மாதர் கல்வி — ஒரு பெரிய நன்கொடை

பரோடா ராஜ்யம் சிறியதாக இருந்தாலும் அரிய பெரிய காரியங்களைச் செய்து வருகின்றது. நாட்டுக்கு நன்மை செய்வதில் மஹாராணியாரும் மன்னவரோடு ஒத்து உழைத்து வருகின்றனர். சமீபகாலத்தில் அந்த மஹாராணியார் நமது சுதேச ஸ்திரீகளின் கல்வி யபிவிருத்திக்காகச் செய்துள்ள பரோபகாரம் மிகவும் பாராட்டத்தக்கதாம். 1½ லக்ஷம் ரூபாய் நமது தேசத்துப் பெண்மணிகளின் கல்விக்காக மூலதனம் வைத்திருக்கிறார்கள். இந்திய மாதர்களும் பெண்களும் வெளி நாடுகளுக்குச் சென்று கல்வியை அபிவிருத்தி செய்துகொள்வதற்காகத்திரவியோபகாரம்செய்ய தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார். இதுவன்றோ தருமம். நமது இந்தியநாட்டு ஸ்திரீகள் இவ்வகையில் உபகாரம் செய்ய முன் வருவார்களானால் எவ்வளவு நன்மை யுண்டாகும்!

## சீகாளத்திப் புராணம்

### மூலமும் உரையும்

சிறுகாப்பியமணி போல்வதாகக் கொண்டு புலவர்கள் புகழ்ந்து போற்றும் சிறப்பினையுடைய இச் சீகாளத்திப் புராணம் துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர் முதலிய மூவரும் இயற்றியது. இது சொற்செறிவும் பொருளாழமும் ஓசையுடைமையும் முதலிய எல்லாச் சிறப்பும் வாய்ந்தது. இது தமிழ்த் துறையிற் பயிலும் மாணவர்க்கு அமுதம்போல்வது. இதற்குக் காஞ்சி மகா வித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள் அகலவுரையொன்று வகுத்துத் தந்தனர். அநேக அரிய நூல்களுக்கு உரையாசிரியராகிய அவர் திறம் உலகமறிந்ததே யாகும். இதனை நல்ல கடிதத்தில் பழுதுபடாத எழுத்தில் அச்சிட்டு 24 திருவுருவப் படங்கள் அமைத்து பு. ஷண்முக முதலியார் என்பவர் சுமார் டிம்மி 600 பக்கங்களில் வெளியிட்டிருக்கின்றனர். காலிகோ பயிண்டுசெய்து தங்கக் கிலிட்டினால் படமும் பெயரும் அழுத்தியுள்ளது. விலை ரூபா 2—8—0 வேண்டுவோர் சென்னை ஜார்ஜ் டவுன் தாதாமுத்தியப்பன் வீதி 23 வது எண்ணுள்ள வீட்டிலிருக்கும் பு. சண்முக முதலியாரிடத்தும், ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸிலும் பெற்றுக்கொள்ளலாம்.




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வய்து 11 | 1916ஹ பெப்ருவரி மீ | மாதம் 9

## TOLSTOY AS A SCHOOLMASTER

### டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

Tolstoy at home — டால்ஸ்ட்டாய் வீட்டிலிருந்த விதம்

குழந்தைகளுக்கு வீட்டில் கல்வி கற்பிப்பதனால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி சிலர் ஐயப்படுகிறார்கள். டால்ஸ்ட்டாயிக்கு அவ்வித ஐயப்பாடில்லை. அவர் தம் குழந்தைகளுக்குச் சன்மார்க்க போதனை புகட்டிய விதத்தை விளக்க ஒரு கதை யுண்டு. அது அறியத் தகுந்தது; ஆகையால், அதை இங்கே சொல்லுவோம்.

ஒருவர் ஒருசமயம் 'எஸ்னையா பாலியானா' என்னும் கிராமத்திற்குச்சென்று டால்ஸ்ட்டாயின் வீட்டில் தங்கினார். டால்ஸ்ட்டாயின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுவதற்காக

அவர் வீட்டில் ஒரு செவலித்தாய் இருந்தாள். அவள் சுவிட்-
ஸர்லண்டு என்னும் தேசத்து ஸ்திரீ. அவளே அக்குழந்தைக-
ளின் கல்வியையும் கவனித்துவந்தாள். குழந்தைகளுக்குக் கல்வி
விஷயமாகவாவது வேறு எந்த விஷயமாகவாவது செவலித்
தாயை நியமிப்பது டால்ஸ்ட்டாய்க்கு உடன்பாடில்லை. அது
பிரபுத்துவமான பெருஞ் செலவு என்பது அவருடைய அபிப்-
பிராயம். 'செவலித்தா யென்கிற முறையில் ஒருத்தியை நிய-
மிப்பதற்குக் காரணமே யில்லை; வீட்டில் மற்றவர்களைப்போல்
அவளும் ஒருத்தியாக இருப்பது அனுகூலந்தான் என்பதில்
தடைசொல்ல முடியாது' என்கிறார். ஆகையால் அவர் வீட்-
டில் அவருடைய குழந்தைகளுக்கே ஒரு செவலித்தா யேற்பட்-
டிருந்தாள் என்றால், அதற்கு அவருடைய மனைவிதான் காரணம்
என்று நினைக்கவேண்டும். அவர், குழந்தைகளையே எதேச்-
சையாக விட்டுவிட வேண்டுமென்று வாதிக்கிறவ ரல்லவா?
அதனால் அவர் தம்மனைவியும் கொஞ்சம் யதேச்சை கொள்ள
விட்டிருந்தார் என்பதில் வியப்பு ஒன்று மில்லை.

இதில் முக்கியவிஷயம் என்னவென்றால் டால்ஸ்ட்டாய் வீட்-
டில் டால்ஸ்ட்டாயின் குழந்தைகளினுடைய நன்மைகளுக்காக
ஒரு செவலித்தா யேற்பட்டிருந்தாள் என்பதே. அவள் அதிக
மதப்பற்றுள்ளவளாம். தான் வளர்க்க ஏற்றுக்கொண்ட அந்தக்
குழந்தைகளைப்பற்றி அவளுக்கு ஒருவகையில்மட்டும் பயம்
ஏற்பட்டிருந்தது. அதாவது, எங்கே அக்குழந்தைகள் தம்
தகப்பனாரைப்போல் மதாசாரத்தில் ஊன்றிய பற்றில்லாமல்
போகிறார்களோ என்பதுதான். டால்ஸ்ட்டாய் அப்படிப்பட்-
டவரா? அவ்விஷயத்தில் அவளுக்கு உண்மை புலப்பட வில்லை.
'அவர் ஒரு பெரிய சாது என்பதற்கு ஆட்க்ஷேப மில்லை;
அவர் உலகத்திற்கு நன்மை செய்கிறாரென்பதை ஒருவரும்
மறுக்க முடியாது; ஆனால் அநேக விஷயங்களில் கிறிஸ்தவ
மதாசாரங்களை அவர் ஒப்புக்கொள்வதில்லை.' அப்படிப்பட்ட-
வருக்குப் பிறந்த பிள்ளைகள் மதாசாரங்களை யெல்லாம் கௌர-
வித்து நடந்து கொள்ளுவார்களா?' என்று அந்தச் செவலித்
தாய் தனக்குள் எண்ணி எண்ணி வருந்தினாள். இந்தச் செவலித்
தாய் மேற்சொன்ன விருந்தாளிக்குப் பின்வரும் கதையைச்
சொன்னாள்.



ஒருநாள் டால்ஸ்ட்டாயின் பெண், (பத்து வயதுள்ள குழ-
ந்தை) தன் வீட்டிற்கு எதிரே ஒரு ஏழைப் பையனோடு விளை-
யாடிக் கொண்டிருந்தாள். அப்போது அவர்களுக்குள் ஒரு
சச்சரவு ஏற்பட்டது. அது குழந்தைகளுக்குள் சகஜந்தானே.
பையனுக்குக் கோபம் பிறந்து, உடனே அருகில் இருந்த ஒரு
தடியை எடுத்து அவள் கையின்மேல் ஓங்கி அடித்தான். அடி
பலமாகப்பட்டது. குழந்தை அழுதுகொண்டே வீட்டிற்குள்
ஓடிவந்தாள். அவள் கையில் பட்ட காயம் பலமாகத்தானிருந்-
தது. வீட்டிற்குள் சென்ற குழந்தை நேராகத் தன் தகப்பனா-
ரிடம் ஓடினாள். தன் தகப்பனார் எழுதிய புஸ்தகங்களைப்பற்றி
குழந்தைக்கு என்ன தெரியும்? செவிலித்தாய்க்கு இப்போது
நல்ல சமயம் வாய்த்தது. டால்ஸ்ட்டாய் தம் குழந்தை விஷ-
யத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்; அவர் ஊருக்குச் செய்-
யும் உபதேசம் தம் சொந்தவிஷயத்தில் எவ்வளவுதூரம் உப-
யோகப்படுகிறதோ பார்ப்போம் என்று எண்ணி, தூரத்தில்
நின்று கவனித்தாள்.

குழந்தை தம்மிடம் வந்ததும் டால்ஸ்ட்டாய் குழந்தையை
வாரி யெடுத்து முத்தமிட்டு கண்ணைத் துடைத்து காயத்தைப்
பார்த்தார். குழந்தை நடந்தவிஷயத்தை அழுதவாறே சொன்-
னாள். உடனே அவர் எழுந்துபோய் அந்தப் பையனைப் புரட்டி
அடித்தாலொழிய அவள் மனத்துக்குத் திருப்தி யேற்படாது-
போலிருந்தது.

'அம்மா, குழந்தாய், அவனை அடித்தால் உன்னுடைய
நோய் நீங்கிவிடுமா? அதனால் உனக்கு என்னலாபம்?' என்று
பலவாறு கேட்டார்.

டால்ஸ்ட்டாய் என்ன சொன்னாலும் குழந்தை கேட்ப-
தாகக் காணோம். டால்ஸ்ட்டாய் மிகப் பொறுமையுடன் அக்
குழந்தையின் கோபத்தையும் துக்கத்தையும் ஆற்றி அவளோடு
வர்திக்க ஆரம்பித்தார். கடைசியாக, 'அம்மா நான் சொல்-
வதை எண்ணிப்பார். அந்தப் பையன் உன்னை ஏன் அடித்தான்?
உன்மேல் இருந்த கோபத்தால்தானே அவன் அப்படி அடித்-
தான். அதாவது என்ன? அவனுக்குக் கோபம் வந்தபோது உன்
மேல் வெறுப்பும் உண்டாயிருக்குமே. நான் இப்போது அவனை

அடித்தால் அவன் உன்னை இன்னம் அதிகமாக வெறுப்பானல்-
லவா? அந்தவெறுப்பு உன்னோடுபோகாமல் என்மேலும் ஏற்-
படும் அல்லவா? அவனை அடித்து அவனுக்கு வெறுப்புண்டாக்கு-
வதைக் காட்டிலும் அவனை நல்ல வழியில் திருப்பி நம்மிடம்
அன்பு பாராட்டும்படி செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!
அவன் நம்மை மேலும் மேலும் வெறுக்க ஆரம்பித்தால்,
வெறுப்பு என்னும் கெட்ட குணம் அவனிடம் வேரூன்றி
நிலைத்து விடுமே!' என்றார்.

அவ்வளவில் குழந்தை தன் அழுகையை நிறுத்தினாள்.
அவள் கையில் ஏற்பட்ட வலியும் அடங்கிற்று. அதனால் அவள்
கோபமும் சிறிது தணிந்திருந்தது.

பத்திராதிபர்.

# TIFFIN IN SCHOOLS

## பாடசாலையில்
## இடைவேளை உணவு கொடுத்தல்

நமது இந்து தேசத்தில் உள்ள சுதேசராஜ்யங்களில் பரோ-
டா ராஜ்யம் தலைசிறந்து விளங்குகிறது. பரோடாராஜா அவர்-
கள் அடிக்கடி தேச யாத்திரை செய்து, ஆங்காங்கே காணும்
நல்ல முறைகளை யுணர்ந்து, தமது நாட்டில் அவற்றை உபயோ
கத்திற்குக் கொண்டு வருகின்றனர். கல்வி விஷயமாகவும்
கைத்தொழில் விஷயமாகவும் ஜனசாரசீர்திருத்த விஷயமாக-
வும் அப்பெருமான் மேற்கொள்ளும் முயற்சிகள் பலருக்கும்
தெரிந்தவையேயாம். சமீபகாலத்தில் பாடசாலையில் ஒரு புது
வழக்கத்தை ஆசாரத்திற்குக் கொண்டுவந் திருக்கின்றனர்.
அதென்ன வெனில்:

பாடசாலையில் வாசிக்கும் மாணாக்கர்கள் வர வரப் பல-
வீன மடைகின்றனர். இதற்குக் காரணம் யாது என்பதை
ஆராய்ந்து, பிள்ளைக்கு இடைவேளை யுணவு தக்கபடி இல்லா-
மையே இதற்கு ஏற்ற காரணமாகும் என்பதை அதிகாரிகள்
தேர்ந்து கூறினார்கள். பரோடா ராஜ்யத்தில் கட்டாயக் கல்வி



ஏற்பட்டு நடைபெற்று வருகிறது. இதனால் எல்லாப் பிள்ளை
களும் படிக்க நேர்ந்திருக்கிறது. இவர்கள் சாதாரணமாகக்
காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் பாடசாலையில்
தங்கி வாசிக்க நேரிடுகின்றது. பெரும்பாலான பிள்ளைகள் தம்
ஏழ்மையினாலும் வேறு சந்தர்ப்பக் குறைகளாலும் இடைவேளை
யுணவு இல்லாமல் இருக்கின்றனர். இக்குறையை நீக்க
எண்ணிப் பரோடா ராஜா அவர்கள் ஒரு 'மாடல் ஸ்கூலில்' இல-
வசமாக இடை வேளை யுணவு கொடுக்கும்படி ஏற்பாடு செய்
தார். அவ்வாறு சென்ற சில மாதங்களாகக் கொடுத்து வந்த-
தில், பிள்ளைகள் அநுகூலமடைந்து வருவதாக ஏற்பட்டதாம்.
அதனால் இந்த ஏற்பாடு பரோடாவில் உள்ள எல்லாப்பாடசாலை-
களிலும் சீக்கிரத்தில் உண்டாகும். அதனால் ராஜாங்கத்துக்கு
ஏற்படும் செலவை எண்ணி, பெற்றோர் பலர் அதற்குத் தம்மா-
லியன்ற உதவி செய்ய முன்வந்திருக்கின்றனர்.

இதில் மற்றொரு விஷயம் கவனிக்கத் தகுந்தது. அதாவது,
மேற்சொன்ன பாடசாலையில் பாடம் படியாத பிள்ளைகளுக்கு
இடை வேளை இலவச போஜனம் கொடுப்பதில்லை என்று ஒரு
திட்டம் ஏற்படுத்தினார்களாம். அதனால் பிள்ளைகள் தம் பாடங்-
களை அதிக ஊக்கத்தோடு படிக்கத் தொடங்கினார்களென்றும்,
பிரம்பின் பிரயோசனம் பாடசாலையில் அறவே அற்றுப் போ-
யிற்றென்றும் தெரியவருகிறது.

இந்த ஏற்பாடு உண்டான பின்பு மேற் சொன்ன பாட-
சாலையில் பிள்ளைகள் ஏராளமாக வந்து சேரப் பிரயத்தனப் படு-
கின்றார்களாம். இம்மாதிரியான வழக்கம் இங்கிலாந்திலும்
அமெரிக்காவிலும் ஸகஜமாக உண்டாம். பால்ய வித்தியா விஷ-
யத்தில் இப்படிப்பட்ட அநுகூலங்கள் மேலும் மேலும் ஏற்படு-
வதுதான் நாட்டுக்குப் பெரும் பாக்கியம் என்று சொல்லலாம்.
பரோடாவில் நடைபெறும் விஷயம் மற்ற இடங்களிலும் பரவி-
னால் நலமாகும்.

பத்திராதிபர்.

# JEWELS AND CIVILIZATION
## அணியும் நாகரிகமும்

(முன்தொடர்ச்சி பக்கம் - 178)

அணியின் வளர்ச்சி இதுவாக, அதன் பிறப்பைச் சிறிது ஆராய்வோம். துணியும் அணியும் இரண்டு சோதரி வயிற்றிற் பிறந்த குழந்தைகள். துணியின் தாய் மூத்தது; அணியின் தாய் இளையது. முன்னையது பிண்டித்தழை; பின்னையது தென்னையிலை (ஓலை யென்பது மரபு.) துணியின் தாய் அகக்காழ மரத்திலும் அணியின் தாய்ப் புறக்காழப் புல்லிலும் பிறந்திருக்கச் சோதரி யென்றது எப்படியெனில், இவையிரண்டும் ஒரு செவிலியின் கீழ் வளர்ந்தன; ஒன்றற்கொன்று உதவியா யிருந்து கூடிவாழ்ந்தன; ஆதலிற் சோதரியாக மருவினவாகும்.

அக்கூறிய செவிலி யாதெனிற் பெண்களின் காதாம்.

—— துணைத்தக்க
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண் பூணாகம் திளைப்பச் ——
சூரா மகளிர் ஆடுஞ்சோலை.

இணையொத்த இரண்டு பிண்டித் தளிர்க்கொத்தைக் காதிற் கட்டி மார்பிற் புரளுமாறு, அணங்குகள் ஆடுஞ்சோலை யென்பது இதன் பொருள்.

மேனியை மறைக்கவேண்டும் என்னும் எண்ணம் தமிழ்ப் பெண்மக்கள்பாற் றோன்றிய காலத்து, முதலில் அவர்கள் தழை குழைகளால் மறைத்தார்கள் என்று சொல்லியதாயிற்று. அத்தழை குழைகளால் முதலில் மறைக்கப்பட்டன காணுத்தலம் இரண்டையேயாம். இவ்விரண்டில் அடித்தலம் அரசிலையாலும், முடித்தலம் பிண்டித் தளிராலும் மறைக்கப் பெற்றன. இவ்விலைக்கும் குழைக்கும் உதவி புரிந்தன இளங் கொடிகளாம். அரையிற் கட்டியக் கொடி அசையாமல் நிற்கக் காதிற் கட்டியது ஆடும்போது குழையின் கனத்தால் அடிக்கடி இற்றுப் போவதும், அதனால் உற்றகாரியம் முட்டுப்படுவதும்கண்டு, காதில் எவ்வண்ணமாகவோ ஒரு சிறு தொளையிட்டு குழையைக் கோத்து ஆடி வந்தார்கள். இச்சிறு தொளையும் குழையின் கனத்தால் பெருத்துக் குழை நழுவலாயிற்று. நழுவாமல் பூக்களின் தோடுகளை (இதழ்களை)ச் செருகித் தகைந்து வந்தார்கள். இங்ஙனம் உண்டாயின தோடும் தக்கையும், இவற்றைத் துணிக்க எடுக்கக் கஷ்டமுண்டாகியதால், தென்னோலையைச் சுருட்டிக் காதில் இட்டுத் திருகக் குழைக்கொம்புக் கேற்ற துவாரம் நடும்பெற உண்டாயது. இத் துவாரமும் பெருத்ததால் பின்னும் ஒரு ஓலையைச் சேர்த்துத் திருகித் தொளை வேண்டியவளவு சிறுத்துக் கொள்ளலாயிற்று. இவ்வோலை எவ்விதத்திலும் ஏற்றதாய் இருக்கக் கண்ட மக்கள் இதையே காதின் இயற்கையணியில் கடையணியாகக் கொண்டார்கள். இதுகொண்டே காதணிக்கு ஓலை யெனப் பெயர் வந்தது. இதைத்தொலைக்க வந்த பொன்னோலைக்கும் கல்லோலைக்குங் கூட ஓலை யெனப் பெயர் வாய்ந்தது உற்று நோக்கத்தக்கதே.

இவ்வணம் பொன்னோலையும், கல்லோலையும் தன்னை அடியோடு குடியோட்டிய சாகா வயிரிகளாயிருந்தும், பிடரியைப் பிடித்துத் தள்ளினாலும் பெண்ணுக்குச் சிற்றப்பன் என உள்ளே நுழைவாரைப் போன்று, பொன்னோலைக்கோ, கல்லோலைக்கோ, முன்னோடி வந்து இடவசதி செய்து கொடுத்துப் போவது தென்னோலை யெனக் காண்கிறோம். மற்ற மற்ற அணிகள் பூணும் உறுப்பைப் புறஞ் சூழ்ந்தது நிற்க, இவ்வோலையோ எந்த அணிக்கும் முந்திய அணியா யிருந்தும், அணியும் உறுப்புக்கு உள்ளடங்கி நிற்பது ஒரு சிறந்த குணம். தன்னைத் துரத்த வந்த வயிரிகளும் தன் பெயரையே அணிந்துகொள்ளும்படி செய்தது மற்றொரு சிறந்த குணம். தன்னின் வலியாரைக் காணின் தான் முரணாது ஒதுங்கிப் போதல் பின்னும் ஒரு சிறந்த குணம். இவ்வளவு சிறந்த குணம் உள்ள ஓலையையுடைய தென்னையை வியக்க எம்மாலாகாது. வெறு நீரைக் கொடுத்தவர்க்கு இளநீரைத்தரும் பெருமை யுடையது என்று ஔவை சொன்னது போதாது என்றுமட்டும் சொல்லலாம்.

இதுகாறும் கூறியதுகொண்டு பிண்டிக் குழை முன்னையும், தென்னையிலை பின்னையுமாகப் *பொள்ளற் காதுத் †தள்ளையால் பாராமரித்து வந்தமையும் ஒத்துழைத்துச் சோதரி முறை கொண்டமையும் கண்டோம்.

*பொள்ளற்காது = தொளையிட்டகாது. †தள்ளை = தாய் (Compare தல்லி)

இனி, மகளிர் காதுக்கு ஓலை வந்த முறை சரி; மகார் காதில் கடுக்கன் வந்த தெங்ஙன மெனிற் சொல்லுதும். பெண்ணைப் பெற்றவர்கள் காதைத் தொளைத்துத் தென்னோலையால் வளர்த்துப் பின்னர்ப் பொன்னோலை யிடக்கண்டு, பிள்ளையைப் பெற்றவர்கள் காதைத் தொளைத்துக் கடுக்கனிட்டார்கள் எனில், இது என்ன பித்தர் செய்கை என்பீர்கள். பெண்ணையும் பிள்ளையையும் அடுக்கடுக்காய்ப் பெற்ற ஒரு தாய் பெண்ணுக் கணியிட்டுப் பிள்ளையைச் சும்மாவைக்க மனம் ஒப்புவாளா? பிள்ளைதான் சும்மாயிருக்குமா?

‘குண்டல மோதிரங் கடகம் சுட்டியயன்
மனையார்தங் குழந்தைக் கிட்டார்
புண்டரிகக் கண்ணன்று யெனக்கு நீ
யிடாதிருக்கும் பொறுமை யென்னே
கண்டெடுத்திப் போதிடெனக் கரை மதலைக்
கில்லாதான் கடன் தந்தானுக்
கெண்டபச் சொல் வார்த்தையென
நாளைக்கு நாளைக்கென் றியம்பிச் சோர்வாள்’

காட்டில் வசித்த குசேலருடைய வைதிகப் பிள்ளைகளே தாயை இவ்வாறு கூறுமர்யின், நாட்டின் நடுவிலுள்ள நகரவாசிகளின் லௌகிகச் சிரோமணிகள் சும்மாவிருக்கும் என்று சொல்ல இயலாது. ஆதலால் பிள்ளைகளுக்கும் காதைத் தொளைத்துக் கடுக்கனிட வேண்டியது அவசிய மாயிற்று என்பது வெளிப்படை.

இனிப் பெண்களுக்குத் தென்னோலை இயற்கையணியும், பொன்னோலை செயற்கையணியும் ஆனது போலப் பிள்ளைகளுக்குக் கடுக்கன் செயற்கை யணியானால் அவர்கள் இயற்கையணியாதெனிற் சொல்லுதும். கடுக்கன் என்றது ஒரு மரூஉமொழி, அது கடுக்கை யென்றிருந்தபதம். எழுதினவர் ஒருவர் ‘கடுக்கை’யின் ஈற்றிலுள்ள ககரஐகாரத்தில் உள்ள இரட்டைக் கொம்பைக் ககரத்து முந்தியிடவேண்டிய இரட்டைக் கொம்பைப் பிந்தியிட்டு விட்டார்போலும். னகரத்திற்கும் இரட்டைக் கொம்புக்கும் அவசரத்தில் எழுதின் பேதமேகிடையாது. முற்காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையிட்ட காலத்து



மெய்களுக்குப் புள்ளியிடும் வழக்கம் ஒழிந்திருந்தது. ஆகவே அது கடுக்கன் எனப் படிக்கலாயிற்று. அப்பிழை திருத்தப் பெறாமல் இற்றை நாள் வரை இருந்திருக்கிறது. இனித்திருத்துவதில் பயனுமில்லை. கடுக்கனென்ற பழக்கம் மிகுத்தேறி விட்டது. கடுக்கன் என்னும் அணி அணியப் பெறாமல் மறக்குங் காலமுமாயிற்று, ஆதலின் என்க.

இனிக்கடுக்கையாவது யாது? கடுக்கையென்பது கொன்றை. இங்கே கொன்றைப்பூவின் இடை நிற்கும் பொன்னிறமுள்ள இரண்டு நரம்புக்காயது முதலாகு பெயர். இங்கே கொன்றையெனக்கொண்டது ‘ஞாழல்’ எனப் பண்டு பலமாய் வழங்கிய புலிநகக் கொன்றையே என்க. இதன் இடை நிற்கும் பொன்னிற நரம்புக்கும் மதுரை நாட்டில் மறவ மக்களிடும் கடுக்கனுக்கும் சிறிதும் பேதந் தோன்றாது. சரக்கொன்றை நரம்பையுங்கொள்ளலாம். அது தமிழ் நாட்டுச் சைவமடாதிபதிகள் சாதாரணமாக அணியும் காதணியைப் பெரும் பாலும் ஒத்திருக்கும். இங்ஙனமாகக் கடுக்கை என்றது இயற்கையணி. கடுக்கன் என்பது செயற்கை யணியாதல் கண்டனம்.

இனிப் பெண்ணின் காதைத் தொளைத்ததற்குச் சொல்லிய காரணம் பொருத்தமுடையதென்றாலும், பிள்ளையின் காதைத் தொளைத்து ஒப்புக்குச் சப்பாணி கொட்டுவார்களா வென்று கேள்வி வரும். இதற்கு ஒப்புமட்டும் காரணமன்று உயர்ந்த ஒரு காரணம் உள்ளீடாய் உள்ளது. ஆடு, மாடு, நாய், குதிரை இவற்றின் காதின் ஒரு பாகத்தை யறுத்துவிடப் பார்த்திருக்கிறோம். இதனால் இயற்கையில் மிகுத்தோடும் இரத்தம் சிறிது வெளிப்படிற் அது பிராணிகளின் சுகத்துக் கேது என்னும் நோக்கமே யொழிய வேறில்லை. காதறுபட்ட பிராணிகளையும் மற்றப் பிராணிகளையும் கண்ணாற் பார்க்கும்போதே தெரியும். அன்றியும் சிலருடைய காதின் மடலிடையில் ஒரு சிறுவிரல் நுழையத்தக்க துவாரம் இருக்கக் கண்டிருக்கலாம். காரணம் விசாரிக்க, ‘விரை சுரக்க’க் கண்டு அதைக் கழிவுறுத்தும் பொருட்டுச்செய்த உபாயம் என்றறிகிறோம். காதைத் தொளைத்தது தேகத்தின் பொருட்டாம் என்க. அஃதேல் காதைத் தொளைப்பவர் நந்நாட்டார் மட்டும் தானோ எனில், ஐரோப்பியர் ஒழிந்த எந்நாட்டாரிடத்தும் இவ் வழக்கம் உண்டு. மகம்மதி-

யப் பெண்கள் காதில் கணக்கில்லாத தொளையிட்டு அணியிட்டு வருவதைக் காண்கிறோம். மகம்மதியச் சிறுவர்களுக்குக் காதைத் தொளைப்பதை விட்டுச் சுன்னத்துக் கல்யாணம்செய்துவருகிறார்கள். இவ்வழக்கம் பண்டை எபிரேயர், யூதர், எகிப்தர், மொராக்கோவிய ரிடமிருந்து பெற்றதாக வெளியாகிறது. இது சீனர், ஜப்பானியர், சீயர் மலையரிடத்தும் உள்ளதே யென்ப. ஐரோப்பியர் தேசம் குளிர் மிகுதியால் ரக்த சேஷ்டை அவ்வளவாக இல்லை; அன்றியும் இதைக் கையாடாவிட்டாலும், உதிரங் கழித்தல் (Bleading) என்ற ஒரு பழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது இருபாலார்க்கும் உண்டு. இக்காரியத்தைக் கையறியாதவன் செய்தாலும், கணக்குக்கு மிஞ்சி இரத்தத்தைக் கழிவுறுத்தினாலும் சிலசமயம் உயிர்க்கிறுதி விளைப்பதாகும். சிறு வயதிற் செய்வது சுளு, வயதேறிச் செய்வது பளு. இதை யறிந்து எமது மேனாட்டாரும் கைக்கொள்ளுவாராயின் இக் கஷ்ட நிஷ்டூரம் அருகிச் சுகம் பெறவுங் கூடும்.

## 4. அணி நாகரிகமன்று என்னும் தடைக்கு விடையும் முடிபும்.

இனி இதுகாறுங் கூறியது கொண்டு அணியணிவது நாகரிகப் பெருக்கத்தைக் காட்டுவதுமன்றி, தேக சௌக்கியத்துக்கு ஏற்றது மாகும் என்று அறிகிறோம். இஃது இங்ஙனமாக லண்டன்மா நகரிலோர் பெருங் கூட்டத்தில் கடுக்கனைப்பற்றிய ஒரு பிரஸ்தாபமுண்டாகி அதைப் பற்றித் தடையும் அதற்கு விடையுங் கிடைத்திருப்பதை ஈண்டு எடுத்துச் சுருக்கிச் சொல்லி இவ்வியாசம் முடிவுபெறச் செய்வோம்.

ஒருசமயம் லண்டன் டவுன் ஹாலில் ஒரு அரிய பெரிய உபந்நியாசம் நடைபெற்றது அதன் முடிவில், 'கடுக்கனிடும் மிலேச்சப் பழக்கம் இந்துக்களை இன்னும் விட்டிடக் கண்டிலேம்' (Ear-ring — the semi barbarous custom still lingers in India) என்று காரணக் குறிப்பாற் கூறி உபந்யாசக்காரராகிய எமது ஆங்கில நண்பர் ஒருவர் தமது வியாசத்தை முடித்தனர். நமது நாட்டு நண்பரொருவர் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

தான் ஒரு பெரிய உபந்யாசகர், ஆதலால் அச்சமயம் தடுத்துச் சொன்னால் உபந்யாசகருக்கு மனங் கோணிக் கொதி-



க்கும் என்றறிந்தவர் அன்றியும் கேட்டுக்கொண்டிருந்தவர் கேட்டது மனத்தில் படும்படிச் சிறிது இருந்து சிந்திக்கு முன்னர்த் தடையைக் கொடுத்தால் கேட்ட அனைத்தும் கலக்குற்றுச் சிதையுற்றுப் பயனற்று அழியும் என்பதையும் நன்கறிந்தவர். ஆகவே அச்சமயம் மௌனமாக எழுந்து இருப்பிடம் சேர்ந்து விட்டால் ஒருவாரம் தரித்து, 'கடுக்கனிடும் மிலேச்சப் பழக்கம்' என்ற தலைப்பில் ஒரு உபந்யாசம் லண்டன் டவுன் ஹாலில் இன்னாரால் நடைபெறும்; இன்னார் சபைத்தலைவராவர்; என்ற ஓர் பிரசுரம் வெளிப்பட்டது. இதற்கு வந்தவர் எண்ணிறந்தார் ஆவர். முந்திச் சொல்லிய உபந்யாசகர் முதலிலே வந்திருந்தார். உபந்யாசகர் குறித்த காலத்தில் அத்தாணி மேடையில் ஏறினார். அவர் வாயினின்றும் வெளிவருவதைக் கேட்க, வந்தவர் எவரும் அவர் முகத்தைப் பார்த்த வண்ணமா யிருந்தனர். அவர் இவ்வண்ணம் ஆரம்பித்தார் —

நேசர்களே! சென்ற வாரத்தில் இந்த ஹாலில் எமது நண்பர் இன்னார் இன்னபடி சொல்லித் தாங்கூறிய கூற்றிற்குக் காரணமும் கூறித் தமது உபந்யாசத்தைப் பூர்த்தி செய்தார். இது உங்கள் ஞாபகத்தில் இருக்கலாமே. அவர் சொல்லிய காரணம் ஒன்றே. 'கடுக்கனிடுவது இயற்கைக்கு மாறான காரியம். (The process is unnatural) அதாவது: கடுக்கனிட வேண்டுமென்பது கடவுளினது எண்ணமானால் அதை இடுவதற்கான தொளையொன்று இட்டே யிருப்பார். அப்படி யிடாதமையால் இயற்கைக்கு மாறென்று சொல்லலாயிற்று' என்றார். இக்காரணம் ஒன்றே அவர் செய்த சித்தாந்தத்துக்குப் போதுமானதாக இருக்கும் பக்ஷத்தில் உலகத்தில் நாகரிகஞ் சிறந்த நாட்டில் மிலேச்சத்தனத்தை யொழிய வேறொன்றும் காண்டற்கரிதாம்.

பல்லைத் துலக்குவது இயற்கைக்குமாறு. ஆதலால் பல் துலக்குவது மிலேச்சத்தனம்; தலை மயிரைக் கத்தரிப்பது மிலேச்சத்தனம். கால் கைகளிலுள்ள நகங்களையறுப்பது மிலேச்சத்தனம்; உடை தரிப்பது மிலேச்சத்தனம்; நெல் விதைப்பது மிலேச்சத்தனம்; விதைத்த நெற்பயிரைப் பறித்து நடுவது மிலேச்சத்தனம்; நட்டு விளைந்ததை அறுத்துச் சேகரஞ் செய்வது மிலேச்சத்தனம்; சேகரித்த நெல்லைக்குத்தி

அரிசியாக்குவது மிலேச்சத்தனம்; அரிசியை உணவிற் கேற்றபடி பக்குவம் பண்ணுவது மிலேச்சத்தனம்; செய்த உணவை வாயின் வழியாக வயிற்றிற் சேர்ப்பது மிலேச்சத்தனம்; உண்டதுபோக எஞ்சிநின்ற நெல்லைவேண்டுபவர்க்கு விற்பது மிலேச்சத்தனம; விற்பதற்காக வேண்டிய வண்டி கப்பல்கள் செய்வது மிலேச்சத்தனம்; வண்டியை மாடுகட்டி யிழுப்பது மிலேச்சத்தனம்; கப்பலைத் தண்டுவலித்துச் செலுத்துவதும் மிலேச்சத்தனம்; மாட்டையுந் தண்டுகளையும் விலக்கி நீராவியால் இயக்குவதும் மிலேச்சத்தனம்; அரசாட்சி செய்வதும் மிலேச்சத்தனம்; அமைச்சரை யேற்படுத்துவது மிலேச்சத்தனம்; ஆலோசனை கேட்பது மிலேச்சத்தனம்; எண்ணு மெழுத்தும் ஏற்படுத்தியது மிலேச்சத்தனம்; எழுதியவற்றை அச்சிடுவது மிலேச்சத்தனம்; அச்சிட்ட ஏட்டைச் சேர்த்துக் கட்டிப் புத்தக ரூபமாக்குவது மிலேச்சத்தனம்; புத்தகத்தை விற்பது மிலேச்சத்தனம்; விற்றதை வாங்கிப்படிப்பது மிலேச்சத்தனம்; குதிரையேறுவதும், குண்டிட்டுச்சுடுவதும் மிலேச்சத்தனம்; இவ்விதமாக உண்டியுண்பதும், உடையமைப்பதும், விக்கிரயஞ் செய்வதும், வாணிகம் நடத்துவதும், ஓதலும், ஓதுவித்தலும், யுத்தம் செய்தலும் மிலேச்சத்தனமாக முடியும். அங்ஙனங் கூறுவது சரியாவென்று யோசிக்கற் பாலது. கடவுள் சில காரியத்தைச் செய்வார்; பல காரியத்தை நம் சவுகரியத்துக் கேற்றபடி செய்துகொள்ள மனம், புத்தி, சித்தங்களைக் கொடுத்திருக்கின்றார். 'சித்தம் போக்குச் சிவம் போக்கு' என்றிருப்பதுங் கவனிக்கத்தக்கது.

'God made the country; man made the town' — 'கடவுள் படைத்தார் நாட்டை; மனிதன் படைத்தான் நகரை' என்ற ஆன்றோர் வாக்கையும் ஈண்டுக் கூறியதோடு ஒட்டி நோக்குக.

இனி, கடுக்கனென்ற ஆபரணத்தையே எடுத்துக் கொள்வோம். அணிபவன் தனக்கேற்றது இன்னதினிது என்று அறியும் சதுரனாக இருப்பான். அணியச் செய்பவன் இவர் முகத்துக்கு இன்னது பொருத்தமுடையது என்று மதிக்கும் சதுரனா யிருப்பான்; அணியைச் செய்பவன் இன்ன கல்லை இன்ன இடத்தில் வைத்திழைக்க வேண்டும். இன்னபடி இடம் மாறி-



னால் இன்ன கெடுதியை விளைக்கும் என்று நிதானித்துச் செய்யுஞ் சதுரனா யிருப்பன். இப்படி மூன்று சதுரர் செய்து முடித்த காரியம் எளிதென்று எண்ணலாகாது. நாகரிகப் பொலிவென்றே சொல்ல வேண்டும் என்று சொல்லி முடித்தார். வந்திருந்தவர்கள் அடிக்கடி கைகொட்டி யார்த்தார்கள். முந்தின வாரத்து உபந்யாசகர் ஆங்கில கனவானானதால், தான் சொல்லியது தவறென்றே சொல்லி, தன் உள் மனக் கிடக்கையை வெளியிட்டார். அனைவரும் கேட்ட சங்கதிக்கு மகிழ்ந்து சொன்னவரைப் பிரிவதற்கு வருந்தி, ஆங்கில நண்பர் நேர்மையை வியந்து, செலவிட்ட காலத்தைப் புகழ்ந்து வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

இவ்வணம் எட்டியமட்டில் அணியின் வளர்ச்சி நாகரிக முதிர்ச்சி யென சித்தாந்தம் செய்யலாயிற்று. எமது நண்பர் ஆங்கிலப் பெரியருக்கு உடனே தடை கொடாததற்குக் கூறிய காரணத்தை யாமனைவரும் எற்றைக்கும் மறவாதிருப்போமாக.

I. SWAMINATHAN.

## MORAL TEACHING

### சன்மார்க்க போதனை

'ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்'

உலகிற் ஜனித்த மானிட ரனைவருக்கும் கல்விப்பொருளால் விளையும் நன்மைகள் எண்ணிறந்தன. ஒருவன் பாஷா ஞானம், கணிதம், சாஸ்திரம் முதலியவற்றில் எவ்வளவுதான் தேர்ச்சி பெற்றவனாயினும், அவன் உலக வாழ்க்கைக்கு அத்யாவசியமான விஷயங்களை யுணர்ந்திரானாகில், அவன் கற்றுள்ள வித்தைகளின் பயன் யாது? அவனுடைய வித்தைகள் யாவும் அவித்தையே.

'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவில்லா தார்.' என நாயனாருங் கூறியுள்ளார்.

ஒருவன் படிப்பதின் முக்கிய நோக்கம் யாதெனில்: தன் புத்தியை எவ்வளவுக்கு விருத்தி செய்யக்கூடுமோ அவ்வளவுக்கும் விருத்தி செய்து, பரம ஞானியாகிய கடவுள் எந்நோக்கத்துடன் தனக்குப் புத்தியைக் கொடுத்தாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதேயாகும்.

கடவுள் எந்த நோக்கத்துடன் மனிதருக்குப் புத்தியைக் கொடுத்தாரென்றால்: — மானிடனின் பகுத்தறிவைக் கொண்டு, நன்மை இன்னது, தீமை இன்னதென வுணர்ந்து, தீமைகளை முற்றும் விலக்கி, நன்மைகளையே என்றும் நாடுவதற்காகவே ஆதலால் உலகிற் ஜனித்த மாந்தரனைவரும் எப்பொழுதும் தீமைகளை அறவே நீக்கி, நன்மைகளையே நாடவேண்டும்.

‘தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்’ என்பதற்கிணங்க, இந்த சன்மார்க்க நெறிகளை விருத்திசெய்ய இளம்பருவத்தில் தொடங்கவேண்டும். குழந்தைகளின் சன்மார்க்கப் பழக்கங்களுக்கு ஏதுவாயிருப்பவர்கள், பெற்றோர், கூடிவிளையாடும் நண்பர்கள், உபாத்தியாயர் ஆகிய இவர்களே. பெற்றோர், சிநேகிதர் இவர்களால் உண்டாகக்கூடிய சில தீய பழக்கங்கள் பாடசாலையில் உபாத்தியாயரால் கற்பிக்கப்படும் ‘சன்மார்க்கபோதனை’யால் மாறக்கூடியவை. ஆதலால் மாணாக்கரைச் சன்மார்க்கத்திற் பயிற்றுவது நமது முதற்கடமையாகக் கொள்ளவேண்டும்.

‘சன்மார்க்க போதனையை’ குழந்தைகளுக்கு எப்படிப் போதிக்க வேண்டுமென்பதைச் சற்றே ஆலோசிப்போம்:—

குழந்தைகளின் இளம்பிராயத்திலேற்படும் ‘சுபாவ உணர்ச்சிகள்,’ ஒரு பிள்ளைக்கு இருப்பதுபோல மற்றொரு பிள்ளைக்கு இரா. சில மாணவர் இயற்கையாக நற்குண முடையவர்களாயும், சிலர் இயற்கையில் சண்டித்தன முள்ளவர்களாயு மிருப்பார்கள். இந்தக் குணகுணங்களை நாடோறும் பிள்ளைகள் பாடசாலையில் இயற்கையாகச் செய்யும் செய்கைகளினால் கிரகிக்கலாம். இவர்களுள் ‘நல்ல சுபாவ உணர்ச்சி’ யுள்ளவர்களைக் குறிப்பாலறிந்து, அவைகளை நாளடைவில் விருத்தியாக்கி, அவற்றை ஸ்திரமான நன்னடக்கைகளாக மாற்றல் வேண்டும். கெட்ட ‘சுபாவ உணர்ச்சி’



யுள்ளவர்களை சமயோசிதமாய்த் திருத்த முயலவேண்டும். அஃது எவ்வாறெனில்:—

குழந்தைகளுக்கு மிக்க ஆசையை யுண்டுபண்ணும் ‘கதை சொல்லுதலை’ சந்தர்ப்பத்துக் கேற்ற வண்ணம் பிரயோகிக்க வேண்டும். பாலர்களுக்கு உற்சாகம் உண்டாகும் விதமாய் நன்றாய் வர்ணித்து, தக்க அபிநயங்களுடனும் நல்ல நீதிகளைப் புகட்டக்கூடிய கதைகளைச் சொல்வதோடு நீதிவாக்கியங்களை நன்றாய் விளக்கிக் காட்டவேண்டும். அங்ஙனம் செவ்வையாய் விளக்கிய நீதிவாக்கியங்களை (‘கடவுளை நம்பினோர் கைவிடப் படார்,’ ‘வைகறைத் துயிலெழு,’ ‘உண்மையே பேசு,’ ‘பொய் சொல்லாதே,’ ‘பெற்றோரைக் கனம் பண்ணு,’ ‘ஐயமிட்டுண்,’ ‘இளமையிற்கல்’ ‘கல்வியே கருந்தனம்,’ ‘கந்தையானாலும் கசக்கிக்கட்டு’ முதலியன.) எப்போதும் பிள்ளைகளின் கண்ணெதிரே தோன்றும் வண்ணம், பெரிய அக்ஷரங்களில் வரைந்து, அட்டைகளில் ஒட்டிப், பாடசாலைச் சுவர்களில் தொங்கவிட வேண்டும். இப்படிச் செய்வதால் இந்த நீதிவாக்கியங்களைப் பிள்ளைகள் நோக்கும்போதெல்லாம், அவை ஸம்பந்தமாக நாம் ஏற்கனவே கற்பித்துள்ள கதைகள் ஞாபகத்தில் வர, சன்மார்க்கத்துக்கு இடையூறானவைகளை அநுஸரிப்பதால் உண்டாகும் கெடுதியும், சன்மார்க்கத்தால் விளையும் நன்மையும், அவற்றின் பயன் யாதென்றும் அவர்களின் மனத்தின்கண் உதிக்காமற் போகா.

கதைகளைப்போலவே பாட்டுகளும் பாலருக்கு மிக்க அபேக்ஷையை உண்டுபண்ணக்கூடியவை. பிள்ளைகள் தம் மனத்தில் தோன்றியவாறு ‘கன்னா பின்னா’ வென்று எதையும் உளறிப் பாடிக்கொண்டிருப்பதைச் சில சமயங்களிற் கேட்கிறோம். அப்படி அவர்கள் வீண்பாட்டைப் பாடுவதைவிட, நீதி வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து அவற்றை நல்ல * பாடலாய் இயற்றி அதைப் பாடக் கற்பித்திருந்தால் அது அவர்களுக்கு மிக்க நன்மை பயக்கக்கூடியதே.

---

* இவ்வியாஸத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ள ‘சன்மார்க்கக் கும்மிகளை’ப் பாடக் கற்பிக்கலாம். அல்லது அவரவர்களின் இஷ்டம்போல் வேறு நல்ல பாடலை யியற்றிக் கற்பிக்கலாம்.

இப்பாடலை அநுதினம் பாடசாலை தொடங்கும் போதும், முடியும் போதும் பாடப்படும் 'ராஜ வாழ்த்து' (National Anthem) பாடியபின், மாணவர் அனைவரும் ஏகோபித்துப் பாடும்படி செய்தல் மிக்க நலமே. இங்ஙனம் அடிக்கடி நீதிவாக்கியங்களை மாணவர் நினைவுகொள்ள இடமேற்படுத்துவதால், விளையும் நன்மைகள் இவ்வளவின வென்று சொல்லவும் வேண்டுமோ!

நாம் எவ்வளவு உபாயமாயும் சாதுரியமாயும் 'சன்மார்க்க முறைகளைக்' கற்பித்திருந்தாலும், பிள்ளைகளோடு கெட்ட சிநேகிதர்கள் நேசங் கொள்வார்களானால் நாம் போதித்துள்ள அனைத்தும் வியர்த்தமாய்ப் போமென்பது நிச்சயம். ஏனெனில்: 'பன்றியோடு கூடிய கன்றும் மலமுண்ணும்' என்பது பொய்யாகாது. ஆதலால் நமது மாணாக்கர் உத்தமர்களாய் வாழ விரும்புவோமாயின், அவர்கள் அடிக்கடி யாராருடன் நட்புப் பாராட்டுகிறார்களெனக் கண்ணுங் கருத்துமாயிருந்து, தீய நண்பர்களுடன் நட்புறாது முற்றும் விலக்க வேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

கூடுமானால் அடிக்கடி பெற்றோருடன் கலந்து, பிள்ளைகளின் குணாகுணங்களை அவர்களுக்கு எடுத்தியம்பி, 'சன்மார்க்கத்தால் பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும், இனி வரும் சந்ததியாருக்கும் உண்டாகக் கூடிய நன்மைகளையும், தீயகுணத்தினால் நேரிடக் கூடிய இன்னல்களையும் நன்கு விளக்கிக், குழந்தைகளை நன்னெறிக்கண் செலுத்தப் பெற்றோரு மற்றோரும் விடாமல் முயல வேண்டுமென வற்புறுத்தலாம். (இம்மார்க்கம் கிராமாந்தர உபாத்தியாயர்கட்கு பெரும்பாலும் அநுகூலமானது.)

பிள்ளைகள் நன்னடக்கையில் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமானால், நாமே அவர்களுக்கு 'சன்மார்க்கத்துக்கு ஏற்ற திருஷ்டாந்தமாக' இருக்கவேண்டும். 'பிதிர் சுதகுணம் புத்ர' என்பதேபோல் நாமே பிள்ளைகட்கு நமது நற்குணங்களால் நாம் போதிக்கும் நீதிகளை திருஷ்டாந்தப் படுத்தவேண்டும். 'போதனை பெரிதோ? சாதனை பெரிதோ?' என்பதை உய்த்துணர்ந்து நடக்க வேண்டியது மிகவும் அவசியம். சுருக்கிக் கூறுங்கால், நாம் தெய்வபக்தி, பரிசுத்தம், ஒழுங்கு, காலக்கிரமம், சுறுசுறுப்பு, உண்மை, பரோபகாரம், சாந்தம், தயை, பக்ஷபாத மின்மை,



உதாரம், பொறுமை, ராஜவிசுவாசம், தாழ்ச்சி முதலிய உத்தம குணமுடையவர்களாய், சன்மார்க்கத்துக்கு நிதர்சனமாக இருப்போமானால் நாமே குழந்தைகட்கு ஓர் ஏற்ற திருஷ்டாந்தமாயிருப்பது மன்றி, அவர்கள் நன்னெறியைப் பின்பற்ற ஏற்ற தூண்டு கோலாகவு மிருப்போம். இவை யன்றி,

'சுசியாகப் பிறர்க்குப தேசிப்போம் ஞானம்
துர்க்குணக் கடலிலே தினம் செய்வோம் ஸ்நானம்'

என்ற வாக்கியத்தின்படி நடப்போமாயின், பிறர் நம்மை என்றும் இகழ்ந்துரைப்பது மன்றி, நம்மை யடுத்த மாணவரனைவரும் உலகில் 'தீநெறிக்கோர் செல்வர்களாகவும், ஊதாரிகளாகவும் வாழ்வார்கள்' என்பது நிச்சயம். இங்ஙனம் நேரிடாது, நாம் எப்போதும் சான்றோரா பொழுகவும், நம்மை யண்டிய பாலர் அனைவரும் நன்மையையே நாடி 'சன்மார்க்கத்துக்கோர் ஆபரணமாய்' விளங்கவும், கருணையங் கடவுள் அருள் புரிவாராக!

M. அடைக்கலசாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
திருநரையூர்.

## ADVANTAGES OF ADAPTING METHODS OF TEACHING

## முறையினால் அடையும் சாதகம்

முறையானது ஒரு விஷயத்தின் பாகங்களை கிரமப்படுத்தி, அப்பாகங்களைப் பிள்ளைகளுக்கு இலகுவான விதமாய் விளங்கச் செய்யும் முறைகள் ஆயுதங்களுக்குச் சமமாகும். ஆயுதங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட காரியத்தை செய்யத்தான் உதவும். கோடரியையும், உளியையும் வெட்டும் ஆயுதங்களாக உபயோகிக்கலாம். ஆனால் உளியைக்கொண்டு மரங்களை வெட்டித்தள்ளச் சாத்தியமாகாது. கோடரியைச் கொண்டு நுட்பமான வேலைகளை அதாவது, பூக்கொய்தல், இலை பறித்தல், நெட்டிவேலை செய்தல் முதலியவைகளைச் செய்ய முடியாது. ஆகையால் அவரவர்கள் புத்தி நுட்பத்தால் தங்கள் வேலைக்குத் தகுந்த ஆயுதங்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்

இம்மாதிரியாகப் பாடங்களுக்கும் பிள்ளைகளின் சுபாவங்களுக்கும் தக்கவாறு நல்ல முறைகளை உபாத்தியாயர் அமைத்துக் கொள்ளவேண்டுவது அவசியம்.

முறைகள் இன்னவையென்று தெரிந்துவிட்டால்போதாது. அம்முறைகளை உபயோகிக்கச் சாமர்த்தியமும் வேண்டும். இச் சாமர்த்திய மில்லாமையால் போதனை முறையிற் பயிலாதவர்களேயன்றி, பயின்ற உபாத்தியாயர்களும் போதனைக்கு அனுகூலமான சிறந்த முறைகளை தூஷிப்பது வழக்கமா யிருக்கிறது. போதிக்க எத்தனிப்பவர்கள் மிக்க சாமர்த்திய முள்ளவரா யிருப்பதுடன், தந்திரசாலியாகவு மிருக்கவேண்டும்.

முறை — உபாத்தியாயர்களுக்கு ஆயுதங்களே யல்லாமல் உபாத்தியாயர்கள் முறைகளுக்கு ஆயுதங்களல்லர்.

சிலர், 'கொக்கிற்கு ஒரேமதி' என்பது போலக் குருட்டுத்தனமாய் முறைகளை உபயோகப்படுத்தி, காரியசித்தி பெறாமல் தொந்தரவு அடைகிறார்கள். புஸ்தகங்களில் சொல்லி இருக்கும் முறைகள், அனுபவஸ்தர்கள் கையாடின வைகளாயிருக்கலாம். அக்காரணத்தைக் கொண்டு, அம் முறைகளை அணுவும் தவறாமல், எட்டுப் பாடஞ்செய்து அனுசரிக்க முயல்வது தகுதியன்று. எட்டுப்பாடம் அனுபவப்பாடமாக வேண்டும். உபாத்தியாயர் சமயோசிதமாய் தங்கள் யுக்தி, புத்தி, இவைகளை கலந்தால்தான் போதனை சித்திபெறும். பிள்ளைகளுக்கு ஞானம் விருத்தி யுண்டாகும். உபாத்தியாயருக்கும் தன் தொழிலில் ஒருவித உற்சாக முண்டாகும்.

## பாடக் குறிப்பை உபயோகிக்கும் விதம்

பாடக் குறிப்பை வகுப்பில் பயிரங்கமாய் உபயோகப்படுத்துவதால் பிள்ளைகளுக்கு உபாத்தியாயரிடத்தி லிருக்கும் நன்மதிப்பு குறைந்துவிடுமென்று சிலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர் அவ்வாறு குறிப்புகளை உபயோகிப்பதால் பிள்ளைகளுக்குத் தம்மிடம் சிரத்தையும் நல்ல எண்ணமும் உண்டாகும் என்று எண்ணுகிறார்கள்.

மேலும் பின்சொல்லிய விதத்தினால் பிள்ளைகள் தங்கள் விஷயத்தில் உபாத்தியாயர் சிரமப்படுவதாக எண்ணுகிறார்கள். ஆகையினால் முன்னதாகவே, பாடக்குறிப்பு தயார் செய்துகொண்டு வகுப்புக்கு வருதல் மிகவும் நலமெனத் தோன்றுகின்றது.



## பாடக் குறிப்பின் பிரயோசனம்

1. இதைத் தயார்செய்வதனால் உபாத்தியாயர் தகுந்த கேள்விகளை கேட்கக்கூடும் (2) உபாத்தியாயர் முன்னதாகவே விஷயத்தையும் முறையையும், யோசித்து சீர்படுத்திக் கொள்வதால் மிகத் திறமையாய் போதிக்கக்கூடும்.

3. பிள்ளைகளுக்கு உற்சாகம் உண்டாகும்படி விஷயங்களைத் தெளிவாய் விளக்கிக் காட்டலாம் (4) வேண்டிய உபகரணங்களை முன்னடியே சேகரித்துக் கொள்ளலாம். உபயோகப்படுத்த வேண்டிய உதாரணங்களைத் தேர்ந்தெடுக்கலாம் (5) குறித்த காலத்தில் பாடத்தை முடிக்கலாம் (6) பாடத்தை நிதானத்துடன் ஆரம்பித்து, முடிகிற வரையில் பரபரப் பில்லாமல் ஒரே சீராய் நடத்தலாம் (7) இதனால் உபாத்தியாயர்களுக்குக் கால நஷ்டமும் அதிக சிரம மும்இல்லாம லிருக்கும். (8) ஆகையினால் உபாத்தியாயர்கள் பாடக்குறிப்பு தயாரித்துக்கொண்டு வகுப்புக்கு வருதல் அதிக உசிதமென்று தோன்றுகின்றது.

K. R. VEERARAGHAVACHARI,
*Headmaster, Board School,*
*Tirukkandalam.*

## TIT - BITS
## விநோதக் கூற்று

ஒரு கிராமத்தில் எலிமெண்டெரி போர்டு பாடசாலை உபாத்தியாயர் ஒருவர் தம் இரண்டாவது வகுப்புப் பிள்ளைகளுக்குச் செய்யுட்பாடம் நடத்தினர். அதில், 'தெய்வ மிகழேல்' என்ற வாக்கியத்தைச் சொல்லி அதன் பொருளைப் பையன்கள் வாயினின்றும் வரவழைத்து, பின் விளக்குகின்றார்.

உபாத்தியாயர் — பிள்ளைகளே! தெய்வம் = சுவாமியை, இகழேல் = இகழ்ந்து பேசாதே; புகழ்ந்து பேசு. பிள்ளைகளே! நீங்கள் சுவாமியை என்றும் புகழ்ந்தே பேசவேண்டும், என்று முடிவு உரையாகக் கூறி முடித்தனர்.

பையன்களில் ஒருவன் — 'ஐயா! சுவாமி கல்லாகத்தானே யிருக்கிறது; அதை இகழ்ந்தால்தான் என்ன? புகழ்ந்தால்தான் என்ன?' என்றனன். உபாத்தியாயர்—'பையா! சுவாமியைக் கல் என்று சொன்னாய்! கல் அல்ல; சுவாமி அக்கல்லினுள்ளே யிருக்கிறார்; நாம் அவரை இகழ்வதும் அவர்க்குத் தெரியும், நாம் அவரைப் புகழ்வதும் அவர்க்குத் தெரியும்; அப்படித் தெரிந்துகொண்டு இகழ்ந்தவர்க்குத் தின்மையும், புகழ்ந்தவர்க்கு நன்மையும் தருவார்' என்றனர்.

பையன் — 'ஆ! ஆ! அப்படியா! ஐயா சொல்வது நன்றாயிருக்கிறது; ஐயா! அப்படியானால் சுவாமியை இகழ்ந்தவன் தின்மையடைந்ததும், புகழ்ந்தவன் நன்மையடைந்ததும் எனக்குத் தயவு செய்து கொஞ்சம் சொன்னால் நானும் சுவாமியைப் புகழ்ந்து கொண்டே இருப்பேன்' என்றான்.

உபாத்தியாயர்—பையா! நாரிகேளம் என்று பேர்பெற்ற ஒரு நகரத்தில் சுவாமி தரிசனம் செய்யச் சில பெரியோர்கள் சென்றார்கள். செல்லும்போது பாட்டையில் நின்ற ஒரு தென்னமரத்தினின்றும் ஒரு தேங்காய் கீழே விழுந்து, அவ்விடம் செல்லும் பெரியோரைப் பார்த்து, 'ஐயன்மீர்! நீவிர் எங்கே செல்கின்றீர்கள்?' என்று கேட்டது.

பெரியோர்கள் — 'நாரிகேளம் என்னும் நகரத்துக்குச் சுவாமி தரிசனஞ் செய்யச் செல்கின்றோம்' என்றனர்.

தேங்காய் — 'அப்படியானால் யானும் வருகிறேன்' என்று சொல்லி, அவர்களைப் பின்பற்றிச் சென்றது.

தேங்காயுடன் பெரியோர்கள் அந்த நகரத்துக்குச் சென்று ஸ்நானஞ் செய்துகொண்டு சுவாமி தரிசனத்துக்குக் கோயிலிற் சென்று சுவாமியைப் புகழ்ந்து பாடி வணங்கினார்கள்.

தேங்காய் — சுவாமியைப் பார்த்து, 'ஹே சுவாமீ! உன்னை இவர்கள் புகழ்வானேன்? நீயும் நானும் சமமல்லவா? என்னைப் புகழ்ந்தால் நீ தரக்கூடிய நன்மையை நான் தர மாட்டேனா?' என்றது.

சுவாமி — 'தேங்காயே! நீயும் நானும் சமம் என்று சொன்னாய்; அஃதெப்படி? சொல் பார்ப்போம்' என்றது.



தேங்காய் — 'சுவாமீ! உனக்குத் தலையில் சடைக் குடுமி- புண்டு. எனக்கும் தலையில் சடைக் குடுமியுண்டு. உனக்கு ஜலம் உண்டு. எனக்கும் ஜலம் உண்டு. உனக்கு ஓடு உண்டு. எனக்கும் ஓடு உண்டு. உனக்கு வெண்ணிறம் உண்டு. எனக் கும் வெண்ணிறம் உண்டு. உனக்குக் கரியுரிதோல் உண்டு. எனக்கும் கரியுரிதோல் உண்டு. உனக்கு மூன்று கண் உண்டு. எனக்கும் மூன்று கண் உண்டு. நீ உன்னை யடைந்தோர்க்கின்- பந் தருவாய். நான் என்னை யடைந்தோர்க் கின்பந் தருவேன். நீ அறத்துச்சி யிருப்பாய். நான் மரத்துச்சி யிருப்பேன்' என்று சமங் கூறிய பின்னர், 'ஹே சுவாமீ! உனக்குத் 'தே' என்றொரு நாமம் உண்டு. நான் தெய்வத்தைக் காய்கின்றவனாகலின் எனக்குத் 'தேங்காய்' என்றொரு நாமமும் உண்டு எனப் பேதம் கூறி இகழ்ந்து பேசிற்று.

சுவாமி அக் கல்லுருவத்தினின்றும் மானிட உருவொடு வெளியே தோன்றி, இத் தேங்காய், தன்னையும் என்னையும் சமப்படுத்திப் பேதமுங் காட்டிற்றன்றோ! இனித் தண்டந்தான் பாக்கி, அத் தண்டத்தை இதனிடை யானியற்றுகின்றேன் என்று கூறி, அத் தேங்காயைத் தங் கரத்திலெடுத்து, நிலவுல- கின்கண் உள்ளீர்! இத் தேங்காய் என்னை இன்று இச்சமயம் என் சந்நிதிக்கண் இகழ்ந்தமை பற்றி, இன்று முதல் என்றும் தெய்வ சந்நிதானங்களில் தேங்காயுடைத்துச் சுவாமி தரிசனஞ் செய்வீர்களாக என்று கூறி, அதனை அவ்விடத்திற் றானே யுடைத்து அங்கு நின்று புகழ்ந்த பெரியோர்களுக்கு அனுக்கி- ரகம் செய்து மறைந்தது.

இவ்வாறு உபாத்தியாயர் ஒரு சிறு கட்டுரைக் கதை கூறிப் பையனை அகமகிழ்வித்தனர். பையனும் நல்வழிப்பட்டு தெய்வ பக்தியிற் சிறந்தவனாய் அன்றுமுதல் கல்வி கேள்வி யறிவொழுக்கங்களில் மேன்மை யடைந்து வந்தான். சுவாமி, தேங்காயை உடைத்தது முதல் அந்த நகரத்துக்கு 'நாரிகேள ஹரிபுரம்' என்று பேர் வழங்கலாயிற்று. நாரிகேளம் = தேங் காய், ஹரிபுரம் = உடைத்த இடம்.

I. M. முருகைய வாத்தியார்,
*B. E. School, Sengipatti,*
*Tanjore.*

# KANA MUNI

## கானமுனி

### முதலாவது ஐய நிகழ்காதை.

மன்பதை அறியாச் சேயதோர் வனத்து
முன்பொரு முனிவன் மூப்பு முதிர்ந்து
தரையிற் படுத்துச் சருகைப் புசித்து
உறையிற் றவிர்த்தோர் உண்ணீர் அறியான்
மானிடர் சேர்க்கை யின்றி மலர்மகள்
கோனுடை யடிகள் உள்ளங் கொண்டு
நாமம் புகழ்ந்திடு தலையே நயந்தவர்
ஏமப் புணையாம் இருதாள் நயந்தே
இளமை முதலா இனிதிருந் தானரோ
அத்தகு தூயனு யமைதி யடைந்து
சித்தஞ் சலியா திருக்கு நாளில்
பாவம் வெல்ல அறமது பணிய
யாவது காரணம் என்றவ னுன்னலும்
கடவுள தாட்சியிற் கைதவம் உண்டோ
திடனது இல்லைகொல் சேதனர்க் காத்தல்
என்னுமோர் ஐயம் இதயத் தெழுந்தது
துன்னிய உள்ளக் கிளர்ச்சி தொலைந்ததால்
அலையொழி கயத்தின் ஆன்றநீர்ப் பரப்பில்
சலன மற்றுத் தன்னுருக் கெடாது
நிழலிடுங் கரையும் அதன்மேல் நின்றுள
பழுனர் மரனும் பாயொளி வானமும்
சிறுகல் லொன்றத் தெண்ணீர் விழுமேல்
மதியுமொ ராயிரம் வட்ட அலைகள் ;
உருக்கு லைந்தன ஒளியுடைக் கோளவை
பொருக்கென அங்குப் புலப்ப டாது
நான்றித் தம்மிடம் விட்டு நகர்ந்தெனத்
தோன்றும் அதுபோன்ம் தூமுனி மனமே
இவ்வா றெழுந்த ஐயம் தீரச்
செவ்வே உலகைக் கண்டு தெளிவோம்



ஆரணக் கூற்று ஆயர்தம் கூற்று
(பூரணப் பிரமாணம் என்றுதன் புலங்கொள
, ஏனெனில் ஆயரே உலகின் இயலை
ஞான முனிக்கு நாளும் விளம்புவார்)
எழுந்தான் தானுறை இலைக்குடில் விட்டுத்
தொழும்சீர்ப் பிரம தண்டம் துணையா
உதயம் எழுமுனி நிகழ்ந்தவொவ் வொன்றையும்
இதயங் கொண்டவை எண்ணத் தொடங்கினான்.

### இரண்டாவது இளையோன் எதிர் காதை

முளிப்புல் மூடிய நெறியிற் காலை
களிப்பில் தனிமை நெடிது கழிந்தது;
நண்பகற் போதில் அவ்வழியி னடுவில்
பண்புளான் ஓர்சிறு வன்வரப் பார்த்தான்
அன்னோன் நல்லுடை அணிந்தனன் அழகன்
தென்னார் பங்கியன் செஞ்சொல் வல்லோன் ;
அணுகினன், 'ஆரிய போற்றி !' என்றான்
குணனுடை முனிவனும் ஆசி கூறினான்
அளவ ளாவினார் இருவரும் அன்பினார்
உளம தோன்றினார் நெறியூ றறிந்திலார்,
கூடலி லுவந்தார் கூசினார் பிரிய
நாடிய கிழவனும் நாகிளஞ் சிறுவனும் ;
கொடிமுழைஞ் சிடைநில் கூன்முது மரத்தை
அடைவுறச் சுற்றி அக்கொடி மேவல்போல்
பட்டது பொழுது பானு மறைந்திட
தொட்ட திவ்வுலகைச் சூழிருள் கவிந்து
பாயிரு ளுலகைப் பணித்தது உறங்க
மீயுயர் மாளிகை வழியில் விளங்க
பத்திகொள் உயர்மரக் காவழி படர்ந்தார்
சித்தசன் வெண்குடை தெளியொளி துணையா
செல்விருந் தோம்பி வருவிருந் துக்கவ்
வில்லிருந் தான்வா யினிற்காத் திருந்தான்
ஆயினும் அவன்செய் அறம்புகழ்க் காதலின்
மீயுயர் செலவுசெய் வீணா யினான்

முனியும் இளைஞனும் வாயில் முடுகினர்;
நனிவணங்கினர் காவலர் நணுகினர்
இனிய முகனுடன் இல்வாழ் வானும்
புனிதமா தவனொடும் இளையவர் போற்றினன்
அரசர்க் கமைந்த அறுசுவை உண்டி
வரிசை யாக வைத்துப சரித்தனன்;
அன்னத் தூவி யணையிற் றுயின்றூர்
இன்னல் வழிநடை இளைப்பினை மறந்தார்.

V. RAJAGOPALA AIYANGAR.

## வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும் ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமென்ட்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம். வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைக்குரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும் வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras, E.*

OFFICE OF ... JAN 1916 MADRAS

நல்லாசிரியன்
உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1916ஸ் ஜனுவரிமீ | மாதம் 8

## TEACHING ON TEMPERANCE IN ELEMENTARY SCHOOLS

## எலிமென்டரிப் பாடசாலைகளில் மதுவிலக்குப் போதனை

இக்காலத்தில் போதனுப்பியாச பாடசாலைகளிலும் எலிமென்டரிப் பாடசாலைகளிலும் மதுவிலக்கைப்பற்றித் தனியே போதிக்கவேண்டும் என்னும் ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிய வருகின்றது. வித்தியாதிகாரிகள் இது விஷயமாக வற்புறுத்தி வருகிறார்கள். இது விஷயமாக நாம் கவனிக்கவேண்டிய விஷயங்களை இங்கே ஆராய்வோம்.

மதுவிலக்கு விஷயமாக ஐரோப்பிய நாட்டுப் பாடசாலைகளில் தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அநேக விஷ-

யங்கள் மேல் நாட்டாரிடம் நாம் கற்றுக்கொள்கின்றோம். அநேக விஷயங்களை அவர்களைப் போலவே நாமும் செய்ய வேண்டும் என்று முயல்கின்றோம். எது ஏற்றது; எது ஏற்காதது என்று சற்றும் கவனியாமற் செய்வது நமது நாட்டிற்கு ஏற்றதன்று. ஐரோப்பிய நாடுகள் அதிக சீதளமுள்ளவை. நமது நாடு அதிக உஷ்ணமுள்ளது. சீதோஷ்ண ஸ்திதியைப் பற்றியே எல்லா விஷயங்களும் மாறுபடுகின்றன. ஐரோப்பிய நாட்டிற்கு அவசியமான சில விஷயங்கள் நமது நாட்டிற்கு வேண்டியிரா. உடை, உணவு முதலியவைகளும் இரண்டு நாட்டிற்கும் முற்றும் வேறுபடுகின்றன. குளிர் மிகுந்துள்ள நாடுகளுக்கு கம்பளி யுடைகள் வேண்டும். உஷ்ணம் மிகுந்துள்ள நாடுகளில் பருத்தி யுடையும் பட்டு உடையும் போதும். இதைக் கவனியாமல் கம்பளி யுடையே நமக்கு வேண்டுமென்று நாடுவது உஷ்ண தேசத்திலுள்ள நமக்கு ஏற்றதன்று. இப்படியே பானங்களும் மாறுபடும்.

எந்நாட்டவர்க்கும் சுத்த ஜலமே ஏற்ற பானமாகும். இதை இக்காலத்தில் எல்லாரும் உணர்கிறார்கள். சீதம் மிகுந்துள்ள ஐரோப்பிய நாட்டார் சோடா முதலிய சாமானிய பானங்களையும், விஸ்கி, பிராந்தி முதலிய கொடிய காரமுள்ள பானங்களையும் கையாடுகின்றனர். மதுபானங்களை மிதமாகக் கையாடுவது குற்றமன்று என்று மேல் நாட்டார் கருதுகிறார்கள். அதனாலேயே டெம்பரன்ஸ் (Temperance) என்னும் பதம் அவர்களுள் குற்றமுள்ளதாக ஏற்படவில்லை. அமிதமாகக் குடிப்பதையே ஐரோப்பியர் தீங்கென்று நினைக்கிறார்கள். மிதக் குடியானது நாளடைவில் அமிதக் குடியாக ஏற்பட்டு விடும் அல்லவா? இதனால் ஐரோப்பிய நாட்டார் குடி விஷயமாகக் கவலை கொண்டு அதைக் கண்டிக்கவேண்டுமென்று தலைப்பட்டிருக்கிறார்கள்.

நமது நாட்டில் குடி யென்பதே கூடாது. அது கொடியதென்று கருதி, குடியைப் பஞ்சமா பாதகத்தில் ஒன்றாகக் கொண்டிருக்கின்றனர். விஸ்கி, சாராயம் முதலியவற்றைக் குடிப்பது நாகரிகக் குடியென்றும், கள் முதலியவற்றைக் குடிப்பது அநாகரிகக் குடியென்றும் கொள்ளும் துரெண்ணம் நம்மவர்களுக்குள் இக்காலத்தே தலைகாட்டிக்கொண்டு இருக்கிறது.



எப்படியாயினும் குடி என்பது கொடிய வழக்கமே என்பது நம்மவரை விட்டு எக்காலத்தும் விலகாது.

குடி யென்று சொன்னாலே குடியனும் அருவருக்கும் தன்மையாதுள்ள இந்த விஷயத்தை ஒரு தனிப் பாடமாக வைத்து நமது சிறுவர்களுக்குப் போதிப்பது ஏற்றதா என்பதைக் கவனிப்போம். பாடசாலையிற் பயிலும் சிறுவர்களுக்குக் குடி யென்பது தீமையுடையதென்றும் அதில் பழகுகிறவன் துஷ்டனென்றும் அறிகிறார்கள். இவர்களுக்குக் குடியில் விருப்பம் உண்டாவதில்லை. இந்த ஸ்திதியில் இருக்கும் சிறுவர்களுக்கு இதைத் தனியாகப் போதிப்பானேன். நல்லொழுக்கத்தைப் பற்றிப் போதிக்கும் பாடங்களில் இதை ஒருவாறாக போதித்து விட்டால் போதாதா. உயர் குடியிற் பிறந்த பிள்ளைகளுக்கு இதைப் போதிப்பதும் தீங்கென்றே புலப்படுகிறது. தாழ் குடியிற் பிறந்த பிள்ளைகளுக்குப் போதிப்பது ஒருவாறு நன்மை பயக்கும். பஞ்சமர், வேடுவர், குறவர், கரையார் முதலானவர்களுக்குத் தனித் தனியே ஏற்படும் பாடசாலைகளில் இதைத் தனிப் பாடமாகப் போதிக்கப் பயனுடையதாகும். இதைவிட்டு எல்லாப் பாடசாலைகளிலும் இதைத் தனிப் பாடமாகப் போதிப்பது உசிதமென்று தோன்றவில்லை. அதிலும், குடியினால் உண்டாகும் தீமைகள் இப்படிப்பட்டவை என்பதைப்பற்றி இயற்கைக் கதைகள் மூலமாகப் போதிப்பதே சாலச் சிறந்ததாகும். இதைவிட்டு எல்லா வகுப்புப் பிள்ளைகளுக்கும் ஒரே விதமாகப் போதிப்பது ஒரு விதத்திலும் பொருந்தாது.

எல்லாருக்கும் போதிக்கத்தக்க விஷயம் சில உண்டு. திருஷ்டாந்தமாக, சோடா முதலிய பானங்களையும் காப்பி முதலிய பானங்களையும் எடுத்துக் கொள்ளுவோம். சோடா, லெமனேட், காப்பி, டீ முதலியவற்றைப் பானம் பண்ணுவது கவுரவமென்று பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. காப்பிக் குடிப்பது கவுரவம், பிரபுத்தவம், சிறப்பு என்னும் எண்ணம் நம்மவரில் பெரும்பாலார் கொண்டிருக்கிறார்கள். 'நான் தண்ணீரே குடிப்பதில்லை, தண்ணீருக்குப் பதில் சோடா, அல்லது காப்பித்தான் குடிப்பது வழக்கம்' என்று சிலர் பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். உற்றுநோக்கினால் லாகிரி வஸ்துக்களைவிடக் காப்பி

முதலிய பானங்களை மிகவும் தீமை செய்வனவென்று தீர்மானமாகச் சொல்லலாம். காப்பி முதலிய பானங்களும் மதுபானத்தைப்போலவே அசுகத்தையும் அதிக பணச் செலவையும் உண்டாக்குகின்றன. மதுபானம் செய்பவன் மறைந்திருந்து செய்யவேண்டியவனாகிறபடியால் மதுபானம் செய்வோர் தொகை மட்டுப்படுகிறது. காப்பி முதலிய பானம் கவுரவ பானமாக ஏற்பட்டிருப்பதனால் அவைகளைக் குடிப்போர் தொகை நாளுக்கு நாள் விருத்தியடைகிறது. செலவைப் பார்த்தாலும் மதுபானத்தைவிடக் காப்பிப் பானத்திற்கே அதிகமாகிறது. இது விஷயத்தில் உபாத்தியாயர்கள் மிகவும் கவலை கொள்வது அவசியமாகும்.

தென்னாட்டிலும் நகரங்களிலும் இருப்பவர்களுக்குக் காப்பிக் குடிப்பது ஒரு பயித்தியமாக ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு ஏழையும் அதிகாலையில் இரண்டணாவாவது காப்பிக்குத் தத்தம் செய்கிறான். காப்பிக்கடைகளைக் கணக்கிட்டு அங்கே செலவாகும் காப்பி, டீ, கோக்கோ முதலியவற்றின் அளவையும் தொகையிட்டால் இதன் தீமை நன்கு விளங்கும்.

இது நிற்க, நமது நாட்டு சீதோஷ்ணத்திற்குத் தகுந்தபடி அவ்வக்காலத்தில் ஏற்ற கனிவர்க்கங்கள் விருத்தியாகின்றன. கோடைக்காலத்தில் இனிய நீர் நிரம்பிய முலாம்பழம், தர்போசிப்பழம், வெள்ளரிக்காய் முதலிய பதார்த்தங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இளநீர் என்பது இயற்கையில் ஏற்பட்ட இனிய பானம். நுங்கென்பது தேவாமிர்தம் போன்றது. இவை யாவும் எளிதில் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய கோடைக்காலத்தில் நம்மவர்கள் இவற்றையெல்லாம் விட்டு, சோடா, லெமனேட், கோலா முதலிய பானங்களைப் பருகுவது இயற்கைக்கு விரோதமேயன்றோ. இயற்கையான பானங்கள் ஒத்துக்கொள்ளாத நிலைமைக்கு நமது தேகம் வந்துவிட்டது. 'இளநீர் சாப்பிட்டால் தலைவலி வருகிறது. பழையது எனக்கு ஏற்றுக் கொள்வதில்லை' என்று கூறி பலர் பெருமை பாராட்டுகிறார்கள். இப்படிப் பேசும் பிரபுக்களைக் கண்டு ஏழைகளும் ஏமாந்து இன்னலுக்கு ஆளாகின்றனர். இவ்வகையில் ஏற்படும் பானங்களைத் தடுக்க முயல்வதே ஏற்றதாம். இவற்றையெல்லாம் சேர்த்து மதுபானமென்று கொண்டால், மதுபானத்தைப் பற்றிய பாடத்தைத் தனியே போதித்தலு நலமாகும்.

பத்திராதிபர்.



# JEWELS AND CIVILIZATION

## அணியும் நாகரிகமும்

### 1. அணியின் பொருள்

அணியாவது யாது? அணிவது அணி; அணியப்படுவதும் அணி. நமக்குத் துணியும் அணி; மணியும் அணி; நெற்றிப் பொட்டும் அணி; கண்ணின் மையும் அணி; தலைசீவி முடித்தல் அணி; தலைமயிரைக் கத்தரித்தல் அணி; மணிமுடி தரிப்பது அணி; சடைமுடி விரிப்பது அணி; குடியிருக்க வீடு கட்டிக் கொள்வது அணி; கட்டுகிற வீட்டுக்கு நல்ல கூரையிடுவது அணி; சிலையைச் சித்திரிப்பது அணி; சன்னலுக்கு வன்னம் பூசுவது அணி; வாசலுக்குக் கோலமிடுவது அணி; கோலத்துக்குக் காவி கட்டுவது அணி; முற்றத்தில் பந்தலிடுவது அணி; பந்தலுக்கு வாழைகட்டுவது அணி; அலங்கரித்த இடத்தில் மணம் புரிவது அணி; மணமக்களை வாகனத்தில் ஏற்றி ஊர்வலம் வருவது அணி; வந்தவர்களுக்குச் சந்தனம் பூசுவது அணி; பூசினபின் தாம்பூலம் வழங்குவதும் அணி; சுருக்கிச் சொல்லில் கண்ணுக்குக் களிப்பைத் தருவன யாவும் அணியேயாம்.

இங்ஙனம் அணிவதை நாகரிகப் பொலிவு என்பார் ஒரு சாரார். நாகரிகக் குறைவு என்பார் ஒரு சாரார். இவ்விருதிறத்தாரில் எவர் கொள்கை சரியென்று ஆராய்வது இவ்வியாசத்தின் நோக்கம்.

'காய்தலுவத்தலகற்றி யொருபொருட்கண்
ஆய்தலறிவுடையார் கண்ணதே'

என்னும் விதியைப் பின்பற்றி இவ்வாராய்ச்சியைச் செய்வோம்.

### 2. அணி உண்டான விதம்.

மக்கள் யாவரும் மாக்களைப்போலவே பிறந்தமேனி திரிந்தார்கள் என்பதும், அப்பால் தேகத்தின் சிற்சில பாகத்தை வன்னம் பூசி மறைத்தார்கள் என்பதும், இப்பால் அந்த மறை பற்றாமை கண்டு தளிர் இலை பூக்களால் மூடிவந்தார்கள் என்பதும், தளிரிலைபூ அடிக்கடிவாட, அவற்றிற்குப் பிரதி தேட, ஓயாது

கஷ்டமா யிருந்ததுமன்றி, வேனிலுக் கேற்றதும், மாரிக்கு ஏலாததுமாய் இருந்ததுபற்றி ஆடு, புலி, மான் முதலியவற்றின் தோலால் உடலை மூடிவந்தார்கள் என்பதும்; இவையும், மாரிக்குமட்டும் இதமாயிருந்ததும் கட்டிக் களையக் கஷ்டமா யிருந்ததும்பற்றி மரத்தின் பட்டையை உரித்துத் தரித்துவந்தார்கள் என்பதும், மரவுரியும் அருகிப் போனமைகண்டு துணி நெய்யக் கற்றுச் செய்து உடுத்தி வந்தார்கள் என்பதும் சரித்திர மூலமாய் வெளிவந்த காரியங்களாம்.

இந்தத் துணியை யெல்லோரும் நெய்ய இயலாமையால்,

'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக மாக்கள்'

என்றொரு சாதியார் தோன்றினர்.

கட்டின துணி கிழிந்தால் தைக்கவும், கட்டுமுன் கிழித்துத் தைக்கவும், துன்னகாரரென்ற ஒரு சாதியார் தோன்றினர்; உடுத்திய துணி அழுக்கு மேலிடில் புழுக்கித் துவைக்கக் *காழியர் என மற்றொரு சாதியாரும் ஏற்படலாயிற்று.

தைத்துக் கட்டுவது தகுதியல்ல வென்று நினைக்கிற ஜாதியார் சிலர் இற்றைக்கும் இருக்கிறார்கள். மலையாளத்தவர்கள் கிழிந்த கந்தையைத் தைக்கப்படாதென்று எறிந்து விடுவதுமன்றிக் கிழித்துத் தைத்த சட்டை ரவுக்கைகளைத் தரியாது விலக்கியும் இருக்கக்காணலாம். வாங்கினபடி துணியை யணிவதும், கிழிந்தால் தைத்துக் கட்டுவதுமான பழக்கத்தை யுடையவர்கள் பலர். இவர்கள் சட்டை முதலியவைகளுங் கலந்து அணிபார்கள். நம்மவரே இக்கூறிய வகுப்பினர். வாங்கின புதுத் துணியைச் சில துண்டுகளாகக் கிழித்து மூட்டி யணிபவர்கள் சிலர். இவர்கள் அரேபியர் முதலியோர். அத் துணியைப் பல துண்டுகளாகக் கிழித்துப் பெரிதும் சிறிதும் ஆன பல ஒட்டுகளிட்டுத் தைத்தே உடுக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஐரோப்பியரே இவ் வகையினராவர். துணியே யணியாமல் ஆதாம் குழந்தைகள் போலக் கூசாது திரிபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் †நக்கவாரத் தீவினராவார்.

* காழியர் = வண்ணார். † நக்கவாரத்தீவு = நக்கபாறைத்தீவு = நிருவாணிகள் வசிக்கும் கற்பாறைத்தீவு. நக்கர் = நிருவாணிகள்.



இங்ஙனமாயின் நாகரிக முதிர்ச்சியின் அளவை அறிவது எங்ஙனம் எனிற் சொல்லுதும்.

எந்த வியாபாரத்திலும் கொள்வார் கொடுப்பார் இரு புறத்திலும் நம்பிக்கை வேண்டும். நம்பாவிடில் வியாபாரம் நடைபெறாது. நம்பிக்கையற்ற வியாபாரத்தை நக்கவாரக் *கச்சட்டம் என்று சொல்வது நம்மிற் பெரும்பாலர் அறிந்த காரியம். இப்பழமொழியின் வரலாறு மிக்க விநோதமானது. நக்கவாரம் என்பது நமது இலங்கைத் தீவுக்குக் கிழக்கே மலயக் கரையை யடுத்த பல சிறு தீவுகளின் தொகுதி. நம்மவர் கடல் யாத்திரை செய்து வரும்போது திசை தப்பிக் கலம் அத் தீவுகளின் கரையோரம் சேர்ந்தது. அங்குள்ளவர்கள் மிருகப் பிராயமானவர்கள். நர மாம்ச பக்ஷணிகள். கப்பலைக்கண்டவுடன் ஏதோ தங்களுக்குப் பெருத்த ஆகாரம் வந்திருக்கிறதாக எண்ணிக் கரையோரத்தில் வந்து நின்றார்கள். கப்பலின் உருவையும் பாயின் விரிவையும் கொடிகளின் கூட்டத்தையும், ஏறிவந்திருப்பவர்களின் ஆட்டத்தையும், கண்டு மலைத்துப்போய் நின்றார்கள். இவர்கள் தம்மைப் போன்றவர்கள் அல்லர்; மிகப் பெரியவர்கள்; மிக மிகச் சிறந்தவர்கள்; என எண்ணித் திகைத்து நின்றார்கள் போலும். அவர்கள் திகைத்து நின்றதையும், அத்தீவெல்லாம் தென்னஞ் சோலையாய் இருந்ததையும் கண்ட கப்பற்றலைவன் அவர்களை ஏமாற்றிக் கப்பலுக்கு தேங்காயையே பாரமாக ஏற்றித் திரும்பலாமென்று எண்ணி, ஏற்கனவே கடலில் மிதந்துவரக்கண்டு பொறுக்கிப் போட்டிருந்த காய்களில் ஒன்றிரண்டை எடுக்கிறதும், அத்தீவார் பார்க்க உரிக்கிறதும், உடைத்துத் தின்கிறதுமா யிருந்தார்கள். தம்மில் ஒருவரும் சீந்தாது கிடக்கும் இந்த வஸ்து வந்த இவர்கட்குப் பிரியம்போலும் எனத் தீவார்களிற் சிலர் எண்ணினவர்களாய், உள்நாட்டிற் சென்று உதிர்ந்து கிடப்பதிற் பருத்த மணிகளைப் பார்த்துப் பொறுக்கி வந்து காணிக்கை கொடுக்கும் பாவனையாகக் கையில் ஏந்திக்கொண்டு நின்றார்கள். தளகர்த்தன் அவர்களின் முன்னின்ற ஒருவனைச் சைகைகாட்டி யழைக்க, அவனும் அதை யறிந்து மரக்கலத்தை நெருங்கிவரப் படகை இறக்கி, அவனை யதில் ஏறச் செய்து, கொண்டுவந்து நிறுத்தி, கொண்டுவந்த காணிக்கையை யேற்று

* கச்சட்டம் = கோமணம்.

ஒரு சிறு கயிற்றை அரையில் கட்டி துணியில் கொஞ்சங் கிழித்துக் கோவணமாகத் தரித்தான். மிலேச்சன் இந்தப் பரிசு பெற்றதற்காகக் கூத்தாடிக் கொக்கரித்துத் தன்னினத்தாரை உடனே சேரவேண்டும் என்கிற குறிப்பையுங் காட்டினான். அவன் விரும்பியபடி கீழே யிறக்கி இனத்தாரைச் சார விடுத்தவுடன், கண்ட இனத்தார் கப்பலில் இருந்த மகாத்மாக்களால் தொட்டணியப் பெற்ற இவனும் மகாத்மாவே யென்று எண்ணினார்போல அவனை நெருங்குதற் கஞ்சி யெட்ட நிற்பார் சிலர்; கிட்டி வந்து தொட்டுப் பார்ப்பார் சிலர். தோளிலேற்றி யாடினன் ஒருவன். இப்படி இம்மகாத்மாவை வழிபடும் முயற்சியில் நிற்கும் சமயத்தில், காணிக்கை வேண்டியமட்டில் கப்பலிலேறியது. காற்று வாகா அடிக்க இதுகண்டு தளகர்த்தன் பாயை விரித்துப் பயணம் புறப்பட்டுச் செத்தோம் பிழைத்தோம் என இனத்தாரோடு வீடு போய்ச் சேர்ந்தான். என்றாலும் காட்டு மனிதர்கள் தங்கள்மேல் வைத்த மதிப்பும், காணிக்கையின்மேற் றாங்கள் வைத்த மதிப்பும், பின்னும் ஒருகால் அத்தீவைப் பார்க்கும் பேரவாவை உண்டுபண்ணின. ஆனால் அவர்கள் புறப்படு முன் கச்சட்டத்தைத் துண்டு துண்டாகக் கிழிக்காமல் ஒரே நீளமுள்ளதாகக் கிழித்துச் சுருட்டி வேண்டியமட்டும் கையில் எடுத்துக்கொண்டு கப்பலிலேறிக் காற்று வாகாக இருக்கும் சமயத்தில் பாய் விரித்துக் குறித்த கரைபோய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் வரவைத் தேவர் வரவென வெண்ணினார்போல ஓடிவந்து முன் கச்சட்டம் பெற்ற மகாத்மாவை முன்னிறுத்தி மற்றவர்கள் மரியாதையோடு எட்ட நின்றார்கள். கப்பற்றலைவன் சைகை காட்டக் கண்ட மிலேச்சர் தலைவன் முன்போலக் காணிக்கையோடு வந்தான். கப்பற்றலைவன் காணிக்கையைப் பெற்றுக்கொண்டு பழைய கச்சட்டத்தைக் களைந்து, புதிய கச்சட்டம் அணிந்து முன்போல இனத்தாரைச் சாரவிட்டான். போனவன் கப்பலை விட்டிறங்கு முன் தனக்குக் கட்டிக் களைந்த கச்சட்டத்தைக் கையோடு கொண்டு போய்த் தன்னை முன்தோளில் தூக்கிவைத்து ஆடிய தன் அணுக்கத் தொண்டனுக்குத் தன் கையால் கட்டிவிட்டான். இதுகண்ட மிலேச்சர்கள் தலைவனை இருவரும், அணுக்கத் தொண்டனை இருவருமாகத் தோளிலேற்றி ஆடினார்கள். கப்பற்றலைவன் மிலேச்சத் தலைவனுக்குக் கச்சட்டம் கட்டக் களை-



யத்தெரிந்தமை கண்டு, கொண்டுவந்த கச்சட்டத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கோல்வழியாக அவனிடம் சேர்ப்பித்தான். கட்டிய பழசைக் களைகிறதும் கைக்குவந்த புதிதைக் கிழித்துத் தான் அணிவதுமாய்ப் பகல் முழுதும் கழிந்தது. கச்சட்டம் ஒவ்வொன்றுக்கும் காணிக்கை இவ்விரண்டாக வந்து சேர, கொண்டுவந்த கச்சட்டமும் ஒழிந்தது; கப்பலும் நிரைந்தது; கதிரவனும் மறைந்தான்; காற்றும் வாகாயடித்தது; கப்பலிலுள்ளவர்களும் பயணப்பட்டுத் தங்கள் துறை வந்து சேர்ந்தார்கள். இம்மட்டோடு நில்லாமல் பன்முறையும் போய்க் கச்சட்டம் வழங்கிக் கனத்தலாபம் அடைந்தார்கள். ஆனால் இந்த வியாபாரத்தில் கச்சட்டம் வழங்கும் வரையில் காணிக்கையாகிய தேங்காய் வந்துகொண்டே இருக்கும்; கப்பல் நிறைந்தவுடன் கச்சட்டத்தை இழுத்து விடுவார்கள்; காணிக்கையும் நின்றுவிடும். ஆதலால் ஒருவரை யொருவர் நம்பா வியாபாரமாய்ப் போய்விட்டது. இது கொண்டே இத்தகைய வியாபாரத்துக்கு நக்கவாரக் கச்சட்டம் என்னும் வழக்குப் பிறந்தது.

இனி நக்கராயிருந்த தீவார் துணி மணியில் விருப்பங்கொண்டதும் அணிந்தவர்களை யணியாதவர்கள் அணிந்த வரிசைப்படி மரியாதை செய்வதையும் இங்குக் கண்டோம்.

ஆகவே மிருகப் பிராயமாயிருந்த நக்கவாரத்தார் கச்சட்டம் அணிந்தவர்களை நாகரிகரெனக் கொண்டாடினார்கள். தைத்துடுத்தாத மலையாளத்தார் சட்டை ரவுக்கை யணியத் தலைப்பட்டார்கள். சட்டையுந் துணியுங் கலந்துடுத்திய நம்மில் அநேகர் சட்டையை அணிவதே நாகரிகம் என நினைக்கலாயிற்று. சட்டையை யணிந்துவந்த ஐரோப்பியர்கள் எத்தனைக் கெத்தனை துண்டும் தொங்கலும் அதிகரிக்கிறதோ அத்தனைக் கத்தனை நாகரிகம் என எண்ணலாய் விட்டது.

## 3. அணியின் வளர்ச்சியே நாகரிகமுதிர்ச்சி.

துணியைப்போலவே அணியும் பிறந்து வளர்ந்தனவாகும். திருஷ்டாந்தமாகக் கழுத்தணியை எடுத்துக்கொள்வோம். இயற்கைப்பொருளை யணிவதைவிட்டுப் பொன்வெள்ளிகளால் செய்த அணியை அணிய ஆரம்பித்த காலத்தில் பொன் முதலியவற்றை யுருக்கிக் கம்பியாக இழுத்து, கழுத்துக்கு மட்டாக நறுக்கி,

ஒரு கோடியில் கொக்கியும், மறுகோடியில் மாட்டலுமாக ஏற்படுத்தி, வட்டமாய் வளைத்துக், கம்பிக்காறையெனப் பெயரிட்டு, அணிந்து வந்தார்கள். இப்பால் சில குண்டுகள் செய்து கோத்துக் குடக்கம்பிக்காறை யென்று அணிந்து வந்தார்கள். இத்தகைய அணியில் தாலியைக்கோத்து அணியும் சாதியார் பலரை இன்றைக்குங் காணலாம். மேற்கூறிய பெருங்கம்பியைச் சன்னமாக இழுத்துச், சறடுபின்னித், தாலியைக்கோத்து, தங்க முகப்புவைத்து அணிபவர்களும் இருக்கிறார்கள். சிலர் சறட்டைத் தனியே அணிகிறார்கள். சிலர் அஞ்சு கொத்தாக்கி அதற்குத்தக்க அகல முகப்புவைத்து அணிகிறார்கள். இதிலுஞ் சிறந்தது எனச் சந்திரஹாரச் சரப்பணி எண்ணப்பட்டு வருகிறது. இவை யனைத்தையும்விடக் கடிகாரச்சரடே மிகச்சிறந்ததென்று இப்பால் கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மட்டில் நிறுத்தி மீண்டுக் கூறியவற்றைக் கவனிப்போம். ஆதியிலணிந்த கம்பிக்காரையில் பொடிக்கலப்பே கிடையாது; குடக்கம்பிக்காறையில் குண்டுகள் இணைக்கும்வகையில் கொஞ்சம் பொடிகலக்க நேர்ந்தது; அதிலும் அதிகப் *பொடிகலந்தது சரடு (முகப்பு செய்யும்வகையில்); அதிலும் கலப்பு அதிகம் ஐந்து கொத்துச்சரட்டு முகப்பில் (அகலமாகச் செய்வதால்) அதிலும் அதிகமாகக் கலந்தது சரப்பணி. (ஒவ்வொன்றாகப் பலவேறு துண்டு ஒட்டியாகவேண்டுமாதலால்); எல்லாவற்றிலும் அதிகக் கலப்புள்ளது கடிகாரச் சறடு; இதை நேரில் பார்த்தறியலாம். இதுகாறும் ஆய்ந்தது கொண்டு பொடி யதிகரிக்க அதிகரிக்க நாகரிக முதிர்ச்சியென்று எண்ணலாகிறது.

(இன்னும் வரும்)

I. SAWMINATHEN.

(* பொடி = தாழ்ந்த லோகத்தினாலாயது.)



# GOOD WORDS

## நல்லுரை

1. மனம்போலிருக்கும் மாங்கல்யம்.

2. சுத்தம் சோறிடும்.

3. ஐய மிட்டுண்.

4. தெய்வத்தின் நியமனத்துக்கும், உன்மனச்சாக்ஷிக்கும், உலகத்தவர்க்கும் ஒத்து நடக்கிறாயென்னுந் தெளிவு உனக்குத் தோன்றுமானால், அப்போது அந்தத் தெளிவுடன் சாந்தமும் ஆனந்தமும் வந்தெய்தும்.

5. ஆரோக்கியம் அமூலியமானது, — விலையற்றது, விலைக்ககப்படாதது. டாக்டருக்குப் பணத்தைக் கொடுத்து அருவருக்கத் தக்கதொரு கஷாயத்தையாவது மருந்தையாவது வாங்கி யருந்துவதைவிட, வெளி நிலங்களிற்போய் வயல்கள் முதலியவற்றில் உலவித் திரிந்து ஆரோக்கியத்தைத் தேடு.

6. ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறவர்களெல்லாரும் தம் வீடுகளையும், ஆடைகளையும், தாம் உபயோகிக்கும் சாமான்களையும், மிகவும் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும்.

7. கல்விப் பயிற்சியானது மனத்துக்கு என்ன நன்மை செய்யுமோ, வியாயாமம் அந்த நன்மையை தேஹத்துக்குச் செய்யும் — ஆதலின், அதனைப் பயின்று பலப்படுத்து.

8. நோய்க் கிடங்கொடேல்.

9. உன்னுடைய வீட்டை இந்திரபவனத்தைப்போல் ரம்மியமாக்கலாம்; ஸுந்தரமான படங்களைக்கொண்டு அலங்கரிக்கலாம்; சுத்தமாய் வைத்துக்கொள்ளலாம்; நல்ல காற்றோட்டம் உண்டாகச் செய்யலாம்; இன்னும் பலவிதங்களில் அநுகூலமாகச் செய்துவைக்கலாம். ஆனால், ஊசின பழஞ்சோற்றையும், காந்திக் கருகிய பதார்த்தங்களையும் தின்று வயிற்றை நிரப்பினால், இரைப் பை கலகித்துக் கண்ணைத்தாக்கி, எவ்விடத்தும் எதனிலும் அழகைக் காணவொட்டாது, ஆனந்தத்தையுங் காணவொட்டாது.

10. தன்னயத்தைப்பற்றி மாத்திரமே நினைத்துக்கொண்டிருக்கிறவனைத் தவிர, அதிருப்தியுள்ளவன் வேறு எவனேனும் உளனோ?

11. நல்ல ஆஹாரம், புதிய வாயு, சுத்தஜலம் ஆகிய இவை மூன்றும் ஆரோக்கியத்துக்கும் சரீரவளர்ச்சிக்கும் இன்றியமையாதன.

12. அன்றன்றைக்கு உரிய காரியங்களைச் செய்துவிட்டு அந்த தினத்தை ஒழித்துவிடு. உன்னால் இயன்றதைக் கூடியவரையில் கிரமமாயும் நன்றாயும் செய்; அவற்றுள் சில பிழைகளும் குற்றங்களும் ஒவ்வாதனவும் இருக்கும் என்பது நிச்சயமே; அவைகளையெல்லாம் எவ்வளவு சீக்கிரத்தில் மறக்கக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடு. நாளைப்பொழுது புதிய தினம்; அந்தப் புதியதினத்தை நன்றாயும் சாந்தமாயும் தொடங்க வேண்டும்; உன்னுடைய பழைய அவிவேகங்களும் பிழைகளும் வந்து பாதிக்காதபடி மிக்க பெருந்தன்மையோடும், உயரிய நோக்கத்தோடும், உல்லாஸத்தோடும் புதிய தினத்தைத் தொடங்கு.

13. இறந்த காலமும் வருங்காலமும் ஒன்றே; அவை இரண்டும் இந்த நிகழ்காலமே. ஆதலால், இன்றைக்கே முயற்சி கடைப்பிடி.

14. இறந்த முன்தினங்களும், இன்னும் பிறவாநாள்களும் பஞ்சாங்கத்தைப் பார்த்தே தெரிந்தன. இன்றைப்பொழுதே பிரத்தியக்ஷம்.

15. உத்தம பாவனையே கொள்ளுமொருவன், பத்தாம் மாடியின் ஜன்னலினின்று வீழ்ந்தான். கீழே விழுங்கால் ஒவ்வொருமாடியண்டை வரும்போதும், 'இதுவரையிலும் க்ஷேமமே' என்று சந்தோஷமாய்ச்சொல்லிக்கொண்டே இழிந்தான்.

16. சரித்திரத்தில் சில வேளைகளில் சில ஆச்சரியமான ஸங்கதிகள் அகப்படுகின்றன. அந்த ஆச்சரியகரமான விஷயங்களினாலேயே சரித்திரத்திற்கு ஒரு ருசி உண்டாகின்றது. ஒரு காலத்தில் ஜனங்கள் கொண்ட அபிப்பிராயமும் ஸித்தாந்தமும் மற்றொருகாலத்தில் முற்றும்மாறிப்போவது மேற்சொல்லிய ஆச்சரியங்களுள் ஒன்றாம். ஒரு தலைமுறையாருக்குக் கிள்ளுக்கீரையைப்போல் வழக்கச்சொல்லாயிருப்பது மற்றொரு தலைமுறையாருடைய பெருமைக்கும் பிரகாசத்திற்கும் சிறப்புக்கும் காரணமாவது சரித்திரத்திற் காணப்படும் ஆச்சரியங்களுள் ஆச்சரியமானதாம்.



17. போதுமான அளவு ஓய்வு கொள்ளாவிடின் நீ செய்யும் வேலையின் குணம் (யோக்கியதை) குறையும்.

18. துன்பத்தினால் வருந்துவோர் ஒவ்வொருவரும் அதனால் தம் சக்தியை (மனோவேகத்தையும் சரீரபலத்தையும்) வீணில் கழிக்கிறார்கள். அந்தச் சக்தியைத் துக்கத்தினின்றுந் திருப்பி வேறு வகையில் உபயோகித்துப் பெருங் காரியம் செய்யலாம்; அதனால் துக்கம் மறையும்; உபயோகமும் உண்டாகும். இந்தக் கருத்தை மனத்திற் கொண்டு யோஜிக்குமிடத்து, துக்கத்தில் கழியும் சக்தியை நல்லுபயோகப்படுத்தத் தக்க நற்காரியம் சித்தமாய்த் தோன்றும்.

19. ஒரு காலத்தில் ஒருவிதமான தொந்தரவுக்கு அதிகம் மேற்கொள்ளாதே. சிலர் மூன்று வகையான தொந்தரவுகளை மேற்கொள்ளுகிறார்கள் — (1) இதுவரையில் உண்டாயிருந்த தொந்தரவுகள், (2) இப்பொழுது இருக்கும் தொந்தரவுகள், (3) இனி வரக்கூடியதாக நினைக்கும் தொந்தரவுகள்.

20. தன்னுடைய துக்கங்களை ஆற்றிக் கொள்வது ஒருவாறிருக்க, ஒருத்தி இதரர்களுடைய துக்கங்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டியிருந்தது. இப்படிப்பட்ட காரியம் அவளுக்கு மிக்க நன்மை செய்யும். அவள் தன் துக்கத்தை நினைந்து, குடங் குடமாய்க் கண்ணீர் சொரிந்தாலும், மனமாழ்ந்து புலம்பினாலும் அவ்வளவு நன்மை உண்டாகாது.

21. இடைவிடாமல் உறுதிவாக்கியங்களினால் மனத்துக்குப் பலமூட்டு. எப்பொழுதும் 'ஆம்' என்றே உரை, சுபமே கொண்டாடு. கெட்டதைக் கண்டு குரைக்காதே, நன்மையின் சிறப்புக்களையே துதி. தீமையை மற, நன்மையை நினை.

22. மத்தியம வயது, குறை கூறாமை, அஸாதாரணமான தயாசீலம், சாந்த குணம், அபரிமிதமான அநுதாபம், அண்டினவருக்கு ஆசுவாஸகரமான மனோரதம்—ஆகிய இத்தன்மைகளுள்ள புருஷனொருவனைக் கண்டால், அவன் முள் நிறைந்த

சாலையின் வழியே நெடுநாள் நடந்து கஷ்டப்பட்டுச் சலிப்புறாமற் போராடி மனம் என்னுங் குரங்கைத் தன் வசப்படுத்திக்கொண்ட தீரன் என்று அறி; அவன் தன் பாதங்களில் இரத்தம் ஒழுக வெற்றிக் கொடியைத் தாங்கிச்சென்றவன் என்று அறி; அவன் கொடிய நிராசைக் கடலினின்று விஷாதத் துன்பத்தையும் சோர்வையும் விஷத்தையும் விழுங்கி ஜீர்ணித்துக்கொண்டு வெளியேறிச் சாந்தமெய்திக் கடைத் தேர்ந்தவன் என்று அறி.

(இன்னும் வரும்)

T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

# RAMAYANA BY SWAMI VIVEKANANDA

## சுவாமி விவேகாநந்தர் குறித்த இராமாயணம்

(முன்றொடர்ச்சி பக்கம் - 129)

இராமர் தெய்வப் பிறப்பு. இல்லாவிடில் இவ்வளவு காரியங்கள் யாரால் செய்ய இயலும்? அவரை விஷ்ணுவின் அவதாரமாக ஹிந்துக்கள் மதிக்கிறார்கள்.

பிறகு இந்த வானரர்கள் பிரம்மாண்டமான மலைகளை உருட்டி வந்து கடலில் எறிந்தார்கள். பெரிய பெரிய மரங்களை வேரோடே களைந்து குறுக்கே போட்டார்கள். இன்னும் தங்கள் வசம் அகப்பட்ட எவையும் கடல்மீது எறிந்து அணையாகக் கட்டினார்கள். இச்சமயம் இராமருக்கு ஒரு சிறிய அணில்கூட உதவி செய்ததாகக் கூறப்படுகிறது. மணல்மீது தன்னை உருட்டிக்கொண்டு, அந்த அறிவுடைய அணில் அணையின்மீது சென்று தனது உடலைத் தட்டிக்கொள்ள இவ்விதமாக அதுவும் தன்னாலான உதவியை இராமருக்குச் செய்ததாம். இதைப் பார்த்த வானரங்கள் சிரித்தன. அவைகளோ அண்டங் கிழியும்படியாக அளாவிய மலைகளையும் மரங்களையும் உருட்டித் தள்ள இந்தச் சிறிய அணில் கொஞ்சம் மணலைக் கொணர்ந்து கொட்டுவதைப் பார்த்ததும் அவைகள் நகைக்கத் தலைப்பட்டன. இராமர் அந்த



அணிலைப் பார்த்து, "இதற்குச் சுபம் உண்டாகுக! இது தன்னாலான காரியத்தைச் செய்கிறது; உங்களைப் போலவே அதுவும் மிகவும் மதிக்கத் தக்கது" என்று வாழ்த்தி அதைக் கையிலெடுத்து அதன் முதுகில் தடவிக் கொடுத்தார். தடவிக் கொடுக்கவே இராமருடைய கை விரல்களின் அடையாளங்கள் அதன் முதுகில் பதிந்தன. அணிலின் முதுகில் விரலடையாளங்கள் இருப்பதற்கு அதுதான் காரணமென்று கூறுவார்கள்.

பாலம் கட்டி முடிந்ததும், வானர சேனை முழுதும் இராமரையும், இலட்சுமணரையும் உடன் கூட்டிக்கொண்டு இலங்கைக்குள் நுழைந்தன. பல மாதங்களாக இராமருக்கும் இராவணனுக்கும் கொடிய சண்டை நடந்தது. பல உயிர்கள் சேதமாயின. கடைசியாக இராமரே ஜயித்தார். மாட மாளிகை கூட கோபுரங்கள் யாவும் இலங்கையில் தங்கத்தினாலேயே கட்டப்பட்டிருந்தன. அத்தகைய சிறந்த நாடு இராமரின் கைவசம் வீழ்ந்தது. இராமர் அதை, உயிர் துறந்த இராவணனின் இளைய தம்பிக்குக் கொடுத்தார். இப் புது அரசன் நற்குண நற் செய்கைகளையுடையவன்; இராமனிடத்தில் பிரீதி வாய்ந்தவன். அவனுக்கு இராமர் பட்டாபிஷேகஞ் செய்தார்.

சீதை யிராமரிடம் திரும்பி வந்தாள். திரும்பி வந்தபோது இராமரின்பின் வந்தவர்கள் சீதையின் கற்பைச் சோதிக்க வேண்டுமென்று முணுமுணுத்தார்கள். சீதை தான் கற்பைக் காப்பாற்றிக்கொண்ட விதத்தை நாடறியத் தெரிவிக்க வேண்டுமல்லவா? அவ்விதமே ஒரு பெரிய நெருப்பு அகழி செய்யப்பட்டது. நெருப்பில் சீதை குளித்தாள். சீதை எரிந்துவிட்டாளென்று இராமர் துக்கித்தார். அச்சமயத்தில் அக்கினிதேவன் ஒரு சிம்மாசனத்தைத் தன் தலையில் தூக்கிக்கொண்டு அங்கிருந்தவர்களின் எதிரே தோன்றினான். அச் சிம்மாசனத்திலிருந்தும் சீதை வெளியே வந்தாள். மிகுந்த குதூகலத்துடன் சீதையை யழைத்துக்கொண்டு இராமர் தம்முடைய பரிவாரத்துடன் தமது தலைநகராகிய அயோத்தியை நோக்கிப் புறப்பட்டார். இராமர் அயோத்தியின் அரசரானார். பட்டத்திற்கு வருவதற்குள் தம்முடைய பிரஜைகளிடம் தாம் மனுமுறை தவறாது பரிபாலனம் செய்வதாகச் சத்தியம் செய்து தந்தார்.

இராமர் தம்முடைய இராச்சியத்தைத் திரும்பவும் அடைந்தாரே. சீதை யவநடன் சிலகாலம் மிகவும் சந்தோஷமாகக் காலங் கழித்தாள். குடிகள் சீதையின் கற்பைக் குறித்து சந்தேகித்தார்கள். "சீதை இந்தியாவிலிருந்து வேறு எங்கேயோ பலகாலம் போயிருந்தாள். ஒரு இராட்சதன் அவளைத் தூக்கிப் போயிருந்தான். சீதை தன் கற்பைக் காப்பாற்றினாள் என்று நமக்கெப்படித்தெரியும். அவளை இன்னொரு தரம் பரீட்சிக்க வேண்டும். இல்லாவிடில் அவளைத் தேசப் பிரஷ்டம் செய்ய வேண்டும்" என்றார்கள். சீதையை எப்படியிருந்தாலும் ஊரை விட்டு அப்புறப்படுத்தத்தான் வேண்டும், என்று பலர் பிடிவாதஞ் செய்தார்கள். அதனால் அவள் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டாள். கர்ப்பிணியாகிய சீதை ஒரு காட்டை நோக்கிப் போகவேண்டியிருந்தது. வழியில் வான்மீகி யவளைச் சந்தித்தார்; உற்றுணர்ந்தார்; தம்முடைய பன்னசாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவ்வம்மையைச் சுகமாக இருக்கச் செய்தார். அப்போது அவள் பிரசவித்தாள். பிறந்தன இரட்டைப் பிள்ளைகள். வான்மீகி இவ்விரு ஆண் குழந்தைகளை எல்லா வித்தைகளிலும் பழக்கினார். இராமாயண கதையை அம்முனிவர் காவியமாகப் பாடினார்; சங்கீத சாஹித்தியங்களுடன் அவைகளை நடிப்பித்தார். இராமரின் குழந்தைகளுக்கு அக்கதையைப் போதித்தார். அவர்கள் நெட்டுருப் பாடமாக்கி அதை ஒப்பித்தார்கள்.

இராமர் ஒருசமயம் ஒரு பெரிய யாகம் செய்யும்படி நேர்ந்தது. இவ்விந்தியாவில் எந்த யாகத்தையும் மனைவியற்ற ஒருவன் செய்யக்கூடாதென்பது விதி. ஹிந்துக்கள் செய்யத் தக்கன நூற்றுக் கணக்கான விரதங்கள். அவைகளுள் ஒன்றையேனும் மனைவி யின்றி ஒருவன் செய்ய வொண்ணாது. பலர் தங்கள் மனைவியர்களின் அரையில் கட்டிய புடவைகளின் நுனியைத் தாங்கள் கட்டிய வஸ்திரத்துடன் முடிந்துகொண்டு ஆலயங்களை வலம் வருதலும், நதி தீரங்களில் ஸ்நானஞ் செய்தலும் மேற்குறித்த காரணத்தினாலேயாம்.

இராமர் இப்போது மனைவியின்றி இருந்தார். சீதைதான் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டாள். ஜனங்கள் அவரை வேறு கலியாணம் செய்துகொள்ளத் தூண்டினார்கள். இராமர் அவ்விஷயத்திற்கு உடன்படவில்லை. 'அப்படி என்னால் முடியாது; இவ் வுடலும் உயிரும் சீதைக்கே சொந்தமானவை;' என்றார். ஆகவே, சீதையைப்போல ஒரு தங்கப் பதுமையை அக் குடிமக்கள் நிருமித்தார்கள். எப்படியிருந்தாலும் அந்த யாகம் நிறைவேறியே தீரவேண்டும் என்றார்கள். அவ்விடத்தை ஒரு பெரிய நாடகசாலையாக நாட்டினார்கள். எங்கணும் பல வாத்திய கோஷங்கள் முழங்கின. இச்சமயத்தில் வான்மீகி மகரிஷி தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். இராமர், அவருடைய மூன்று தம்பிகள், அயோத்தி ஜனங்கள் குழுமினார்கள். இராமசரிதை அச்சிறுவர்களால் நடிக்கப்பட்டது. இராமன் காட்டுக்குப் போனதும் இலங்கையில் சண்டை நடந்ததும் யாவும் சவிஸ்தாரமாக நடிக்கப்பட்டன. சீதை காட்டுக்குத் துரத்தப்படும்போது இராமர் மூர்ச்சையானார்! என்ன செய்வதென்று அவர்க்குத் தோன்றவில்லை. "இராமா! சஞ்சலப் படாதே! சீதையையும் காண்பிக்கிறேன்" என்று வான்மீகிரிஷி நிஜ சீதையை அங்கு வரவழைத்துக் காண்பித்தார். இராமர் சீதையைத் தழுவி முத்தமிட்டார்.



ஜனங்கள் பழையபடி "சோதனை, சோதனை" என்றார்கள். சீதை யிதைக் கேட்டதும் மனம் தாளவில்லை "இதோ இருக்கிறது சோதனை" என்று அவள் கூறிக்கொண்டே கீழ் விழுந்து தரையில் உயிர் விட்டாள். இராமரும் சிலகாலம் இருந்துவிட்டு, தன் பட்டத்தை மூத்த மகனுக்குக் கொடுத்துவிட்டுப் பரலோகப் பிராப்தியானார். முதலில் அவர் சரயூ நதிதீரத்தில் விழுந்து உயிர்விட்டு மேலுலகத்திலுள்ள தம்முடைய சீதையிடம் போய்ச் சேர்ந்தார்.

இதுதான் இந்தியாவின் பழைய காவியம். இராமரும் சீதையும் இந்தியாவின் பிம்பம் போன்றவர்கள். ஒவ்வொரு குழந்தையும், முக்கியமாக பெண் குழந்தைகள் சீதையை அல்லும் பகலும் தொழுவர். சீதையைப் போல இருக்கவேண்டுமென்பதே ஸ்திரீகளின் எண்ணம். சீதை களங்கமற்றவள்; துன்பமெல்லாம் தாண்டினவள்! அவ்விரு விலையற்ற மணிகளைக் குறித்து யோசிக்கும் சமயத்தில், அவர்கள் காலத்தில் இந்தியாவிலிருந்த வாழ்க்கை நிலை நன்றாய்ப் புலப்படும். சீதை, அவளுடைய இனத்திற்குப் பிம்பமாக நின்றாள்.

மேனாடு, "நமது திறத்தைச் செய்து காண்பியுங்கள்" என்கிறது. இந்தியாவோ, "நின் திறத்தைத் துக்கத்தை அநுபவித்து வெளியிடு" என்கிறது, மேனாடு தன்னுடைய கட்சியை, மனிதனுக்கு எவ்வளவு அதிக திறமையுண்டென்பதை அனுமானத்தால் காட்டி விட்டது. இந்தியாவோ தன்னுடைய உண்மையை நாளா வட்டத்தில், மனிதனுக்கும் எவ்வளவு குறைந்த வலிமை யுண்டென்பதைக் காட்டிவருகிறது இப்போது இரண்டு கோடிகள் இருக்கின்றன. சீதை இந்தியாவின் கற்பென்னும் முழுமணி. அவள் ஒரு காலத்தில் இங்கு உயிரோடிருந்தாளோ இல்லையோ, இராமகதை உண்மையோ பொய்ம்மையோ அதைக் குறித்து நாமிப்போது கவலைப்பட நியதியில்லை. நங் கதையைக் குழப்ப வேறொரு அத்தகைய கதையும் நம் நாட்டிலில்லை. ஆகவே எல்லா நல்ல பொருள்கட்கும், களங்கமற்றவைக்கும், பரிசுத்தமானவைகட்கும், சீதையென்ற பெயரால் ஹிந்துக்கள் அழைப்பது மரபு.

"சீதா! சீதையைப்போ லிரு". ஒரு பிராமணன் ஒரு பெண் குழந்தையை ஆசீர்வதித்தால் "அம்மா! சீதையைப்போ லிரு!" என்கிறான். இப்படியே ஒரு வயது சென்றவளை ஆசீர்வதித்தாலும், "நினக்குச் சீதையின் குணங்கள் அமைக!" என்கிறான். நாமும் அச் சீதையின் குழந்தைகள். பெண் மக்கள் பொறுமை வாய்ந்த, எல்லாத் துன்பங்களுக்கும் உட்பட்ட, எப்போதும் நன்றியறிவுள்ள, குற்றமற்ற மனம் வாய்ந்த சீதையைப்போ லிருக்க முற்படுகிறார்கள். தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், இராமனை நொந்து ஒரு வார்த்தையேனும் சீதை கூறினாளா? இல்லையே, தனது நாயகன் கட்டளைகளைத் தனது கடமைகளாகக் கொண்டு, அவைகளை இனிதுற முடித்தாள். காட்டினுள் அவள் திடீரென துரத்தப்பட்டதைக் கவனியுங்கள். அப்பொழுதேனும் மனம் நொந்தாளா? பார்த்தீர்களா!

புத்தர் பின் வருமாறு உரைக்கிறார்:— ஒரு மனிதன் உனக்குத் துன்பஞ் செய்வானானால், பிரதியாக நீயும் அவனுக்குத் துன்பம் விளைத்தால் முதலில் நீ பெற்ற துன்பத்திற் கேற்ற மருந்தாகாது. அது, இவ்வுலகில் பிறிதொரு கொடுமையை விளைக்குமே யன்றி, வேறன்று" ஆகையினால், சீதை ஒரு சுத்தமான இந்திய மனம் உடையவள் என்று



நன்கு காண்கின்றது. அவள் பிரதிபலனைத் துன்பம் எவர்க்கும் விளைக்கவில்லை. பின் காண்பனவற்றில் எது உண்மையென்று யாருக்குத் தெரியும்? மேனாட்டாரின் கடைப்பிடியாகிய கிடைத்தற்கரிய ஆண்மையும் வலிமையுமா அல்லது இந்தியரின் கடைப்பிடியாகிய துன்பத்தைக் கடக்குந் தன்மையா? மேனாட்டார்:— "வெற்றியால் துன்பங்களை நாங்கள் குறைக்கிறோம்" என்பர். இந்தியர் அப்படியன்று "நாங்கள் அத் துன்பங்களில் படிந்து துன்பமே யில்லாமல், துன்பம் இன்பமாகிற வரைக்கும் அதனை அடியோடு அழிக்கிறோம்" என்கின்றனர். நல்லது, இரண்டுந் தக்க உதாரணங்களே; அவற்றுள் எது உண்மையாக நன்மை பயக்கும் என்பதை யாரறிவார்? எனினும் இரண்டும் ஒரு மூலப் பொருளைச் சேர்கின்றன. கடவுள் இரட்சிக்க.

சி. வே விவேகாநந்தா.

# HEURISTIC METHOD

## ஹியூரிஸ்றிக் முறை

தற்காலத்தில் பாலகர்களுக்கும் பெரியவர்களுக்கும் கல்வியை யூட்ட உபயோகிக்கும் பற்பல முறைகளில் ஹியூரிஸ்றிக் முறையொன்று தற்காலத்தில் இம்முறை வெகு அநுகூலமுள்ளதென்று யாவராலும் கொண்டாடப்படுகிறது. இம்முறை கல்வியை யூட்ட நாம் உபயோகிக்கும் ஏனைய முறைகளில் சிரேஷ்டமானது. கல்வியை விருத்திசெய்ய நாம் அநுசரிக்கும் பின்வரும் மூறைகள் மீது இம்முறை அமைந்துள்ளது. அவை யாவன:—

1. பிள்ளைகளுக்கு எவ்வளவுதூரம் கொஞ்சம் கற்பிக்கக் கூடுமோ அவ்வளவு தூரம் கற்பித்து எவ்வளவுதூரம் அவர்களிடமிருந்து அதிகம் வருவிக்கக்கூடுமோ அவ்வளவுதூரம் வருவிக்க வேண்டும்.

2 பிள்ளைகளை சுதாவில் கற்றறிய விடவேண்டும். ஒரு காரியத்தை உபாத்தியாயர் தொடங்கி அதைப் பிள்ளைகளை முடிக்கச் செய்யவேண்டும்.

3. முதலில் உதாரணங்கள் கொடுத்து, பின்னர் பிரமாணத்தை வருவித்தல் வேண்டும். ஒன்றின் குணத்தை வைத்து அவ்வகுப்பின் குணத்தை அநுமானித்தல் வேண்டும்.

4. பிள்ளைகள் தங்கள் சுயபிரயாசத்தினாலேயே ஏதாவதொன்றைத் தேடி யாராய்ந்து தங்கள் மனோபலத்தையும் உற்று நோக்கும் சக்தியையும் விருத்தி செய்ய வேண்டும்.

5. இயற்கைப் பிரமாணத்தின்படியே பிள்ளைகள் போதிப்பிக்கப்படல் நலம். பிள்ளைகளுக்கு இடம்விட்டுப் பெயர்தல், கூச்சலிடல் முதலியன விருப்பமாதலால், இவ்வியற்கைக்கு இடங்கொடுத்தல் தகுதி.

மேற்கூறிய இம்முறைகளினால் பிள்ளைகள் தாங்கள் படிக்கிறதைத் தாங்களே சோதித்தறிந்து, உற்று நோக்கும் சக்தியினாலேயே எல்லாவற்றையும் நிதானித்தறிந்து, அநுபவத்திலன்றி எதையும் நம்பிக்கையினாலே கேட்டறியாது, முயற்சியினாலேயே மனோதத்துவங்களை விருத்தி செய்ய ஏதுவாயிருக்கிறார்கள். புதியகாரியங்களைக் கண்டுபிடிக்கிறதற்கும் சோதித்தறிகிறதற்கும் குட்டிப்பாடம் போடாமல் நிதானத்தின் பேரில் மூளையைச் செலுத்துவதற்கும் நாம் கையாடுகிற முறைகளில் இந்த ஹியூரிஸ்றிக் முறைக்கு மிஞ்சினமுறை கிடையாது.

பிள்ளைகள் சுதாவாக ஒரு வேலையைச் செய்து அதிலிருந்து ஏதாவது புதிது கண்டுபிடிக்க வேண்டுமென்று இம்முறையாக்கியோர் சொல்லுகிறார். பிள்ளைகள் தங்கள் வேலையைக் குறித்துத் தர்க்கிக்கவும் தங்கள் அபிப்பிராயத்திலுள்ள மாறுபாட்டை நீக்கி, வேலையைச் சீர்ப்படுத்தவும் நலமென்கிறார். எவ்வளவுதூரம் தர்க்கம் பண்ணவேண்டுமென்று பிள்ளைகள் எண்ணங் கொள்ளுகிறார்களோ அவ்வளவு தூரம் தர்க்கிக்க அவர்கள் இடங் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அத்தர்க்கங்களில் ஊடேகாணப்படும் தப்புதவறுகளை உபாத்தியாயர் தகுந்தவிதமாய் சீர்ப்படுத்தல் தகுதியென்றும் கூறுகிறார்.

கிண்டர் கார்ட்டன் வகுப்புகளிலும் மற்ற வகுப்புகளிலும் பிள்ளைகள் தாராளமாய் எதையுஞ் செய்ய விடப்பட வேண்டும். பிள்ளைகளது சதாவேலைக்குப் பிரத்தியேகமாக ஒரு அறை ஏற்பட்டு அவ்வறையில் அவர்கள் தர்க்கிக்கவும் பாடங்களை சீர்ப்படுத்தவும் வேண்டும். உபாத்தியாயர் ஊடே சென்று அவர்களில்



காணப்படும் அறை குறைகளைத் திருத்தவேண்டும். மேல் வகுப்புகளில் க்ஷேத்திர கணிதம், கணிதசாஸ்திரம் முதலியன கற்றுக் கொடுக்கும்பொழுது இம்முறையைக் கையாடவேண்டும்.

பிள்ளைகள் யாதாமொரு புஸ்தகம் பிடித்து அதின்படியே போகாமல் தாங்கள் படித்திருக்கும் புதிய காரியங்களைக் குறிக்கும் ஓர் குறிப்புப் புத்தகம் தங்களுக்குத் தாங்களே உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிந்திய காலத்தில் இக்குறிப்புப் புஸ்தகம் எழுதுவதில் சிலகாரியங்களைக் கவனித்தல் மிகவும் உசிதம். இந்திந்த விஷயங்களை முன்னர் வைத்து இன்னின்னது செய்தேனென்றும், இவ்விஷயங்களைக் கண்டுபிடிக்க இன்னின்ன விதமாய்ப் பரீக்ஷித்தேன் என்றும் கடைசியில் இன்னின்ன காரியத்தைக் கண்டுபிடித்து இவ்வாறறிந்துணர்ந்தேன் என்றும் பிள்ளைகள் அந் நோட்டுப் புத்தகத்தில் குறித்திருக்க வேண்டும். அந்தந்த விஷயங்களில் உண்டாகக் கூடிய தர்க்கங்களையும் அவைகளை நிவர்த்தி செய்ய உபயோகித்த உத்தரங்களையும் அதில் காட்டியிருப்பது அநுகூலமாகும். விஷய சோதனையில் ஒருவர் கண்டுபிடித்ததற்கும் அடுத்தவர் கண்டுபிடித்ததற்குமுள்ள பேதம் காட்டப்படல் தகுதி.

பொருட்பாட சம்பந்தமாய் பிள்ளைகளைத் தங்களுக்குத்தெரிந்த பொருட்களைத் தேடிக்கண்டுபிடித்து அவைகள்மேல் நோட்டுக் குறிப்பெழுதச் சொல்லவேண்டும். இதனிடையில் காணப்படும் அறை குறைகளை உபாத்தியாயர் அப்பாடம் நடந்து கொண்டிருக்கும்பொழுதே [illegible]க்கிச் சீர்ப்படுத்தல் வேண்டும்.

கிண்டர்கார்ட்டன் வகுப்புகளில் பலவித நிறங்களை உண்டாக்கும் கட்டிகளை வைத்து அநேக நல்ல சோதனைகள் செய்யலாம். பிள்ளைகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டிகளைத் தேய்த்து அதிலுண்டாகும் நிறமின்னதென்றும் அதே நிறமுள்ள வஸ்து எதெதென்று விசாரித்தலும் வெகு நலம். ஒரு கட்டியையும் இன்னொரு கட்டியையும் தேய்த்தால் இன்னின்ன நிறமுண்டாகுமென்பதையும் பிள்ளைகளை நேரில் கண்டுபிடிக்கச் சொல்லி அதினின்று சுதாவில் கண்டு பிடிக்கக்கூடிய வேறு விசேஷங்களை விருத்தி செய்யலாம்.

'சன்னஞ் சன்னம் பருவதம்' என்பது இதன் சம்பந்தமாய் பிள்ளைகளுக்கு உணர்த்தப்படவேண்டும். எப்படியெனில்,

பிள்ளைகள் ஏதாவதொரு தப்பு செய்தாலும் உபாத்தியாயர் திடீரென கோபப் படாது 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்றபடியால் பிள்ளைகளுக்கு இன்னமும் சந்தோஷத்தையும் விருப்பத்தையும் உண்டாக்கி அவர்கள் வேலையை சித்திக்குக் கொண்டுவரவேண்டும். 'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி'ய வேண்டுமாதலால் முன் யோசனையை விருத்தி செய்து அவ் யோசனையின்படியே பிள்ளைகளை நிதானிக்கச் செய்து யாதாமொன்று கண்டுபிடிக்க உபாத்தியாயர் அவர்களை ஏவி விடவேண்டும்.

JAMES, G. SUNDRAM,
*C. M. High School,*
*Mengnanapuram.*

## UNWORTHY PUPILS

## மாணாக்கர் அல்லார்

### வெண்பா

"குயில் எருமை இல்லிக்குடம் உணி பன்னாடை
வயல் கதலி எனம் அஜம் மந்தி — வயிறு புலி
பாசி உடல் பிப்பாய் பதர் பதினாறுக் கொத்தார்
சீசீ! மாணாக்கர் அல்ல தேர்."

### உபமான விளக்கம்

காக்கைதன் குஞ்செனவே கற்பிக்கும் பாஷைகுயில்
ஏற்கா ததையொருநா ளெய்த்தகலும் — சேர்க்கைபோல்
ஆசானை வேறெண்ணத் தாலடைந்து பொய்ச்சீடன்
பேசாமற் போவான் பிரிந்து. (1)

நீராடச் சோறுண்ண நேடித் துணிதுவைக்கச்
சேராவ கைக்குளஞ்சே றுக்கெருமைப் — பேரான்
குருவினிடந் தங்கிஸுகங் கொண்டவரைத் தூற்றி
வருவார்க்குஞ் சொல்வான் வசை. (2)

எல்லாநீ ருங்கூபத் தேவிடுமி யல்புடைய
இல்லிக் குடம்போல்வா னெவ்வவனே — நல்ல
குருவையடுத் தாலுங் குறைதீரான் கற்கு
மொருபொருளு மோரா னுணர்ந்து. (3)



பாலைக் கருதாமற் பசுவின் முலைக்காம்பில்
சாலக் குருதியுணச் சாருமுணி — போலொத்தான்
போதகனார் ஞானப் பொருளுணர்த்தக் கொள்ளாமல்
தீதவர்க்குச் செய்வான் தினம். (4)

கள்ளைவடி கட்டவதிற் காணுமெறும் பீமுதலாய்
உள்ளனவேற் கும்பன்னா டைக்கொத்தான் — விள்ளரிய
ஞானகுரு போதனையில் நண்ணுமுல கப்பேச்சைத்
தானடைவான் சாரம் தவிர்த்து. (5)

இயலு மெருவெல்லா மிட்டுழுது நாளும்
செயுநேர்த்திக் கொப்பச் சிறக்கும் — வயல்போல்வான்
பாடவனுக் காசான் படுமளவுங் கற்றுபிற
கேடெடுக்கான் கற்ப தெது. (6)

ஆறுகொத்து நூறுதண்ணீ ராம்பாங்கி னிற்குறையின்
தாறுமெத்த வுஞ்சிறுத்துத் தாழ்கதலி — வாரொத்தான்
போதனைசெய் நாணடுவிற் போமெனின்முன் கற்றவெலாம்
ஏதினிமே லென்பா னெனக்கு. (7)

வாளோறுஞ் சந்தனநல் வாசனைக்கு ழம்பணுகா
தீனமுறுஞ் சாக்கடைச்சேற் றிற்புரளும் — ஏனமொப்பான்
அஞ்ஞான சாகரத்தி லாழ்ந்து களித்திருப்பான்
மெஞ்ஞான சாரம் விடுத்து. (8)

புஜபலப ராக்கிரமப் போரேற்றைப் போற்றுள்ளி
நிஜபலமற் றிந்த நிலம்வாழ் — அஜமாவான்
சொல்லும் பொருளுந்தன் சொந்தமென்பான் கற்றறியான்
அல்லும் பகலு மவன். (9)

சிந்தையற்றுச் சோலைகளிற் சேர்ந்திருந்து சொந்தமெனச்
சந்ததமும் சேட்டைபல தானேற்கும் — மந்தியொப்பான்
இட்டமுட னாசா னியம்புவதைச் சிந்தைசெயான்
துட்டனெனப் போவான் தொலைந்து. (10)

அயர்வின்றி மூவேளை யாகாரங் கொண்டு
துயரென்றுந் தானறியாத் தொப்பை — வயிறொத்தான்
போதனையின் றில்லையெனப் போகா னிருநாளுக்
காதரவென் றேற்கா னது. (11)

நலியுமுயி ரென்னுமொரு நாட்டமிலா தென்றுஞ்
சலியா திமிசைசெயுந் தன்மைப் — புலிபோல்வான்
ஆசானை வஞ்சித் தவர்பால்பன் னூல்பயின் றும்
கூசாமற் செய்வான் கொலை. (12)

கூசித்தள் ளத்தள்ளக் கூடித்தண் ணீரின்மேல்
நேசித் துடன்பரவும் நேர்மைபெறும் — பாசியொத்தான்
ஆசானை யந்திர வாமுபதே சஞ்செயினும்
மாசகலான் றேறான் மனம். (13)

உடனுக் குடனுணவூட் டாவிடின்மெய் சோர்ந்தாண்
டிடநலனங் கெய்து மியல்பார் — உடல்போல்வான்
கல்வித் தினந்தினமும் கற்பிக்கக் கற்பான்பின்
பில்லையவற் கவ்வுணர்ச்சி யே. (14)

வாயகலம் மென்மேலும் வார்த்ததனில் வைத்தஜலம்
ஆயபிற கோட்டையொழுக் காயழிபிப் — பாயொப்பான்
நற்பனைமே லும்மேலும் கற்பிக்கக் கற்றுமனம்
நிற்பதற்றுப் போவான் நிலை. (15)

கதிரறுத்துப் போரடித்துக் காற்றினினெல் தூற்றச்
சிதறுண்டு போயப்பாற் சேரும் — பதர்போல்வான்
ஈட்டுங் கலைசபையே றுததனை லக்கல்வி
ஏட்டுச் சுரக்காய்க் கிணை. (16)

சி. வே. சண்முக முதலியார்,
செஷனல் ஸ்கூல் மாஸ்டர்,
திருவள்ளூர்.

வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும்

## ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமென்ட்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம். வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைக்குரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும் வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras, E*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - JAN 1915



# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1915ஆ டிஸெம்பர்மீ | மாதம் 7

## TOLSTOY AS A SCHOOLMASTER

### டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

நல்ல கதைகளைப் புத்தகத்திலிருந்து வாசித்துக் காட்டினால், பிள்ளைகள் அதிக் பிரியமாய்க் கேட்கிறார்கள். ஒரு கதை தொடர்ந்தாற்போல் வெகு நாளைக்கு வந்தாலும், அவர்களுக்கு இஷ்டமே. நாளாவட்டத்தில், புத்தகத்திலிருந்து வேடிக்கையான கதைகளைப் பார்த்து வாசிக்கவேண்டுமென்னும் கவலை கொள்ளுகிறார்கள். கொஞ்ச கொஞ்சமாகவே, உபாத்தியாயருடைய உதவியைக்கொண்டு, எழுத்துக்களை கற்றுக்கொண்டு, வாசிக்கத் தெரிந்து கொள்ளுகிறார்கள். 'நான் ஒரு பூனையை பார்க்கிறேன். நீ பார்க்கிறாயா?' என்று போதிப்பது சரியான முறையன்று; ஏனெனில் ஜனங்கள் அவ்விதமாய் பேசுகிற வழக்கமில்லை.

சில சமயத்தில் ஒரு பிள்ளைக்குப் புத்தகங்களிடத்தில் மிதமற்ற விருப்பமுண்டாகிறது. மனமுயற்சி அதிகமுண்டாகி, சரீரமுயற்சியை புறக்கணிக்கும்படி நேரிடுகிறது. இதற்கு என்ன செய்வது. பிள்ளைகளுக்கு இயற்கைத் தன்மைக்கு விரோதமாக உபாத்தியாயர் நடத்தினால், அவர்களுள் அதை விபரீதமாக எண்ணுவார்கள்.

கணிதத்தையும், தினந்தினம் பிள்ளைகள் தாங்களே கற்று அறிந்து கொள்ளுகிறார்கள். விளையாடும்போது, இத்தனை தடவை ஆடினோம், இத்தனை தடவை ஜயித்தோம், இத்தனை தடவை கோடு தாண்டினோம் என்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகிறார்கள். வீட்டில் கொஞ்சம் காசு கிடைத்தால், அதைக்கொண்டு தங்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்குகிறார்கள்; வாங்கும்போது ஒரு தம்பிடிக்கு எத்தனை யென்றும், இரண்டு தம்பிடிக்கு எத்தனை யென்றும் தாங்களே தெரிந்து கொள்ளுகிறார்கள். ஒரு பிள்ளைக்கு ஒரு அணா கிடைத்தால், தான் 4 பைக்குப் பண்டம் வாங்கி சாப்பிட்டுவிட்டு, மீதிக்கு ஒரு பைக்கு 2 வீதம் கோலிக்குண்டு வாங்கும்போது, தனக்கு கடைக்காரன் 16 குண்டு கொடுக்கவேண்டு மென்று தெரிந்து கொள்ளுகிறது; இவ்விதமான கணக்குகளை நாளாவட்டத்தில் மனத்திலேயே போடத் தெரிந்து கொள்ளுகிறது. இவ்விதச் சிறிய மனக் கணக்குகளை மாதிரி கணக்காக கரும்பலகையில எழுதிக் காட்டும்போது, பிள்ளைகளுக்குத் தெரிவதில்லை. கடிதத்தில் இவ்விதக் கணக்குகளை போடச் செய்வது எப்படி சரியாகும். இன்ன இன்ன முறையின்படி கணக்குகளைப் போடவேண்டும் என்று அவர்களை வற்புறுத்துவதனால் என்ன லாபம்.

ஒரு தேசத்தின் சரித்திரத்தை வாசிக்கச் செய்வதில் உசிதமுள்ள ஏதாவது யுத்தங்கள் நடந்தால், அவைகளைப்பற்றிக் கேட்கப் பிள்ளைகளுக்கு இஷ்டமுண்டு; ஆனால் சரித்திரம் போதிப்பதால், பிரயோசனமில்லை; தாங்கள் சரித்திரத்தில் வாசித்ததை சிக்கிரம் மறந்து விடுகிறார்கள்.

தங்களுடைய வாழ்நாளைப் பார்த்து அல்லது இதராளுடைய வாழ்நாளைப் பார்த்து, சாதாரண அனுபவங்களை தெரிந்து கொள்வதே சரித்திரப் படிப்பு ஆகும். பூகோள சாஸ்திரமும் இவ்விதமாகத்தான் தெரிந்து கொள்ளவேண்டும்,



பிள்ளைகள் எந்தெந்த இடத்திற்குப் போகிறார்களோ அந்தந்த இடத்திலெல்லாம், பூகோள சாஸ்திரம் தெரிந்து கொள்ளுகிறார்கள். தங்களைச் சுற்றிலுமிருக்கிற பொருள்களையும் இடங்களையும் தெரிந்து கொள்ளுவதால், பூகோள சாஸ்திரத்தில் அறிவு தானாகவே வளரும்.

பிள்ளைகள் ஏதாவது செய்தால், அவைகளைத் தடுப்பது சரியன்று. 'இது செய், அது செய்யாதே, இப்படிச் செய், அப்படிச் செய்' யென்று அடிக்கடி அவர்களுடைய செயல்களை கண்டித்துத் தடுப்பது சரியன்று. பிள்ளைகள் இரைச்சலிடும்போது, அவர்களைக் கண்டிக்கலாகாது; ஆனால் கண்டிக்காமலே, சங்கீதம் என்பது, இரைச்சல் போடுவதை விட, காதுக்கு இனிமை யென்று அவர்களே அறிந்து கொள்ளும்படி, உபாத்தியாயர் நடந்து கொண்டால், சத்தம் போட்டுப் பேசமாட்டார்கள். பிள்ளைகளுக்கு இனிமையாக, சாப்பாட்டிலும் சங்கீதமே நல்லதென்று தெரியும்படி செய்யவேண்டும். கால் செருப்போடு ஒரு பிள்ளை பள்ளிக்கூடத்திற்கு வருகிறான்; செருப்பில் அதிக அழுக்குப் படிந்திருக்கிறது; அழுக்குப் படிந்த செருப்போடு பள்ளிக்கூடத்தில் நுழையும்போது, உபாத்தியாயர் சுளித்த முகத்தைக் காட்டிக் கண்டிப்பதை விட, இனிமையான சம்பாஷணையோடு அழுக்குப் படிந்த செருப்போடு வீருவதால் உண்டாகும் அசுத்தங்களை எடுத்துக் காட்டவேண்டும். இதுவும் ஒரு வழியில் பிள்ளைகள் செய்வதை தடுப்பதுபோலாகும்; ஆனால் இப்படி இனிமையாகச் செய்வதனால், உபாத்தியாயர் தாங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் தடுப்பதாக எண்ணிக்கொள்ள மாட்டார்கள்.

உபாத்தியர்யர் பிள்ளைகளிடத்தில் நடந்து கொள்ளும்போது, அவர்கள் அனுபவமில்லாதவர்களென்றும், யாதொன்றும் தெரியாதவர்களென்றும் மனத்தில் வைக்கவேண்டும். ஆதலால் அவர்கள் அறியாமையாற் செய்யும் செயல்களை பொறுத்துக் கொண்டு, நாளாவட்டத்தில் அனுபவத்தில் தங்கள். செயல்களின் குற்றங்களை அறியும்படி, உபாத்தியாயர் நடத்திக் காட்டவேண்டும்.

பத்திராதிபர்.

# GENERAL CLEANLINESS

## சுசி

(134 - ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

44. மலையாளம் முதலிய சில ஊர்களிலுள்ள ஜனங்களுக்கு அதிகமாக வெற்றிலையும் புகையிலையும் மெல்லும் வழக்கம் இருக்கின்றது. அவர்கள் அடிக்கடி எச்சில் உமிழ வேண்டியது அவசியமாகின்றது. அந்த ஊர்களிலுள்ள கச்சேரிகளையும் பலர் கூடத்தக்க கட்டடங்களையும் பார்த்தால், அவைகளைச் சுற்றிலும் சிவப்புப்பட்டை தீர்ந்தாற்போல இரண்டு மூன்றடி கனத்திற்குத் தம்பலச் சேஷமும் எச்சிலும் படிந்திருக்கும். அந்த இடங்களுக்கு வருகிறவர்கள் எல்லாரும் வெற்றிலையையும் புகையிலையையும் மென்று அடிக்கடி உமிழ்வதனால் அவ்வளவு கனமாகக் கறை படிந்திருக்கும். அந்தச் சிவப்புக் கறையைக் காணுவதற்குக் கண் கூசும்; வெற்றிலையும புகையிலையும் போடுகிறவர்கள் மேற் சொல்லிய விதமாக எச்சில் மற்றவர்களுக்குத் தீமை செய்யும் என்பதைத் தெரிந்து ஆரோக்கியமான ஆசாரத்தைக் கைகொள்வார்களாக.

45. எச்சில் உமிழ்வதற்காக அநேகர் காளாஞ்சிகளை வைத்துக்கொள்ளுகிறார்கள். உமிழும் பொழுதெல்லாம் அவர்கள் காளாஞ்சி என்னும் அந்த வெண்கலப் பாத்திரத்திலேயே எச்சில் உமிழ்கிறார்கள். அந்தப் பாத்திரத்தை மேசையின் கீழாவது, கட்டிலின கீழாவது, ஒரு மூலையிலாவது, வைத்திருக்கிறார்கள்; ஒருநாளைக்கு ஒருதடவை எச்சிலைக் கொட்டிவிட்டுக் காளாஞ்சியைக் கழுவி வைக்கிறார்கள். எச்சிலை உமிழ்ந்து ஜனங்கள் நடமாடும் இடத்தில் நெடுங்காலம் வைத்திருப்பதும் தீமை பயக்கும் என்பதற்குச் சந்தேகம் உண்டோ?

46. கை நகங்களைக் கடிப்பது, விரலை வாயில் வைத்துக் கொள்வது, எழுதுகையில் பேனாக்கட்டையைப் பல்லில் இடுக்கிக் கொள்வது, கற்பலகையில் எழுதியதை அழிப்பதற்காக நக்குவது, ஈயலேகனி கருமையாய் எழுதும் பொருட்டு அதன் நுனியை நாவினால் நனைப்பது, தபால் தலைகளையும் உறைகளின் மூடி விளிம்புகளையும் ஒட்டுவதற்காக அவைகளை நாவினால் தடவி



ஈரமாக்குவது முதலிய வழக்கங்கள் ஐரோப்பிய அதிகாரிகளுடைய பேராதரவையும் மஹம்மதியப் பிரபுக்களுடைய பேராதரவையும் பெற்றிருந்தபோதிலும், குழந்தைத்தனமான வழக்கங்களென்றும், தீமை பயக்கத்தக்கவை யென்றும், ஆதலால் வெறுக்கத்தக்கவை யென்றும் நாம் சொல்லாமலே ஏற்படும்.

47. சாப்பிடுகையில் கையில் ஒட்டிக் கொள்கிற நெய்ப் பசையையும் எண்ணெய்ப் பசையையும் கொஞ்சம் வெள்ளைச் சர்க்கரையைப் போட்டுத் தேய்த்துக் கழுவிப் போக்கிவிடலாம். சாப்பிட்டுக் கைகழுவும் சமயத்தில் சிகைக்காயைத் தேடிக்கொண்டிருப்பது உசிதமாயிரா தென்று நினைக்கிறவர்கள் வெள்ளைச் சர்க்கரையைக் கொண்டு தம் கையைச் சுத்தி செய்து கொள்ளலாம். அப்படிக் கையைச் சுத்திசெய்யும் நோக்கங்கொண்டே, பக்ஷியங்கள் பலாஹாரங்கள் முதலியவைகளையெல்லாம் தின்ற பிறகு பாயசத்தைப் பரிமாறுவது வழக்கம்.

48. எதையேனும் வாயிற்போட்டு மென்று தின்றபிறகும், நீரைத் தவிர வேறு எதையேனும் உண்ட பிறகும் வாயை நன்றாய்க் கொப்புளித்துக் கழுவிச் சுத்திசெய்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், பிறகு நிதானமாய் உட்கார்ந்து, வாயின் மூலைகளிலும் பற்களின் சந்துகளிலும் சிக்கிக்கொண் டிருக்கும் வஸ்துசேஷங்களை நாவினால் தடவித் தேடி யெடுத்துத் துப்பவேண்டியதாகும். இந்த வழக்கம் அப்படிச் செய்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அருவருப்பைத் தரத்தக்கது; வேலை செய்கையில் இப்படி நாவினால் தடவித்தேடிக் கொண்டிருப்பது விகாரமான காரியம்; நாவினால் தடவித் தேடிக்கொண் டிருக்கையில் பேசுவதற்கு முயல்வது மற்றும் அதிக விகாரமாகும்.

49. நாற்றம் நிறைந்த இடத்தில் நாற்றந்தரும் வஸ்துவின் நுண்ணிய அணுக்கள் வாயு மண்டலத்தில் பரவி நிற்கின்றன. அந்த அணுக்கள் மேலும் மேலும் வாயு மண்டலத்தில் வந்து சேர்கின்றன. அவை நம்முடைய மூக்குக்குள்ளிருக்கும் ஜவ்வில் வந்து படிவதனால் நமக்கு நாற்றம் தோன்றுகின்றது. சாக்கடை, கக்கூசு, தோல்கிடங்கு, கவிச்சுக்கடை முதலிய இடங்களினண்டை போகும் பொழுது அங்கே வீசும் நாற்றம் பொறுக்கமாட்டாமல் ஜனங்கள் மூக்கை இறுகப் பிடித்துக்கொண்டு, வாயினால் மூச்சுவிடுவது வழக்கமா யிருக்கின்றது.

அப்படிச் செய்வது தவறு. மூக்கின் வழியாகக் காற்றை உட்கொள்கையில் மூக்கினுள்ள மயிரினாலும் மற்றுமுள்ள ஜவ்வுகளினாலும் அந்த வாயு ஒருவாறு வடிகட்டினாற்போலாகின்றது. மூக்கைப் பிடித்துக் கொண்டு வாயினால் வாயுவை உட்கொள்ளுவதனால் நாற்றந் தரும் அணுக்கள் நிறைந்த வாயுவை உள்ளபடியே உட்கொள்ளுகிறார்கள். இது பெருந் தீமையல்லவா? அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் செய்யத்தக்க உபாயம் என்னவெனில், துணியை நான்கு ஐந்தாக மடித்து மூக்கையும் வாயையும் மூடிக்கொண்டு மூச்சு விடுவதேயாம். அப்படிச் செய்வதனால், நாற்ற அணுக்கள் உள்ளே போகாமல் கூடியவரையில் தடுக்கலாம்.

50. நுண்ணிய கண்ணறைகளுள்ள வஸ்துக்கள் நாற்றத்தை எளிதில் இழுத்து நெடுநேரம் பதிந்து வைத்துக் கொள்ளும் தன்மையுடையவை. உதாரணமாக, உடம்பின்மீது அத்தரைப் பூசினால் அது சிறிதுநேரத்தில் ஆவியாய்ப் பறந்துபோம்; உடம்பில் வாசனை தங்காது. ஆனால் அதே அத்தரைத் துணியில் கொஞ்சம் போட்டுத் தேய்த்தால் அந்த வாசனை நீடித்திருக்கும்; சீக்கிரத்தில் அதைவிட்டு அற்றுப் போகாது. நல்ல வாசனை எப்படி பொருந்துகின்றதோ அப்படியே கெட்ட வாசனையும் பொருந்தும். ஆகையால், மலோபாதை தீர்த்துக் கொண்ட பிறகு ஸ்நானம் செய்வதற்கு அனுகூலமில்லாவிட்டால், அப்பொழுது உடுத்திருந்த ஆடையையாவது களைந்து எறிந்துவிட்டு வேறு ஆடை தரிக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது.

51. மலோபாதை தீர்த்துக்கொள்ளுகையில் மௌனமாயிருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. துர்க்கந்தமான அணுக்கள் வாயின் வழியாக உட்செல்லாதிருக்கும் பொருட்டும், எளிதில் சுத்தி செய்து கொள்வதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டுமே அந்த விதி ஏற்பட்டதாகும். அந்தக் காலத்தில் எச்சில் விழுங்குவதும் கூடாது. அசுத்தமான வேளையில் எதையேனும் விழுங்குவதற்கு விரும்பலாமா?

52. இனி மற்றவர்களுடன் இருக்கையில் நாம் கவனிக்க வேண்டிய சில்லறை விஷயங்கள் பல இருக்கின்றன. அவை வருமாறு :—



1. காதைக் குடைந்து குரும்பை எடுத்து மேஜையின் கீழாவது, ஆசனப் பலகையின் கீழாவது, சுவரின் மீதாவது தேய்க்காதே.

2. சத்தத்துடனாவது, சத்தமில்லாமலாவது மூக்கைச் சிந்திச் சளியை மேற்சொல்லிய இடங்களில் பூசாதே, தரைமீதும் எறியாதே. மூக்கை நோண்டி அழுக் கெடுத்தும் அப்படிச் செய்யாதே.

3. தலையையாவது தேகத்தில் மற்றெந்தப் பாகத்தையாவது சொறியாதே; சொறிந்த பிறகு விரல் நுனியை மோந்து பார்க்காதே.

4. உடம்பைத் தேய்த்து அழுக்கைத் திரட்டி எறியாதே.

5. உரத்துத் தும்மாதே.

6. உரத்து ஏப்பம் விடாதே; அது ஓயும் தருணத்தில் 'ஏப்பம்' என்று சொல்லாதே (சிலர் விளையாட்டாக அப்படிச் சொல்லுகிறார்கள். அது கெட்ட வழக்கம்).

7. வாய்கிழியக் கொட்டாவி விடாதே; கொட்டாவி விடும் பொழுது பேச முயலாதே.

8. தெருக்களில் வாயைத்திறந்துகொண்டு நில்லாதே.

9. புதியவர்களை உற்று நோக்காதே.

10. விரல்களைச் சொடுக்காதே, உடம்பில் எந்தப் பாகத்தையும் தட்டாதே; சத்தமாகும்படி நீரைக் கையினால் தட்டாதே.

11. விரல்களினால் கன்னத்தில் தாளம் போடாதே.

12. நகங்களை ஒன்றோடொன்று தேய்த்துச் சத்தஞ் செய்யாதே; உடம்பை முறுக்கிக்கொள்ளாதே; கைகால்களை நீட்டிக் கொண்டு கூவாதே.

13. கண்ணைத் துடைத்துக் கொள்ளுகையில் முகத்தைக் கோணலாய் வைத்துக் கொண்டு விகாரங் காட்டாதே.

14. பேசுகையில் வார்த்தைகளை விழுங்காதே.

15. உரத்துச் சீழ்க்கை (Whistling) போடாதே.

16. காறி உமிழாதே.

17. மற்றவர்களுக்கு மத்தியிலிருக்கும் பொழுது கால்களை நீட்டாதே; மற்றவர்கள் உட்கார்ந்திருக்கையில் படுத்திராதே.

18. பெரியவர்களாவது புதியவர்களாவது இருக்கையில் பாதத்தை அசைத்துக்கொண் டிராதே. சாதாரணமாய் நாற்காலியின்மீது உட்கார்ந்திருக்கையில் தொடையை அசைத்துக் கொண் டிராதே.

19. மற்றவர்கள் இருக்கையில், முக்கியமாய்ப் புதியவர்களாவது பெரியவர்களாவது இருக்கையில், வேலைசெய்யும் வேளையில், வைதிகச்சடங்குகள் செய்யுமளவில், உடம்பைக் குலுக்காதே, எதையும் தின்னாதே, குடிக்காதே, வெற்றிலை மெல்லாதே, சுருட்டுக் குடிக்காதே, மூக்குப்பொடி போடாதே, சொந்த சௌக்கியத்தையும் வழக்கத்தையும் அனுசரித்து எந்தக் காரியமுஞ் செய்யாதே.

20. மற்றவர்களுடைய முன்னிலையில் தலைமயிரை விரல்களினால் ஆற்றிப் பறக்கவிடாதே; அதில் தடவிய வாசனைத்திரவியமாவது, சூட்டிய மலராவது பரிமளிக்கின்றதா வென மயிரை மோந்து பார்க்காதே.

21. பீடப் பலகைகளையாவது, மற்றுமுள்ள தட்டுமுட்டுச் சாமான்களையாவது இடம் பெயர்த்து எடுத்து வைக்காதே.

22. மேஜையின் மீது தட்டித் தாளம் போடாதே.

23. விளக்குத் திரியின் நுனியைக் கையினால் கத்தரித்து அந்த எண்ணெய்ப் பசையைத் தலையிலாவது, சுவரிலாவது, வேறு சாமான்களின் மீதாவது துடைக்காதே.

24. வெற்றிலை போட்டுக் கொண்டு மிகுந்த சுண்ணாம்பைச் சுவரிலாவது, மற்றெதன் மீதாவது பூசாதே.

25. சுவர்களைச் சுரண்டாதே; புத்தகங்களில் பேனாவினாலாவது பென்ஸிலினாலாவது கீறாதே.

மேற் சொல்லியவை முதலான கெட்ட வழக்கங்கள் இன்னும் அனேகம் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் அவரவர்களே எண்ணிப் பார்த்துத் தவிர்க்க வேண்டும்.

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of the 'Arya,' Madras.*



# SCHOOL EXCURSION

## உல்லாச சஞ்சாரம்

(முன்தொடர்ச்சி பக்கம்- 120)

### கவர்ன்மென்ட்டு டிரெயினிங் ஸ்கூல் திரிசிராப்பள்ளி நொண்டிச் சிந்து.

புதனன்றுமே நமக்கு — கல்வி நல்கும்
* போதகவாசிரிய நாதரனுப்ப
குதிரையின் வண்டியேறி — யாவருங்
குதூகல முடன் புதுச்சேரி வந்து (15)

கிருஷ்ணசாமிபிள்ளை யென்னும் — குணம் படைத்த
கீர்த்திமான் சத்திரத்தில் நேர்த்தியுடனே
அஷ்டதிசை யெங்கும் புகழ — ஜலம் பெருகும்
ஆர்ட்டீ ஸியன்வேல் லென்பதையும் (16)

பார்த்துவிட்டு நாங்களுமே — போஜனம்
பண்ணியிளைப் பாறியுடன் எண்ணி யெழுந்து
நேர்த்தி யுடனே யங்கு — அமைந் திருந்த
நெசவு யந்திரசாலை வசதிய தாம் (17)

வஸ்திரங்கள் நெய்யுமிடம் — சென்று வெளி
வாயலுத்தி யோகஸ்தரை நேயமுங் கொண்டு
சத்தமது கோஷிக்கும் — சாலையின்
தலைவருத் திரவுபெற்று மலைவின்றியே (18)

ஆதியிற் பஞ்சாக — அமைந்த தன்பின்
அற்புத நூலாய்ப்பிரித்து விற்பன மதாய்
ஓத முடியாத — வுலகத்தில்
உன்னித மிகுந்தசித்ர வர்ணத் தினுசும் (19)

எங்குமிலை கிரேட்பிரிட்டன் — பிரிவான
இங்க்லந்து தேசமதில் ஏற்றுமதிசெய்
மங்காத சீமைத்துமணியும் — சாயத்தொழிலில்
வல்லவர்கள் செய்தமைத்த வுல்லன் முதலாய் (20)

* சந்திரசேகரம் பிள்ளை.

மாஸி நதிக்கரையில் — உள்ள
மான்சேஸ்ட்டர் நகரத்தின் நினைவு வந்து
நிர்ணயமான நீதியை — மிகப்படைத்த
நீதிமான் ஜார்ஜ்துரை சேதிபுகழ்ந்து (21)

களிப்புட னதைவிட்டு — பிரான்சு
கார்டினைச் சுற்றிப் பார்த்ததிலே
தளிருடனே விளங்கும் — சீமைத்
தாவர முள்ளதெல்லாம் மேவுறவே (22)

அவ்விடத்தில் வேலைசெய்யும் — சிறுவர்க
ளாடை யொருவிதமாஞ் சோடினையும்
புவியோர் காண்பாராகில் — அவர்கள்
புத்ரகைதிகளென மெத்த நினைப்பார் (23)

கடற்கரை யணுகியுமே — கஸ்டம்ஸின்
கணக்குக் கிளர்க்கைக் கண்டு அவரிடமே
தடையின்றி யுத்தரவும் — பெற்று மெள்ள
தயங்காம லார்பரி னருகிற் சென்று (24)

கூலியுமே கொடுத்து — படகினிற்
கொஞ்சமுங் கலங்காத நெஞ்சமுடனே
நீலி மயேசுவரியின் — நாயகனும்
நிர்மலனை யாம் துதித்து மர்மமுடனே (25)

படகினிற் செல்லும்போது — யாவரும்
பண்புடன் தலையசைத்துத் தெம்புகுலைய
தடுமாற்றங் கொள்ளுதெனவும் — என்னால்
தாங்க முடியாதெனவும் நாங்கள்சிலரும் (26)

கண்டவாறு பேசிக்கொண்டு — யாவரும்
கப்பல்தனி லேறியே காப்ட்டனுடைய
விண்ணுலக முந்தோற்றும் — அறைக்கிரீன்
வீச்சின் மணியையும் காம்பசையும் (27)

க்ரோணு மீட்டரையும் — கப்பலைக்
குறிப்புடன் நடத்தவே பாஸ்ட்டு சுலோ
தருணத்தில் சரியாக — நடத்தவும்
தயாரித் திருக்கும் யந்திரங்களும் (28)



மூட்டைக ளேற்றுவதும் — முதலிய
முக்கிய விசேஷங்களை முற்றுமுணர்ந்து
தாட்டீக முடன் யாரும் — படகில்
தட்டுத் தடுமாறுதல் மட்டுப்படவே (29)

இறங்கியே வரும்போது — சிற்சிலர்
இருந்த இடத்தைவிட்டு வருந்துவாரும்
புறத்திலே யிருந்தவரில் — சிலர்சிலர்
புத்திமிகக் கலங்கி பித்தஞ்சுழற்ற (30)

ஹார்பரி னருகினிலே — படகு
அடைந்துமே யாவரும் இறங்கும்போது
சீருள்ள அலையினது — வேகத்தினால்
சிதறியே மோதும்போ தொருவரது (31)

கையினி லிருவிரலும் — ஹார்பரின்
கம்பமதில் மோதி நிரம்பவேதனை
பையவே தாஙிறங்க — மணியும்
பண்புட னுறரை நண்புடன்கண்டு (32)

கனிவுடன் யாவருமே — சத்திரத்திற்
கடைவுடன் போகும் நடைவழியில்
துணிவுடன் பிரஞ்சுக்கும் — பிரட்டிஷுக்கும்
தொந்தமுடனே னடந்த சண்டைதனிலே (33)

தைரியமாக நின்று — யுத்தமதிற்
றயங்கா ததிர்த்துநின்ற டியூப்ளேயெனும்
துரையின் கற்சிலையுமே — பார்த்துவிட்டு
சூக்ஷ்மமாய் செய்தவர்புத்தி மாட்சிமையும் (34)

நனிமிகப் புகழ்ந்துகொண்டு — யாவரும்
நடந்துங் காயம்பட்டவர் தொடர்ந்துவர
துணிவுட னிருவரையும் — சிகிச்சைக்குத்
துணையா யழைத்துச்செல்லப் பணிவுடனே (35)

ஆஸ்பத்திரி யதிகாரி — அவருக்
கன்புடனே யுபசாரம் இன்புடன்செய்து
விசுவாசத் துடனாக — சிகிச்சைக்கு
வேண்டிய விதஞ்செய்ய மீண்டுமேவர (36)

பலரும் பயணமதாய் — சைதாப்பேட்டை
பட்டணம் போகவென்று எட்டரைமணி
சிலருடன் ஸ்டேஷன்வந்து — பார்த்ததில்
சேர்ந்ததொரு கூட்டமதில் நேர்ந்தயிருவர் (38)

அங்குவரத் தாமதித்ததால் — அன்று
அங்கேயே ஜாகையெனத் தங்கியிருந்தோம்
பங்கமிலா துரைக்கும் — வெளிச்சத்தில்
படுத்திருந்த வொருவன் நடுச்சாமத்தில் (39)

மூட்டைகளண்டையிலே — மெள்ளப்படுத்து
முந்தியவன் கையைநீட்டும் விந்தையுங்கண்டு
தீட்சண்யமுடனொருவர்
சீக்கிரத்தில் திருடனைத் தாக்கிப்பிடித்து (40)

(இன்னும் வரும்)

P. பரிமணப் பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர், போர்ட்டு கேர்ல்ஸ் ஸ்கூல்,
வாங்கல், கரூர் தாலுக்கா.

# TEMPERANCE

## மதுபான விலக்கு

'கள்ளுண்பான் குடிமை
உள்ளனபோலக் கெடும்' — திரிகடுகம்.

'அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்' ஆதலின் உண்டி, உடை, நடை முதலியவைகளில் மிதமாயிருத்தலே நலம். மீதூண் விரும்புவதும், சுத்த ஜலந் தவிர மற்றப் பானங்களை விரும்புவதும், நம்முடைய தேசத்தின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்பட்ட உடைகளைத் தவிர்த்து, வேறுவகை உடைகளை அனுசரிப்பதும், இயற்கை விதிகளுக்கு விரோதமாய் நடப்பதும் மிதமிஞ்சின செயல்களாம். செய்யவேண்டிய வேலைகளை மிதமாகச் செய்தால் பலனடையலாம்.



மிதமிஞ்சிச் செய்யும் நடவடிக்கைகளில் கள்ளுண்ணல் மிகவும் தீமையை விளைவிப்பதாகும். மதுபானமாவது கள், அபின், கஞ்சா, சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை உட்கொள்வதாம். மிக்க நாகரிகம் பரவியிருக்கிற இக்காலத்தில் மயக்கந்தரும் பானங்களைத் தண்ணீர்போல் முற்றும் வழங்குகிறார்கள்.

நாள் முழுதும் வேகா வெய்யிலில் பாடுபடுகிற ஏழைக் கூலிக்காரன் பொழுதுபட்டவுடனே தன் உழைப்பின் சிரமத்தை நீக்குவதற்காக கள்ளுண்ணுகிறான்; அவ்விதம் உண்ணாவிடில் அடுத்த நாள் வேலைசெய்ய அசக்தனாய் விடுவதாகக் காரணம் கூறுகிறான். இவ்வித தாபிப்பிராயத்தினால் பாமரர் பலர் இம் மதுவை அமிர்தமென்றே புகழ்ந்து உட்கொள்கிறார்கள்.

### மதுபானத்தினால் உண்டாகும் தீமைகள்.

I. தேக சௌக்கியம் கெடுதல் — (a) மதுபானஞ் செய்யும்போது களிப்பு உண்டாயினும், பின்னிட்டு அக்களிப்பு அழிந்துபோகும்; மூளை வரண்டிடும்; நெஞ்சு உலர்ந்திடும்; கண்ணுஞ் சிவந்திடும்; அறிவு கெட்டு நினைவு தடுமாறும்; உள்ளம் மயங்கும், வார்த்தை குன்றிடும். வாயும் நாறிடும். கருவி கரணங்கள் பலவீனமடையும்; நரம்பு தளர்ச்சியுறும்; அவதான சக்தி கெடும்.

பந்தயம் ஓடுகிறவர்கள் பந்தயத்தில் முன்னிட்டுப் போய் ஜயமடைவதற்காக, தங்கள் குதிரைகளுக்கு லாகிரி வஸ்துக்களைக் கொடுப்பதுண்டு. சாதாரணமாக 15 மைல் ஓடக்கூடிய குதிரை லாகிரி வஸ்துவினால் அதிகமாய் ஓடுகிறது. இயற்கையாக ஓடுகிற குதிரைக்கு லாகிரி வஸ்துக்கள் கொடுத்து பழக்கம் பண்ணுவதால், இயற்கைக்கு விரோதமாய் மிதமிஞ்சி ஓடுகிறது. வெகு நாளைக்கு உயிரோடிருக்கும் குதிரை மயக்க வஸ்துவினால் கருவிகள் கெட்டுப்போய் அகாலமரணமடைகிறது.

நம்முடைய தேகத்தின் உறுப்புகள் தமக்குரியவேலைகளைச் செய்யும்போது அளவிற்கு மிஞ்சி அலட்டினால் சீக்கிரம் கெட்டுப்போகின்றன. கடிகாரத்திற்கு அளவிற்கு மிஞ்சி சாவி கொடுத்தால் அது கெட்டுப்போகாதா! கடிகாரச் சக்கரங்கள் போலிருக்கும் நம்முடைய உறுப்புகளை மயக்கந்தரும் வஸ்துக்களினால் மிதமிஞ்சி அலட்டினால் அவை சீக்கிரம் பழுதடையும்

(*b*) மது பானத்தால் ஜீர்ணக் கருவிகள் கெட்டுப்போகும்; நீனிப்பை, கல்லீரல் முதலிய உறுப்புகள் இயற்கைக்கு விரோதமாய் அளவிற்கு மிஞ்சி உழைத்து, பிறகு தம் வேலைகளைச் சரிவரச்செய்ய முடியாமற்போகும். குலை நோய் குடியால் உண்டாகும் நோயே.

(*c*) இருதயத்திற்கும் இரத்த ஓட்ட உறுப்புகளுக்கும் தீங்கு நேரிடும். இருதயத்திற்குத் தசை நாருள்ள சுவருண்டு. இத்தசை நார் மதுபானத்தால் விரிந்து சுருங்குவது தாமதப்படும்.

(*d*) உடலின் உறுப்புகளைக் கெடச்செய்து, நீராவியாதியையுண்டாக்கி, அகாலமரணத்திற்குள்ளாக்கும். இவை யெல்லாம் குடியால் வரும் கேடுகளே.

II. ஓயாக் குடிவெறியால் குடும்பத்தில் உள்ள நேசமும் பாசமும் அற்றுவிடும். தொலையா விசாரம் ஏற்படும். கூடும் பொருளை அழித்திடும்; மிதமிஞ்சின கடன்கள் ஏற்படும். பெண்டு பிள்ளைகள் எல்லாம் தெருவில் அலையும்படி ஓட்டாண்டியாக்கும். அழியாத செல்வங்கள் அழிந்துபோகும். தகப்பனைப்போல் பிள்ளையும் குடியிற் பழக ஆரம்பிப்பான். தொத்து வியாதிபோல், இக் கொடிய பழக்கம் பிள்ளைகளையும் மற்றவர்களையும் பற்றுகிறது.

III. குடியால் தான் செயலற்று போவதால், தன் நாட்டிற்கும் பிரயோஜனமற்றவனாகிறான். எந்த வேலையிலும் துப்புக்கெட்டவனாகிறான். ஆண்மை யற்றுப்போகிறது. தன் இனத்தாருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாது விடுகிறான். மானம் போய்விடும். பஞ்சையைப்போல் எங்கும் திரியச் செய்யும். எல்லோரும் குடிகாரனென்று பங்கமாய்ச் சொல்லுவார்கள். வாய்ச் சண்டையில் ஆரம்பித்து, கைச் சண்டைக்குக் கொண்டுவரும். அக்கம்பக்கத்தாருக்கு தொந்தரவு உண்டாக்கும். பெண்டு பிள்ளைகளை அடிக்கச் செய்யும். சபையிலுள்ள பேர்களெல்லாந் தலை குனியச் செய்யும். குடியனை எவரும் நம்பார்; வாங்கியதை மோசஞ் செய்வான். சீச்சீயென்று சீரழிவு அடைவான். கொலையும், களவும், பொய்யும் விபசாரமும் குடிகாரனிடம் குடிபுகும்.



## மதுபானம் ஏன் செய்கிறார்கள்

I. களிப்பும் உற்சாகமும்பெற விரும்பி முதலில் சிறுகச் சிறுக மதுபானத்தைக் கையாடுகிறார்கள். சிலர் அதிக வேலையாலும் மன முயற்சியாலும் தளர்வு அடைந்தகாலத்தில் சிரமம் நீங்குவதற்காக சிறிது உட்கொள்ளுகிறார்கள். மதுபானம் சிறிது நேரந்தான் உற்சாகத்தைக் கொடுக்கும். ஒரு வேலையைத் தொடர்ந்து செய்ய வொட்டாது; மன முயற்சி குன்றும். வேறு சிலர் தங்களுடைய மனக்கவலையும் துன்பத்தையும் நீக்கிக்கொள்வதற்காகச் இதை சாப்பிடுகிறார்கள். வேறுவேலை யில்லாதவர்களும் சோம்பேறிகளும் குடிப்பதையே பெரிய தொழிலாகக் கொள்ளுகிறார்கள். கள்ளுண்பவரோடு பழகினால் குடிக்கச்செய்யும்; சிலர் இலவசமாய் கிடைக்கும்போது முதலில் அருந்துகிறார்கள். சினேகிதர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சிலர் மதுபானத்திற்கு உட்படுகிறார்கள். தொடங்குங்கால் இன்பமாயிருப்பினும், பின்னிட்டுத் துன்பமே தரும். மற்றுஞ் சிலர் மருந்துக்காகவென்று மதுவை உட்கொள்ளுகிறார்கள். தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் விடாதன்றோ! முதலில் ஏற்பட்ட பழக்கம் வேரூன்றி நிலைத்துவிடும். எவ்விதத் துரப்பியாசத்தையும் நாளாவட்டத்தில் நீக்கிவிடலாம்; மதுபானம் செய்யும் பழக்கமோ சுடுகாடுபோகிறவரைக்கும் நீங்காது.

## மதுபானத்தை எப்படி விலக்குவது

கள்ளுண்போருடைய உறவை அறவே நீக்கல்வேண்டும். பாடுபட்டு உழைப்பதிலேயே கருத்தாயிருப்பவருக்கு இத் துரப்பியாசம் உண்டாகாது. நான் செய்யும் கருமத்தில் கண்ணாயிருப்பவருக்கு மதுபானத்தில் இச்சை உண்டாகாது. சாப்பாட்டு ராமனுக்கும் சோம்பேறிக்குமே இத் துரப்பியாசம் சீக்கிரம் உண்டாகும்.

அதிக வேலையினால் மனச்சோர்வும் களைப்பும் உற்றகாலத்தில் உற்சாகமான விளையாட்டும் விநோதமான காலட்சேபமும் மிக்க பயனைத்தரும். ஆதலால் சாராயத்தை உட்கொள்ள வேண்டுவதில்லை. நல்ல சிநேகிதர்களின் உறவும், பிரயோசன மற்ற தொழில்களும் மதுபானத்திற்கு விரோதம். ஆதலால் உற்சாகத்தை உண்டாக்குவதற்கு லாகிரி வஸ்துக்களை உட்கொள்வது விஷத்தன்மை யுடையது.

ஜன நெருக்கமுள்ள இடத்தில் குடியிருப்பதும், நன்றாகச் சமைக்காத ஆகாரத்தை சாப்பிடுவதும், மதுபானத்திற்கு அனுகூலமாயிருக்கும். ஏகாந்தமான நற்பழக்கமுள்ள இடத்தில் வசிப்பதினாலும், சுத்தமான நல்ல ஆகாரத்தை மிதமாய் சாப்பிடுவதினாலும், நற்குண நற்செய்கையுள்ள சினேகிதர்களோடு பழகுவதாலும், நன்றாய் வருந்தி உழைத்துச் சமாதானத்தோடு வாழ்நாளை கழிப்பதினாலும் மதுபானத்தைத் தடுத்துவிடலாம்.

### மிதமிஞ்சின பழக்கங்கள்

(1) மிதமாக அன்னபானாதிகள் அருந்தவேண்டும். விலாப் புடைக்க உண்பதுந் தவறு. சுத்தமான பானம் ஜலம் ஒன்றே, இயற்கையாயில்லாத சோடா, காப்பி முதலிய பானங்களை அருந்துவது மிதமிஞ்சின பழக்கங்களே. வயிறுதாரிக்கு எப்போதும் அஜீர்ணம் குடிகொள்ளும். அநேக கனவான்கள் யாதொரு செயலுமின்றி வீட்டிலேயே யிருப்பதால், இவ்வித மிதமிஞ்சின பழக்கங்களுக்கு உட்பட்டு, வைத்தியர்களுக்கு ஓயாத வேலை கொடுக்கிறார்கள்.

(2) ஓய்வின்றி இடைவிடாமல் உழைப்பதும் மிதமிஞ்சின செய்கையாம். தேகப் பயிற்சியிலுங்கூட மிதமிருக்கவேண்டும். சில மாணாக்கர்கள் தேகப் பயிற்சியிலே இடைவிடாது காலங் கழிப்பதால், மனோ விருத்தியில்லாமல் கெட்டுப் போகிறார்கள். வேறு சிலர் மனம் வருந்தி புஸ்தகமும் கையுமாயிருப்பதால், தேகம் பலவீனமடைந்து வருத்தமடைகிறார்கள். வாசிக்கவேண்டிய காலத்தில் வாசிப்பதும், விளையாடவேண்டிய காலத்தில் விளையாடுவதும் மிதமுள்ள செய்கைகளாம்; அப்படிச் செய்தால் மிகவும் நலமுண்டாகும். தூக்கத்திலும் கும்பகர்ணனைப்போல் இருப்பது மிதமிஞ்சின செய்கையே. தூக்கம் வேண்டுந்தான்; ஆனால் வரம்பு கடந்து தூங்கினால் சோம்பலும், வியாதியும் வறுமையும் பிடிக்கும்.

(3) உடுத்துவதிலும் மிதம் வேண்டும். நம்முடைய தேகத்திற்கு அனுகூலமான சுத்த உடையை உடுத்தலே நலம். விலையுயர்ந்த உடுப்புகளை உடுத்தலானது பணத்தை வீண் வியயஞ் செய்வதாகும்; மிதமிஞ்சி உடுப்பதால் கடனும் துன்பமும் உண்டாகும்.



(4) நாவடக்கமே நல்லொழுக்கங்களில் சிறந்ததாகும். வெற்றுரையும் வீண் வார்த்தையும் மிதமிஞ்சின செய்கைகளே.

(5) வரவுக்குத் தக்க செலவு செய்வது மிதமான செயல்களில் ஒன்று. புத்திசாலியாக நடந்துகொள்வதனால் மிதமிஞ்சின செயல்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

M. S. SABHAPATI MUDALIAR,
*Govt. Panchama Training School,*
*Madras.*

## TIT - BITS

## விநோதக் கூற்றுக்கள்

(முன்தொடர்ச்சி பக்கம் - 144)

### பேயும் நடுங்கும் பெண்

7. மந்திரி மகளைவிட்டகன்ற பேய் சிலமாதம் கழித்து அந் நகரத்தை யாளும் மன்னவன் அருமந்த மகளைத் தொடர்ந்தது. பேய் பிடித்த உடனே அவள் குணம் முற்றும் மாறிப்போயிற்று. பலரும் அருவருக்கத்தக்க செய்கைகளைச் செய்யத் தொடங்கினாள். சந்நியாசியின் புகழ் அரசனுடைய காதிற்கும் எட்டி யிருந்தமையின் மன்னவன் தனது ஏவலாளர்களை அழைத்து சந்நியாசியை அழைத்துவரும்படி கட்டளையிட்டான். பேய், முதலில் சொல்லியது ஞாபகத்திற்குவர, சந்நியாசி வர இயலாதென்று சொன்னான். அளவிறந்த பொருளும், அதிகாரமும் கொடுப்பதாக மன்னவன் ஏவலாளர்கள் சொன்னார்கள். அதற்கும் சந்நியாசி இணங்கவில்லை. கடைசியாகப் பார்த்திபனுக்கே கோபம் உண்டாயிற்று. 'சந்நியாசி இன்னும் வரமாட்டேன் என்று பிடிவாதம் செய்வானாயின், அவனுடைய தலையைவெட்டிவிடுங்கள்' என்று காவலாளிகட்கு ஆக்கினை கொடுத்து சந்நியாசியினிடம் மீட்டும் அனுப்பினான். இந்தக் கொடிய கட்டளையைக் கேட்ட சந்நியாசி போகாமல் என்ன செய்வான்! போகும் வழியில் எவ்வாறு பேயினிடத்தினின்றும் தப்பித்துக்கொள்ளலாம் என்று பலவாறாகச்

சிந்தித்துக் கொண்டே சென்றான். அரசன் அரண்மனையை யடைந்து மன்னவன் மகளைப் பூட்டி வைத்திருக்கும் அறையண்டைச் சென்றான். சந்நியாசியைக் கண்டதும் பேய் கோபத்துடன், 'முழுமூடா! உன்னுடைய வாக்குத்தத்தத்தை மறந்து யான் இருக்கும் இடத்திற்கு ஏன் வந்தனை? பார் இப்போது உன்னைக் கொல்லுகிறேன்' என்று சொல்லிற்று. சந்நியாசி, 'நண்பனே, யான் உன்னை வருத்துவதற்காக இங்கே வரவில்லை. நீ என்னிடம் ஆதியில் சொல்லியது ஞாபகமிருக்கின்றது. நான் உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்ல வந்திருக்கின்றேன்; அதை எல்லோர் முன்னிலையிலும் சொல்லப்படாது. உனக்கு மட்டும் தெரிய வேண்டிய விஷயம்; நீ தயவு செய்து கேட்டுக் கொள்வையாயின் யான் இப்போதே போய்விடுவேன்' என்று சொன்னான். பேய் வெகு ஆச்சரியத்துடன் அந்த சமாசாரம் என்ன வென்றது. சந்நியாசி, பேயின் காதருகே சென்று, 'என் அன்பார்ந்த நண்பனே! உன்னுடைய உதவியினாலன்றோ யான் உன்னத பதவியிலிருக்கின்றேன். அதற்கு ஆபத்து வந்திருக்கின்றது; நீயும் நானும் இவ்விடத்தை விட்டு உடனே போகவேண்டும். என்னுடைய மனைவி நம்மிருவரையும் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள், என்ன செய்வேன்! என்ன செய்வேன்! அவள் இப்போது அரண்மனை வாயிலை அடைந்திருக்கவும் கூடும். சிறிது நேரத்திற்கெல்லாம் இவ்விடம் வருவாள்' என்று அழுதுகொண்டே சொன்னான். 'இவ்விடத்திற்கும் என்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாளா! நான் போகிறேன், கதவைத் திற, சுவர்களை இடி' என்று சொல்லிக்கொண்டே வெளியே சென்றது. அறையின் கதவு படாரென்று திறந்தது. சில சுவர்கள் எல்லாம் இடிந்து விழுந்தன. பேயும் ராஜ குமாரத்தியை விட்டகன்றது. பைத்தியக்கார சந்நியாசியை எல்லோரும் வியந்து கொண்டாடினார்கள். அரசனுக்கு அளவிறந்த சந்தோஷம் உண்டாயிற்று. தன் மகளைப் போலிச் சந்நியாசிக்கு மணஞ் செய்வித்து தன்னுடைய அரசாட்சியையும் அவன் வசமாக்கிவிட்டான். சந்நியாசியும் சுகமாய்க் காலங்கழித்து வந்தான். பேயும் அவனை வந்து உபத்திரவம் செய்யாதொழிந்தது.

ஒரு தமிழ்ப் புலவர்.



# PRACTICAL GEOMETRY

## க்ஷேத்திர கணிதம்

(vol. 10—212 பக்கம் தொடர்ச்சி.)

### II வது வகுப்பு.

I. அளவுக்கோல் அமைப்பும் உபயோகமும் —

உபகரணங்கள் — அளவுக்கோல், கரும்பலகை, கயிறு, etc.

(a) உபாத்தியாயர் பிள்ளைகளுள் ஒருவனைப் பள்ளிக்கூட அறையின் நீளத்தை காலடியால் அளக்கச் செய்து, அதன் நீளத்தை குறித்துக் கொள்ளச் செய்க.

(b) அதே நீளத்தை உபாத்தியாயர் மறுபடியும் தம் காலால் அளந்து அதையும் கரும்பலகையில் குறிக்கச் செய்து, முன் மாணாக்கன் அளந்ததற்குக் குறைவாகவே யிருக்கும் என்பதையும் நிரூபிக்க.

(c) அதையே மறுபடியும் ஓர் அடிக்கோலால் அளந்தால் உபாத்தியாயர் அளந்ததைவிடக் குறைவாகவே இருக்கும் என்பதையும் பிரத்யக்ஷமாய் நிரூபித்துக் காண்பிக்க.

(d) அளவானது குறிப்பானதாக இல்லாமற் போனால், வியாபாரத்தில் வாங்கிக்கொள்வதற்கு ஓர் அளவும் கொடுப்பதற்கு மற்றோர் அளவும் உபயோகித்து மோசத்திற்கு இடம் உண்டாகும். ஆகையால் எந்த வஸ்துவின் நீளம், அகலம், உயரம் முதலியவை அளந்தாலும் குறிப்பானதாயும், மாறக்கூடாததாயு மிருக்கவேண்டியது அவசியம் என்பதை மாணாக்கர்களிடம் வருவிக்க.

(e) இதை உத்தேசித்துத் தான், சர்க்காரார் எங்கும் ஒரே அளவாய் ஒரு ஜாதியடி நீளத்தை குறிக்கும் படியாக ஒரு கோல் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அக் கோலைத்தான் "ஜாதியடிக்கோல்" என்று சொல்லுகிறோம் என்பதைச் சொல்லி, ஒரு அடிக்கோலை (Foot-rule) காண்பிக்கவும்.

(f) அந்தக் கோல் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை வருவித்து, அந்தப் பாகங்கள்தான் அங்குலத்தைக் குறிக்கக்கூடியது என்பதைப் போதிக்க.

(g) பிறகு, அந்தக் கோலானது எத்தனை பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கச் செய்து, அதில் 12 பாகங்களிருப்பதால், 12 அங்குலங்கள் கொண்டதுதான் ஒரு ஜாதி யடி என்பதை மாணாக்கர்களின் மொழியால் வருவிக்க.

(h) மறுபடியும், ஒவ்வொரு அங்குலமும் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பது அங்குலத்திற்குக் கீழ்ப்பட்ட அளவைக் குறிக்க ஸாதகமாய் இருக்கிறது என்பதைப் போதிக்க.

(i) இவ்விதமான அளவைக் கொண்டு வஸ்துக்களின் நீளம், அகலம், உயரம் முதலியவற்றைக் கணக்கிடுகிறார்கள் என்பதைப் போதிக்க.

(j) ஒரு அறையின் நீளம் 10 அடி என்று சொன்னால் ஜாதி யடிக்கோலால் 10 அடியென்று சொல்லுகிறது என்பதையும் போதிக்க.

II. நேர்கோட்டை அமைக்கும் விதம் —

(a) ஒரு அடிக்கோலைக் கொண்டாவது அல்லது ரூல் தடியைக் கொண்டாவது கரும்பலகையில் ஒரு கோடு வரையச் செய்க.

(b) உடனே அதன் இருநுனிகளிலும் A B என்ற எழுத்துகளைப் போடச் செய்க.

(c) பிறகு, கரும்பலகையில் வரைந்திருக்கும் கோட்டின் இரு நுனிகளிலுமுள்ள எழுத்தைக் கொண்டு A B என்ற கோடு என்றாவது B A என்ற கோடு என்றாவது வாசிக்கலாம் என்பதைப் போதிக்க.

III. நீள அளவு —

(a) A————————B என்ற கோட்டைக் கரும்பலகையில் வரைந்து இதன் நீளத்தை அறிவதற்கு இந்தக் கோட்டின்மீது அடிக்கோலை வைத்து எத்தனை அங்குலம் இருக்கிறது என்பதைப் பார்க்கச் செய்க.

(b) உடனே இதைவிடச் சற்றே பெரிதாய் ஒரு கோடு கரும்பலகையில் மாணாக்கர்களை வரையச் செய்து, இந்தக் கோட்டின்மீதும் அடிக்கோலை வைத்து அளக்கச் செய்து முழு அங்குலத்திற்கு மேல் எத்தனை பாகங்க ளிருக்கின்றன வென்பதை வருவிக்க.



(c) அப்படி முழு அங்குலத்திற்கு மேல்பட்ட பாகத்தை தசாம்சத்தில் குறிக்கச் செய்க அல்லது பின்னங்களாகக் குறிக்கச்செய்க.

(d) இப்படி அளப்பதில் அடிக்கோலைக் கோட்டுக்குச் சமீபத்தில் வைத்து, சரியாய் கவனித்து அளக்க வேண்டும். இல்லாவிடின் அளப்பது பிசகாய் போகும் என்பதை நிரூபிக்க.

## மாதிரிக் கணக்கு

(a) ஏ———————பீ என்பதை அளந்து குறிக்க, இதன் நீளம் = 2 அங்.

(b) ஏ————————பீ என்பதை அளக்க, இதன் நீளம் = 2·5 அங். அல்லது $2\frac{5}{10}$ அங்குலம்.

அப்பியாஸம் —

1. கீழே குறித்திருக்கும் ஏ. பீ. - பி. ஸி. - ஸி. டி. புள்ளிகளுக்கு மத்தியி லிருக்கும் தூரத்தை அங்குலத்தில் குறிக்க.

ஏ . பி . ஸி . டி .

2. அடியிற் கண்ட கோட்டை அளந்து சொல்லுக :—

A————————B

C——————————D

3. A. B. - C. D. என்ற கோடுகளின் நீளத்தை அளந்து கூட்டி E. F. என்ற கோட்டின் நீளத்தை அளந்து கழிக்க மீதம் எவ்வளவு?

A————B C————D E————F

G. NARAYANASWAMY IYER,
*S. E. S. Teacher,*
*Vallathirakottai.*

# LESSONS FROM SIMPLE NATURAL PHENOMENA — THE SPRING

## ஊற்று

### I. Surface of the Land —

(*a*) பூமியானது சில விடங்களில் மேடாயும், சில விடங்களில் பள்ளமாயும், சில விடங்களில் சமமாயு மிருக்கின்றன. (*b*) பள்ளமாயிருக்குமிடம் பள்ளத்தாக்கு என்றும், சமமாயிருக்குமிடம் சமபூமி அல்லது சமவெளி யென்றும், மேடாயிருக்குமிடம் குன்று அல்லது மலை என்றும் சொல்லப்படும்.

### II. What the ground is made of —

(*a*) இவ்வாறு மேடு, பள்ளம், சமநிலம் என இருக்கும் பூமி (தரை) கருமணல், மணல், பருமணல், சாக்கு, சிலேட்டு, களி மண் ஆகிய பல வஸ்துக்களாலானது (*b*) இவ்வஸ்துக்கள் படுக்கைவிரித்தது போல படைபடையா யிருக்குமேயன்றி குவியல் குவியலா யிராது. தவிரவும் மேற்படி படைகள் சேர்ந்து சேர்ந்து எங்கு மிருக்கும் என்பதல்ல. சேர்ந்தும் தனித்து மிருப்பதுமுண்டு.

### III. Nature of the soil —

(*a*) களிமண், கற்பாறை, சிலேட்டு முதலியன துவாரமில்லாதது. தண்ணீரை ஒழுகவிடாதது. மணல், பருமணல், சாக்கு, கருமணல் முதலியன துவாரமுள்ளது. தண்ணீரை ஒழுக விடுந் தன்மை யுள்ளது. (*b*) தவிரவும் துவாரமுள்ள படைகளாகிய கருமணல், மணல், பருமணல், சாக்கு முதலியன் தண்ணீரைத் தன் வழியாகச் செல்ல விடும்பொழுது அத் தண்ணீரிலுள்ள அசுத்தம் முழுமையும் நீக்கி, சுத்த ஜலமாக்கி விடுகின்றன.

### IV. About the rain —

(1) குளம், குட்டை, ஆறு, வாய்க்கால், சமுத்திரம் முதலிய நீர்நிலைகளிலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தால் ஆவியாகமாறி, மேலே சென்று, குளிர்ந்த காற்றுப்பட்டு மேகமாக மாறி, பின்னும் அதிகமான குளிர்ச்சியைப் பெற மழையாக பூமியில் வருஷிக்கின்றது. (2) குன்றுகளும் மலைகளும் சாதாரணதரை



(பரவலாயிருப்பது) யினும் அதிக குளிர்ச்சி யுள்ளதாயும், உன்னதமாயு மிருப்பதால் மழை பரவல் தரையினும் மலையின் மேலும் குன்றின்மேலும் அதிகமாகப் பெய்கின்றது. (3) மழைஜலம் பூமியில் விழுந்ததும் அதில் கொஞ்ச ஜலம் மறுபடியும் நீராவியாகப் பரிணமித்து மேலே செல்லுகின்றது. பின்னும் சிறிது நீர் வாய்க்கால், குளம், ஆறு முதலிய நீர்நிலைகளை அடைகின்றது. மற்றும் சில பூமிக்குள் சுவறிவிடுகின்றன.




### V. Formation of spring —

(*a*) பூமிக்குள் சுவறும் மழைஜலம் கருமண், மணல், பருமணல், சாக்கு முதலிய துவாரமுள்ள படைகளின் வழியாய் நுழைந்துபோய் களிமண், சிலேட்டு, கற்பாறை முதலிய ஏதேனும் துவாரமில்லாத ஓர் படையை அடைந்ததும் அப்புறம் கீழ் செல்ல முடியாமல் துவாரமுள்ள படை துவாரமில்லாப்படை இவ்விரண்டுக்கு மிடையில் நின்றுவிடுகின்றது. (*b*) பின் அது (ஜலம்) அங்கு நிரம்பி, இருக்க அங்கு இடமில்லையெனக் கண்டதும் முன் வந்த துவாரமுள்ள மணல், பருமணல் சாக்கு முதலியவற்றில் எதெது இருக்கின்றதோ அப்படைகளின் வழியாய் வழி செய்துகொண்டு மறுபடியும் குமிழிகளாக மேலே (வெளியே) வருகின்றது. இவ்வாறு தரையிலிருந்து கிளம்புகிற ஜலம் ஊற்று ஜலம் எனப்படும்.

### VI. Nature of spring water —

(*a*) பொதுவாய் ஊற்றுத் தண்ணீர் மழை அதிகமாய்ப் பெய்யுங்காலத்தில் அதிகமாயும், மழையில்லாக் காலத்தில் குறைந்தும் ஊறவோ அல்லது இல்லாமலே போகவோ ஆகும். என்றாலும் சில ஊற்றுக்கள் மழை யில்லாக் காலத்திலும் நன்றாய் ஊறும், வற்றவே வற்றாது. (*b*) தவிரவும் ஊற்றுத் தண்ணீர் துவாரமுள்ள வடிகட்டும் பொருள்களாகிய மணல், பருமணல்

முதலிய படைகளின் வழியாய்ச் சென்று வருவதால் அசுத்தம் சிறிதுமில்லாமல் மற்ற ஏரி, குளம், குட்டை, வாய்க்கால், ஆறு முதலிய நீர் நிலைகளிலுள்ள ஜலத்திலும் மிக்க சுத்தமானதா யிருக்கும்.

VII. Summary —

(1) நாம் உலவும் இப்பூமி பரவல், குன்று, பள்ளத்தாக்கு எனப் பலவிதமா யிருக்கிறது. (2) தரை (மண்) யானது கருமணல், மணல், பருமணல், சாக்கு, சிலேட்டு, களிமண் இன்னும் மற்ற அநேக வஸ்துக்களாலும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. (3) இவ் வஸ்துக்கள் பூமியில் ஒன்றின்கீழொன்றாய் படையா யிருக்கின்றன. (4) சாக்கு, மணல், பருமணல் முதலிய துவாரமுடையவாதலால் அவற்றின் வழியாக மழைத் தண்ணீர் நுழையும். ஆனால் களிமண்போன்றது துவாரமில்லா வஸ்துவாதலால் அதின் வழியாய் ஜலம் நுழைகிறதில்லை. (5) தண்ணீர் களிமண்ணின்மேல் வந்து ஒன்றுகூடி இடம் காணுமல் போனதும் மேலே கூடி வெளியே செல்ல ஆரம்பிக்கிறது. (6) அப்பொழுது அவைகள் குமிழி குமிழியாக மேலே வந்து ஊற்றுநீராகிறது.

T. A. EGYAMIAR,
*Headmaster, Board Boys' School, Kalugumalai,*
*and Secretary, Teachers' Association,*
*Kalugumalai.*

## வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும்

## ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமென்ட்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம். வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைக்குரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும் வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras, E.*

OFFICE ... 13 DEC 1915 . MADRAS




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1915௵ நொவெம்பர்௴ | மாதம் 6

# TOLSTOY AS A SCHOOL MASTER

## டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

அமெரிக்கா தேசத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்த்த ஒருவர் எழுதுவது.

நான் அமெரிக்காவில் ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்க்கப் போயிருந்தேன்; அப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயினி கிண்டர்கார்டன் முறைகளை அறிந்தவர், டால்ஸ்டாயின் கொள்கை ஒன்றும் அம் மாதுக்குத் தெரியாது.

எட்டு வருடமாக கிண்டர்கார்டன்வேலை செய்த பிறகு, பழைய குருட்டு வழக்கங்களை நீக்க எண்ணங்கொண்டு உழைத்ததில், கிண்டர்கார்டன் முறையே வாடிக்கையாய் நடத்தப்

பழக்கமாய் விட்டதென்று கண்டனர். பிள்ளைகள் எவ்வளவுக்கெவ்வளவு கிண்டர்கார்டன் முறையில் நன்றாய்ப் பழகுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கிண்டர்கார்டன் தொழில்களை நன்றாய்ச் செய்ததாக உபாத்தியாயர்கள் நினைக்கிறார்கள்; இது சரியல்ல என்று அந்த உபாத்தியாயினி தெரிந்துகொண்டனள். தன்னிடம் விடப்பட்ட குழந்தையின் சுபாவ உணர்ச்சியை அறிய தான் கற்றுக்கொண்டபோது, அக் குழந்தைக்கு இயற்கையாகவே நல்ல அறிவு அமைந்தி நக்கிறதென்றும், பள்ளிக்கூடத்தில் ஏற்பட்ட சிக்ஷை ஒழுக்கங்கள் எல்லாம் இயற்கையான நல்ல அறிவைக் கெடுத்து விடுகிறதென்றும் கண்டுகொண்டனள். குழந்தைகளுக்கு எதைச் செய்ய இஷ்டமோ அதைத்தான் செய்ய அதன் இஷ்டப்படி விடவேண்டுமென்றும், அது எதெதை தனக்குத் தோன்றியபடி எல்லாம் செய்யுமோ, அவைகளையே ஒழுங்காகச் செய்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்றும், அவர்களுடைய ஆசையை அடக்கிவிடாமல் பூர்த்திசெய்யும்படி நடந்துகொள்ளுவதே உத்தமமென்றும் அம்மாதுக்கு நாளடைவில் தோன்றிற்று.

இவ்வித எண்ணங்களோடு கிண்டர்கார்டனை நடத்தினதில் பிள்ளைகளுக்குச் சிருஷ்டிசெய்யும் சக்தியும் புதிதாய் செய்யும் இயற்கையும் உண்டு என்று அறிந்துகொண்டாள். சாதாரணமாய் பள்ளிக்கூடத்திற்கு வாசிக்கப் போகும் பிள்ளைகளுக்கு நெட்டுருப்போடும் கெட்டவழக்க முண்டாகிறது; உலகத்தார் மெச்சும்படி பிள்ளைகளுக்கு இவ்விதமாக மனப்பாடம் பண்ணும்படி போதிக்காவிட்டாலும், தன்னுடைய பிள்ளைகள் அநேக விஷயத்தில் மேலானவர்கள் என்று தெரிந்து சந்தோஷப்பட்டாள்.

மிகவும் சிரமப்பட்டுச் செய்யும் கிண்டர்கார்டன் தொழில்களால் யாதொரு கல்விப்பயனும் உண்டாகாததலால், அவைகளை நீக்கி, பிள்ளைகள் தங்கள் சொந்தவீடாய் பாவிக்கும்படி, அவர்களே ஓடி ஆடி, அனுபவம் அடையும்படி, ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினாள்.

பிள்ளைகளுக்கு ஒரு பொருளிடத்தில் இயற்கையாக விருப்பு வெறுப்பு உண்டாகிறதென்றும், வயது செல்லச் செல்ல அவை



மாறுபட்டுப் போகிறதென்றும் நமக்குத் தெரியும். காலையில் சூரியோதயத்திற்குப் படுக்கைவிட்டு எழுந்திருக்க வேண்டும், இரவில் படுக்கவேண்டுமென்றும் அவர்கள் இயற்கையாகவே தெரிந்திருக்கிறார்கள். எப்போதும் ஒருவர்க்கொருவர் ஒத்தாசை செய்வதும் எவ்வித வேலையும் செய்ய ஆசைப்படுவதும் அவர்களுடைய இயற்கைக் குணமே; இது நிற்க, பிள்ளைகள் கல்வி கற்குங் காலத்தில் தங்களுடைய வேலையை இதராள் செய்ய எதிர்பார்ப்பதென்ன; பாடசாலைப் பிள்ளைகள் ஒரு காரியம் செய்யாமல் பிரபுத் தன்மையாய் உட்கார்ந்துகொண்டிருப்பதும் நீ, நான் என்ற வித்தியாசம் அவர்களுக்குள் ஏற்படுவதும் எதனால்? பிள்ளைகளுக்குச் சத்துரு மாதா, பிதா, உபாத்தியாயரே என்று சொல்லவேண்டும். பிள்ளைகள் இயற்கைக் குணத்தோடும் ஆசையோடும் ஓடி ஆடி விளையாடும்போது, அவர்களைக் கவனித்து, கண்டிப்பது பெருந் தவறு; அப்படிச் செய்வதால், இயற்கைக் குணம் மாறி விடுகிறது; தானே செய்யவேண்டும் என்கிற ஆசை ஒழிந்து விடுகிறது. மேலும் வயது சென்றவர்கள் அவர்கள் இயற்கையாய் விளையாட்டயர்வதைக் கண்டு வெறுத்து, பழித்து நிந்திப்பதனாலேயே, அவர்களுடைய இயற்கை உணர்ச்சி மழுங்கிப் போகிறது ஆதலால், அவர்களிடத்தில் உண்டாகும் இயற்கையான குணங்களை நன்றாய் கவனிப்பது உபாத்தியாயர், பெற்றோர் கடமையாகும். இவ்வித குணங்களை அறிவதற்கு பள்ளிக்கூடம் வீடுபோ லிருக்கவேண்டும் என்று அறிந்து 'விளையாட்டு வீடு' என்று ஏற்படுத்தி காலை முதல் மாலைவரையில் பிள்ளைகள் இஷ்டப்படி வரப் போகச் செய்து, வேண்டும்போது ஒத்தாசை செய்துகொண்டு வந்தனள். பெற்றோருக்கும் மற்றோருக்கும் இவ்விதமான பள்ளிக்கூடம் சரியான பள்ளிக்கூட மன்றென்றும், எந்நேரமும் கூப்பாடும் ஒழுங்கின்மையும் கூடி யிருப்பதென்றும் நினைக்க இடமுண்டு; தெருப் பிள்ளைகள் விளையாடி ஆரவாரிப்பதுபோ லிருக்கும். இவ்விதமான விளையாட்டு வீடே சிறு பிள்ளைகளின் பள்ளிக்கூடமாகும்; இப் பள்ளிக் கூடத்தில் நுழைந்தால், ஒரு பிள்ளை வந்தவரைக் கண்டு வந்தனஞ் செய்வதும், மற்றொரு பிள்ளை சும்மா இருப்பதும், இன்னொரு பிள்ளை விளையாட்டின்மேல் கண்ணா யிருப்பதும் பார்க்கலாம். மேலும், பெஞ்சு, நாற்காலி முதலிய சாமான்கள்

வரிசையா யிராமல், அங்கே ஒன்றும் இங்கே ஒன்றுமாய் சிதறி இருக்கும்· ஆனால், தலைகீழாய் பென்சிலாவது நாற்காலியாவது போட்டிராது. ஒழுங்காய் வைக்கத் தெரியாவிட்டாலும், தலைகீழாய் போடுவது தப்பு என்று இயற்கையாகவே அறிந்திருக்கிறார்கள்; கூலிவேலை செய்பவர்கள் தங்கள் பிள்ளைகளை இவ்விதப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்ப இசையார்கள், ஏனெனில் இவர்களுக்கு வேண்டியதெல்லாம் காட்டி, தங்களுடைய பிள்ளைகளை பழைய குருட்டு வழக்கப்படி நெட்டுருப் போட்டு வாய்பாடுகளை ஒப்பிக்கவும், கிளிப்பிள்ளைகள்போல் புத்தகம் வாசிக்கவும் செய்விப்பதே அவர்களுக்கு விருப்பம்; இப் பிள்ளைகளுக்கு மற்ற பிள்ளைகளைப்போல், கடிதத்தால் பட்சியைப்போல் பறக்க விடுவதும் மற்றுமுள்ள விளையாட்டுகளும் பிடிக்காது.

ஆனால் பிள்ளைகளைத் தங்கள் இஷ்டப்படி ஆடிப்பாடி விளையாட விட்டால், எண்ணும் எழுத்தும் எப்போது போதிப்பது; எப்போது கற்றுக்கொள்ளுவது, என்னும் கேள்வி உண்டாகும். சிறு பிள்ளைகளுக்குப் பசித்தபோது உணவு அளிக்க வேண்டும்; கேட்கும்போதுதான் தின்பண்டம் கொடுக்க வேண்டும். அப்படியின்றி நம் இஷ்டப்படிக் குழந்தைகளுக்குத் தின்பண்டமாவது சாப்பாடாவது அளித்தால், அவர்களுக்கு ஜீர்ணமாகாமல் மந்தப்பட்டு வைத்தியர்களுக்கு ஓயாத வேலை கொடுக்கும்படி நேரிடும். அதுபோல, சிறு பிள்ளைகள் எப்போது எண்ணும் எழுத்தும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இயற்கையாகவே பிரியப்படுகிறார்களோ, அப்போதுதான் போதிக்கவேண்டும். பிள்ளைகள் 'காற்றில் ஆடி ஓடினால், ஜீர்ணசக்தி அதிகமாயுண்டாகிறது; உணவை அதிகமாக உட்கொள்ளுகிறார்கள். பிள்ளைகளைச் சுபாவ உணர்ச்சிப்படி போகவிட்டு இயற்கைக் குணங்களின்படி நடக்கவிட்டு, உபாத்தியாயர் அவைகளுக்கு அனுகூலமாய் நடந்துகொண்டால், தாங்களே வாசிக்கவேண்டுமென்ற ஆசை உண்டாகிறது.

பத்திராதிபர்.



# RAMAYANA BY SWAMI VIVEKANANDA

## சுவாமி விவேகாநந்தர் குறித்த இராமாயணம்

(முன்றொடர்ச்சி பக்கம் - 118)

இச் சமயத்தில், தசரதரின் இளைய மனைவியாகிய கைகேயி தன்னுடைய வேலைக்காரி யொருத்தியின் தூண்டுதலின்பேரில் தசரதமகாராஜாவிடம் அவர் முன்னம் கொடுப்பதாக வாக்களித்த இரண்டு வரங்களைக் கொடுக்கும்படி கேட்டாள். தசரதரும் அவ்விதமே இப்போது கொடுப்பதாக உறுதிசெய்தார். அவையாவன — 1. தன்னுடைய குமாரனாகிய பரதன் பட்டங் கொள்ளவேண்டும். 2. இராமர் 14 வருஷம் காட்டுக்குப் போகவேண்டும் என்பனவேயாம். இராமர் தசரதரின் ஆசை புத்திரன். அப் புத்திரனை இப்போது அவர் இழக்கவேண்டியிருந்தது; என்றாலும் தந்தையினுடைய வாக்கை நிலைநிறுத்த இராமர் காட்டுக்குப்போக இசைந்தார்; பரதன் பட்டங் கொள்ள விடுத்தார். இராமர் தன் தந்தைக்குத் தக்க தேறுதல் கூறித் தம் மனைவியுடனும், தம்பி லட்சுமணனுடனும் தென் காட்டிற் புகுந்தார்.

வட இந்தியாவிலுள்ள ஆரியர்கள் தென் இந்தியாவில் வசிப்பவர்கள் எவ்வகுப்பினர் என்பதை அறியாது இருந்தார்கள். காட்டில் வசித்தவர்களை யெல்லாம் குரங்குகள் என்று எண்ணினார்கள். அதிக பலமும் துஷ்டத்தன்மையு முடையவர்களை இராட்சதர்கள் என்றார்கள்.

ஆகையால், இராமர், லட்சுமணர், சீதை மூவரும் அத்தகைய காட்டில் நுழையவேண்டி யிருந்தது. பல கஷ்டங்களை அநுபவிக்கவேண்டு மாதலால் இராமர் சீதையைப் பார்த்து நீ எங்களுடன் வரவேண்டா மென்றார். அவள் வணக்கமாக இராமரைப் பார்த்து, 'இராமர் எங்கு போகின்றாரோ, அங்கு நானும் வருவேன்' என்று மறுமொழி பகர்ந்தாள். இஃதன்றோ உண்மை மனைவியின் அருங்குணம்! பிறகு அம்மூவரும் பல காடு மலை யாறுகளைக் கடந்து யமுநா நதி தீரத்தையடைந்தனர். அங்கே சில சிறிய குடிசைகளைக் கட்டிக்கொண்டு அதில் சீதையை யிருக்கச் செய்து, இராம லட்சுமணர் மான்

வேட்டையாடி பழங்களைப்பறித்துக் காலம்போக்கினர். சிறிது காலம் கழிந்ததும் அக்காட்டிற்கு ஒரு இராட்சசி வந்தாள். அவள் ஸிலோன் யென்றழைக்கப்பெறும் இலங்கையை யாளும் ஒரு இராட்சதனுடைய தங்கை. தன் இஷ்டம்போல கர்ஜித்துக்கொண்டு அக்காட்டினுள் ஓடியாடி வரும்போது அழகு பொருந்திய இராமரைக் கண்டாள்; அவர் மீது மோகித்தாள். ஆனால் இராமர் பரிசுத்தமான மனம் வாக்குக் காயத்தவர்; முன்னமே மணமுடிக்கப் பெற்றவர். ஆகையால் அந்த இராட்சசி விரும்பிய வண்ணம் அவளைக் கொள்ளத் தமக்கு விருப்பமில்லை. இதையறிந்த அவள் கோபமுற்றுத் தன் தமையனிடம் பறந்தோடிச் சென்று கட்டழகு வாய்ந்த சீதையைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசியவள்மீது காதலிக்கச் செய்தாள். இராமர் நரர்களுக்குள்ளும் இராட்சதர்களுக்குள்ளும் மகா பராக்கிரம சாலியானதால் இராவணன் அவரை எதிர்த்துப் போர் செய்ய முடியாது. ஆகவே இராவணன் மந்திரவாதியானமற்றொரு இராட்சதனிடம் போய் அவனையொரு அழகிய மானாக உருமாற்றி, இராமர் வசிக்கும் காட்டில் மேய விட்டான். சீதை யிந்த அழகிய மானைப் பார்த்தாள். தனக்கு அதைப் பிடித்துத் தர தன் நாயகனைக் கேட்டுக்கொண்டாள். அவ்விதமே இராமர் காட்டினுள் நுழைந்து அம்மானைத் தொடர்ந்து சென்றார். சீதை யிப்போது இலட்சுமணரின் பாதுகாவலில் இருந்தாள். இராமர் காட்டிற்குப் போவதற்குள் குடிசையைச் சுற்றி ஒரு நெருப்புக் கோடிழுத்துச் சீதையைப் பார்த்து, 'சீதா! இன்று ஏதாகிலும் உனக்கு ஒரு அசம்பவம் நிகழும்; ஆகையால் இவ்வட்டமான கோட்டைத் தாண்டி அப்புறம் போகாதே; போனால் கஷ்டகாலம் உனக்கு வரும்'' என்று கூறியிருந்தார். பிறகு இராமர் தாம் குறித்த மானைநோக்கி அம்பு எய்தார். எய்யவே அந்தமான் மானுஷ உருவங்கொண்டு, 'ஓ! இலட்சுமணா! எனக்கு உதவி செய்யவா' என்று கத்திக் கொண்டே இறந்தது. இதைக் கேட்டதும் சீதை இலட்சுமணரை இராமர்பின் போகக் கேட்டுக் கொள்ளவே, அவர், 'அது இராமரின் பேச்சுக் குரலல்ல' என்று மறுமொழி பகர்ந்தார். என்றாலும் சீதையின் கட்டாயத்தின்பேரில் இலட்சுமணர் தம் அண்ணனைத் தேடிப்போக வேண்டியிருந்தது. அவர் அவ்விதம் போனதும் அதுவரை பக்கத்தில் ஒளிந்து



கொண்டிருந்த இராவணன் ஒரு சந்நியாசி வேஷம் பூண்டு, சீதையின் குடிசையின் வாசற்படியண்டை வந்து பிச்சை கேட்டான். 'சற்று இரும். என் கணவன் இதோ வந்துவிடுவார். உமக்கு வேண்டியது தருகிறேன்' என்றாள் சீதை. இராவணன், 'அம்மா! என்னால் தாமதிக்க முடியாது. எனக்குப்பசி காதடைக்கிறது. உன்னிடமுள்ளதில் நான் புசிக்க ஏதாகிலும் தா' என்றான். நல்லது என்று தன் வசமிருந்த சில பழங்களை உள்ளிருந்து கொணர்ந்து வைத்தாள். மிகவும் பரிசுத்தமான அந்த சந்நியாசி அவளைப் பார்த்து, 'சற்று முன் வாரும். நான் உங்கள் சமீபம் வரமுடியாது; நான் சந்நியாசி' என்று வேண்டினான். அவன் முற்றத்துறந்து முழுத்தவமெய்திய முனிவரென்று கருதி, சீதைத் தன் கணவன் இட்டிருந்த கோட்டினைக் கடந்து வெளிவந்தாள். சந்நியாசியும் தன் உருமாற்றி இராட்சதனானான். சீதையைக் கையில் தூக்கிக்கொண்டு, சீதை புலம்ப, பறந்தோடிப்போனான். ஐயோ! பாவம், சீதைக்கு உதவி செய்ய அச்சமயத்தில் ஒருவருமில்லை. தன் மீது அணிந்திருந்த சில நகைகளைக் கழற்றி ஆகாயத்தினின்று கீழே வாரியிறைத்தாள். பிறகு அவள் இலங்கைக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டாள். கற்பே ஒருருவென வந்த சீதை, இராட்சசனிடம் ஒரு வார்த்தையும் ஆடாததால், இராவணன் அவளை வேறு விதத்தில் தண்டனை செய்ய எண்ணினான். அவளைத் தன் தோட்டத்திலுள்ள ஒரு மரத்தின் கீழ் இருத்தினான். தனக்கு மனைவியாக அவளை வருத்தினான். அல்லும் பகலும் மரத்தின் கீழேயே அவளை யிருக்கச் செய்தான்.

இராமரும் இலட்சுமணரும் மான்வேட்டை யாடியபின்னர் தங்கள் குடிசையைநோக்கி வந்தார்கள். சீதை அங்கே இல்லை. இதனால் அவர்கள் துன்பசாகரத்தில் மூழ்கினார்கள். அவள் எப்படிப்போனாள் என்பதையவர்கள் அறியக்கூடவில்லை. சீதையைத் தேடிக்கொண்டே அவர்கள் இருவரும் தெற்கு நோக்கி வந்தார்கள். பலகாலம் கழிந்ததும், அவர்கள் சில குரங்குகளைக் கண்டார்கள். அவர்களின் மத்தியில் 'ஹனுமான்' என்னும் வாயுபுத்திரன் இருந்தார். இராமர் அவர்களைப்பார்த்து இழந்த தன்னுடைய மனைவியைப்பற்றி யவர்களுக்குத் தெரியுமோ என்று கேட்டார். ஆகாயத்தில் ஒருவிமா-

னத்தில் ஒரு இராட்சசன் மிகுந்த ரூபலாவண்யம் பொருந்திய ஒரு மாதைத் தூக்கிக்கொண்டு போனதை யவர்கள் பார்த்ததாகவும், அப்போது அந்த மாது தான் அணிந்திருந்த நகைகளுள் ஒன்றைக் கழற்றிக் கீழே எறிந்ததாகவும் அவர்கள் பதில் கூறித் தங்கள் கைவசமிருந்த அந்த நகையை இராம லட்சுமணர் முன் வைத்தார்கள். இலட்சுமணர் அதைக் கையில் எடுத்தார்; பார்த்தார்; பின்வருமாறு உரைத்தார்; "இதுயார் நகையோ; நான் அறியேன்." இராமர் அதை யெடுத்து நன்றாய் உற்றுப்பார்த்து, "ஆம்; இது சீதை நகைதான்" என்றார். தன்னுடைய அண்ணன் மனைவியைத் தாயைப்போன்று மதித்திருந்தாராதலின், சீதையினிடம் வைத்திருந்த மரியாதையால் அவளுடைய பாதத்தைத்தவிர வேறொன்றையும் பார்த்ததேயில்லை.

பிறகு அந்த வானரர்கள் அந்த இராட்சசனைப்பற்றி இராமருக்குச் சவிஸ்தாரமாகக் கூறினார்கள். அவனைக்கண்டுபிடித்து அவரிடம் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். இது இப்படியிருக்க, அந்தவானரர்களின் அரசனுக்கும் அவனுடைய சகோதரனுக்கும் இராஜ்ய சம்பந்தமாகப் பெரிய சச்சரவு இருந்தது. இளைய சகோதரனை, சுக்கிரீவனுக்கு இராமர் உதவி செய்து அவனுடைய சகோதரனை வாலியினிடமிருந்து இராச்சியத்தைப் பற்றிக் கொடுத்தார். ஆகையால், இராமருக்கு அந்த சுக்ரீவன் உதவிசெய்வதாக வாக்களித்தான். இந்த அரசன் தன்னுடைய படைகளை நாற்புறமும் அனுப்பினான்; அவர்கள் எங்கும் தேடிப் பார்த்தும் சீதை யிருக்குமிடத்தைத் தெரிவிக்கக் கூடவில்லை கடைசியாக, அநுமார் தெற்கு நோக்கிச் சென்றார்.

இந்தியாவின் தென்கோடியில் நின்றுகொண்டு 'கடலுக்கு அப்பாலுள்ள இலங்கைக்குத் தாண்டிப் போனார். அங்கே சீதையை எங்கும் தேடிப்பார்த்தார்; அகப்படவில்லை. இராவணன் என்ற அந்த இராட்சச அரசன் தன்னுடைய பராக்கிரமத்தால் தேவர்களையும், நரர்களையும் ஜயித்துத், தன் கைவசம் அகப்பட்ட எல்லா அழகிய ஸ்திரீகளையும் தன் நாட்டில் ஒரு மாளிகையில் சிறைவைத்திருந்தான். அந்த இடத்தில் போய்ப்பார்த்த ஹநுமான் தனக்குள், 'கற்பே உருவமான சீதை யித்தகைய கூட்டத்தோடு இருப்பதினும் உயிர்விட்டிருப்பாள்; ஆகையால் வேறிடம் பார்க்க வேண்டும்' என்று



நிதானித்துக் கொண்டு பல வனங்களைப் பார்த்து வந்தார். அசோகவனம் என்றோர் வனத்தில் சீதை, மேகம் நிறைந்த ஆகாயத்தின் ஒரு கோடியில் ஒளியிழந்து காணப்பெறும் சந்திரனைப்போலத் தோன்றினாள். அம்மாது சிரோமணி ஒரு மரத்தின் கீழ், புலம்பிய வண்ணம் இராமகானம் செய்துகொண்டு மெலிந்த தேகத்தினளாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஹநுமான் மிகவும் சிறிய உருவங்கொண்டு அண்மையில் அமர்ந்து நின்றார்; சில இராட்சசிகள் சீதையிடம் வந்து இராவணனை மணக்கும்படி பல வகையாலும் ஏவுவதையும் அவர்கள் முயற்சி ஆற்றில் கரைத்த புளிபோலப் போவதையும் கண்டு வியந்தார்.

அந்த இராட்சசிகள் போனபிற்பாடு கீழே யிறங்கிச் சீதையின் முன்வந்து, தான் இராமதூதன் என்பதை வணக்கமாகத் தெரியப்படுத்திக் கொண்டார். இராமர் பரம சௌக்கியமாய் இருப்பதாகவும், அவ்வம்மை யிருக்கும் இடத்தைத் தேடிப் பிடித்துவரத் தன்னை யனுப்பியதாகவும், இராமர் அந்த இடம் தெரிந்து கொண்டதும் பெரியதொரு சைனியம் திரட்டிக் கொண்டு அந்த இராட்சசனை வென்று அவ்வம்மையை மீட்டுப் போவதாகவும் தைரியங் கூறினார். சீதை இஷ்டப்பட்டால், ஒருவருக்குந் தெரியாமல் அப் பிராட்டியாரைத் தன் தோளின் மீது தூக்கிக்கொண்டு கடலைத்தாண்டி அவரிடம் சேர்ப்பிப்பதாக விரும்பினார். சீதையோ இதற்கு உடன்படவில்லை. தனது நாயகனின் உடலைத் தவிர வேறு ஒருவரின் உடலைத் தொட அவள் இணங்காள். ஆகையால் அங்கேயேயவள் இருக்க நேர்ந்தது. இராமர் ஹநுமான் மூலமாக அனுப்பியிருந்த கணையாழியைச் சீதைக்கு ஹநுமார் கொடுத்தார். சீதை பிரதியாகத் தமது நகைகளுள் ஒன்றைக் கழற்றித் தந்தார். அத்துடன் ஹநுமார் தமது இருப்பிடம் சேர்ந்தார். ஒரு பெரிய சைனியம் திரட்டப்பெற்றது. வானரர்கள் யாவரும் இந்தியாவின் தென் முனையை யணுகினார்கள். அங்கு நின்றும் கடல்மீது இலங்கைக்கு ஒரு பெரிய பாலம் கட்டினார்கள். இது இன்றைக்கும் உள்ளது. அதைச் 'சேது' என்பார்கள். அது இராமரின் கீழுள்ள வானரர்களால் கட்டப்பட்டது.

(தொடரும்)

சி. வே. விவேகானந்தா

# GENERAL CLEANLINESS

## சுசி

(முன்றொடர்ச்சி பக்கம் — 40)

26. உண்ணும் பொழுதும், உண்டு முடிந்த உடனேயும்; பூனையைப்போல, விரல்களை நக்குவது கூடாது. மாம்பழம் முதலியவைகளைத் தின்ற பிறகு முன்கையிலுள்ள ரசத்தை நக்குவது வெறுப்புக் கிடமான காரியம்; அந்த ரசத்தினால் கைத்தோலிலுள்ள உப்பு சம்பந்தமான அழுக்குகளும் மற்று முள்ள அசுத்தங்களும் கரைந்து அந்த ரசத்துடன் நம் வயிற்றுக்குள் போய்ச் சேரும். சோறு உண்ணும்பொழுது உணவுப் பொருள்கள் உதட்டில் படுவதேபோதும்; வாய்க்குள் கையை விட்டு உணவைச் செலுத்தக் கூடாது; கைவிரல் உதட்டுக் கப்பால் வாய்க்குள்ளே போகவேண்டிய ஆவசியகமில்லை.

27. குழம்பு, பச்சடி முதலியவைகளையும், புளிப்புச் சம்பந்தப்பட்டு இளகலாயிருக்கும் பதார்த்தங்களையும் கையினால் எடுத்துப் பரிமாறுவதும், குழந்தைகளின் வாயில் எடுத்து வைப்பதும் கூடாது; ஒரு சிறு கரண்டிமுட்டையினால் அவைகளை எடுத்து உபயோகிக்க வேண்டும்.

28. அன்னம் பரிமாறுவதற்காகப் போடும் இலையைச் சுத்தி செய்யும் பொருட்டு அதன்மீது நீரைத் தெளிப்பது வழக்கமல்லவா? நீரைத் தெளித்த மாத்திரத்தில் இலை சுத்தப்படாது; இலையை நன்றாய்க் கழுவின பிறகு அதன்மீது அன்னம் முதலியவைகளைப் பரிமாற வேண்டும்.

29. தரையில் சோற்றை வைத்துக்கொண்டு, எடுத்துப் புசிப்பது கூடாது; முக்கியமாய், சமைத்த உணவையும், ஈரமுள்ள உணவையும் தரையில் வைக்கக்கூடாது. அப்படிச் செய்வது அசுத்தமான காரியமாக இருப்பதல்லாமல் அபாயமும் விளைக்கும்.

30. மஹம்மதியர்களும், இந்துக்களில் சில சாதியார்களும் துணியில் சோற்றை வைத்துக்கொண்டு உண்கிறார்கள். வீட்டுப் பரிசாரகர்களும், சோற்றுக் கடைகளிலுள்ள வேலைக்காரர்களும், கோவில் சுயம்பாகிகளும் அன்னத்தின்மீதும், நிவேதன வஸ்துக்களின்மீதும் மிகுந்த வெறுப்புக்கிடமான அழுக்குப் பற்றிய கந்தல் துணிகளைப் போட்டு மூடுகிறார்கள், அவர்கள் உடுக்கும் துணியும் மிகவும் அழுக்குப் படிந்து விகாரமாயும் வெறுக்கத்தக்கதாயும் இருக்கின்றது. அப்படிப்பட்ட துணிகளைக்கொண்டு சோறு முதலியவைகளை மூடாமலும், அப்படிப்பட்ட துணிகளை உடுக்காமலும் செய்ய வேண்டும்.



31. சோறு பரிமாறுவதற்கு நாம் உபயோகிக்கும் இலை மலிவானதாயும், இயற்கைப் பொருளாயும், உடைந்து நஷ்டம் விளைவிக்காததாயும் இருக்கின்றதென்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். அதைச் சுத்தமாய்க் கழுவி உபயோகிக்க வேண்டு மென்பதை இன்னுமொரு முறை வற்புறுத்துகின்றோம்.

32. சட்ணி முதலியவைகளை நக்கிவிட்டு நாவைக் கொட்டிச் சத்தஞ் செய்வதும், ரசம், பாயசம் காபி முதலியவைகளைச் சத்தத்துடன் உறிஞ்சிக் குடிப்பதும் கூடாது; அப்படிச் செய்வதுபோஜனப்பிரியத்தைக் குறிக்கும்; போஜனப்பிரியம் என்பது வளர்க்கத்தக்க குணமன்று.

33. உணவருந்தும்பொழுது எச்சில் உமிழ்வதும், காறித் துப்புவதும் நல்ல வழக்கமன்று; அது அசுத்தமான காரியம்; நல்ல தன்மைக்கு அழகன்று; முக்கியமாய், மற்றவர்களுடன் புசிக்கையில் அப்படிச் செய்வது கூடாது. மற்ற வேளைகளில் உமிழும் எச்சிலையும் மற்றவர்கள் நடமாடும் இடங்களில் உமிழ்ந்து, அதைக் கழுவிச் சுத்தஞ் செய்யாமல் அவ்விடத்திலேயே விட்டிருக்கக் கூடாது. சோறு, கறி முதலியன பரிமாறுவதும் அவைகளை உண்பவர்களுடைய விருப்பத்திற்கும் அளவுக்கும் இசைந்திருக்கவேண்டும்; அதாவது, உண்டபிறகு இலையில் பதார்த்தம் எதுவும், அதிகமாய் மிகுந்து நிற்கக் கூடாது; இலை சுத்தமாய் இருக்கவேண்டும். எச்சில் பட்ட பதார்த்தங்களை மிகுதி வைப்பதனால் அவைகளை உண்ணும் மற்றப் பிராணிகளுக்குத் தீமை உண்டாகும்.

34. நீர், மது முதலியன குடிக்கும்பொழுது உறிஞ்சிக் குடிப்பது கூடாதென்று உலகத்திலுள்ள டாக்டர்களெல்லா-

ரும் கூடிப் பேசும் மகா சபைகளில் நிந்தித்திருக்கிறார்கள். அநேக வியாதிகள், முக்கியமாய் மேஹ ரோகங்கள், உதடுகளினால் தொற்றிப் பரவுகின்றன. ஆகையால் ஒவ்வொருவரும் தனித்தனியாக நீர் குடிப்பதற்கு ஒவ்வொரு பாத்திரம் வைத்துக் கொள்ளவேண்டும். தெலுங்கு தேசத்திலும் கன்னட தேசத்திலும் நீரை உறிஞ்சிக் குடிப்பது வழக்கமாகையால் அவர்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு ஜல பாத்திரங்கள் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நீரை உறிஞ்சிக் குடிக்கும் வழக்கம் இல்லாததனால் ஒரே பாத்திரத்தினின்று எல்லாரும் நீரைக் குடிக்கிறார்கள். உறுஞ்சிக் குடியாவிட்டாலும், ஒரே பாத்திரத்தை எல்லாரும் உபயோகிப்பது கூடாது. இந்த விஷயத்தில் தமிழ் நாட்டிலுள்ள வைதிகர் மாத்திரம் தாம் நீர் குடிக்கும் பாத்திரத்தைப் பிரத்தியேகமாய் வைத்துக் கொள்ளுகிறார்கள். மற்றவர்களும் அப்படியே செய்யவேண்டும்.

35. இந்தக் காரணத்தினாலே, அதாவது ஒருவர் உபயோகிக்கும் ஜலபாத்திரத்தை மற்றொருவர் உபயோகிக்கக் கூடாது என்னும் உண்மையை உணர்ந்ததனாலே, அநேகர் சங்கபோஜனத்திற்கு, அதாவது பலருடன் உட்கார்ந்து புசிப்பதற்குப் போவதில்லை. அப்படிப் போகும் பக்ஷத்தில் மற்றவர்களுடைய ஜலபாத்திரத்தை உபயோகிக்காமல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மற்றவர்களுடைய பாத்திரத்தை உபயோகிக்க வேண்டுமானால், அதற்குள் கொஞ்சம் ஜலத்தை விட்டுத் துலாவிக்கொட்டிவிட்டு, அது சுத்தமாயிற்றென்று எண்ணுவது பிசகு. அந்தப் பாத்திரத்தை உள்ளும் புறமும் நன்றாய்த் தேய்த்துக் கழுவவேண்டும்.

36. சுவாஸத்தின் ஸ்பரிசத்தினாலும், அதாவது மூச்சுபடுவதனாலும், பாத்திரம் அசுத்தப்படுகின்றது; பாத்திரத்திலுள்ள நீரை உதடுபடாமல் தூக்கிக் குடிக்கும்பொழுது குடிப்பவனுடைய வாய்க்கும் அந்தப் பாத்திரத்திற்கும் இடையிலுள்ள நீர்த்தாரையினால் ஏற்படும் சம்பந்தத்தினாலும் அந்தப் பாத்திரம் அசுத்தப்படும். ஐரோப்பியர்கள் தங்களுடைய பானபாத்திரங்களில் உதடுபடாதிருக்கும்பொருட்டு இக் காலத்தில் 'உதட்டுக்காப்பு' (Lip protector) என்னும் ஒரு கவசம் போட்டுக் கொள்ளுகிறார்கள்.



37. மற்றவர்களுடைய படுக்கை, ஆசனம், ஆடை, பூமாலை, பாதரக்ஷை, பானபாத்திரம், லேகனி (Pen or Pencil) முதலியவைகளை நாம் உபயோகிக்கக் கூடாதென்று நம்முடைய சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன. இது ஆரோக்கியத்தைக் காப்பாற்றும்பொருட்டும் வியாதியைத் தடுக்கும்பொருட்டும் ஏற்பட்ட விதியாகும்.

38. பழங்கள், பக்ஷியங்கள், வெற்றிலைச் சுருள் முதலியவைகளை வாயில் வைத்துக்கொண்டு, அவைகளைக் கடிக்கும்பொழுதாவது மெல்லும் பொழுதாவது அவைகளின் வெளி நுனியைக் கையினால் பிடித்துக்கொண் டிருப்பது நல்ல வழக்கமன்று. முக்கியமாய், மற்றவர்களுடன் இருக்கும்பொழுதும், மற்றவர்களும் எடுத்துத் தின்பதற்காக வைத்திருக்கும் குவியலிலிருந்து நாம் எடுத்துத் தின்னும்பொழுதும் மேற்சொல்லியபடி கையினால் பிடித்துக் கொண்டிருப்பது தகுதியான காரியமன்று.

39. ஐரோப்பியர்கள் பலர் கூடி ஒரே மேஜையிலிருந்து அன்ன மெடுத்து உண்ணுகிறார்கள்; மஹம்மதியர்கள் ஒரே துணியிலாவது தட்டிலாவது அன்னத்தைப் பரிமாறிக்கொண்டு அதை ஏககாலத்தில் பலர் எடுத்துப் புசிக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு மேலே குறிப்பிட்டபடி வாயில் வைத்துக்கொண்ட பண்டத்தைக் கடிக்கையில் கையினால் பிடித்துக் கொண்டிருக்கும் வழக்கம் அவர்களுடைய மதாசாரத்திற்கு விரோதமாயில்லாவிட்டாலும், ஆரோக்கிய சாஸ்திரத்திற்கு விரோதமான காரியமே.

40. மஹாராஷ்டிர தேசத்திற் பெரும்பாலார் உண்ணுகையில் தம்முடைய இலையிலிருந்து எச்சில் அன்னத்தை எடுத்துக் குழந்தைகளுக்கு ஊட்டுகிறார்கள். இதுவும் ஆரோக்கிய சாஸ்திரத்திற்கு விரோதமான காரியமே. இதனால் குழந்தைகளுக்குக் கெட்டவழக்கம் பிடிபடுகின்றது. குழந்தைகளுக்கு நற்பயிற்சி உண்டாக்கக் கருதுகிறவர்கள் இப்படிச் செய்யக்கூடாது.

41. தாய் தந்தையர் தம் வாயில் மெல்லும் வெற்றிலையையாவது, பக்ஷியத்தையாவது, பழத்தையாவது எடுத்துக் குழந்தைகளின்மீது தமக்குள்ள ஆசை மிகுதியினால் அவர்களுடைய

வாயில் வைப்பதும், குழந்தைகளினுடைய வாயிலுள்ளதை எடுத்துத் தாம் தின்பதும், காக்கைகள் தம் வாயிலுள்ள இரையைத் தம் அலகினால் குஞ்சுகளின் வாயில் வைப்பதற்கு ஒப்பாகும். இது இகழத்தக்க காரியம்; வழிப்போக்கன் ஒருவன் வாயில் பிடித்துக்கொண்டிருக்கிற புகையிலைச் சுருட்டினின்று காட்டுமிராண்டி யொருவன் தன் வாயிலுள்ள சுருட்டைப் பற்ற வைத்துக்கொள்வதற்கு ஒப்பாகும்.

42. உமிழ் நீரினாலும், காரித் துப்பும் எச்சிலினாலும் க்ஷயம், காசம் முதலிய ரோகங்களை உண்டாக்கத்தக்க ஜீவாணுக்கள் மற்றவர்களுக்குப் பரவுகின்றன என்று எல்லா தேசங்களிலுமுள்ள வைத்தியநூற் புலவர்களும் ஒருமித்து உரைக்கின்றார்கள். அதாவது, துப்புகிறவர்களுடைய தேகத்திலுள்ள வியாதிகளுக்குக் காரணமாயுள்ள ஜீவாணுக்கள் அந்த உமிழ்நீரின் மூலமாய் வெளிப்பட்டு மற்றவர்களுடைய தேகத்திற் புகுந்து நோய் உண்டாக்குகின்றன என்பதாம்.

43. ஆதலால் ஜனங்கள் கூடுமிடங்களிலும், பலர் ஏறிச் செல்லும் வண்டிகளிலும், கச்சேரிகளிலும், எச்சில் உமிழக் கூடாதென்று ஐரோப்பிய தேசங்களின் சிலவற்றில் விதித்திருக்கிறார்கள். ஜனங்கள் நடமாடும் தெருக்களில் காறி உமிழ்கிறவனும் தண்டனைக்குள்ளாவானென்று சில தேசங்களில் சட்டம் செய்திருக்கிறார்கள். மற்றத் தேசத்தார்களும் ஒவ்வொருவராய் இந்த விதியை மேற்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை இந்திய ரிஷிகள் சதாசாரவிதிகளுள் ஒன்றாக அமைத்து வைத்திருக்கிறார்கள்; எச்சிலின் விஷயத்தில் நம்முடைய சாஸ்திர விதிகளை நாம் தவறாமல் அனுசரிப்போமானால் நமக்கு அநேக பீடைகள் தொலையும்.

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of the 'Arya,' Madras.*



## CORRELATION

## பாடங்களை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்திப் போதித்தல்

ஒரு பாடத்தை மற்றொரு பாடத்துடன் ஸம்பந்தப்படுத்திப் போதிப்பதே, மிகவும் உத்தமமான முறை. பாலர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி யோசிக்கையில், அவர்களின் மனத்தின்கண் உதிக்கும் யோசனா சக்தியானது ஒன்றுக்கொன்று தொடர்ந்ததா யிருப்பதால், நாம் கற்பிக்கும் விஷயமானது ஒவ்வொன்றும் தனித்தனியே யிருக்காமல் ஒன்றை யொன்று தொடர்ந்ததாகவே யிருக்கவேண்டும். தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றைக் கற்பித்தலே சிறந்த மார்க்கமென்பது 'உள்ளங்கை நெல்லிக்கனியே'போல் விளங்கும். ஆகவே, நாம் கற்பிக்கப்புகும் விஷயமானது பிள்ளைகள் ஏற்கனவே அறிந்துள்ள விஷயங்களை யொட்டி யிருக்கவேண்டும்.

இங்ஙனம் போதிக்க ஏதாவதொரு பாடத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, மற்றப் பாடங்களை அதன் அங்கங்களாக நடத்தலாம். அப்படி நடத்தவிருக்கும் விஷயங்களும் ஆதாரபாடத்தை தொடர்ந்ததாயும், அதற்கு நெருங்கிய சம்பந்தமுள்ளதாயும் இருக்கவேண்டும்.

சாதாரணமாய்க் குழந்தைகள் விநோதமான கதைகளைக் கேட்க மிக்க ஆவலுடையவர்கள். கதை சொல்பவர் சாதுர்யமாக நன்றாய் வர்ணித்துச் சொன்னால் இன்னும் அதிக பிரியமாய்க் கேட்பார்கள். இதர பாடங்களைவிட, கதை சொல்லுதலே விளையாட்டைப்போல, பாலருக்கு ஓர்வித உற்சாகம் உண்டாக்கக் கூடியது. எப்பாடத்தையும் விளையாட்டாகவும், விநோதமாகவும் கற்பித்தலே உத்தமமான பாலபோதனையாதலாற் 'கதை சொல்லுதலையே' மூலபாடமாகவும், ஏனையவற்றை அதின் அங்கங்களாகவும் வைத்துக் கொள்வதே உசிதம்.

முதலில் ஒரு கதையைச் சொன்னால், கதையில் சம்பந்தப்பட்ட ஏதாவதொரு பொருளைப்பற்றி நன்றாய்த் தெரிந்து கொள்ளப் பாலர் பெரிதும் இச்சிப்பார்கள். காதினாற் கேட்ட கதைக்கு சம்பந்தமான பாட்டை வாயாற் பாடி அவயவங்-

களா லதற்கேற்ற அபிநயக் குறிகளைக் காட்டி, கைகளால் கதைக்குத் தொந்தார்த்தமுள்ள ஒரு விஷயத்தைப் பற்றிய தொழில்களை (சித்திரம், களிமண்வேலை, காகிதம் மடித்தல் முதலியன) செய்து, பொருட்பாட மூலமாய் அப் பொருளின் பல பாகங்களை உற்று நோக்கி, ஆராய்ந்தறிந்து பழகுவதால், ஒரு வஸ்துவைப்பற்றிய பல அம்சங்களைப் பிள்ளைகள் தெளிவாயறிய ஹேதுவாகிறது.

N. B. — ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்கத் தொடங்குமுன், ஏற்கனவே கற்றுக்கொடுத்த பாடத்தைப் பற்றிச் சற்று நேரம் சம்பாஷித்துப் பின்னர் நாம் போதிக்க எண்ணிய விஷயங்களைப் போதிக்க வேண்டும். இப்படிச் சம்பாஷிப்பதால் பிள்ளைகள் ஏற்கனவே அறிந்துள்ள விஷயங்களை அடிக்கடி நினைவுகொள்ள இடமுண்டு. ஆகையால் முன்னறிந்த விஷயங்களை எளிதில் மறக்கமாட்டார்கள்.

‘பாடங்களை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்திப் போதித்தல்’ எவ்வாறென, ‘பொன்வாத்து’ என்னும் கதையை ஆதாரமாகக்கொண்டு, இரண்டாம் வகுப்புக்கு ஒரு வாரம் நடத்தக்கூடியவை எவையெனச் சற்றே விளக்கிக் காட்டுவோம்:

## கதை

* ‘பொன்வாத்து’ இக் கதை அனைவரு மறிந்ததே.

N. B. — ‘பேராசை பெருநஷ்டம்’, ‘ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு’ என்னும் நீதிகள் பாலரின் மனத்திற் பசுமரத் தாணிபோற் பதியுமாறு, நன்கு விளக்கவேண்டும்.

## அபிநயப் பாட்டு

‘பாளைவாய் கமுகில் வந்தார்’ என்னும் காவடிச் சிந்துமெட்டு

1. அந்தமாக ஓர்மனிதன் விந்தையான
 பெண்வாத் தொன்றை
அருமையுடனே வளர்த்து வந்தனன் — அதற்கு
உரிமையாய்ப் பலதீனியும் தந்தனன்

* இக் கதை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்க ளியற்றிய இரண்டாம் பாட புத்தகத்தில் 22 ஆம் பாடத்தில் தெளிவாய்க் கூறப் பட்டிருக்கின்றது.



2. நித்தமுந்தா னந்த வாத்து
 சுத்தமா யோர் பொன்முட்டையும்
நேர்த்தியாய் வீட்டுமூலையி லிட்டுமே — வைக்கும்
பார்த்தால் அதை நம் கண்ணைப்ப கட்டுமே

3. சொந்தக்காரன் சிந்தை மகிழ்ந்
 தந்தப் பொன்முட்டையை யெல்லாம்
சேர்த்துவிற்று ஆனான் பணக் காரனே — ஆனால்
பூர்த்தியாய் மூடரில் இவன் தீரனே

4. வாத்திடும் ஒவ்வோர் முட்டைக்காய்க்
 காத்திருந்தால் நாடோறுந் தான்
வந்து சூழுமேபல சிரமமே — எல்லாம்
தந்திரமாக எடுத்தல் கிரமமே

5. கூர்மையான கத்தியைக் கொண்
 டெல்லா முட்டையு மெடுத்துக்
கொள்ளலாமே யோர் க்ஷணத்தி லின்றுமே — லாக
உள்ள வழியாம் இதுதான் என்றுமே

6. கத்தியால் வாத்தின் வயிற்றைக்
 குத்தியே கிழித்துப் பார்க்கக்
கண்டான் அன்றிடும் ஓர்முட்டை தன்னையே — துக்கங்
கொண்டான் மனங் கன்றியதன் பின்னையே

7. என்னைப்போல் முழு மூடர்கள்
 இந்நிலந் தனில் இல்லையே
ஏது செய்வேன் பாவியானேன் என்றனன் — நொடிப்
போதினில் தேகம் சிலிர்த்து நின்றனன்

8. ஆய்ந்தோய்ந்து பாராதான் வாழ்வு
 சாந்தனையுந் துன்பமே யாம்
அன்றியும் பேராசை பெரும் நஷ்டமே — தரும்
என்றுணர்ந்தோர்க்கில்லையென்றுங் கஷ்டமே

இப்பாடலைத் தக்க அபிநயங்களுடன் பாடக் கற்பிக்கவும்.

## பொருட்பாடம் — வாத்து

**உருவம்:** ஏறக்குறையக் கோழியைப் போன்றது.

அலகு — தட்டையாயும் நீண்டும் நுனி அகப்பையைப் போல் அகன்றுமிருக்கும். உட்பக்கத்தில் மேலும் கீழும், இரு பக்கத் தோரத்திலும், சீப்பின் பற்கள்போன்ற மெல்லிய பற்கள் அனந்தம் உண்டு. இது தண்ணீரிலுள்ள புழு பூச்சிகளைத் தின்ன அநுகூலமாயிருக்கிறது.

**உடல்:** உருண்டு சற்றுப் பருத்தது. தேகம் முழுமையும் மிருதுவான இறகுகள் அடர்ந்திருக்கின்றன. அவ்விறகுகளில் ஒருவித நெய்ப்பசை இருப்பதால் வாத்தின் உடம்பில் தண்ணீர் ஒட்டாது.

**கால்கள்:** — குட்டையானவை. முன்பக்கம் மூன்றும் பின்பக்கம் ஒன்றும் ஆக நான்கு விரல்கள் உண்டு. முன்பக்கத்து விரல்களுக் கிடையே தோல் இணைந்திருக்கும் இதனால் வாத்து நன்றாய் நீரில் நீந்திச் செல்லும்.

**வகைகள்** — குள்ளவாத்து, பெருவாத்து முதலியன.

**உணவு** — ஜலத்திலுள்ள சிறு நண்டு, புழு, பூச்சிகளையும், கேழ்வரகு, நெல், கம்பு, முதலிய தானிய மணிகளையும் புசிக்கும்.

**சஞ்சாரம்:** — சிறிதுகாலம் நீரிலும் சிறிதுகாலம் நிலத்திலும் வசிக்கும்.

**வழக்கங்கள்:** — தரையில் நடந்து செல்லும்போது, தன்னுடல் முழுவதையும் ஆட்டிக் கொண்டுபோகும் கூட்டமாய் வசிக்கும். காட்டு வாத்துக்கள் நீரில் வளர்ந்துள்ள நாணல் முதலிய செடிகளுக்கிடையில் கூடுகட்டி முட்டை யிடும். வாத்துக்குக் குஞ்சு பொரிக்கத்தெரியாது. ஆதலால் வாத்து முட்டைகளைக் கோழியண்டை வைத்துக் குஞ்சி இறக்குவார்கள்.

**உபயோகம்:** — ஒருவித வாத்தின் இறகுகளால், பஞ்சுமெத்தை தலைக்கணை முதலியவை செய்கிறார்கள். அதன் மாமிசத்தையும், முட்டைகளையும் சிலர் சமைத்து உண்கிறார்கள்.



கிராமாந்தரங்களில் அறுவடையான வயல்களில் வாத்துகளை மாலைப்பொழுதில் ஒட்டி 'கிடை' வைப்பார்கள். வாத்தின் எச்சம் வயலுக்கு எருவாகும்.

### கணக்கு

(Mental works) (1) ஒருவன் 98 வாத்துக்களை வளர்க்கிறான்; அவற்றில் 39 ஆண் வாத்தென்றால் பெண் வாத்துக்கள் எத்தனை?

(2) ஒரு வாத்து முட்டையின்விலை 4 பைசா வானால், 20 முட்டைகளின் விலை என்ன?

(3) ஒரு வாத்துக் குஞ்சு $3\frac{1}{2}$ அணா விலையானால், 5 வாத்துக் குஞ்சுகளின் விலை என்ன? (இன்னும் இவைபோன்ற பல மனக்கணக்குகளைச் சமயோசிதமாகக் கற்பிக்கலாம்.)

சித்திரம் (Drawing) வாத்து, குடியானவன் வீடு, கத்தி முதலியன.

களிமண்வேலை (Clay Models) வாத்துமுட்டை, வாத்து.

குச்சிவைத்தல் (Stick Laying) கூரைவீடு.

காகிதம் மடித்தல் (Paper folding) குடியானவன் போட்டுக் கொள்ளும் சட்டை.

விதைவைத்தல் (Seeds laying) வாத்துக்குத் தீனி வைக்கும் சட்டி, வாத்து.

கயிறு வைத்தல் (String laying) வாத்தின் தலை.

N. B. — மேற்காட்டிய குறிப்புகளைக் கொண்டு இன்னும் தங்கள் தங்கள் சாமர்த்தியத்துக் கேற்றவாறு விஷயங்களை இன்னும் சற்றுப் பெருக்கிக் கொள்ளலாம். அது அவரவர்களின் இஷ்டத்தைப் பொறுத்தது. மற்றும் இங்கு கூறாதுவிடுத்த அனந்தம் கிண்டர்கார்ட்டன் தொழில்களையும் சந்தர்ப்பத்துக் கேற்ற வண்ணம் கூட்டிக்கொள்ளலாம்.

M. அடைக்கலசாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
திருவரையூர்

# TIT BITS

## விநோதக் கூற்றுக்கள்

### பேயும் நடுங்கும் பெண்

ஓர் ஊரில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அம்மரத்தில் ஒரு பிராமணன் ஒரு நாள் தற்கொலை புரிந்து கொண்டான். அன்றுமுதல் அவன் ஒரு பேயாய் அம் மரத்திலேயே யிருந்து கொண்டு அருகிலிருக்கும் அக்கிராரத்திலுள்ள பிராமணர்கட்கு இடையூறு புரிந்து வந்தான். அந்தப் பேய் அண்டை அயலிலுள்ளவர்களைக் கல்லால் அடிப்பதும், எலும்புகளை வாரிக்கொண்டு வந்து எறிவதும், கலகலவென்று நடு ராத்திரியில் சப்தம் செய்வதும் ஆகிய இடையூறுகளைச் செய்வது இவ்வளவென்று சொல்ல முடியாது. இப் பேயின் உபத்திரவத்திற்குப் பயந்தே அநேகர் கிராமத்தை விட்டு வேற்றூருக்குப் போய்விட்டார்கள். அநேகர் இறந்தும் விட்டார்கள். அந்த ஊரில் எஞ்சி யிருந்தவர்களில் பைத்தியம் பிடித்த பிராமணச் சிறுவன் ஒருவன் அவனை அந்தப் பிசாசு ஏதும் தொந்தரவு செய்கிறதில்லை. அவனை கவனிப்பவர்கள் யாருமில்லை.

2. பைத்தியக்காரன் நாளடைவில் வளர்ந்து விவாகம் செய்து கொள்ளும் பருவத்தை யடைந்தான். அந்த வூர் பஞ்சாயத்தார் ஒன்றுகூடி இந்தப் பிராமணனுக்கு எப்படியாவது விவாகம் செய்து வைக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். கிராமத்தில் பிராமணன் ஒருவன் விவாகம் இல்லாமலிருக்கின்றான் என்பது அப் பஞ்சாயத்தாருக்குப் பெரிய அவமானமாய்த் தோன்றிற்று. உடனே அயலூரிலுள்ள ஒரு பெண்ணைப்பேசி அவனுக்கு விவாகம் செய்துவைத்தார்கள். அந்தப் பெண்ணிற்கு பதினன்கு வயது வரையிலும் கல்யாணமாகாம லிருந்தமையால் அப்பெண்ணின் தந்தையும் இந்தப் பைத்தியக்காரனுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தான். அந்தப் பெண் மகா கொடியவள், பெருஞ் சண்டைக்காரி. இவளுடைய துர்க்குணத்திற்காகவே அவளை யாரும் விரும்பவில்லை. 'பாழே மடக்கொடியில்லா மனை' என்னும் வாக்கியம் ஒன்றையே கவனித்து பஞ்சாயத்தார் பைத்தியக்காரனுக்கு சுப முகூர்த்தத்தில் விவாகம்



செய்து வைத்தார்களே யொழிய வேறன்று. பிறகு இவன் எவ்வாறு ஜீவனஞ் செய்வான் என்பதையும் அவ்வூர் பஞ்சாயத்தார் கவனிக்கவே யில்லை.

3. பைத்தியக்காரனுக்கு வேலை செய்து பிழைக்க மனமும் இல்லை, வேலையைச் செவ்வையாகச் செய்யவும் தெரியாது. வீடுகள் தோறும் சென்று யாசித்து அங்கே கிடைக்கும் உணவைக் கொண்டு காலங் கழித்து வந்தான். தன் வயிறு வளர்ப்பதே சிரமமாயிருந்த அவனுக்குப் பெண்சாதியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒன்றும் உண்டாயிற்று. பெண்சாதி மகா கொடியவள் என்று முன்னமே சொல்லி யிருக்கிறோமல்லவா. அவள் விவாகம் செய்து கொண்டு இவனிடம் வந்ததும் இவனுடைய யோக்கியதையை அறிந்துகொண்டாள். அவனை அருகே யழைத்து முதுகில் ஒரு அடி கொடுத்து ஏதாவது வேலை செய்து அதனால் வரும் கூலியைக் கொண்டு இருவருக்கும் வேண்டிய உணவு வாங்கி வரும்படி கட்டளை யிட்டாள். மனைவி அடித்த அடியைப் பட்டுக்கொண்டு ஓடி வழக்கம்போல வீடுகள் தோறும் பிச்சைக்குச் சென்றான். அன்று அவனுடைய துரதிர்ஷ்டம் ஒன்றும் கிடைக்கவில்லை. வழக்கமாய் கொடுப்பவர்களும் இல்லை யென்று சொல்லி விட்டார்கள். ஒருநாள் எல்லாம் சுற்றித் திரிந்து ஒன்றும் கிடைக்காமல் மாலையில் வெகு களைப்புடன் பைத்தியக்காரன் வீடுவந்து சேர்ந்தான். இவனைக் கண்டதும் இவன் மனைவி வெகு அவசரமாய் வெளியே வந்து, 'எனக்கென்ன கொண்டு வந்தாய்' என்று கேட்டு அவன் சட்டைப்பை முதலிய வைகளைப் பரிசோதித்தாள். யாதொன்றும் இல்லாமைகண்டு சண்டைக்காரிக்கு அளவில்லாத கோபம் உண்டாயிற்று. உடனே அவனுடைய வஸ்திரத்தைப் பிடித்துக் கிழித்து தூர எறிந்தாள். அது பேய் வசிக்கும் ஆலமரத்தின்மீது விழுந்தது. ஒரு பழைய விளக்குமாறு (துடைப்பம்) கொண்டு தன் கைகொண்டமட்டும் தன் புருஷனைச் சாடினாள். அடிக்குப் பயந்து பித்தம் பிடித்தவன் வீட்டினின்றும் வெளியே ஓடத் தொடங்கினான். இவளும் அவனைப் பின்பற்றிக்கொண்டே வந்தாள். பிராமணன் வெகு வேகமாய் ஓடி அவள் கைக்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டான். அவள் இவனை ஆலமரம் வரையில் துரத்திக்கொண்டு வந்து அங்கே நின்றுவிட்டாள்.

அந்த மரத்தில் பைத்தியக்காரன் வஸ்திரம் இருப்பதைக் கண்டு அதைக் கையிலிருந்த விளக்கு மாற்றினால் அடித்து அவனை தன் மனம்போனபடி வைதாள். வஸ்திரத்தை அடித்த அடியெல்லாம் அம் மரத்திலுள்ள பேயின்மீது பட்டது. வசவுகள் எல்லாம் அதின் காதில் நுழைந்தது. பேய் அடிக்காகப் பயந்து திகிலடைந்து மீட்டும் இந்தக் கொடிய பாதகி வருவாளோ என்று அம் மரத்தைவிட்டு நீங்கி வேற்றூருக்குப் போக எண்ணிற்று.

4. தன் மனைவியின் அடிக்குப் பயந்து வீட்டை விட்டு வெளியே ஓடிப்போன பிராமணன் மீட்டும் அவள் உயிரோடிருக்கும் வரையில் அந்த ஊருக்குள் நுழைவதில்லை என்று தீர்மானஞ் செய்து கொண்டு வேற்றூருக்குப் பிரயாணம் போய்க் கொண்டிருந்தான். ஆலமரத்தில் அநேக வருடங்கள் வாழ்ந்திருந்த பேயும் அதைவிட்டு நீங்கி இனி அந்த ஊருக்குள் பிரவேசிப்பதேயில்லை என்று தீர்மானித்து அவ்வூரினின்றும் வெளியே வந்துவிட்டது. இருவரும் ஓரிடத்தில் சந்தித்தார்கள். அப்பேய் பிராமணனை இன்னான் என்று உணர்ந்துகொண்டது. உடனே அவனை விளித்து 'சகோதர! நான் இன்னானென்று உனக்குத் தெரிகின்றதா? நான் அநேக வருஷங்களாக உன்னூரிலுள்ள ஆலமரத்தில் வாசஞ் செய்து கொண்டிருக்கவில்லையா? உன்னுடைய மனைவி என்னையும் வைது அடித்தாள். அவளுக்குப் பயந்து நான் அம் மரத்தை விட்டு ஓடி வந்தேன். இனி நீ அவளிடம் போவதில்லை என்று உறுதியாகச்சொன்னால் நாமிருவரும் சகோதரர்போல ஒற்றுமையாக இருந்து பணம்தேட முயல்வோம்' என்று சொல்லிற்று. பேய் சொல்லியதைக் கேட்ட பைத்தியக்காரனுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. பேய் சொல்லியபடி செய்வதற்குச் சம்மதித்தான்.

5. பேயும் பைத்தியக்காரனும் வெகுநாள் பிரயாணஞ் செய்து ஒரு பட்டணத்தை அடைந்தார்கள். பட்டணத்தில் பிரவேசிப்பதற்குள் பேய் பைத்தியக்காரனை நோக்கி, 'எனதன்பிற்குரிய சகோதர! யான் சொல்லியவண்ணம் நடப்பாயானால் உனக்குத் திரண்ட செல்வம் கிடைக்கும். இந்த நகரை ஆளும் அரசனுக்கும் அவனுடைய மந்திரிக்கும் இரண்டு குமாரத்திகள் உண்டு. அச் சிறுமிகள் மிகவும் அழகிற் சிறந்தவர்கள். யான் மந்திரியினுடைய பெண்ணைப் போய் பிடித்துக்கொள்கிறேன்



மந்திரி என்ன சிகிச்சை செய்த போதிலும் அவளைவிட்டு விலகமாட்டேன். நீ ஒரு சந்நியாசிவேடம் பூண்டு வீதிதோறும் திரிந்துகொண்டேயிரு. மந்திரி உன்னை அழைத்துச் சென்று தன் குமாரத்திக்குக் கண்டிருக்கும் நோயை குணப்படுத்தும்படி வேண்டுவான். அப்போது உனக் கென்னவேண்டுமோ அதை அவனிடம் பேசிமுடித்துக் கொண்டு என்னிடம் வா. உன்னைக் கண்டதும் யான் அவளைவிட்டு அகல்வேன். பிறகு உன் வெகுமதியைப் பெற்றுக்கொண்டு சுகமாய் வாழ்ந்திரு. அவ்விடத்தினின்றும் போய் அரசனுடைய குமாரத்தியைப் பிடித்துக்கொண்டு என் காலத்தைக் கழித்துவிடுகிறேன். அவள்மீது எனக்கு மிகவும் விருப்பம். நீ என்னை விலக்கும் பொருட்டு அவ்விடம் வருவையானால் உன்னைத் தவறாமல் கொல்லுவேன்' என்று சொல்லிற்று. பைத்தியக்காரன் பேய் சொல்லியதற்குச் சம்மதித்தான். பேய் உடனே மறைந்துவிட்டது. பிராமணனும் சந்நியாசி வேடம் பூண்டு பட்டணத்திற்குள் பிரவேசித்து ஒரு குடிசையில் தங்கியிருந்தான்.

6. பேய் அன்றிரவே மந்திரியினுடைய குமாரத்தியைப் போய்ப் பிடித்துக்கொண்டது. உடனே அவளுக்கு நோய் உண்டாயிற்று. நோய் இன்னதென்று யாவருக்கும் புலப்படவில்லை. அநேக வைத்தியர்கள் ஒன்று சேர்ந்தார்கள். நோயின் கொடுமையைக் கண்ட யாவரும் மந்திரி குமாரத்தி பிழைப்பது அரிதென்று தீர்மானித்தார்கள். நகர மாந்தர்கள் எல்லாம் மந்திரிக்கு நேரிட்டிருக்கும் இடையூற்றுக்காக மனம் கவன்றார்கள். இஃதிவ்வாறிருக்கப் பைத்தியக்காரன் தேக முழுவதும் திருநீறணிந்து காவி வத்திரம் உடுத்திக்கொண்டு வீதியில் உலாவிக்கொண்டிருந்தான். இவனைக் கண்டோர் யாவரும் இவர் ஒரு புண்ணிய புருஷர்போலக் காண்கிறது இவரால் நம் மந்திரியின் மகட்கு உண்டாயிருக்கும் நோய் நீங்கவும் கூடும் என்று பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். இந்தச் சந்நியாசியைப் பற்றிப் பேசும் பேச்சு மந்திரியின் காதிற்கு எட்டியது இதைக் கேட்ட மந்திரி உடனே சந்நியாசியை அடைந்து வந்தனை வழிபாடுகள் செய்து தன்னுடைய கிருகத்திற்கு வரும்படி பலவாறாக வேண்டினான். பைத்தியக்காரச் சந்நியாசி போவதற்கு மனமில்லாதவன் போல நெடுநேரம் நடித்தான். முடிவில் சம்மதித்து மந்திரியின் அரண்-

மனையை அடைந்தான். மந்திரி தன்னுடைய மகளைச் சந்நியாசியின் முன்பு கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவள் தன்னுடைய மயிரை யெல்லாம் அவிழ்த்துக்கொண்டு அலங்கோலமாய் கண்டோர் யாவரும் பரிதபிக்கும்படியான நிலையில் சந்நியாசி முன்பே கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள். சந்நியாசி அவளைப் பார்த்ததும் கடுங் கோபத்துடன் சில மந்திரங்களை உச்சரித்தான். உடனே பேயும் 'என்னைக் கஷ்டப்படுத்தவேண்டாம், என்னைக் கஷ்டப்படுத்தவேண்டாம்; நான் போய்விடுகிறேன், நான் போய்விடுகிறேன்' என்று சொல்லிற்று. சந்நியாசி வேடம்பூண்ட பைத்தியக்காரனும் பழைய வழக்கத்தை ஒட்டி, 'நீ இந்த மந்திரியின் மகளை விட்டு நீங்கிவிட்டாய் என்பதற்கு யாது அடையாளம்' என்றான். அதற்குப் பேயும் 'அதோ காணப்படும் ஆலமரத்தைப் பேர்த்துவிட்டு போகிறேன்' என்று சொல்லிற்று. அவ்வாறே மந்திரி மகளை விட்டு நீங்கி ஆலமரத்தை அடியோடே பேர்த்தெறிந்து போய்விட்டது. துர்க்குறிகளும், துர்க்குணங்களும் நீங்கி மந்திரி மகள் சுகம்பெற்றாள். இந்தச் சமாசாரம் நகரமெங்கும் பரவிற்று. அந்நகரமாந்தர் யாவரும் இந்த சந்நியாசியை பெரிதும் வியந்து கொண்டாடினார்கள். மந்திரியும் அளவிறந்த திரவியத்தைப் பரிசாகக் கொடுத்தான். சந்நியாசியும் அந்தச் செல்வத்தினால் சுகமாய் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்) ஒரு தமிழ்ப் புலவர்.

வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும்

## ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமென்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம். வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைக்குரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும், வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras, E.*

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1915ஆ அக்டோபர்மீ | மாதம் 5

# HOW TO TEACH THE CHILDREN UNDER FIVE YEARS

## ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் போதிக்கும் முறை

அநேக பாலபோதகாசிரியர்கள் சிறு குழந்தைகளுக்குப் போதிக்கும் முறைகளைப் பற்றிப் பலவாறு யோசித்திருக்கிறார்கள். எவ்வளவு யோசித்தும் தீர்மானமாக ஏதும் சொல்லச் சரிப்படவில்லை. குழந்தைகள் வசிக்கும் அந்தந்த இடத்திற்கும் காலத்திற்கும் தன்மைக்கும் ஏற்றதுபோல் போதனை முறைகளைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதைமட்டும் எவரும் சொல்லலாம், எவரும் ஏற்றுக் கொள்ளலாம். இப்படித்தான் செய்வது என்பதைத் தீர்மானமாக ஏதும் சொல்ல இயலாவிட்டாலும், பொதுமுறையாகச் சொல்வது சாத்தியமேயன்றோ.

ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு வீட்டிலேயே கல்வி கற்பிப்பது நலமென்று சில ஆசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். வீட்டிலும் தாய்மாரே தம் மக்களுக்குப் போதிப்பதாயின் உத்தமமாகும். ஆயினும் வீட்டிலுள்ள அமைப்புகளும் தாய்மாருடைய தன்மைகளும் பாலபோதனைக்கு ஏற்றவைகளாக ஏற்படுவதில்லையாதலின், குழந்தைகளுக்கு வீட்டில் கல்வி கற்பிப்பதும் உசிதமென்று தோன்றவில்லை. வீடுதான் இப்படி இருக்கிறதென்றால் பாடசாலைகளும் உத்தம போதனைக்கு பொருந்தினவை என்று சொல்வதற்குக் கூடாதவைகளாகவே இருக்கின்றன. எந்த ஜந்துவும் சிறு பிராயத்தில் சும்மா இருப்பதில்லை. ஆடிக்கொண்டும் ஓடிக்கொண்டும் குதித்துக்கொண்டும் இருக்கவே காண்கிறோம். கன்றுக்குட்டி முதலாய ஜந்துக்களைக் கண்டால் இக்கருத்து நன்றாக விளங்கும். இயற்கையில் ஜந்துக்களெல்லாம் இப்படியிருக்க, நமது குழந்தைகளை நடமாட விடாமல் ஒரே யிடத்தில் உட்காரவைப்பது உசிதமாகுமா? அது இயற்கைக்கு ஏற்றதா? ஒரே யிடத்தில் உட்கார்ந்திருக்கக் குழந்தைகளுக்கு முடியவே முடியாது. அதிலும் நெடுநேரம் உட்காரும்படி செய்வது முற்றும் அசாத்தியமேயாகும். பாலர்களுக்குரிய பாடசாலை விசாலமான வகுப்பறைகள் உள்ளதாகவும் நல்ல காற்றோட்டமுள்ளதாகவும் அலங்காரமுள்ளதாகவும் இருக்கும்படி செய்யவேண்டும். மற்றும் குழந்தைகள் சவுக்கியமாக உட்காரக் கூடியவாறு பெஞ்சிகளும் கிண்டர் கார்ட்டன் மேஜைகளும் மிகவும் தாழ்வானவைகளாக இருக்கவேண்டும். சில சமயங்களில் குழந்தைகள் கூட்டமாக உட்கார்ந்து குலவி விளையாடும்வண்ணம் தரையில் பாய்களையும் பரப்பிவைக்கவேண்டும். விளையாடும் இடம் விசாலமானதாக இருக்கவேண்டும். வெய்யிற்காலத்திலும் மழைக்காலத்திலும் விளையாடுவதற்கு அனுகூலமாக, விளையாடும் இடத்தில் ஒருபாகம் கூரை வேய்ந்ததாக இருக்கவேண்டும்; மற்றொரு பக்கத்தில் தோட்டவேலை செய்வதற்கு ஏற்ற அனுகூலங்கள் செய்திருக்கவேண்டும். குழந்தைகளை வெளியிடங்களில் விளையாட விடுவது அத்தியாவசிகமாகும் என்பதை உபாத்தியாயர்கள் ஒருபோதும் மறக்கக் கூடாது. பால பாடசாலைகளில் உபாத்திமைத் தொழிலை நடத்துவதற்கு ஸ்திரீகளே ஏற்றவர்கள் என்பது தேர்ந்த ஆசிரியர்களுடைய



அபிப்பிராயமாகும். அந்த ஸ்திரீகள் நல்ல கல்வி யறிவும் நல்லொழுக்கமும் பால பாடசாலையை நடத்தும் திறமையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய நாட்டில் பாலர் வகுப்பைப்பற்றி அவ்வளவாகக் கவனிப்பதில்லை. 40-50 பிள்ளைகளை ஒன்றாகக் கூட்டி, சாதாரண உபாத்தியாயரை அதற்கு நியமித்து நடத்துகிறார்கள். எழுத்துக் கற்றுக்கொடுக்க இந்த உபாத்தியாயர் போதாதா என்று மூன்றாம் வகுப்பு நான்காம் வகுப்பு வரையில் பயின்ற உபாத்தியாயர்களையே பாலர் வகுப்புக்கு ஏற்படுத்தி விடுகிறார்கள். இது முற்றும் அநாகரிகமான முறையேயாகும். ஏதும் அறியாத உபாத்தியாயர்களிடம் இளங் குழந்தைகளை ஒப்பித்துக் கல்விகற்கச் செய்வதைவிட அக்குழந்தைகளைத் தம்மனம் போனவாறு ஆடவிடுவதே உத்தமமாகும்.

எந்த வகையில் பார்த்தாலும் குழந்தைகளை ஓடியாடச் செய்வதே உத்தமமாக ஏற்படுகிறது. அதுவே இயற்கைக்கு ஒத்ததாக இருக்கின்றது. குழந்தைகளை ஏற்றவாறு விளையாட விடுவதனால் அவர்களுக்கு தேகபலம் அதிகப்படுவதே யன்றி மனோபலமும் விருத்தியாகின்றது. அதனால் அதிக நேரம் குழந்தைகளை ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கும்படி நிர்ப்பந்தம் செய்யலாகாது. அப்படி உட்கார்ந்து சும்மா இருக்கச் செய்வது குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் கொடிய தண்டனையே யாகும். ஆகையால் ஒவ்வொரு பாடமும் கொஞ்ச நேரமே நடத்தவேண்டும். அந்தந்தப் பாடம் நடந்த பிறகு கொஞ்சநேரம் விளையாட விடவேண்டும். அந்த விளையாட்டு அதற்குமுன் நடந்த பாடத்திற்கு ஒற்றுமையானதாக இருந்தால் உத்தமமாகும். உபாத்தியாயரும் பிள்ளைகளோடு சேர்ந்துவிளையாடுவாரானால் சிறுவர்களுக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவேயிராது.

குழந்தைகள் தாம் காணும் விஷயங்களைத் தம்மை யறியாமலே செய்ய முயல்கிறார்கள். அதுவே குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள இயற்கைக்குணம். அதனால் அவர்கள் பார்த்துச் செய்யும்படி அழகிய உருக்களையும் விளையாட்டுப் பொருள்களையும் பாடசாலையில் அமைத்து வைக்கவேண்டுவது அவசியமாம்.

(தொடரும்.)

பத்திராதிபர்

# NAVARATRI FESTIVAL

## நவராத்திரி உற்சவம்

### தேவீ பூஜை

'நவராத்திரி' என்றால் ஒன்பது இரவுகள் என்று அர்த்தமாகும். இந்தத் தினங்கள் தேவியின் உபாஸனைக்கும் பூஜைக்கும் முக்கியமானவை. இராக் காலங்களில் இப் பூஜை விசேஷமாய்ச் செய்யப்படுமாதலின் நவராத்திரி யுற்சவம் என இப் பண்டிகைக்குப் பெயர் வந்தது. இந்தக் காலத்தில் தேவியின் மூன்று ஸ்வரூபங்களும் வேறு வேறாக ஆராதிக்கப்படுகின்றன. அவையாவன — துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி. ஒவ்வொரு ஸ்வரூபத்திற்கும் மூன்று நாள் வீதமாக, ஒன்பது தினங்களிற் பூஜை ஏற்பட்டது. இம் மூன்று ஸ்வரூபங்களும் ஏன் அவசியமென்பதும், அவைகளைப் பூசிக்கும் முறையும், அத்தகைய பூஜையின் உத்தேசம், தாற்பரியம் முதலிய விஷயங்களும் தேவி யுபநிஷத்திலும், தேவீ பூஜையைக் குறித்துச் சொல்லும் அதர்வ வேதத்தின் சில பாகங்களிலும் விவரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. தேவி அல்லது சத்தியை சூக்ஷ்மரூபமாகவும் ஆத்மசைதன்யமாகவும் பூஜிக்கும் இவ்வொன்பது தினங்களும் நவராத்திரி என்பது சிறப்புப் பெயராம். அதற்கு அடுத்ததாகிய பத்தாம் நாளில் தேவியின் ஸ்தூல ரூபத்தைப் பூஜிப்பது வழக்கம்.

'சக்தி' யென்னும் பதத்திற்கு விசை, ஆண்மை, வல்லமை, ஊக்கம் என்று அர்த்தம் சொல்லலாம். இந்தத் தினங்களிற் பூஜிக்கப்படும் தெய்வம் அந்த ஆண்மை அல்லது வல்லமையின் உருவமேயாம். இவ்வாறு பூஜிக்கப்படும் சக்தி அல்லது வல்லமையே உலகத்தின் சிருஷ்டிக் கிரமத்தில் அதன் ஊடே நிகழும் மகாசைதன்யமாம். மனிதர்களின் காரியங்களை யெல்லாம் நடத்துவது அதுவேயாகும். யாவரையும் ரக்ஷிக்கும் திறனுடையது அதுவே. அதன் கிருபையை ஒவ்வொருவரும் ஏதேனுமொருவகையில் நாடல் அவசியமாகும். அந்தணர் முதலான துவிஜர்கள் தினந்தோறும் ஆவாகனம்



செய்து 'காயத்ரீ' எனத் தொழுவதும் இந்தச் 'சக்தி' யையேயாம். இவ் வுலகில் எந்தக் காரியஞ் செய்யவேண்டியிருப்பினும் அதற்குச் சக்தி வேண்டும். ஜனங்கள் ஏதேனுமொரு காரியத்தைச் செய்யவோ அல்லது எதனையேனும் ஸாதிக்கவோ தமக்குச் 'சக்தி யில்லை' என்று முறையிடுவதை கேட்டிலோமோ? இவ்வாறாக நமக்கு இஷ்டமிருப்பினும் இல்லாவிடினும், நமக்குத் தெரிந்தும் தெரியாமலும், மானிடரான நாம் அனைவரும் இந்தத் தேவியின் ('சக்தி'யின்) ஸகாயத்தை ஏதேனுமொருவிதமாக விரும்புகின்றோம், பிரார்த்திக்கின்றோம்; அவளுடைய தயவு நமக்கு அவசியமாய் வேண்டியிருக்கின்றது. ஆகவே, ஸ்வபாவத்தில் (இயற்கையில்) அமைந்துள்ள இந்தத் தெய்வ சைதன்யத்தை (சக்தியை)ப் பூசிப்பது ஆவசியகமென்று ஏற்படுத்தியது மேன்மையான காரியம். இத்தகைய பூர்வாசாரத்தை யொருபொழுதும் கைவிடாது மிகுந்த பக்தியோடும் சிரத்தையோடும் நாம் அநுஷ்டிப்பது கடமையாகும்.

### ஸரஸ்வதீ பூஜை

இந்த உற்சவத்தின் கடைசி தினமான பத்தாம் நாள தேவீ பூஜையில் பிரதான தினமாகும். இந்த உற்சவத்தின் 6 வது அல்லது 7-வது தினத்தில் மூலம் என்னும் நக்ஷத்திரம் உச்சமாயிருக்கும்பொழுது ஸரஸ்வதியை ஆவாகனம் செய்வது வழக்கம். இது கலைமகள் பிறந்த நாள் என்பது கொள்கை. அஃதாவது, அவள் ஸ்தூல வடிவங்கொண்ட தினமாம்; இந்த ஸரஸ்வதீபூஜை சிரவணம் என்னும் நக்ஷத்திரம் உச்சமாகும் தினத்தில் பூர்த்தி செய்யப்படும். இது சாதாரணமாய் இவ் வுற்சவத்தின் 10 ஆம் நாளாகும். ஸரஸ்வதியை ஆவாகனம் செய்யும் காலத்து நக்ஷத்திரம் மூலம் (ஆரம்பம்) ஆகும். அஃதாவது, ஒரு புஸ்தகம் அல்லது ஒரு சாஸ்திரத்தைப் படிப்பதற்கு ஆரம்பம் செய்வது என்று அர்த்தமாகின்றது. இதனால் அறிந்து கொள்வது என்னை யெனின், நாம் வித்தையை நாடின், முதன் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும், வித்தியாப்பியாசம் அடிப் படையிலிருந்து ஆகவேண்டும்; மத்தியிலோ எங்கோ முறைதுறையின்றி ஆரம்பிப்பது கூடாது என்பதேயாம். அதம பக்ஷம் வருஷத்திற் கொரு

முறையேனும் ஒரு புதிய விஷயத்தை, புதிய சாஸ்திரத்தை, புதிய புத்தகத்தைப் படிக்கவும், ஆராயவும் ஆரம்பித்து, மறு வருஷம் அந்தத் தினம் வருவதற்குள் அதனை நன்றாய்க் கற்று ஊக்கத்துடன் அதனில் உழைத்துத் தேர்ந்து, வேறு கிரந்தத்தை யாரம்பிக்கவும் சித்தமா யிருக்க வேண்டும் என்னும் கருத்து புத்திக் கூர்மையுள்ளவர்களுக்கு இதனாற் புலப்படு மன்றோ? கல்வி கற்பதற்கு மிகவும் அனுகூலமான நல்ல முறை இதுவே யன்றோ? இவ்வாறு ஒருவன் வருஷந்தோறும் ஒவ்வொரு புதிய சாஸ்திரத்தை யப்பியசித்துப் பெரிய பண்டிதனாய் விளங்குதல் கூடும். இந்தக் கருத்தின் விசேஷத்தைக் கவனிக்கக் கவனிக்க நம் முன்னோர்களின் உத்தேசத்தின் உபயோகமும் பெருமையும் நன்கு விளங்குகின்றன.

‘மூலம்’ என்னும் நக்ஷத்திரத்தில் ஸரஸ்வதீ பூஜையை யாரம்பித்து இடையில் ஒரு தினமும் தவறாது பத்தாம்நாள் சிரவண நக்ஷத்திரம் வரைக்கும் தினந்தோறும் செய்து வர வேண்டு மென்பது விதி. சிரவணம் என்றால் (ஆசாரியரது மொழிகளைக்) ‘கேட்டல்’ என்று அர்த்தமாகும். அன்றியும், சிரவணமென்பது வித்தியாப்பியாசத்திற் குரிய நால்வகைச் சாதனங்களுள் (சிரவணம், மனனம், நிதித்தியாஸம், ஸ்வானுபவம் என்னும் நான்கனுள்) முதலாவதாகும், இவ்விடத்து அந்நான்கினையும் குறிப்பதற்குப் பதிலாக முதலாவதான சிரவணத்தை மாத்திரம் குறித்தபோதிலும், ஏனைய மூன்று முறைகளையுங் கூடச் சேர்த்துச் சொன்னதாகவே கொள்ளல் தகும். ஸரஸ்வதீபூஜையைச் சிரவண நட்சத்திரம் வரையிற் செய்ய வேண்டு மென்பதனான் மூலா நக்ஷத்திரத்தில் ‘ஆரம்பித்த படிப்பை அது முடியுமளவும் அதற்குரிய சாதனங்களனைத்தையுங்கொண்டு, அஃதாவது படித்தல், ஆசாரியரது வியாக்கியானம் முதலிய மொழிகளின் விஷயத்தை மனத்தில் ஆலோசித்தல் (ஊக்கத்துடன் ஆராய்தல்), உறுதியான ஞானம் ஸம்பாதித்தல், அதனை யாசரித்தல் (அதற்குத் தக்கபடி நடத்தல்) என்னும் இவ்விதங்களாக அந்தப் படிப்பைப் பூர்த்தி செய்யவேண்டு மென்பதாயிற்று. கட்டுக் கதைபோலவும் மூட பக்திக் குரியதுபோலவும் தோன்றுகின்ற இவ் வுற்சவத்தில் இவ்வளவு பெரிய அரும்பொருள் நீதி யடங்கி யிருக்கின்றது.



## புஸ்தக பூஜை

கல்விக்கு அறிகுறியான ஸ்தூலவடிவம் எவர்க்கும் எளிதிற் கிடைக்கக் கூடியதா யிருக்கின்றது. அஃதாவது, புத்தகமே யாம். ஆனதுபற்றி இந்த நவராத்திரிப் பண்டிகையின் கடைசியில் புத்தகங்களைப் பூசிப்பது வழக்கமாயிற்று. இது மிகவும் நல்ல வழக்கம், வெகு அநுகூலமானது; மூலைமுடுக்குகளிற் கிடக்கும் பழம் புத்தகங்களும் ஏடுகளும் தேடி யெடுக்கப்படுகின்றன; அவற்றின்மீது படிந்துள்ள தூசியைத் தட்டித் துடைத்துச் செப்பனிட்டுப் பூஜையில் அவைகளை வைக்கிறார்கள். இந்த வழக்க மில்லாவிடின் நம் நாட்டிலுள்ள பல அருமையான ஓலைப் புத்தகங்கள் கரையான் முதலியவைகளுக்கு இரையாய் நசித்திருக்கும். அரிய பெரிய பொருள்களடங்கிய வித்தியாநிதிகளின் பிரயோஜனம் நமக்கு எட்டாமற் போயிருக்கும்; கல்வியைக் காப்பாற்றித் தலைமுறை தலைமுறையாய் வைத்து ஜனங்களுக்கு உதவுவதற்குப் பயபக்தியுடன் செய்யப்படும் இந்தப் புஸ்தக பூஜை எவ்வளவு உபயோகமா யிருக்கின்றது! நாம் தாமஸ குணம் மேலிட்டுச் சோம்பேறிகளாய்க் கெட்டலைவோமென்று தமது ஞானதிருஷ்டியின் மகிமையினாலுணர்ந்த ரிஷிச்சிரேஷ்டர்கள் வித்யாவிஷயத்தில் நமக்குச் சிரத்தை யூட்டுமாறு செய்துள்ள பல நல்ல ஏற்பாடுகளுள் இந்தப் புஸ்தக பூஜையு மொன்றாம்.

## துர்க்கா பூஜை, ஆயுத பூஜை

‘அறிவே சக்தி, ஞானமே பலம்’ என்பது யாவருக்குந் தெரிந்தவிஷயமாதலின், நாம் ஸரஸ்வதியை, அஃதாவது, கலைமகளை இயற்கையி லமைந்துள்ள மூன்று வல்லமைகளுள் (திரிசக்திகளுள்) ஒன்றெனத் தொழுவது அதிசயமாகாது. இந்த நவராத்திரி யுற்சவத்தில் சக்தியை (வல்லமையை) இன்னுமொரு விதமாகவும் (ரூபமாகவும்) தொழுவதுண்டு. அந்த ஸ்வரூபம் துர்க்கை அல்லது காளி எனப்படும். இதனை யனுசரித்து வங்காளத்தில் இந்த நவராத்திரிப் பண்டிகையை ‘துர்க்கா பூஜை தினங்கள்’ என வழங்குகின்றார்கள். வீரம், தைரியம், பராக்கிரமம் முதலியவைகளுக்குத் துர்க்கை யறிகுறியாவாள். இந்தச் சக்தியை யாராதிக்குங்கால் உபயோகப்படும் பதார்த்தங்

களை. இக்குணங்களை யுணர்த்துகின்றன. அவை சரீரம் திடப்பட்டு நரம்பு சதை முதலியன உறுதி யுறுவதற்கேற்றவைகளாகவாவது, போர்த் தொழிலில் ஆயுதங்களை யுபயோகிப்பதன் பயன்களாகவாவது இருக்கும். ஆனால், துர்க்கைக்கு மிருகங்களைப் பலி கொடுப்பதும், இறைச்சி, மதுவர்க்கம் (கள், சாராயம் முதலியன ஆகிய இவற்றை) அவளுக்கு முக்கிய நிவேதனமாகக் கொடுப்பதும், தாமஸத் தன்மை வாய்ந்த பூஜை யென்றும், அது நீசமானது, தகாதது, ஆதலின் அத்தகைய பூஜையைத் தவிர்க்கவேண்டு மென்றும் நமது சாஸ்திரங்கள் தெளிவாய் விதித்திருக்கின்றன. இவற்றிற்குப் பதிலாக, உளுந்து, பயறு முதலியவற்றாற் செய்த பணியாரங்களையும் இன்னும் இவை போன்ற ராஜஸ குணத்திற்குரிய பதார்த்தங்களையும் நிவேதனம் செய்யலாமென்று ஸாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தச் சக்தி இத்தேயத்தில் அநேகம் பெயர்களால் வழங்கப்படுகின்றது. அவற்றுள் துர்க்கை, பத்ரகாளி, வைஷ்ணவீ, விஜயை, முகுந்தை, சண்டிகை, மாதவீ, கிருஷ்ணை, நாராயணீ, கன்னிகை, மாயை, ஈசானீ, சாரதை, அம்பிகை என்பன சிலவாம். கல்விக்குரிய தேவதையாகிய ஸரஸ்வதிக்கு அறிகுறியாய்ப் புத்தகங்களைக் கொள்வதுபோல, சரீர பலத்திற்கும் போர் வீரத்திற்கும் உருவமா யேற்பட்ட துர்க்கைக்கு ஸ்தூல அறிகுறியாய் ஆயுதங்களைக்கொண்டு, அவ்வாயுதங்களை இந்த உற்சவத்தின் கடைசித் தினத்திற் பூசிப்பது வழக்கம். ஆயுதங்களை நன்றாய்த் துலக்கி அவற்றிற்குக் குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலியன இட்டு அலங்கரித்துத் தூபதீபங்கள் கற்பூர ஹாரதிகள் முதலிய உபசாரங்கள் செய்து இந்துக்களனைவரும் தொழுவார்கள். அன்றையதினம் பழைய கத்தி கேடயம் முதலிய இரும்பு, எஃகு ஆயுதங்கள் எண்ணெய்காணும்; பளபளப்பாய்ப் பிரகாசிக்கும்.

சூரத்தன்மை, உக்கிரம், யுத்த ஸாமர்த்தியம், தேஹ பலம் முதலியவைகளைத் துர்க்கையின் ஸ்வரூபம் குறிக்கின்றமையின், இந்தியாவில் எங்கும், முக்கியமாய் வட இந்தியாவிலும் ஸ்வதேச ராஜாங்கங்களிலும், ஜனங்கள் ஆயுதபூஜை தினத்தில் வெகு உற்சாகத்துடன் மும்முரமாய்த் தத்தம் புஜபலபராக்கிரமங்களைப் பிரகடிப்பார்கள்; எங்கே பார்த்தாலும் குஸ்தியும்,



கஸரத்தும், வேடிக்கையும் பந்தயமுமா யிருக்கும். அன்றைய தினத்தில் தம் திறமையைக் காண்பிக்கும் கருத்துடன் ஜனங்கள் வருஷமெல்லாம் பயிலுவார்கள். இது தேகப் பயிற்சிக்காக ஏற்பட்டதோர் நியமனமாம்.

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of the 'Arya,' Madras.*

# THE FLY

## ஈக்களுற்பத்தியும் அவைகள் செய்யும் கெடுதியும்

சுந்தரம் — எங்கே பார்த்தாலும் ஈ பறக்கிறதே — அது எப்படி உண்டாகிறது?

மாணிக்கம் — ஆகா, சொல்கிறேன் கவனமாய் கேள். ஈக்கள் சாணிக் குவியல்கள், அழுகிப்போன பண்டங்கள், குப்பை கூளங்கள், நாற்ற மெடுத்த மாமிசங்கள் செத்த பிணங்கள், மலம் முதலியவைகளிலே தான் முட்டை யிடுகின்றன.

முட்டையிலிருந்து புழுக்கள் வெளியானதும், அவைகள் மிகுந்த பசியோடிருப்பதால் அங்கேயுள்ள ஆகாரங்களை மிக்க ஆவலோடு தின்று, சுமார் 11 வளையங்களுள்ள சிறு புழுவாக மாறுகிறது.

பிறகு இப்புழு கொஞ்சங் கொஞ்சமாகச் சுருங்கிக் கொண்டேவர அதன் மேல்தோலே ஓர் உறையாக மாறி புழுவை மூடிக்கொள்ளுகிறது. அப்போது, அதற்குப் பசி யில்லை. செத்த பிணம்போல் சலனமற்றுக் கூட்டுக்குள் தூங்கும். இப்படி உறைக்குள் புழு தூங்கினபோதிலும் கால்கள், தலை, கண்கள் முதலியவைகள் உண்டாகிக் கொஞ்சநாள் கழித்து உறையை கிழித்துக்கொண்டு அழகிய சிறு ஈயாக வெளியே வரும். உறையிலிருந்து வெளி வந்த தருணத்தில் சூரிய வெளிச்சத்தால் ஈக்குக் கண்கள் கூசும், பிறகு நன்றாய்த் தெரியும். ஈ எவ்வளவு தூரம் பறந்தாலும் அதற்கு இளைப்புண்டாகாது.

சுந்தரம் — இதோ ஓர் ஈ இருக்கிறது பார்.

மாணிக்கம்—சரி அதை இந்தக் கண்ணாடி கொண்டு நன்றாய்க் கவனித்துப் பார்த்து அதன் அவயவங்களை ஒன்றுகூட விடாமல் சொல் பார்ப்போம்.

சுந்தரம் — கால்கள், தலை, உடல், இரக்கைகள் இருக்கின்றன.

மாணிக்கம் — அவ்வளவுதானா, இன்னும் நன்றாய்ப் பார்.

சுந்தரம் — ஆம். ஆம், பொறு பொறு சொல்லுகிறேன் தலையில் கண்களிருக்கின்றன. வாயில் ஏதோ சில உறுப்புகளிருக்கின்றன. உடலிலும் கால்களிலும் மெல்லிய மயிர்களிருக்கின்றன. இவ்வளவுதான் எனக்குத் தெரிகிறது; இன்னும் ஏதாவதிருந்தால் தயவு செய்து சொல்.

மாணிக்கம் — சுந்தரம்,வாயில் ஏதோ உறுப்புகளிருக்கிறதாகச் சொன்னாயல்லவா. அவைகள்தான் ஈயின் உதடுகள், அவை எப்படி யிருக்கின்றன? நன்றாய்ப் பார். துதிக்கைபோல் குழையாக இருக்கின்றன. இவற்றைச் சுருக்கவும் நீட்டவும் கூடும். ஈக்கள் உட்காருகிற ஆகாரத்தின்மேல் தன் எச்சிலைச் சொட்டவிட்டு ஆகாரம் ஊறினபின் அதன் சத்தை உறிஞ்சும், ஈக்கள் உட்காராத இடமே கிடையாது; ஆகையால் நாம் உண்ணும் உணவுப் பொருள்களின்மீது ஈக்களை உட்காரவிடக் கூடாது.

சுந்தரம் — ஏன்?

மாணிக்கம் — சுந்தரம் அதோ பார் அவ்விடத்தில் என்னமோ கிடக்கிறதே அது என்ன?

சுந்தரம் — யாரோ, அவ்விடத்தில் கோழையாக எச்சிலைத் துப்பியிருக்கிறார்கள்; அதன்மீது ஈக்கள் ஏராளமாய் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

மாணிக்கம் — சரி, இந்த எச்சில் துப்பினவன், எந்த வியாதியால் பீடிக்கப்பட்டவனோ அந்த வியாதி மற்றவர்களுக்கும் ஈக்களால் பரவிவிடும்.

சுந்தரம் — இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. அவ்வியாதி எப்படி ஈக்களால் மற்றவர்களுக்குப் பரவும்?



மாணிக்கம் — தொத்து வியாதிகளாகிய வாந்தி பேதி, விஷஜுரம், ரத்தபேதி, அதிசாரம், கண்ணோய், க்ஷயம் முதலிய வியாதியுள்ளவர்களின் தேகத்தினின்றும் கழிவாகும் மல ஜலம் எச்சில் முதலியவைகளில் அந்தந்த வியாதியை யுண்டுபண்ணும் விஷக் கிருமிகள் ஏராளமா யிருக்கின்றன. அவைகளின்மீது ஈக்கள் ஆகாரத்தின் பொருட்டு உட்கார்ந்து, சாப்பிடுவதால் கிருமிகளில் சில, ஈக்களின் தேகம் கால்கள் சிறகுகள் முதலியவைகளில் ஒட்டிக்கொள்ளுகின்றன. ஈக்கள் ஒரே யிடத்திலிராமல் பல வஸ்துக்களின்மீது ஓடுந் தன்மையுள்ளவை, நாம் உண்ணும் ஆகாரங்களின்மீதும் பானங்களின்மீதும் உட்கார்ந்து எச்சிலை ஆகாரத்தின்மீது சொட்ட விடுவதினால், எச்சிலிலுள்ள கிருமிகளும், கால்கள், சிறகு, உடல் முதலியவைகளில் ஒட்டிக்கொண்டுவந்திருக்கும் கிருமிகளும் நம் உணவில் தங்கும்படி செய்கிறது. இவற்றையெல்லா மறியாமல் நாம் உணவையருந்திவிட்டால் கிருமிகள் உணவோடு நம் வயிற்றில் சென்று இரத்தத்துடன் கலந்து ஒன்றுக்காயிரமாகப் பெருகி மேல் சொன்ன வியாதிகளைச் சுலபமா யுண்டுபண்ணி விடுகின்றன.

சுந்தரம் — ஆஹா, என்ன ஆச்சரியம். இந்த அற்ப ஜந்துக்களால் மனிதர்களுக்கு எவ்வளவு அபாயகரமான கெடுதிகள் விளைகின்றன. இவற்றாலுண்டாகும் அபாயங்களைத் தடுக்க ஏதாவது உபாயமுண்டா மாணிக்கம்.

மாணிக்கம் — ஆஹா, அநேக உபாயங்களிருக்கின்றன. அவைகளையும் சொல்லி விடுகிறேன் கவனமாய்க் கேள்.

1. நாம் உண்ணும் உணவுகளையும் பருகும் பானங்களையும் பத்திரமாய் மூடி வைத்திருப்பது.

2. ஈக்கள் முட்டையிட்டு வர்க்க விருத்தி செய்வதற்கேதுவான சாணிக் குவியல் குப்பை கூளங்கள் முதலியவைகளை வீட்டை விட்டு அதிக தூரத்தில் கொண்டு போய், புதைக்கவோ அல்லது சுட்டெரிக்கவோ செய்தல் வேண்டும். குறைந்தது 6-7 நாட்களுக் கொருமுறையேனும் இப்படிச் செய்யவேண்டும். ஒருவாரத்திற் கதிகம் போட்டு வைத்தல் கூடாது.

3. வீடுகளுக்குப் பக்கத்தில் ஆடு மாடு முதலியவைகளைக் கட்டி வைத்தல் கூடாது.

4. பொதுக் கக்கூசுகளையும் வீட்டுக் கக்கூசுகளையும் சுத்தமாய் வைக்கச் செய்தல்.

5. சாக்கடைகளையும் ஜலதாரைகளையும் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ளல்.

6. கடைகளில் ஈக்கள் மொய்க்கும் பதார்த்தங்களை வாங்கிப் புசியாமலிருத்தல். அவ்விதப் பண்டங்களை விற்பனைசெய்யும் வியாபாரிகளைப்பற்றிச் சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி அவற்றை விற்காமல் தடுத்தல்.

7. வீடுகளிலுள்ள சிலந்திப் பூச்சிகளைக் கொல்லாமலும் அவற்றின் கூட்டைக் கலைக்காமலுமிருத்தல். (சிலந்திகள் ஈக்களைக் கொல்லும்)

8. வீட்டிலுள்ள சிறு குழந்தைகள் ஈக்கள் மொய்க்கும் பதார்த்தங்களைச் சாப்பிட்ட பின் குழந்தைகளின் விரல்களில் ஒட்டியிருக்கும் பதார்த்தக் கசிவுகளின் மேல் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தால் குழந்தைகள் தங்கள் விரல்களை சூப்புவதற்கு முந்தி கைகளைச் சுத்தம்செய்துவிட வேண்டும். ஆகிய இவ்வித உபாயங்களால் ஈக்களால் உண்டாகும் தீங்குகளைத் தடுக்க முடியும்.

சுந்தரம் — மாணிக்கம், ஈயின் ஜீவிய சரிதமும் அதனாலுண்டாகும் கெடுதியும் அக் கெடுதியைத் தடுக்கும் முறையையும் எனக்கு நன்றாய்ச் சொன்னதற்காக என் மனமுவந்த வந்தனம் புரிகிறேன், போய் வருகிறேன்.

N. CHIDAMBARA GOUNDAN,
*Teacher, Board Panchama Elementary School,*
*Perundurai, Erode Taluk,*
*Coimbatore District.*



# TIT-BITS

## விநோதக் கூற்றுக்கள்

### யார் பெரிய மூடன்?

இரண்டு சிநேகிதர்கள் ஒருநாள் ஒரு தெருவில் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது தொண்டு கிழவி ஒருத்தி இவர்களுக்கு வந்தனம் செய்தாள். அவள் யாருக்கு வந்தனஞ் செய்தாள் என்பதைக்குறித்து இருவரும் வாதாடினார்கள். பிறகு அந்தக் கிழவியையே கேட்போம் என்று தீர்மானித்து, விரைந்து சென்று, கிழவியை யணுகி, 'நீயாருக்கு வந்தனஞ் செய்தாய்' என்று கேட்டார்கள். கிழவி, 'உங்களில் யார் பெரிய மூடனோ அவனுக்குத்தான் செய்தேன்' என்றாள். கிழவி கூறியதைக் கேட்டு ஒவ்வொருவனும், 'நான்தான் பெரிய மூடன், நான்தான் பெரிய மூடன்' என்று சொல்லிச் சண்டையிட்டார்கள். இவர்கள் சண்டை யிடுவதைக் கண்ட கிழவி 'நீங்கள் வெறுமனே "நான்தான் முழுமூடன்" என்று சொன்னால், எப்படி? உங்களுடைய விருத்தாந்தங்களைச் சொல்லுங்கள், பிறகு நான் தீர்மானஞ் சொல்லுகிறேன்' என்றாள். அதில் முதலாவான் தன் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

'கோடைக்காலத்தில் ஒருநாள் ஒரு தோட்டத்தில் நான் சந்தோஷமாய் உலாவிக்கொண்டே யிருந்தேன். வெய்யிலின் கொடுமையால் எனக்குக் களைப்புண்டாக நித்திரை செய்ய வேண்டும் என்று எண்ணி, அத் தோட்டத்திலேயே கிணற்றிற்கருகே கட்டியிருந்த மேடையின்மேல் படுத்து நெடுநேரம் நித்திரை செய்தேன். எனக்கு விழிப்பு வந்தவுடன் என்னுடைய தலைப்பாகை கிணற்றில் விழுந்து கிடந்ததைக் கண்டேன். யான் காலிலணிந்துகொண்டிருந்த பாதரக்ஷையை யாரோ அபகரித்துக்கொண்டார்கள். என்ன செய்வதென்று எனக்குத் தோற்றவில்லை. எப்படியாகிலும் வீடுபோய்ச் சேர்வோம் என்று தீர்மானித்து, தலையின்மீது கையை வைத்துக்கொண்டு காலில் பாதரக்ஷையில்லாமல் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டே யிருந்தேன். யான் வருவதைக்கண்ட என் வேலைக்காரி உடனே வீட்டிற்குள் சென்று, 'நம்முடைய எஜமானனுக்கு ஏதோ ஆபத்து

நேர்ந்தது போல் காண்கிறது. அவர் முகத்தில் கையால் அறைந்துகொண்டு காலில் பாதரக்ஷை யில்லாமல் ஓடி வருகிறார்' என்று சொன்னாள். இதைக் கேட்ட என் வீட்டிலுள்ளார் அனைவரும் கோவென்று அழத் தொடங்கினார்கள். நான் வீட்டுக்குள் சென்றபோது அழுகுரல் கேட்டு, நானும் அவர்களுடன் கூடிக்கொண்டு அழுதேன். எங்கள் வீட்டாரும் யானும் அழுவதைக் கேட்ட அண்டை அயலிலுள்ளவர்கள் எல்லாம் எங்களுடன் சேர்ந்து தாங்களும் கோவென்று அழுதார்கள். இவ்வாறு ஒரு நாழிகை வரையில் அழுது ஓய்ந்தவுடன், 'நண்பனே யார் இறந்துவிட்டது?' என்றார்கள். யான் அதற்குப் பதிலாக, 'எனக்கொன்றும் தெரியாது, என் வீட்டாரைக் கேட்க வேண்டும்' என்றேன். இதைக் கேட்ட வேலைக்காரி, 'தாங்கள் ஓடி வருவதைப்பார்த்து, தங்கட்கு ஏதோ ஆபத்து நேர்ந்தது என்று நாங்கள் எல்லோரும் கோவென்று அலறி அழுதோம்' என்றாள். பிறகு யான் தோட்டத்தில் நடந்தவைகளைச் சொன்னேன். இதைக்கேட்ட அயலார் எல்லாம் என்னை முழுமூடன் என்று பரிகசித்தார்கள். ஆகையால் நான்தான் பெரிய மூடன்' என்று தன் கதையைச் சொல்லி முடித்தான்.

இரண்டாவது மூடன் தன் கதையைச் சொல்வானாயினன்.

'என்னுடைய மாமனார் என்னைத் தம்முடைய வீட்டிற்கு விருந்துண்ண வரவேண்டும் என்று விரும்பினார். அப்போது என்னுடைய நண்பர்கள், 'மாமனார் வீட்டில் வெகு ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். மருமகன் மாமனார் வீட்டில் போஜனம் பண்ணும்போது சற்று ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். அதிகமாய்ச் சாப்பிடுவது உசிதமல்ல' என்று போதித்தார்கள். அப்போதனையைக் கேட்டுக்கொண்டு என்னுடைய மாமனார் வீட்டிற்குச் சென்றேன். யான் வருவேன் என்னும் களிப்பினால் என் மாமனாரும் அவர் வீட்டிலுள்ளவர்களும் பலவித பக்ஷணங்களும், உணவுகளும் செய்திருந்தார்கள். வேளையானதும் எல்லாம் கொண்டுவந்து வட்டித்தார்கள். அவைகளின் வாசனையினாலே என் வாயில் தண்ணீர் ஊறத் தொடங்கிற்று. ஆயினும் எனது நண்பர்கள் சொல்லிய புத்திமதிகளை எண்ணிக்கொண்டு மிகக் கொஞ்சந்தான் புசித்தேன். நான் வயிறார உண்ணாததைக்கண்ட எனது மாமனார் முதலியவர்கள் செவ்வையாய் புசிக்கும்படி வற்புறுத்தினார்கள். யான் அவர்கட்குப் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி தடுத்துவிட்டேன். அன்று பட்டினி என்றே சொல்லவேண்டும்.



சூரியன் அஸ்தமனமாயிற்று. பசியோ பொறுக்க முடியவில்லை. இரவில் எல்லாரும் தூங்கினபிறகு மெதுவாய் சமயலறைக்குள் சென்று ஏதாவது பாத்திரங்களில் இருக்குமோ என்று தேடிப் பார்த்தேன். ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு பாத்திரத்தில் கொய்யாப்பழங்களிருந்தன. அவைகளை வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு விரைவாக எனது படுக்கை யறைக்குத் திரும்பி வந்தேன். வரும்போது கால் தடுமாறி கீழே வீழ்ந்தேன். வீழ்ந்த சத்தம் கேட்டதும் வீட்டிலுள்ளவர்கள் எல்லாம் உருண்டு புரண்டு என் படுக்கை அறையண்டை வந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன் விரைந்து எழுந்து படுக்கையில் படுத்துக்கொண்டு, கையிலுள்ள பழங்களை எல்லாம் வாயில் துறுத்து வாயை இறுக மூடிக் கொண்டேன். மாமனார் முதலியவர்கள் என் அறைக்குள் வந்து நான் படுத்துக்கொண் டிருப்பதையும், என் கன்னம் புடைத்திருப்பதையும் கண்டார்கள். 'கன்னம் ஏன் புடைத்திருக்கிறது?' என்று என்னைக் கேட்டார்கள். வாயைத்திறந்தால் கொய்யாப்பழம் வெளிப்பட்டுவிடுமே என்னும் எண்ணத்தினால் பதில் ஒன்றும் சொல்லவில்லை. நான் பதில் சொல்லாதிருந்தமையால் அவர்கட்குக் கவலை மேலிட்டது. என்னுடைய மாமியார் முதலியவர்கள் யான் ஏதோ நோயால் வருந்துவதாகத் தீர்மானித்து, உடனே வைத்தியனை அழைத்து வரும்படி ஆளை அனுப்பினார்கள். வைத்தியர் வந்து, நான் ஒன்றும் பேசாமலிருப்பதைக் கண்டு, என் கன்னத்தில் ஏதோ வீக்கம் கண்டிருப்பதாகவும் அந்த வீக்கத்தைக் கத்திகொண்டு அறுத்து ஆற்றவேண்டும் என்றும் அபிப்பிராயப்பட்டார். அப்போதும் நான் ஒன்றும் பேசவில்லை. மாமியார் மாமனார் முதலானவர்கள் உடனே வீக்கத்தை அறுத்து நோயைக் குணப்படுத்தவேண்டும் என்றார்கள். வைத்தியர் உடனே ஒரு கூரிய கத்திகொண்டு என் கன்னத்தில் மிக ஆழமாகக் கீறினார். அவர் கீறிய வேகத்தில் என் வாயிலிருந்து பழச்சாறு வெளிப்பட்டது. இதைக்கண்ட வைத்தியர் மற்றொரு கன்னத்திலும் ஆழமாக

அறுத்தார். அக்கன்னத்திலிருந்தும் பழச்சாறு வெளிப்பட்டது. வைத்தியர் என்னுடைய பந்துக்களைப்பார்த்து, 'பார்த்தீர்களா புண்ணினின்றும் சீழ் அபரிமிதமாக வடிவதை' என்று தம்முடைய ஆற்றலை புகழ்ந்துகொண்டார். இதுவரையிலும் ஒன்றும் பேசாமலிருந்த எனக்கு அடக்க முடியாத கோபம் பிறந்தது. உடனே என்வாயிலிருந்த பழங்களை உமிழ்ந்துவிட்டு, 'பழத்தின் சாற்றிற்கும் புண்ணின்று வடியும் சீழிற்கும் வித்தியாசமறியமாட்டாத நீ எவ்வாறு வைத்தியனுவாய்? நீ பெரிய மூடன்' என்று கடுங்கோபத்துடன் சொன்னேன். என்னுடைய பந்துக்கள் யான் அறிவீனத்தினுல் செய்த செய்கைக்காகச் சிரித்து நீதான் எல்லாரிலும் சிறந்த மூடன் என்று கைகொட்டி நகைத்தார்கள். ஆதலால் நானே பெரிய மூடன், எனக்கே நீ செய்த வந்தனம் உரியது என்று' சொன்னுன்.

இருவர் சொன்னவைகளையும் கேட்ட கிழவி இரண்டாவானைநோக்கி, 'உன்னுடைய சிநேகிதன் முழுமூடன். என்பதற்கு ஐயமில்லை. அவனைவிட நீ பெரிய மூடன் ஆகையால் யான் செய்த வந்தனம் உனக்கே உரியது' என்றுள். என்றவுடன் நண்பர்க்குள் விளைந்த சண்டையும் நீங்கிற்று.

ஒரு தமிழ்ப்புலவர்.

## மாண்டிஸோரி யம்மை முறை

அனேக ஆண்டுகளாக, மேல்நாட்டில், பிள்ளைகளின் மனேபாவத்தை விருத்தி செய்யவேண்டியதுதான் உண்மையான கல்வியின் நோக்கமென் றுணர்ந்து, அதற்குத் தக்கவாறு கல்விகற்பிக்கும்முறையை புதிது புதிதாய்க் கண்டுபிடித்து உலகிற்கு உபதேசித்த கல்விமான்களுள் ப்ளேடோ, ருஸ்ஸோ, ப்ரோபல் முதலியோர் மிக சிரேஷ்டமானவர்கள்.

இவரைப் பின்பற்றி மேன்மேலும் இத்துறையி லுழைத்தவர் பலர். இவர்களுள் வைத்தியத்திற் சிறந்த மாண்டிஸோரி



என்ற அம்மை, தன் வைத்தியப் பயிற்சியாலும் பழக்கத்தினுலும் பலமற்ற குழந்தைகளை பரீக்ஷித்துப் பரிசீலனை செய்து, நன்குணர்ந்து, பிள்ளைகட்குக் கற்பிக்க ஒரு சிறந்த முறையைக் கண்டு பிடித்திருக்கிறுர். இது இடாலி, அமெரிகா, இங்லண்ட் முதலிய அநேக இடங்களில் 'மாண்டிஸோரி முறை' என வழங்கி வருகிறது.

ஒருமனிதன் மற்ருெருவனுக்குக் கல்வி புகட்டமுடியாதென்பதுதான் இம்முறையின் முக்கியநோக்கம். ஆகவே, குழந்தைகளை, மூன்றுவயது முதல், கற்றுக்கொள்வதற்கும், கற்கவேண்டிய விஷயங்களைத் தாங்களே தெரிந்து தேர்ந்து எடுத்துக் கொள்வதற்கும், சுயேச்சையாய் விட்டுவிடவேண்டும். சமயோசிதமாய் வழி காட்டுவதுதான் ஆசிரியனின் கடமை.

தாயார் எப்படிக் குழந்தையின் ஆகாரத்தை அதற்காகத் தான் உண்டு ஜீர்ணித்துக் கொடுக்க முடியாதோ, எப்படி குழந்தை தானே உண்டு ஜீர்ணித்துக் கொள்ள வேண்டுமோ, அவ்விதமே கல்வியென்ற உணவை குழந்தை தானே ஆசிரியனுகவும் தானே மாணக்கனுகவு மிருந்து, உண்டு ஜீர்ணித்துக் கற்கவேண்டுமே யொழிய ஆசிரியன் கல்வியை வெண்ணெய் போல் உருட்டித்திரட்டி, வாயிலும் போட்டு, உள்ளேயுஞ் செலுத்தி ஜீர்ணமும் செய்து கொடுக்க முடியாது.

ஆகவே, இம்முறை வழங்கி வரும் ஸ்கூல்களில், நன்னடத்தையும் ஒழுங்கும், உபாத்தியாயர் பிரம்பு உபயோகிப்பதனுலாவது, வேறு எந்தக் கட்டுப்பாட்டாலாவது ஏற்படுவதல்ல. ஆனுல், அனேகவித கிண்டர்கார்ட்டன் தொழில்கள் மூலமாயும், ஆசிரியனின் சாமர்த்தியத்தினுலும், பிள்ளைகட்கு நடக்கும் பாடத்திலோ, காரியத்திலோ, ஆனந்தமும், ஆவலும் ஆசையும் உற்சாகமும் மேன்மேல் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஊக்கமும் மனேவிருத்தியும் உண்டாகும்படியும், சரியான காரியங்களிலும் உண்மையான விஷயங்களிலும் நியாயமான வழிகளிலும் மனம் உறுதியாயும் சுபாவமாயும் செல்லும்படியும், தப்பான பாதையில் மனம் திரும்பாதபடியும் பிள்ளைகளின் நடத்தையும் ஒழுங்கும் தானே இயற்கையாக ஏற்படும்.

பிள்ளைகள் சுவபாவமாக என்ன எண்ணுகிறார்களோ, செய்கிறார்களோ, அவற்றைக்கொண்டே அவர்கள் தாங்களே உற்றுநோக்கி, மனமாரக்கவனித்துத் தெளிவாய்க் கற்கும்படி வழிகாட்டுவதே மேலான கற்பிக்கும் முறை என்பது மாண்டிஸோரி யம்மையின் கொள்கை.

S. SUBRAHMANIA IYER,
*Second Assistant,*
*Govt. Panchama Training School,*
*Madras.*

# RAMAYANA BY SWAMI VIVEKANANDA

## சுவாமி விவேகாநந்தர் குறித்த இராமாயணம்

பழைய கிரந்த காவியங்களுள் முதன்மைபெற்றவை இராமாயணம், மகாபாரதம். பாரதத்திலும் முந்தியது இராமாயணம்; ஸ்ரீராமர் காலத்தில் இவ்விந்தியா கொண்டிருந்த பழக்க வழக்கங்களைத் தெள்ளிதில் தெரிவிப்பது. இராம கதையை முதன்முதலில் சம்ஸ்கிருதத்தில் எழுதியவர் 'வான்மீகி.'

தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு இனமறியாத ஒரு இளைஞன் முன்னொரு காலத்தில் வட இந்தியாவில் ஒரு காட்டில் வசித்திருந்தான். திடகாத்திரனான அவன் கடைசியில் வழிபறிக்காரனாகி அக் கானகத்தினூடே போவாரை வழிமறித்து அவரிடமுள்ள பொருளைக் களவாடித் தன் தந்தை தாயரையும், மனைவி மக்களையும் போஷித்துக் காலங் கழித்துவந்தான். ஒருநாள் தேவரிஷியாகிய நாரதர் அவ்வழி போகவே, அவரையும் வழிமறித்தான் அக் கொடியன். நாரதர் அவனைப் பார்த்து, "களவாடிப் பிறரை வருத்துதல் பாபமே யன்றோ? என்னைத் துன்புறுத்துவ தென்னே? பிறரைக் கொன்று பிழைப்பதால் நீ அடையும் பாபத்தை எவர் பொருட்டுச் சேர்க்கின்றாய்?" என்று கேட்டார். அக் கள்வனும் "என் பெற்றோரையும் மனைவி மக்களையும் போஷிப்பதற்கேயாம்" எனக் கூறினான். நாரதர், "அங்ஙனமாயின், அப் பெற்றோரும் உறவினரும் நின் தொழிலால் பெறும் பாபத்தைப் பங்கிட்டுக் கொள்கின்றனரா?" எனலும். அவன், "கொண்டாலும் கொள்வர்" என்று விடை பகர்ந்தான். பிறகு அத் தேவரிஷி அவனை நோக்கி, "வெகு நல்லது. என்னை இங்கு இப்படியே நன்றாய்க் கட்டிவிடு. சற்று உன் வீட்டிற்குப் போய் அவ் வுறவினரைப் பார்த்து நீயுறும் பாபத்தை அவர்கள் பாகங் கொள்கின்றனரா என்பதைக் குறித்து வினவி நிச்சயஞ் செய்து கொள்" என்று கேட்டார். அவ்விதமே, அக் கள்வனும் தன் வீட்டிற்கேகிப் பெற்றோரைப். பார்த்து, "பெற்றோர்களே! உங்களை நான் காப்பாற்றும் விதம் நீங்கள் அறிவீரன்றே" என்றான். அவர்கள் அவ்விதத்தைத் தாங்கள் அறிந்ததில்லையென உரைத்தலும், தினே தினே தான் கொள்ளை யடிப்பதை யவன் தெரிவிக்கவே, அவர்கள் வெருண்டு தங்கள் முன்னர் இருக்க வேண்டாமென வெருட்டினர். அவன் கொள்ளும் பாபத்திற்குத் தாங்கள் மனம் சஞ்சலப் படுவதாகக் கூறினர். அவ் விளைஞன் பிறகு தன் மனையாளிடமணுகி உற்றதுரைத்துத் தனது பாபத்தைப் பகிர்ந்துகொள்ள அவளேனும் உடன்படுவளோ என்று கேட்க, அவள், "எனக்கென்ன தலை விதியோ! உம்முடைய மனைவி நான். என்னுடைய புருஷர் நீர். என்னைக் காப்பது உமது இன்றியமையாத கடமை" என்று மறுமொழி பகர்ந்தாள். அக் கள்வன் அறிவு எனும் ஒளி திடீரெனத் தன்னுள் உதிக்கப் பெற்றவனானான். மரத்தோடே தான் கட்டி யிருந்த மஹா ரிஷியை யணுகினான்; அவரைக் கட்டி யிருந்த கயிற்றைச் சேதித்தான்; அவரது பாதார விந்தங்களில் சாஷ்டாங்கமாகத் தண்டம் சமர்ப்பித்தான். "முழுத்தவ மெய்திய முனிவரே! தேவரீர்பால் அடியேன் தஞ்சமெனப் புகுந்தேன். இதுவரையில் அடியேன் கொண்ட பாபம் போக்க ஒரு உபாயம் உபதேசியுங்கள்" என்று கெஞ்சினான்.



அந்த நாரதர் அவன்மீது இரங்கியவராய், "புத்தி யில்லாதவனே! இத் தொழிலை இன்றோடே கைவிடு. நின் உறவினரைக் குறித்துச் சிறிதும் சிந்தியாதே. உன்னுடைய சுகங்களை யவர்கள் பாகிப்பவர்களே யன்றித் துன்பத்தை அதாவது பாபத்தைப் பாகிப்பவர்க ளல்லர். ஆகையால் இவ்வுலகில்

உனது பாபத்தைக் கொள்பவர் ஒருவருமிலர். ஆகவே அப்பரப்பிரமத்தை இந் நிமிஷமுதல் மனத்தில் தியானி. அவரே உன் பாபத்தைப் போக்க வல்லவர்; அவரே உனக்கு அறிவைப் புகட்டக் கூடியவர்; அவரே உனக்குக் கீர்த்தியைத் தரத் தக்கவர்; அவரன்றி யோரணுவு மசையாது கண்டாய்" என்று இவ்விதம் உபதேசிக்கவே, அவன் உலகப் பற்றைத் துறந்து, புதர் மிகுந்த கானகத்தை யடைந்து, இராம மந்திரத்தை உச்சரித்துக் கொடிய தபம் செய்வதானான். தன்னை மறந்தான்; ஆகவே, எறும்புகள் சாரை சாரையாகக் கூடி அத் தபசியின்மீது புற்றுகள் கட்டி வாசஞ் செய்யத் தலைப்பட்டன. செடிகள் முளைத்து அவரைச் சுற்றித் தம் வேர்களால் நெருக்கிப் பெரிய மரங்களாய் வளர்வனவாயின. அத் தபசியின் தாடி நீளமாக வளர்ந்து பூமியில் புதைந்து அவரை உரு மாற்றியது. வருஷங்களும் நூற்றுக் கணக்காகக் கழிந்தன. அக் காட்டில் இராம மந்திரமே தொனித்து நின்றது. மரங்களும் செடிகளும், மிருகங்களும் பறவைகளும் 'ராம' என்று கூறுவதுபோல விளங்கின. ஒரு நாள் நாரத ரிஷி திரும்பி வந்து 'ஏ புதுத் தபசியே! எழுந்திரு. உன் தபம் நிறைவேறியதைக் குறித்து எனக்கு மெத்த சந்தோஷம்" என்று கூவினர். இப் புது ரிஷி விழித்துக்கொண்டு, "ஐய! நான் பாவமிக்க கள்வனாயிற்றே" என்றார். நீயா கள்வன். அன்று — நீயே புனிதன். நின் பழைய பேர் மறைக: புற்றிலுறைபவன் ஆகலான் நினக்கு வான்மீகி என்ற புதுப் பேர் உதித்திடுக" என அந்த நாரத ரிஷி கூறிவிட்டு மறைந்தார்.

வான்மீகிரிஷி பஞ்சஉஷத் காலத்தில் துயினீத்து, ஆற்றில் நீராடி, ஜபதபம் நிறைவேற்றிப் பிறகு யோக நிஷ்டையில் அமர்வார். இவ்வாறு ஒருநாள் வான்மீகி கங்கையிற் படிந்து தீர்த்தமாடிக் கரைமீது நின்று ஜபமாற்றிக் கொண்டிருக்கும்போது, சமீபத்தில் இரண்டு புறாக்கள் ஒன்றோடொன்று தழுவிக்கொண்டு இன்பமாய் விளையாடுவதையும், அவைகளுள் ஒன்றாகிய ஆண் புறாவின்மீது திடீரென ஒரு அம்பு வந்து வீழ்ந்துக் கொன்றதையும், பெண்புறா தனது நாயகனது பிரிவாற்றாமையைக் குறித்து மனம் புண்ணாகி அதைச் சுற்றிவந்து உயிர்விடத் துணிவதையுங் கண்டு மனச் சஞ்சலமுற்றுத் திரும்பிப்பார்த்தார். அண்மையில் வேடனொருவன் வில்லம்பு கொண்டு நிற்பதை யறிந்தார். அவனை நோக்கி, "கொடிய வேடா! அப்புறாக்களது நேசத்தை நோக்கியேனும் ஆண் புறாவைக் கொல்லாதிருக்கலாகாதா?" என்று கூறிய வான்மீகி யுடனே, "இஃதென்ன? இவ்விதமாக நான் நினைத்ததில்லையே; இவ்விஷயம் என் வாயினின்று வந்ததே யன்றி நானாகக் கூறவில்லையே!" என்று வியந்தார். அப்போது, அசரீரி, "அதைரியங்கொள்ளாதே. நீ யறியாது உன் நாவினின்றும் 'காவியம்' பிறக்கின்றது. அக் காவியமாக இராம கதையை எழுதுவையாக' என்றது. அது முதல் வான்மீகி ஒரு பெரிய கவிசிரேஷ்டர் ஆனார்.



வட இந்தியாவில் ஒரு புராதன நகரம் இருந்தது. இப்பொழுதும் அது இருக்கிறது. அதனை 'அயோத்தி' என்று அழைப்பார்கள். அங்கே, முன் ஒரு காலத்தில் 'தசரதன்' என்றொரு அரசனிருந்தார். அவருக்கு மனைவிகள் மூவர்; ஆனால் அரசனுக்கு ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. ஆகையால் ஹிந்து மார்க்கத்தின்படி அரசன் யாகம் செய்தார். சுபதினங்களில் அவருக்கு நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களுள் மூத்தவரின் பெயர் இராமன்; அந்த நால்வரும் நல்ல ஒரு குருவினிடத்தில் வில்வித்தை, யானை யேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளில் பழகினார்கள். நல்ல கலைஞானம் உணர்ந்தார்கள். இவர்களுக்குத் தக்க வயது வந்தது. அவர்களுடைய தகப்பனார் தள்ளாத கிழவரானார். தமக்குப் பிறகு அவர்கள் இராச்சியத்தின் பொருட்டுச் சண்டையிடா திருக்கும்படித் தாம் உயிரோடிருக்கும்போதே தம் குமாரர்களுள் ஒருவரை அரசனாக நியமிக்கத் தசரதர் எண்ணி, மூத்தவரான இராமரை இளவரசனாக்க வேண்டுமென்று நிச்சயித்தார்.

இது இவ்வாறாக அயோத்திக்குச் சமீபத்தில் ஜனகன் என்ற பிறிதொரு அரசன் இருந்தார். அவரிடம் 'சீதை' யென்ற பெயர் வாய்ந்த மிகவும் அழகிய பெண் ஒருத்தி வளர்ந்து வந்தாள். இவள் நரர்களின் வயிற்றில் பிறந்தவளல்லள். ஜனக மகாராஜா வயல் உழும்போது அக் குழந்தையைக் கண்டெடுத்தார். 'சீதை' யென்னும் பதத்திற்கு உழுங்கலப்பையென்பது பொருள். பூமிதேவியின் புத்திரியாகிய அக் குழந்தைக்குச் சீதையென்று ஜனகன் பெயரிட்டார். தன் புத்திரி-

யைப் போலவே அதைச் சீராட்டிப் பாராட்டி வெகு அருமையாக வளர்த்தார். அவள் தக்க பருவம் அடைந்தாள். ஆகையால் அவளுக்குத் தக்க நாயகன் ஒருவனைத் தேடி மண முடிக்க ஜனகன் கண்ணுங் கருத்துமா யிருந்தார்.

அக்காலத்தில் 'ஸ்வயம்வரம்' என்ற பழைய வழக்கத்தில், இராஜகுமாரிகள் தங்களுக்கு இஷ்டமான ஒரு நாயகனை வரித்துக் கொள்வார்கள். எல்லாத் தேசங்களிலிருந்தும் அரச குமாரர்கள் ஒரு இடத்தில் வரவழைக்கப் படுவார்கள். இராஜ குமாரத்தி அவர்கள் இருக்குமிடத்திற்குப் போய் வந்திருக்கும் அரசகுமாரர்களை விசாரித்துத் தனக்கு எவ்விதத்தும் இஷ்டமான ஒருவனை மணமுடிப்பாள். அவ்விதமே, அழகிய சீதையை மணக்க, எல்லா அரசர்களும் ஜனகமகாராஜாவின் கல்யாண மண்டபத்தில் கூடினார்கள். சீதை இராமரை மணந்தாள். கலியாணம் வெகு சிறப்பாய் நடந்தது. இராமரின் தந்தையாகிய தசரதர், இராமருக்கு முடிசூட்ட அது தக்க பருவமென்று கொண்டு பட்டாபிஷேகத்திற்கு ஆயத்தம் செய்தார். நகரம் முழுதும் ஆநந்த சாகரத்தில் முழுகியிருந்தது.

(இன்னும் வரும்.)

எஸ். வி. விவேகாநந்தன்.

# SCHOOL EXCURSION

## உல்லாச சஞ்சாரம்

கவர்ன்மெண்ட்டு டிரெயினிங் ஸ்கூல் திரிசிராப்பள்ளி.

நொண்டிச் சிந்து.

அன்பார்ந்த நேசர்களே — எங்களை
அருமையுடனு மிகப் பொறுமையுடன்
இன்ப முடன்நடத்தி வந்த — எங்கள் குரு
ஹேட் மாஸ்டர் சுந்தர மையங்கார் (1)

சென்னையைப் பார்க்க நாங்கள் — கனமிகு
சிக்ஸ்த் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஹார்ட்டு துரையிடம்
பண்புட னுத்திரவும் பெற்று — மிக
பக்ஷமுட னுதவிக்கு உசிதமாக (2)



சர்க்கரைப் பந்த லினில் — பொழியும்
தேன் மாரியாமென மேன்மையுடனே
அருமையாய்ப் பாட மதனைப் — போதிக்கும்
ஆசிரியராம் சுப்பிரமண்ய ஐயர் (3)

அவர்களை எங்க ளுடனே — அனுப்பவே
ஆசை யுடனே மிகப் பாசமுடனாய்
நவ நவ காட்சிகளைப் — பார்ப்பதற்கு
நலமுட னாயிரத்துத் தொளாயிரத்து (4)

பன்னான்கு மார்ச் சதனில் — பத்துடனே
பதின் மூன்றாந் தேதிதனில் இத முடனே
இன்ப முடன் புறப்பட்டுமே — சென்றதொரு
இனிய விசேஷங்களைப் புனிதமுடன் (5)

அன்பாக உங்களுக்கு — யானுமே
அறிந்ததைச் சொல்லுகின்றேன் தெரிந்த மட்டும்
இன்ப முடனே யெனது — மொழியை
இனிய மழலைமொழி யெனவே நீங்கள் (6)

குற்றமது பாராமல் — விஷயத்தைக்
குறிப்புடன் கவனிப்பீ ரெனவே நானும்
சற்றுமே மயங்காது — சபையில்
சாற்ற வந்தேனன் வாட்ட மின்றியே (7)

ஐயா நாங்களுமே — திங்களன்று
அனை வரும் பயணமாய் அன்றிரவு
துய்ய மனத்து டனே — பத் தரைக்குத்
துரித முடனே போகும் ரெயினிலுமே (8)

ஏறிச் சிதம்பரமாம் — பூவுலகத்
தின்ப மிகு கைலையில் நண்புடனே
மாறாத் தரிசினமாய் — குடதிசையில்
வந்த மர்ந்த கற்பகத்தை முந்தி வணங்கி (9)

மருவார் சடை புரள — அம்பலத்தில்
மன்னு பதஞ்சலிக் கெதிர் வுன்னித முடன்
திருநட மாடிய ருளும் — நடராஜர்
தேவி சிவகாமி யம்மை பூவடியிலும் (10)

கற்றைக் கலவ மயிலில் — ஊர்ந்து வருங்
கந்தவேள் பதமலர் விந்தை யுடனே
பற்று டனே யர்ச்சனையும் — புரிந் தெழுந்து
பண்புடன்போ ஜனமுண்டு நண் பருடனே (11)

அக்ஷணமே ரயிலேறி — கூடலூர்க்
கன்புடனே வந்திறங்கி இன்ப முடனே
பக்ஷமுள்ள சந்த்ர சேகரம் — பிள்ளையையும்
பார்த்து மவருடனே பக்க மதுள்ள (12)

முன்னாளில் பிரிட்டிஷா — ரவ்விடத்தில்
முதன்மை யாய்க் கட்டிவைத்த கட்டடமாம்
சென்ட் டேவிட் கோட்டையையும் — பார்த்து விட்டு
சிநேகித ருடனே கடலோரம் (13)

உல்லாச மாயிருந்து — புறப்பட்டு
* உற்ற ஸ்கூல் வந்திருந்து மற்றவருடன்
சல்லாப மாகவே தான் — அன்றிரவு
சாப்பாடு செய்து கொண்டு சயனித்துமே. (14)

(இன்னும் வரும்)

P. பரிமணப் பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர், போர்டு பெண் பாடசாலை,
வாங்கல், கரூர் தாலுகா.

## வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும்

# ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமெண்ட்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம் வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைககுரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும், வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras, E.*




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1915ஆ செப்டம்பர்மீ | மாதம் 4

# TOLSTOY AS A SCHOOLMASTER

## டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

**Tolstoy's Later Views-டால்ஸ்ட்டாயின் பிற்கால நோக்கங்கள்.**

குழந்தைகள் சிறுவயதிலேயே தம் தாய்ப் பாஷையைப் பழகுவதுபோலவே மற்றும் பல பாஷைகளைப் பழகி யறிவது சாத்தியமேயாகும். குழந்தைகள் வேறு பாஷைக்கு உரியவர்களோடு பழகுவதினாலேயே பல பாஷைகளைப் படியாமல் அறிந்துகொள்ளக்கூடும் என்பது உண்மையே. ஆனால் விருப்பமுள்ளவர்களைமட்டும் இப்படிப் பழக்கலாமேயன்றி எல்லோருக்கும் வலியப் பயிற்றுவது உசிதமாகாது.

டால்ஸ்ட்டாய் மற்றொரு சமயத்தில் சில விஷயங்களை வெளியிட்டிருக்கின்றார். சிறுவர்களுக்கு எதையும் சிறுகச் சிறுகப் பயிற்றவேண்டும். விரைவில் வளர்த்துவிட வேண்டும் என்னும் விருப்பத்தினால் தொட்டில் குழந்தைக்குச் சோற்றை ஊட்டலாமா? 'ஹிதபுக் — மிதபுக் — காலபுக்' என்று சம்ஸ்

கிருதத்தில் ஒரு நீதிவாக்கியம் உண்டு. அது என்னவெனில் 'ஆனதை உண் — அளவுடன் உண் — காலமறிந்து உண்' என்பதாம். இந்த அபிப்பிராயத்தை டால்ஸ்ட்டாயும் கொண்டிருக்கிறார். குழந்தைகளின் புத்தியில் அமையக் கூடியதையே போதிக்க வேண்டும். அவர்கள் கிரகிக்கக் கூடிய அளவே போதிக்க வேண்டும். அவர்களுக்கு அந்தந்தப் பாடத்தை அததற்கு ஏற்ற காலங்களில் போதிக்கவேண்டும். மழையைப் பற்றி மழைக்காலத்தில் போதிப்பதே தகுதியாகும். அமிதமாக உண்டால் அஜீர்ணப்பட்டு வியாதியுண்டாகி பலஹீனத்தையுண்டாக்குவதுபோல, பிள்ளைகளுடைய மனோசக்திக்கு அதிகமான விஷயங்களைப் போதித்தால் மந்தபுத்தியே ஏற்படும். அன்றி, பிள்ளைகளுக்கு வித்தையில் வெறுப்பும் உண்டாகும்.

நல்ல வித்தியாப்பியாசத்தின் நோக்கம் என்னவென்றால், பிள்ளைகள் தாம் வழங்கும் எந்தப் பொருளும் அப்படியே தமக்குத் தெய்வலோகத்தினின்றும் வந்துவிடவில்லை; எந்தப் பொருளும் ஒருவர் கஷ்டப்பட்டு செய்து கொடுத்த பிறகே நமக்குக் கிடைக்கின்றது என்னும் உண்மையை உணரும்படி செய்வதாகும். அதனால் ஒவ்வொருவரும் தாம் ஏதேனும், செய்தால்தான் தமக்கும் பிறருக்கும் உபயோகமாகும் என்பதைப் பிள்ளைகள் மனத்தில் கொண்டு நடக்கும்படி செய்ய வேண்டும். தம்முடைய உடைகளை வேலைக்காரன் வெளுக்கவிடுவதும் தகாதகாரியம், தாமே செய்துகொள்வதே தகுந்த காரியம் என்று உணரச்செய்யவேண்டும். நமது காரியத்தைப் பிறர் செய்யாவிட்டால், அவர்கள் நாமே அதைச் செய்வது போலப் பிரியத்தோடு செய்யமாட்டார்கள்; கடமைக்காகவே செய்வார்கள் என்பதைச் சிந்திக்கச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட உணர்ச்சிகளை எல்லாம் பிள்ளைகள் மனத்தில் உதிக்கச் செய்யாமல், விரலில் மண்படாமல் இருப்பதே மகராஜத்தனம் என்னும் எண்ணம் உதிக்கச் செய்வது உத்தம போதனையின் நோக்கமாகாது.

பிள்ளைகள் தம் உடைகளையும் புஸ்தகம் முதலியவைகளையும் ஒழுங்காக வைத்துக் கொள்ளவும் தாம் படிக்கும் அறைகளைச் சுத்தமாகவும் அலங்காரமாகவும் அமைத்துக் கொள்ளவும் தாம் உபயோகிக்கும் மேஜை நாற்காலி முதலியவைகளை



அழுக்குப் படியாமல் வைத்துக் கொள்ளவும் தூண்டுவதோடு அவர்கள் அவ்வாறு செய்து கொள்ளவும் பயிற்ற வேண்டும். பாடங்களைக் கண்டோபாடஞ் செய்து ஒப்பித்துக் கெட்டிக்காரனென்று ஒரு பிள்ளை பேரெடுப்பதிலும் ஒழுங்கும் உத்தம குணமும் உடையவனென்று பேரெடுப்பதே சிறந்ததாகும். பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் உண்டாவதற்கு அவர்களுடைய பெற்றோர்களே ஆதாரமாவார்கள். பிள்ளைகள் எப்போதும் தம் தாய் தந்தையர் செய்வதைப் போல் செய்வதற்கு அதிகமும் விருப்பங் கொண்டு செய்ய முயல்வார்கள். ஆதலால் மேலே கூறியவாறு பெற்றோர் தமக்கான காரியங்களை செய்யக் கண்டால் தடையின்றி அவர்தம் மக்களும் செய்யப் புகுவார்கள். தம் பெற்றோர், செய்வது ஒன்றும் பேசுவது ஒன்றுமாக இருந்தால் சிறுவர்களுக்கு அவர்களிடத்தில் மதிப்புக் குறைந்துவிடும். உபாத்தியாயர்களும் உண்மையுள்ளவர்களாகக் காணப்படா விட்டால் அவர்கள் விஷயத்திலும் பிள்ளைகளுக்கு அவமதிப்பே யுண்டாகும்.

மற்றொரு சமயத்தில் டால்ஸ்ட்டாய் பிரபு தெய்வ சம்பந்தமான விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார். சிறு குழந்தைகளுக்கு உலகத்தில் தோன்றும் எல்லாப் பொருள்களும் ஆச்சரியகர மானவைகளே. அதனால் குழந்தைகள் தாம் இந்த வுலகத்தில் பிறந்ததே வியப்பான தென்பது அவர்கள் மனத்தில் பதிந்து கிடக்கும். அதன் காரணம் இன்னதென்று அவர்களுக்குத் தோன்றாது. குழந்தைகளுக்கே யன்றி மற்றையோர்க்குத் தோன்றுவதும் அருமையே யன்றோ? குழந்தைகளுக்கு எந்தப் பொருளைப்பற்றியும் ஏதேனும் ஓர் அபிப்பிராயம் தோன்றிக் கிடக்கும். அந்த அபிப்பிராயம் சரியா யிருக்குமா? சரியோ இல்லையோ ஏதோ ஓர் அபிப்பிராயமாத்திரம் ஏற்படும். அப்படி ஏற்படக்கூடும் அபிப்பிராயத்தையும் இன்னதென்று எடுத்துக் கூற அந்தப் பிள்ளைகளுக்கு இயலாது. ஊமைகண்ட கனாப்போல் உள்ளூற நிற்கும். இப்படி ஏற்பட்டிருப்பது நல்லதே. உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் இந்த அபிப்பிராயங்களைச் சரியான வழியில் திருப்பி உண்மை கண்டுணரச் செய்யவேண்டும்.

பத்திராதிபர்.

# KUMANAN

## குமணன்

திங்கள் மும்மாரி செழிக்கப் பொழிவதும்
மங்குல்தோய் முதிரை மலைவளங் கொள்வதும்
சங்கினங் குலவும் தடம்பல சூழ்வதும்
எங்கணும் ஆம்பிர வதியா றியல்வதும்
கொங்குலாம் பொழில்பல கொண்டது மாய
கோங்குநா டென்னக் குலவுநா டதன்கண்

பண்டைக்காலத்தே குமணபுரி என்னும் குலநகர் ஒன்று இசைபரந்து விளக்கமுற் றிருந்தது. அந் நகரினைத் தன் அரசிருக்கையாகக் கொண்டு குமணன் என்னும் கொற்றவேல் மன்னன் நல்லரசாட்சி நடாத்திவந்தனன்.

குமணன் தன்னுயிரேபோல் மன்னுயிரை எண்ணும் தயாநிதி. அதனால், அவன் நாடுகாவலைத் தன் நலத்தின் பொருட்டாகக் கருதாது, குடிகளின் நன்மைக்கென்றே கொண்டு செங்கோல் செலுத்தி வந்தனன். அவனிடத்தில் பூமகளும் நாமகளும் பொருந்தி யுறைந்திருந்தனர். அதனால்,

'நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலர்ந்து'

என்னும் மெய்யுரை அவனிடத்துப் பொய்யுரை யாயிற்று.

குமணன் ஏற்றோர்க்கெல்லாம் வரையாது கொடுக்கும் வள்ளல். தமிழ்மொழிக்குத் தாயகமாக நின்றவன். கவிஞர்க்கெல்லாம் கண்ணே போன்றவன். பாவாணர் பாத்தொடுக்குந் தோறும் பரிந்து பரிசளிப்பவன். கவிஞரையே கடவுளாகக் கனவினும் நனவினும் கருதியிருப்பவன்.

நற்குண நாயகனாகி விளங்கிய குமணன் ஒருநாள் தன் அத்தாணி மண்டபத்தை யடைந்து, அங்கு நின்ற பலரும் அமர்க வென விடை கொடுத்தருளி, அமைச்சரை நோக்கி,

கடல்புடை யுடுத்த கண்ணக னுலகில்
மன்னிய மாந்தர்க் கின்னுயி ரெனவும்
மருவிய வுறுப்பின் இருவிழி யெனவும்



சுருங்கலி லொளியார் அருங்கல னெனவும்
நீடிய நல்லோர் நாடிய நிற்பது
அரும்பெறற்கல்வியே அரும்பெறற் கல்வியே
அதுதான் —
இம்மைப் பயனும் அம்மைப் பயனும்
எளிதி னியற்றும் அளியின தாகும்
நொந்த மனத்தின் வந்துறு மூவகையாம்
அகவிருள் நீக்கும் தகவுறு ஞாயிறும்
இறவாப் புகழை எழுமையும் நிறுவும்
பாவம் போக்கும் பண்பினை யாக்கும்
அறிஞர்ச் சேர்க்கும் அல்லவர்த் தீர்க்கும்
மன்னரை வணக்கும் மடமையை யுணக்கும்
அதான்று —
அறப்பெருங் கருணைக் கறிவே யுருவாம்
அதனால் —
கற்றா ருருவம் கடவு ளுருவே
கற்றார்க் காண்டல் கடவுட் காண்டலே
கற்றார்ப் பழிச்சல் கடவுட் பழிச்சலே
கற்றார்க் கடங்கல் கடவுட் கடங்கலே
கற்றார்த் தேடல் கடவுட் டேடலே
கற்றார்க் கீதல் கடவுட் கீதலே
கவிஞரைக் காணான் கடவுளைக் காணான்
கவிஞரைப் பரவான் கடவுளைப் பரவான்
கவிஞரைப் பழிச்சான் கடவுளைப் பழிச்சான்
கவிஞருக் கடங்கான் கடவுளுக் கடங்கான்
கவிஞரைத் தேடான் கடவுளைத் தேடான்
கவிஞருக் கீயான் கடவுளுக் கீயான்
அதனால் —
இருநிதி வழங்கி அருங்கவி வாணர்
குறைநிறை வித்தே இறைவனை வாழ்த்தி
செங்கோ லோச்சும் மங்கல வரசே
அரசெனப் படுமால் அமைச்சன் மீரே

என்று புலவர் தம் மாட்சியைப் பலவாறு புகழ்ந்து கூறினன். காவலன் கருத்தை யுணர்ந்த அமைச்சர், 'அரசே! தாம் உரைப்

பதில் அணுத்துணையும் ஐயப்பாடில்லை அறிவே உருவமாம் ஆண்டவற்கு; இவ்வருங் கவிவாணர்க்கும் அறிவே உருவமாகும். ஆதலின் இக் கவிஞர்தம் உருவம் கடவுளின் உருவமே யாகும். அன்றியும் 'ரவி யறியாவிடத்தைக் கவி யறியும்' என்பர் மேலோர். அதனால் விண்ணிற் புலவரினும் மண்ணிற் புலவரே மாண்புடையராவர்.

'மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு.'

என்பவாதலின், வண்டமிழ்வாணர் மலரவற்கும் மேம்பாடுடையராவர். ஆதலின் அப்புலவர் பெருமக்களை வாழ்த்தி வழிபடுதலே வாழ்க்கைக்கு நலமாகும்' என்று எடுத்துக் கூறினர்.

அமைச்சர் மொழியைக் கேட்ட அரையன், 'இப்போது வரும் நவராத்திரி மகோற்சவ காலத்தில் நமது சமுகத்திற்கு வரும் செந்தமிழ்ப் புலவர் அனைவர்க்கும் சிறக்கப் பரிசளித்து, அவர்களது முகமலர்ச்சியைக்கண்டு நாம் அகமகிழ்ச்சிகொள்ள வேண்டும்' என்றனன்.

'அவ்வாறேயாகுக. அவர்கட்கு வேண்டும் பட்டும் பணியும் பொன்னும் மணியும் புதிது புதிதாகப் பொருத்தி வைக்கின்றோம். மன்னர் மனம்போல் வழங்கி மகிழ்ச்சியடையலாம்' என்றனர் அமைச்சர். (தொடரும்)

பத்திராதிபர்.

## DOUBLE TONGUED LIZARD

## உடும்பு

1. உடும்பு ஊர்வனவற்றின் இனத்தைச் சார்ந்த ஓர் ஆச்சரியகரமான ஜந்து (ஊர்வன வென்றால் தரையில் தவழ்ந்து செல்லும் ஜந்துக்கள்) உடும்பில் நீருடும்பு, நிலத்துடும்பு என இருவகைப்படும்.

2. நீருடும்பு பெரிய ஆறு கால்வாய் ஏரி முதலிய இடங்களிலும் சதுப்பு நிலமான பிரதேசங்களிலும் வசிக்கும். நிலத்துடும்பு—குன்றுகள் செறிந்த வனாந்திரங்களிலுள்ள கற்பாறைகளின் இடுக்குகளிலும், கிணற்றுப் பொந்துகளிலும் பூமியிலுள்ள வளைகளிலும் வசிக்கும் (ஆனால் இவற்றிற்கு வளை தோண்டத் தெரியாது. வனத்தில் வளை தோண்டி வசிக்கும் மற்ற ஜந்துக்களின் வளைகளில் புகுந்து அவைகளைத் துரத்தி விட்டு இவைகள் குடியிருந்து கொள்ளும்).



3. உடும்பு தலையின் நுனியிலிருந்து வாலின் நுனிவரையிலும் $2\frac{1}{2}$ அடி முதல் $4\frac{1}{2}$ அடி வரையிலான நீளமிருக்கும். சரீரம் நீளமாயும் தட்டையாயும் ஒடுக்கமாயுமிருக்கும். தலையும் வாலும் போகப் போகக் குறுகி நுனி குவிந்திருக்கும். உடலின் சுற்றளவு சுமார் $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ அடி வரையிலுமுண்டு. தலை ஏறத்தாழ பாம்பின் தலையை ஒத்திருக்கும்; தேகத்தின் பருமனுக்கேற்ற கழுத்து அமையப் பெற்றது; வாயில் பற்கள் கூர்மையானவை; பிடித்த ஆகாரத்தை நழுவவிடா வண்ணம் உள் நோக்கி வளைந்த பற்களுடையவை. இவற்றின் நாக்கு சுமார் $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ அங்குல நீளமுள்ளது, பாம்புகளின் நாக்கைப் போல் இரட்டை நாக்கு இந்தப் பிராணிக்குமுண்டு.

4. உடும்பின் நாக்கில் ஒருவித பசை ஊறுகிறது; இப்பசையின் உதவியால் தூரத்திலிருக்கும் கொசு ஈ முதலிய சிறு பூச்சிகளை நாக்கினால் பற்றி வாய்க்குள் இழுத்துக்கொள்ளும்.

இந்த ஜந்துக்கு கண்கள் சிறியவையாயும் வெண்மை கலந்த செந்நிறமுள்ளவையாயுமிருக்கின்றன. இது விரோதிகளைக் கண்ட தருணத்தும் இரையைப் பிடித்துக்கொண்ட தருணத்தும் தன் கண்களை இறுக மூடிக்கொள்ளும் குணமுடையது.

5. உடும்புக்கு குறுகிக் கனத்த நான்கு கால்களுண்டு. ஒவ்வொரு காலிலும் 5 விரல்களும், விரல்களின் நுனியில் கூரிய நீண்ட நகங்களுமுண்டு. இந்நகங்கள் எதையும் பிடிக்கத்தக்க வலிமை பொருந்தியவை.

6. இவற்றின் தோல் வெண்மை கலந்த பழுப்பு நிறத்தோடு அதிக செதிள்கள் மூடுண்டிருக்கும். இதன் தேகத்தை நாம் தடவிப் பார்த்தால் அரம்போல் சொர சொரப்பாயிருக்கும். மேல் தோலைவிட அடிவயிற்றில் கொஞ்சம் மெல்லியதாயும் செதிள்களுள்ளதாயுமிருக்கும். சொர சொரப்பாயுள்ள கற்பாறைகளின் மீதும், கற்கள் செறிந்த தரைகளின்

மீதும் இவை செல்லுவதால் அடிவயிற்றுப்பக்கம் தேயாதிருக்-கும்படி செதிள்கள் காக்கின்றன.

7. இந்த ஜந்துக்களுக்கு ஒரு விசேஷ குணமிருக்கின்றது. அதென்னவெனில், தன் வாயில் கிடைத்த இரையை எளிதில் விடாது, தன்னைத் துண்டு துண்டாக வெட்டின போதிலும் அவ்வளவு உபத்திரவத்தையும் சகித்துக்கொண்டு, தன் வாயில் கிடைத்ததை மாத்திரம் விடவேவிடாது.

8. சிறு பூச்சி புழு எலி தவளை சிறு பாம்புகள் முதலியவைகளையும் காடுகளில் கிடைக்கும் காய்கனிகிழங்குகள் தானிய முதலியவைகளையும் தின்னும்; ஈசலென்னும் ஒருவித கரையான் மீது உடும்புக்குப் பிரிய மதிகம்.

9. உடும்பு சாதாரணமாய் 50 முதல் 75 முட்டைகள் வரை இடுகிறது. இன்னும் அதற்கதிகமும் இடுவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். முட்டைகள், சுமார் $1\frac{1}{2}$ முதல் 2 அங்குலம் வரை நீளமும் $\frac{3}{4}$ அங்குலக் குறுக்களவுள்ளதாக இருக்கின்றன. இம்முட்டைகள் ரப்பர் பந்துபோல் துவண்டு நிலத்திலடித்-தால் குதிக்கும் தன்மையுடையது. முட்டைகள் சூரிய வெப்-பத்தினால் குஞ்சுகள் பொரிக்கும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும் வரையில் தாயுடும்பு முட்டைகளைப் பிரதி தினமும் கண்காணித்துவருகிறது; குஞ்சுகள் வெளிப்பட்டதும் அவைகளை அநேகமாய்க் கவனிப்பதில்லை.

10. இவைகள் மரங்களின்மீதும் மற்ற எந்த இடங்களிலும் சாமர்த்தியமாய் ஏறிச் செல்லும். வளைகளிலும் பாறையிடுக்குகளிலும் அதன் தலையும் முன் காலிரண்டும் சென்ற-வுடன் வலியுள்ள 10 ஆட்கள் கூடினாலும் அதன் வாலைப்பற்றி வெளியே இழுக்க முடியாது, தன் வாலறுந்த போதிலும் தான் பற்றின பிடியை மாத்திரம் விடாது, இவ்வித சாமர்த்தியம் சாரைப் பாம்புகளுக்குமுண்டு. ஆனால் தன்னைப்பற்றி இழுப்பவர்களைத் திரும்பிக் கடிக்கும் குணம் உடும்புக்கும் சாரைப் பாம்புக்கும் கிடையாது.

11. இந்த ஜந்துவினிடம் மேற்கூறிய வலிமையுண்டென்று கண்டுதான் முன் காலத்து இந்திய அரசர்கள் ஒவ்வொரு-வரும், தங்கள் தங்கள் அரண்மனைகளில் அநேக உடும்புகளை



வளர்த்து வந்ததாகத் தெரியவருகிறது. தங்களுக்கும் வேற்றரசர்களுக்கும் யுத்தம் நேரிடும் காலத்தில் சத்துருக்களின் உன்னதமான கோட்டைச் சுவர்களை தாண்ட உடும்பின் இடுப்பில் வலிவான கயிறு கட்டி அகழிக்கு அப்புறம் மதில் சுவரில் எறிவார்கள். உடும்பு அந்தச் சுவரைப் பற்றிக்கொள்ளும் பிறகு வீரர்கள் கயிற்றின் வழியாய் நடந்து கோட்டைக்குள் பிரவேசித்து ஜயக்கொடி நாட்டுவார்களாம்.

12. வைத்தியர்கள் உடும்பைப் பிடித்து வந்து அதன் வாயில் பாத ரசத்தை ஊற்றி வயிற்றுக்குள் போகும்படி செய்து வாய் ஆசனத் துவாரம் முதலியவைகளைத் தைத்து விட்டு புடம்போட்டு உடும்பு ரசபஸ்மம் செய்கிறார்கள். இந்த அருமையான ஔஷதம் பல கொடிய வியாதிகளைக் கண்டிக்-கிறதாம்.

13. உடும்பின் தோலினால் கஞ்சனக் கட்டை யென்னும் ஒருவிதமான தோற் கருவி செய்கிறார்கள். இதன் மாமிசம் தேகத்துக்கு மிக்க வலிமை கொடுக்கிறதென்று சிலர் சாப்பிடு-கிறார்கள்.

N. CHIDAMBARA GOUNDAN,
*Teacher, Board Panchama Elementary School,*
*Perundurai, Erode Taluk.*

## LOVE OF THE MOTHER - TONGUE

### பாஷாபிமானம்

அனந்தனென்னும் சிறுவனும், அவனது மாமன் பஞ்சாபகேசன் என்பவனும், வேறு சில பிள்ளைகளும் ஓர் அறையில் உட்கார்ந்து புஸ்தகம் படித்துக்கொண்டிருக்கையில், அனந்த-னுடைய தாயாகிய லக்ஷ்மியம்மை அங்கே வந்து அவர்களைப் பார்த்தாள். அப்பொழுது, அவர்களுக்குள் நடந்த சம்பா-ஷணம் வருமாறு —

லக்ஷ்மி — அனந்தா! என்ன வாசிக்கின்றாய்?

அனந்தன் — உபாத்தியாயர் இங்கிலீஷ் ரீடரில் 'ஹோம் லெஸன்' கொடுத்திருக்கிறார். அதை வாசிக்கிறேன்.

லக்ஷ்மி — அண்ணா! நீ என்ன வாசிக்கின்றாய்?

பஞ்சாபகேசன் — என்னத்தை வாசிக்கிறது? இன்னும் 'எக்ஸாமினேஷன் ரிஸல்ட்டு' வரவில்லை. ஆனால், 'பாஸ்' பண்ணுவேனென்கிற தைரியம் எனக்கு இருக்கிறது. தமிழில் மாத்திரம் 'மினிமம் மார்க்ஸ்' வந்துவிட்டால் மற்றப்படி 'டோடல்' எப்படியாவது 'மேக் அப்' செய்து விடுவேன். அதுதான் கொஞ்சம் சந்தேகம். இந்த வருஷம் பி. ஏ-க்கு 'ஹாம்லெட்' பாடம் வைத்திருக்கிறார்களாம். 'எக்ஸாமினேஷன் ரிஸல்ட்டு' அனுகூலமாயிருந்தால், அதைப் படிக்க வேண்டுமே, அதன் கதையைத் தெரிந்து கொள்வோமென்று 'லாம்ஸ் டேல்ஸ்' வாசிக்கிறேன்.

லக்ஷ்மி —

> ஆங்கிலத்தின் பொருட்டாநம் மருந்தமிழை யொழித்தலிவண்
> ஓங்குமதி யுடையவண்ணா வுளத்துன்னி லறமேயோ
> பாங்குடைய வன்னையினைப் பன்னிமனங் களிபூப்பத்
> தீங்கடைய வேதுறக்குந் தீயனெனச் செப்புவரால்.

உலகத்திலுள்ள தொழில்களுள் உத்தமமானது உவாத்திமைத் தொழில் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். உவாத்தியாயர்கள் கற்பிக்கும் பாடங்களுள் பாஷாபிமானம், தேசாபிமானம், குரு பக்தி, ராஜ பக்தி, தெய்வ பக்தி ஆகிய இவைகளே முதன்மையானவை. பாஷையில் அபிமானமும் பயிற்சியும் உண்டாமாறு அவர்கள் செய்வார்களென்று நம்பி யிருந்தேன். திராவிடப் பண்டிதர்களைப் பண்டைநாள் பள்ளிப் பிள்ளைகள் ஏமாற்றிப் பாடம் படியாது தமிழை மறந்து வந்த வழியிலேயே நீங்களும் இருக்கிறீர்களே! ஆங்கிலமும் திராவிடமும் அறிந்தவர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கொடுத்து அவர்களைத் தமிழ்ப் பண்டிதர்களாய் நியமிப்பதன் பயன் என்னவாயிற்று? தேச பாஷையை அபிவிருத்தி செய்ய வேண்டாமா? நம் நாட்டில் எல்லாரும் இங்கிலீஷே வழங்குவது அசாத்தியம். அன்றியும், தேச பாஷையைக் கற்று, அதனைப் பிரகாசிக்கச் செய்வது தேசத்திற்குச் சிறப்பு. பிற பாஷைகளையுங் கற்று அவற்றிலுள்ள நல்ல அம்சங்களைத் தேச பாஷையிற் சேர்த்து, அதனுருவத்தை மாற்றாது, சிறப்பிப்பதே



அழகு. இதனை விட்டு, கும்பகோணத்திலுள்ள மாமனுக்குக் கடிதமெழுதச் சொன்னால், தமிழி லெழுதாமல், இங்கிலீஷில் முன்னாள் எழுதினையே; உன் புத்தியை என்னவென்று கொண்டாடுவேன்! நமது வழக்கத்திற்கும் ஒழுக்கத்திற்கும் இயைந்த அபிப்பிராயங்களை நமது பாஷையில் வெளியிடுவது எவ்வளவ எளிது! போகட்டும்; இங்கிலீஷிலாவது நன்றாய் —

பஞ்சாபகேசன் — நீ சொன்னதையே சொல்வையே. நான் இங்கிலீஷில் கடித மெழுதுவது தப்பித மென்பது ஒருவாறு இருக்கட்டும். தமிழின்மீது அபிமான முள்ளவரென்று நீ துதிக்கின்ற எங்கள் தமிழ்ப் பண்டிதர் சென்ற வாரத்தில் மஞ்சக்குப்பத்திலுள்ளவர் ஒருவருக்கு இங்கிலீஷில் ஒரு கார்டு எழுதி என்கையிற் கொடுத்துத் தபாற் பெட்டியிற் போடச் சொன்னாரே. இதற்கென்ன சொல்லுகிறாய்? மஞ்சக்குப்பத்துக்காரரும் அவ்வூர்ப் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதரே யென்று மேல் விலாசத்தினால் அறிந்தேன். ஒரு தமிழ்ப் பண்டிதர் மற்றொரு தமிழ்ப் பண்டிதருக்கு இங்கிலீஷில் கடித மெழுதுகிறார். இதுதான் எங்கும் வழக்கமாயிருக்கிறது. உன் பைத்தியத்திற்கு நான் என்ன சொல்லுவேன்? நான் மாத்திரம் ஒரு காரியம் செய்தாலன்றோ தப்பிதம்? எங்கள் உபாத்தியாயரே அங்ஙனம் செய்யும்பொழுது என்மீது குற்றமேது?

லக்ஷ்மி — இங்கிலீஷில் கடிதம் எழுதுவது நலமா, தமிழி லெழுதுவது நலமா வென்று உங்கள் உவாத்தியாயரையே கேட்டால், அவர் உனக்குப் புத்தி சொல்லுவார். அவர் இந்த விஷயத்தைக் கவனியாது, பொது வழக்கத்தை யனுசரித்து, இங்கிலீஷில் கடித மெழுதி யிருப்பார். நீ இந்தக் கேள்வி கேட்டவுடன் அவர் கவனிப்பார். ஆதலின், இனி அவரும் பிற பாஷையிற் கடித மெழுதார்.

பஞ்சாபகேசன் — நன்று, அவ்வாறே செய்வேன். ஆயின், அவரைக் காணுமுன், அவர் எனக்குக் கொடுத்திருக்கும் பாடத்தைப் படிக்கவேண்டுமே. அஃது இப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. அது 'ஜீவக சிந்தாமணி'யி லொருபாகம். அதனை யெடுத்து வாசிக்கிறேன். (புஸ்தகத்தை யெடுத்து மெதுவாய்த் தன் வாய்க்குள் வாசிக்கிறான்).

லக்ஷ்மி — துரப்பியாசப் புஞ்சமே! உன்னிடத்து எல்லாம் அவலக்ஷணமா? வாய்க்குள் மந்திரம் ஜபிக்கின்றனையோ? புஸ்தகம் படிக்கும் முறை இதுவாகாது. உரத்துப் படித்தல் வேண்டும். கைகால் முதலிய அவயவங்களை நன்றாயுபயோகிப்பதனால் அவைகளுக்கு எங்ஙனம் பயிற்சியுளதோ, அங்ஙனமே உரத்துப் படிப்பதனாற் கண்டத்திற்கு நற் பயிற்சி யுண்டாகும். நீ தப்பிதமாகப் படித்தாலும், கேட்டவர் உன்னைத் திருத்துவதற் கிடமுண்டு. நீ படிப்பது தப்பிதமென்று உன் காதுக்கே தோற்றக் கூடும். நன்றாய் வாசிப்பது சிறந்த வித்தை; அதனாற் கேட்பவரைச் சந்தோஷப் படுத்தலாம். வியப்பு, விசனம், நயம், பயம், களிப்பு, சோகம், மோகம் முதலியவைகளை உணருந் தன்மையும், இவ்வுணர்ச்சிகளைப் பிறருக்கு எடுத்துக் காட்டுந் திறமையும் உரத்து வாசிப்பதனால் அமையும். *பாடப் பாடக் குரல் இனிமைப்படும் என்னும் வழக்கச் சொல்லைக் கேட்டிலையோ? பொழுது போகாத காலத்துச் சிறுவரை வாசிக்கச் சொல்லி அதனைக் கேட்டுப் பெரியோர் ஆனந்தமாய்க் காலங் கழிப்பதை யறியாய் போலும். ஆங்கில தேசத்துப் பெண்கள் பலருக்கு இனிய குரல் அமையாதது அவர்கள் சிறு பிராயத்தில் உரத்து வாசித்து வழக்கப்படுத்தாத தோஷத்தின் பயனெனச் சிந்திக்கின்றார்கள். அவர்களிற் சிலர் சபைக் கோழையா யிருப்பதற்குக் காரணமு மிதுவேயாம். உரத்து வாசிப்பதனால் அந்தத் தொனிவிசேஷத்தின் பயனாகப் பல நோய்கள் வாரா தொழிகின்றன; உள்ள நோய்கள் பல அகலுகின்றன; சுவாஸாசயம் உறுதிப் படுகின்றது; புசித்த அன்னம் நன்றாய் ஜீர்ண மாகின்றது; புளித்த ஏப்பம் வாராது. ஆகையால், நீ இனி உரத்துப் படிப்பாய். (மற்றப் பையன்களைப் பார்த்து) நீங்கள் ஏன் அப்பா சும்மா இருக்கிறீர்கள்? வாய்க்குள் வாசிப்பதாகப் பாவனை செய்து உண்மையில் உறங்குகின்றீர்களே! உரத்து வாசித்தால் உறக்கம் வருமோ?

ஏதோ படிப்பதுபோ லேனோ நடிக்கின்றீர்
போதோ கழிந்ததுவாற் போதுநீர் வாய்க்குள்ளே
யோதும் வழக்க மொழிமின் னுயர்குரலிற்
பேதுற் றலமருவீர் பேணிப் படிப்பீரால்.

* 'பாடப் பாட ராகம், மூட மூட ரோகம்' என்பது பழமொழி.



அண்ணா! நீ அந்தச் சீவகசிந்தாமணியை வாசி; சற்றுக் கேட்போம். (பஞ்சாபகேசன் வஸந்தகாலவர்ணனையை வாசிக்கின்றான்).

லக்ஷ்மி — நன்று, அந்த இளவேனில் வர்ணனையைக் கேட்ட மாத்திரத்திலே மனமெழுகின்றது. இளவேனிலின் இனிமையே இனிமை. அண்ணா! நீ இன்று காலையில் தோட்டத்திற்குப் போய் வந்தனையே. இங்கு வர்ணிக்கப்பட் டிருக்கிற சிறப்பை நீ அங்கே கண்ணுற்றுக் குதிகொண்டனையோ? நீ கண்டதைச் சொந்தமாய் ஒரு பாடலினால் வர்ணித்துச் சொல்லு பார்ப்போம்.

பஞ்சாபகேசன் — தமிழென்றால் தலைவலியுண்டாகிற எனக்குக் கவன சக்தியு முளதோ? 'கிளாசில்' தமிழ் 'லெஸன்' என்றால் 'ரீஸெஸ் அவரு'க்குச் சமானம். தமிழ் முன்ஷியைக் கண்டவுடன் பையன்கள் விளையாட்டுக்கு ஆரம்பம். ஆனால், இப்பொழுது 'கிராடுயேட்' தமிழ்ப் பண்டிதர்கள் வந்த பிறகு, இது சற்றுக் குறைவு. ஐயாவைக் கண்டாற் பையன்களுக்குக் கொண்டாட்டமா யிருப்பது இப்பொழுது ஒருவாறு அடங்கிற்று. சிறிது காலமாகத்தான் பையன்கள் தமிழ் லெஸன் நடக்கும்போது 'கிளாசில்' தங்குகிறார்கள். 'பைபில் லெஸனு'க்கு இரண்டாவது தமிழ் ஐயாவின் 'அவர்.' ஆகவே, தமிழில் எனக்குள்ள அற்ப அறிவைக்கொண்டு அந்த மனோஹரமான காட்சியை என்னவென்று வர்ணிப்பேன்? — தனது குமாரனாகிய ரஸால விருக்ஷ (மாமர) த்தோடு வஸந்த லக்ஷ்மியானவள் கூடிக் கிரீடித்துக்கொண் டிருப்பதைப் பார்த்துப் பார்த்து மிகவும் ஸாதுஸ்வபாவ முள்ள பூதேவியானவள் முகமலர்ந்து அகங் களித்து ஆனந்தித்து நின்றாள். இது வெகு ரம்மியமாயிருந்தது.—இந்தக் கருத்தைச் செய்யுளி லிசைத்துப் பார்க்கிறேன்:—

வசந்த நாயகி தன்னை மாமரமுத லெவையு
மிசைந்து கூடியே யெய்தரு மின்பமுற் றன்றே
பசந்து தோற்றுமாத் தனையரைப் பார்மக ளேக்கிக்
குசஞ்செய் பண்டியும் பாக்கிய மெனக்களி கொண்டாள்.

லக்ஷ்மி — நன்றாக வருணித்தனை. கவன சக்தி உனக்கு நன்றாய் அமைந்திருக்கின்றதே. அந்தச் சக்தியை வளர்த்து

நீ உலகத்திற்கு உபகாரம் எவ்வளவோ செய்யலாம். ஆங்கிலக் காவியங்கள் படிக்கின்றனையே. அவைகளில் அங்கங்கே பொதிந்து கிடக்கும் அரிய கருத்துக்களைத் தமிழ் நாட்டாருக்கு எடுத் துரைப்பது மிகப் பெருங் காரியங்களு ளொன்று. அத்தகைய காரியம் செய்ய முயலுவதனால் உனக்கு அறிவும் புகழும் வளர்ந்தோங்கும்.

பஞ்சாபகேசன் — பிற பாஷைகளிலுள்ள இலக்கியங்களிற் காணப்படும் அரிய விஷயங்களைத் தமிழிற் செய்யுளாகவாவது உரைநடையாகவாவது எழுதவேண்டுமென்னும் ஆவல் எனக்கு உண்டு; அப்போதைக்கப்போது அற்பப் பிரயத்தனமுஞ் செய்திருக்கிறேன். இரண்டொரு விஷயங்களை எடுத் தோதுகிறேன் கேள் :—

## I

* "உலகம் யாவையு மொருபே ரரங்காம்
அலகின் மாக்கள் ஆங்குள நடராம்
இன்னோர் பிறப்பதும் இன்புற் றிறப்பதும்
நன்னாடகத்தை நலம்பெற நடித்தலாம்
மண்ணிற் பிறந்தொளிர் மாந்தரின் நிலையெலாம்
எண்ணிப் பார்த்திடின் ஏழதாம். அவற்றுள்
பரிவுடன் தாய்தரும் பாலமு துண்டு
சிரிதரு முகத்துடன் செவியமு தூட்டி
மழலைச் சொல்லான் மனமகிழ் விக்கும்
குழவிப் பருவமே கூறுமோர் நிலையாம்.
இணங்கா மனத்தனாய் ஈன்றார் வருத்தவும்
பிணங்கிச் சிணுங்கிப் பின்ன ரிசைந்து
மெள்ளவே நகர்ந்து துள்ளித் திரும்பும்
பள்ளிக் கேகும் பருவமே யிரண்டாம்.
மூன்றாம் பருவமோ முகமது மினுக்கிச்
சான்ற மணிகலன் சாலவும் பூண்டதைக்
காதலி மகிழ்வுடன் கண்டு களித்தன
ளாதலி னெவற்றினும் அழகே சிறந்தென
மாதரார் மயங்கும் மாண்டகு வனப்புடைக்
காதலன் பொலிவுடன் காணுறும் நிலையாம்
நான்காம் பருவமோ நால்வகைப் படையுடன்
மாண்போற் றுள்ளி மறலிபோ லெதிர்த்துப்

* Adapted from Shakespeare.



பற்றித் திருகிப் பகைவரைக் கொன்று
வெற்றியை நாட்டும் வீரன து நிலையாம்.
ஐந்தாம் பருவமாம் அரியநன் னிலையிலோ
புந்திசால் நோக்கும் புகழுறு மொழியும்
ஓங்கிய மீசையும் உருண்ட தொந்தியும்
பாங்குடன் விளங்கப் பரிவுட னெவர்க்கும்
நீதியே புகட்டும் நீதிமான் நிலையாம்.
அதன்பினர் தோன்றும் ஆறாம் நிலையிலோ
சதமென விருந்த ஜகந்தனில் வெறுப்புற்று
ஆத்தும ஞான ஆசைப் பெருக்கால்
சாத்திரம் பலவும் சாலவே புணர்ந்து
கையினில் தடியும் காலினில் குறடும்
மெய்யினில் நீறும் மிகுந்து விளங்க
அரிபெரி யவனோ? அரன்பெரி யவனோ?
எவனே பெரியவன்? எவனே சிறியவன்?
என்றே பலகா லெடுத்துப் பேசிக்
காணா ரெதனையுங் கண்டார் போல
வாணாள் கழிக்கும் வைதிகர் நிலையாம்.
இவையெலாம் கடந்த எழாம் நிலையிலோ
அவயவம் யாவும் அயர்வடைந் தமையாற்
சொல்லும் பிறழ்ந்து சுவையுங் குறைந்து
பல்லும் உதிர்ந்து பார்வையும் மறைவுற்று
அந்தியிற் குழந்தைக ளாயின ரெனவே
விந்தை விந்தையாய் விரும்பியும் மறந்துங்
கணந்தொறும் கணந்தொறும் குணம்பிறி தாகியும்
உடைநடை யாவையும் ஒருங்கே மாறியுங்
கடை நாளதனைக் கழிப்பது தானே."

## II

*"அருளெனப் படுவது அணைத்துப் பிடித்து
ஒருவனுள்ளத்தில் ஒடுக்குவ தன்றாம்
கருணையாற் பெய்யும் கார்முகில் போலப்
பெருகும் அவ்வருள் பெற்றார் தமக்கும்
ஈந்தார் தமக்கும் இன்பமே பயக்கும்
ஏந்து மிதற்கிங் கிணையு முண்டோ
ஆற்றல் மிகுந்தல காள்வதும் அருளே
மாற்றலர் தலையும் வணக்குவ தருளே
மன்னர் சூடும் மகுடந் தன்னினும்

* Adapted from Shakespeare.

நன்னெறியான நலத்ததும் அருளே
அவனியில் உயர்ந்த அதிகாரத்தை
நவமுறக் காட்டி நயமும் பயமும்
தந்தே மற்றைத் தார்வேந்தரையும்
வந்தோர் பயத்தால் வணங்கச் செய்யும்
சிறப்பினை யுடையது செங்கோ லெனினும்
திறப்படு மந்தச் செங்கோல் நிலையினும்
அடைவிற் சிறந்த தருளே யாகும்
அதுதான்
இறைவர்தம் மனத்துள் இருந்தர சாள்வது
நிறைபரம் பொருட்கே நேருற நிற்பது
இவ்வருள் நீதியோ டிணைந் திணைத் திருப்பின்
செவ்விய இறைவன் திருவருளா மால்."

**லக்ஷ்மி** — வெகு நன்று யிருக்கின்றது. இத்தகைய அருங் கருத்துக்க ளடங்கிய ஆங்கிலக் கவிரத்தினங்களைத் தமிழ் மொழிப் பதக்கங்களிற் பதித் திழைப்பது ஒள்ளிய நூல் வல்ல அறிவாளர் செய்தற்குரிய காரியமாகும். தாய் பாஷையின் மீது அபிமானங் கொண்டு அதனை வளர்ப்பதே தகைமையாம்.

தாயினைப் போற்றுந் தகைமைபோல் சான்றோர்க்குத்
தாய்மொழியைப் போற்றல் தகும்.

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of the 'Arya,' Madras.*

# CIVICS
## சிவிக்ஸ்

### Famine — பஞ்சம்

முன்றொடர்ச்சி (பக்கம் 72)

1803 ஆம் வருஷத்தில் ஏற்பட்ட பஞ்ச நிவர்த்திகள் —

1. வரிகளைக் குறைத்தும் தள்ளியும் விட்டார்கள்.

2. கிணறு குளம் முதலியவைகள் வெட்டப் பணம் கொடுத்து உதவினார்கள்.

3. கூலியாட்களுக்குக் கூலிவேலை கொடுத்தார்கள்.



1860ஆம் வருஷத்தில் ஏற்பட்ட பஞ்ச நிவர்த்திகள் —

பஞ்சம் ஏற்பட்ட விடத்திலுள்ள ஜனங்களை மூன்று வகையாகப் பிரித்தார்கள்.

1. வேலையில் வலிமையுள்ளவர்களுக்கு கட்டடவேலை கொடுத்தார்கள்.

2. சொற்பவேலை செய்யக் கூடியவர்களுக்கு சக்திக்குத் தகுந்த வேலை கொடுத்தார்கள்.

3. கொஞ்சம் பணக்காரர்களாயும் கௌரவத்தை அபேக்ஷிப்பவர்களாயு மிருப்பவர்களுக்கு அவர்கள் வீடுகளிலேயே ஆகாரம் கொடுத்தார்கள். இந்தப் பஞ்சத்திற்கு மொத்தம் செலவழிந்த தொகை $27\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்.

1865 முதல் 1867 வரையில் இருந்த ஒரிஸா பஞ்சம் —

இந்தப் பஞ்சத்தில் 35% ஜனங்கள் இறந்தார்கள்.

### தென்னிந்தியாவில் ஏற்பட்ட பஞ்சம் 1876 முதல் 1878 வரையில்.

இந்தப் பஞ்சத்தினால் 1880-ஆம் வருஷத்தில் Famine Commission ஒன்று ஏற்பட்டது. இதற்கு President ஆக இருந்தவர் Sir Richard Strachye என்பவர். இவர் நன்றாக விசாரித்து கவர்ன்மெண்டுக்கு ஒரு ரிப்போர்ட்டு அனுப்பினார்.

1. வேலை செய்யச் சக்தியுள்ளவர்களுக்கு வேலைகொடுத்து அவர்கள் ஜீவனத்துக்குப் போதுமான பணம் கொடுக்க வேண்டும்.

2. சக்தி யில்லாதவர்களுக்கு அவர்களிருக்கு மிடங்களில் கஞ்சித் தொட்டிவைத்து (Poor Houses) அவர்களைச் சம்ரக்ஷணை செய்யவேண்டும்.

3. இவ்வேலைகளை மேல்விசாரணை நடத்த அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டும்.

4. வியாபார விஷயமாக ஏற்றுமதி இறக்குமதிகளைக் கவர்ன்மெண்டார் தடுக்கக்கூடாது.

5. ஒரு சாமானின் விலை இவ்வளவுதானென்று குறிப்பிடக் கூடாது.

6 குடியானவர்களுக்கு சொற்ப வட்டிக்கு பணம் கொடுத்துப் பயிர்த் தொழிலை விருத்தி செய்ய வேண்டும்.

7. பஞ்ச காலத்தில் நிலவரியை குறைக்கவாவது நிறுத்தவாவது வேண்டும்.

இதைக் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டார்கள். இதற்கு "The Famine Code of 1883" என்று பெயர். இந்தச் சட்டம் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

1896 முதல் 1897-வரையில் நேரிட்ட பஞ்சம் —

இந்தப் பஞ்சத்தில் மற்றொரு கமிஷன் ஏற்பட்டது. இதற்கு President ஆக இருந்தவர் Sir James Layall என்பவர். இவரும் முன் கமிஷனில் செய்ததுபோல் சில சீர்திருத்தங்கள் செய்தார்.

1. வேலைக்குத் தகுந்த கூலி கொடுக்கவேண்டும்.

2. வேலை செய்யச் சக்தி யில்லாதவர்களை நன்றாய் சம்ரக்ஷணை செய்ய வேண்டும்.

3. நிலவரியை அதிகமாய் குறைக்க வேண்டும்.

இதையும் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டார்கள்.

### 1901-ஆம் வருஷத்தில் நேரிட்ட பஞ்சம்

இந்தப் பஞ்சத்திற்கு Presidentஆக இருந்தவர் Atomny Macdonald (Now Lord Macdonald) இவர் சில முக்கிய சீர்திருத்தங்கள் செய்தார்.

(1) Relief Measures (2) Preventive Measures.

### RELIEF MEASURES

1. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் உத்தியோகஸ்தரை யனுப்பி ஜீவனமில்லாத ஜனங்கள் எவ்வளவுபேரிருக்கிறார்களென்றறிந்து அவர்களுக்கு ஜீவனத்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

2. பயிர்த் தொழிலாளிகளுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து கிணறு முதலியவைகள் வெட்டச் செய்கிறார்கள்.

3. வரிகளைத் தள்ளிப் போடுகின்றார்கள்.

4. வேலை செய்ய முடியாதவர்களுக்கு கஞ்சித் தொட்டிகள் வைத்து ஜனங்களைக் காப்பாற்றுகிறார்கள். இவைகளும் போதாவிட்டால் ஜனங்களுக்கு கூலி வேலை கொடுக்கும் நிமித்தம் கஷ்டமான வேலைகள் கொடுத்து அவர்களைப் பரீக்ஷிக்கின்றார்கள். இதற்கு (Period of Test) என்று பெயர்.

5. மரணத்தின் தொகை எப்படி இருக்கிறதென்று அறிந்து பல விடங்களில் கூலிவேலை கொடுத்து ஜனங்களுக்கு பிழைப்புண்டாக்குகிறார்கள்.

6. வேலை செய்ய முடியாதவர்களுக்கு பணம் கொடுத்து ஜீவனம் செய்யும்படி செய்கிறார்கள்.

7. இப்படிக் கஷ்டங்கள் அனுபவிக்கையில் நோய்கள் உண்டாகின்றன. இதை நிவர்த்திக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

8. இப்படிப்பட்ட நிலைமையில் திடீரென்று மழை பெய்கிறது. உடனே ஜனங்கள் பஞ்ச வேலையை விட்டுப் பயிர் வேலைக்குப் போகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கவர்ன்மெண்டார் பணம் கொடுத்து உதவுகிறார்கள்.

9. இப்படி மழை பெய்துவிட்டால் கவர்ன்மெண்டார் குடிகள் இருக்குமிடங்களிலேயே பஞ்சவேலை கொடுக்கிறார்கள்.

10. பஞ்சகாலத்தில் பெரிய பணக்காரர்கள் ஜனங்களுக்கு உதவும்படி கவர்ன்மெண்டாரிடம் கொஞ்சம் பணம் கொடுக்கிறார்கள். அவர்கள் இதை வைத்துக்கொண்டு வயதானவர்கள் திக்கற்ற குழந்தைகள் நல்ல குலத்தில் பிறந்தவர்கள் ஏழைகள் இவர்களைக் காப்பாற்றுகின்றார்கள்.

### PREVENTIVE MEASURES

பஞ்சம் வாராமல் தடுக்கக் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் முக்கிய ஏற்பாடுகள் ரயில்வேயும், நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான வேலைகளும். ரயில்வே ஏற்பட்ட பிறகு தேசங்களில் செல்வமும் சுகமும் விருத்தியாகின்றன. திடீரென்று பஞ்சம் நேரிட்டால் ஏராளமான பணம் வேண்டி யிருக்கிறதென்று அறிந்த லார்ட் நார்த் புரூக் என்பவர் 1874ஆம் வருஷத்தில் "Famine Reserve Funds" பஞ்சப் பொருள் நிதி சேர்த்து வைக்கவேண்டுமென்று ஓர் ஏற்பாடு செய்தார். அவர் அபிப்பிராயப்படி 1878ஆம் வருஷத்தில் Viceroy's Council Financial Member ஆக இருந்த "Sir John Strachey" ஸர் ஜான் ஸ்டிராசி

என்பவர் இந்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவந்தார். அதன்பிரகாரம் வருஷம் ஒன்றுக்குச் சேர்கிற ரூபாய் 1½கோடி. அப்படிச் சேர்த்துவைக்கும் பணத்திற்குச் செலவாக எங்கே பஞ்சம் அதிகமோ அங்கே ரெயிலும் கால்வாயும் ஏற்படுத்துகிறார்கள். இப்படிச் சேர்த்துவைக்கும் பணத்திற்கு "Famine Insurance Grant' என்று பெயர். இன்னும் "Land Improvement Act, 2. Agricultural Loans Act யும் அமுலுக்கு கொண்டுவருகிறார்கள். ஐக்கிய நாணய சங்கங்களும் "Co operative Credit Societies) அநேகவிடங்களில் ஏற்படுத்தி அதன் மூலமாயும் பஞ்சத்தை நிவர்த்தி செய்கிறார்கள்.

A. KRISHNASWAMI AIYER,
*Board Muhamadan School,*
*Koothanallur.*

# THE CHILD

## குழந்தை

குழந்தை பிறந்தது முதல் ஏழுவயது வரையில் அதற்கு மூளை அதிக விரைவாக விருத்தி யடைகின்றது. இந்தக் காலத்தில் அக் குழந்தையின் மனத்திற்கு சிரமம் ஏற்படக்கூடிய காரியங்களை உண்டாக்காமல் அதிக ஜாக்கிறதையோடு பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் அக்குழந்தைக்கு வாழ்நாள் முழுதும் துக்ககரமாக முடியும். குழந்தைகள் ஒரே விஷயத்தில் நெடுங்காலம் தம் மனத்தைச் செலுத்திச் சிந்திக்க முடியாது. ஆகையால் ஏழுவயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு எந்தப் பாடமும் சுமார் இருபது நிமிஷத்திற்கு மேற்பட்டதாக இருத்தல் கூடாது. நாலைந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அதுதானும் ஆகாது. இனிய கதையாக இருந்தாலும் பத்து நிமிஷத்திற்கு மேற்படச் சொல்லக்கூடியதாக இருத்தல் ஆகாது.

குழந்தைகள் கைகால்களை அசைக்காமல் ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பது அவர்கள் இயற்கைக்கு முற்றும் விரோதமானது. அதனால் அடிக்கடி ஓடிப்பாடி விளையாடவும் தம்



கண்ணிற் கண்ட பொருள்களைப் பற்றி தம்மனம்போல் பேசிக் களிக்கவும் வேண்டிய இடந்தர வேண்டும். இவ்வகையாகப் பிள்ளைகளை விளையாட விடுவதே அவர்களுடைய மூளை விருத்தியாவதற்கு ஏற்ற சாதனமாகும். குழந்தைகளை எவ்வளவுக் கெவ்வளவு விளையாட விடுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அறிவுக் காதரமான மூளை விருத்தி யடைகின்றது.

குழந்தைகள் தம் மனம்போனபடி விளையாட விடுவது அத்யாவசிகமாகும். அதனால் குறையொன்று முண்டாகாது. குழந்தைகள் மண்ணிலும் மணலிலும் தண்ணீரிலும் விளையாடுவதைத் தடுத்து, அப்படி இப்படிப் போகாமல் தடுப்பதனால் மந்தபுத்தியே யுண்டாகும். குழந்தைகள் எப்போதும் பலவிதமான உணர்ச்சிகளை அறியவே அவாவுகின்றன. அந்த அவாவைத் தடுப்பது தகுதியன்று. குழந்தைகளுக்கு இயற்கையாக உண்டாகும் அவாவைத் தடுத்து அடக்கி வைப்பதனால், அவர்கள் எப்போதும் பிறருடைய பாதுகாவலுக் குட்பட்டு, அறிவு மயங்கி அல்லலுறுகிறார்கள். எந்நேரமும் காவலில் இருக்கும் செல்வர் வீட்டுக் குழந்தைகளையும் தம் இஷ்டம்போல் விளையாடித்திரியும் ஏழை வீட்டுக் குழந்தைகளையும் கவனித்தால் வித்தியாசம் நன்றாய் விளங்கும்.

குழந்தைகளுடைய இளம்பிராயத்திலே உண்டாகும் பழக்க வழக்கங்கள் அவைகளுடைய ஆயுள் முழுதும் உடன் வருவன தாயின் கர்ப்பத்தில் உள்ள சிசுவின் உடலில் உண்டாகும் மரு அல்லது அடையாளம், குழந்தை பிறந்து வளர்ந்து கிழத்தன்மை யடையும் வரையில் அம் மரு அல்லது அடையாளம் அதனுடம்பில் இருப்பதுபோல குழந்தைப் பருவத்தில் அமையும் குணகுணங்களே முதுமைப் பருவத்தும் நிலைத்து நிற்கும் என்று மேனாட்டுக் கவிகளில் ஒருவரான பைரன் சொல்லுகிறார். ஆகையினால், கீழ்ப்படிதல், காலந்தவறாமை, சுத்தமா யிருத்தல் முதலிய நற்குண நற்செய்கைகளில் குழந்தைகள் பழகுவதற்கான வழிகளைத் தேடுதலில் நாம் கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டும். அவர்கள் நற்காரியங்களைச் செய்யும் சமயங்களில் நாம் அவர்களை உற்சாகப் படுத்துதல் முறை. சிறுவர்களைப் பார்த்து அவர்களுடைய முன்னிலையில் 'இந்தப் பிள்ளை மந்தபுத்தி யுள்ளவன்', 'இந்தக் குழந்தை

புத்திசாலி' என்று உபாத்தியாயர்கள் கூறுவதுதவறு: உபாத்தியாயர்கள் எந்தவிதமாக, எந்தக் குரலில், எவ்வித நடக்கையுடன் போதிக்கின்றார்களோ அந்த விதமாக அக்குரலில் அவ்வித நடக்கையுடனே சிறுவர்களும் விஷயங்களைக் கிரகித்துப் பேசப் பழகிக் கொள்வார்க ளாகையால், தங்களுடைய பழக்க வழக்கங்களை முதலில் சீர்திருத்தஞ் செய்து கொள்வதை உபாத்தியாயர்கள் மறக்கலாகாது.

உபாத்தியாயர்கள் வகுப்பில் சிறுவர்களை அங்குமிங்கும் அசையாமல் ஸ்தம்பாகாரமாக உட்கார வைப்பதால், தாங்கள் அவர்களை ஒழுங்குபடுத்துவதாக நினைக்கின்றார்கள். அவ்விதமின்றி அவர்கள் மந்த புத்தி மல்கியவர்களாய், எந்தப் பாடங்களிலும் தங்கள் அறிவைச் செலுத்தாமல், 'இந்த உபாத்தியாயர் எப்பொழுது வெளியே போவாரோ? மணி யெப்பொழுது அடிக்குமோ' என்ற சிந்தாகுலத்தோடு மதிமயங்கிக் கொண்டிருப்பார்கள். கை கால்களை மடக்கிக்கொண்டு அச்சிறுவர்களை அடக்கி வைப்பது முழுதும் பிசகு. கைகளைக் கட்டிக்கொண்டு உட்காருவதால் சிறுவர்கள் மார்பு நாளுக்கு நாள் அகலங் கொள்ளாமல் குறுகும். முதுகுப் பக்கத்தில் கைகளைக் கட்டிக் கொள்வதும் சிறுவர்களுடைய புஜங்களுக்குத் துன்பத்தையே விளைக்கும்.

சிறுவர்களுடைய கண்கள் சமீபத்திலுள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு ஏற்றவையல்ல. ஆறுவயதிற்கு உட்பட்டவர்கள் படிக்கவாவது தையல் வேலைகளில் பழக்கவாவது கூடாது. அவர்கள் கண்கள் தூரப் பார்வைக்கே ஏற்றவை. ஆகையால், விசித்திரப்பாடமைந்த கட்டிடங்களையும், பசுமையான வயல் முதலியவைகளையும் அவர்கள் அடிக்கடி பார்த்துத் தங்கள் கண் பார்வையை விருத்தி செய்யவேண்டும். விளக்கை நோக்கி அவர்கள் உட்கார்ந்து எந்த வேலையையும் செய்ய முற்படலாகாது. இவ்விதம் செய்வதால் கண்களும் மூளையும் சீக்கிரம் கெட்டுப்போம்.

சிறுவர்கள் செய்யப் புகும் காரியங்கள் அவர்களுடைய உடல் முழுதும் ஆடி அசையும்படியான வைகளாய் இருக்க வேண்டும். கரும் பலகையில் சித்திரம் வரைதல், பரவிய மண் மீது எழுதல், மண்ணில் வீடுகட்டி விளையாடல் முதலியவைகள் அவர்களுடைய மார்பை அகலப்படுத்துவன. அன்றி மற்றைய உறுப்புக்களையும் சுறுசுறுப்பாக இருக்கச் செய்வதால் இரத்தக் குழாய்கள் பலங்கொண்டு நரம்புகளுக்கு அதிக இரத்தம் கொடுத்துச் சௌக்கியப்படுத்தும்.

பத்திராதிபர்.



# GOPALA KRISHNA GOKHALE

## கோபால கிருஷ்ண கோகலே

உத்தம புருஷர்களுடைய சரிதங்களே உலகினர்க்கு நாளும் நன்மை பயப்பனவாம். அவற்றுள்ளும் தேசாபிமானமும் பாஷாபிமானமும் வாய்ந்த சீரியர் சரிதங்கள் சிறந்தவையாகும். சமீபகாலத்தில், நமது இந்திய மாதாவுக்கு அருந்தவப் புதல்வராக விளங்கிய கனம் கோபால கிருஷ்ண கோகலே என்னும் மகா புருஷரை அறியாதவர் உலகில் ஒருவரும் இலர். அவர் இந்நாட்டில் மகுடமொன்றில்லாத மன்னராக விளங்கினார். சுயநலம் என்பதை அறவே யொழித்து லோகோபகாரியாக ஓங்கினர். 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புளார் — என்பு முரியர் பிறர்க்கு' என்னும் நீதி மொழிக்கு நிதர்சனமாக நின்றனர். இவர் செய்த மற்றெல்லா நன்மைகளினும், நமது இந்தியாவில் எங்கெங்கும் கட்டாயக் கல்வி ஓங்க வேண்டுமென்று கொண்டிருந்த விரதம் தலை சிறந்ததாகும். இத்தகைய புண்ணிய சீலருடைய சரிதத்தை நம்மவர்கள் ஆதியோடந்தமாக உணர்வது அத்யாவசியகமாகும். இவரது சரிதம் நமது தேச பாஷைகள் பலவற்றுள் வெளிவந்திருக்கின்றன. இவரது சரிதம் நமது இந்திய மாணவர்களுக்கு நன்மாதிரியைக் காட்டும் என்று உணர்ந்த விவேகாநந்தம் என்னும் இயற்றமிழ் மாணவர் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கு முறையில் செந்தமிழ் நடையில் படிப்போர் மனங் களிக்குமாறு எழுதி யிருக்கின்றனர். இது இரண்டு முறையாக நமது நல்லாசிரியனில் வெளிவந்திருத்தலின் ஆசிரிய நேசர்கள் இதன் ஏற்றத்தை

நன்கு அறிந்திருப்பார்கள். இச்சிறுநூல் நல்ல கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களில் பார்ப்பவர் கண்ணையும் மனத்தையும் கவரும் வண்ணம் அழகுபெற அமைந்திருக்கிறது. அன்றி முகப்பில் நமது கோகலே அவர்களின் திருவுருவப் படமும் அமையப் பெற்றிருக்கின்றது. விலை அணா இரண்டே. வேண்டுவோர் சென்னை, வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸுக்கு எழுதிக் கொள்க.

பத்திராதிபர்.


வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும்

## ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமென்ட்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம். வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைக்குரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும் வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras. E.*






உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1915ஆ ஆகஸ்ட்மீ | மாதம் 3


## NOTES AND NOTE-BOOKS

## குறிப்பும் குறிப்புப் புஸ்தகங்களும்

சில வருஷங்களுக்கு முன் வரையில் எல்லாப் பாடசாலைகளிலும் குறிப்புப் புஸ்தகங்கள் அமிதமாக வழங்கி வந்தன. முதல்பாட புஸ்தகத்திற்கும் குறிப்புப் புஸ்தகம் ஏற்பட்டிருந்த தென்றால் மற்றும் என்ன சொல்ல வேண்டும். வாசகம், கணிதம், பூகோளம், சரித்திரம், சுகாதாரம் முதலிய எல்லா நூல்களுக்கும் குறிப்புப் புஸ்தகங்கள் பல ஏற்பட்டிருந்தன. அவற்றை வாங்காத உபாத்தியாயரில்லை, படியாத பிள்ளைகள் இல்லை என்று சொல்லும்படி அமிதமாகப் பரவி யிருந்தன. ஏதோ ஒரு பாடபுஸ்தகம் வெளிவந்தது என்றால் மறுநாளே குறிப்புப் புஸ்தகம் வெளிப்படும். பிள்ளைகள் பாட புஸ்தகத்தை வாங்காமலே குறிப்புப் புஸ்தகங்களைப் படித்து திருப்தி யடைந்த காலமும் உண்டு. மேல் வகுப்புப் பாட

புஸ்தகங்களுக்குத்தான் குறிப்பு எழுதுகிறார்கள் என்றால், முதல் வகுப்பாகிய அவ்வளவு சிறு வகுப்பிற்கும் எழுதுவது எவ்வாறென்று, இக்காலத்திய நண்பர்கள் சிலர் எண்ணலாம். முதல் வகுப்புப் பாடபுஸ்தகத்தில் கடினபதம் ஒன்றும் இராது. அதற்கு என்ன செய்வது. எப்படியோ சில பதங்களுக்கு அர்த்தம் எழுதிவிட வேண்டியது. சில வினாவிடைகள் எழுதிவிடவேண்டியது என்று எண்ணிக் குறிப்புகள் எழுதிவிட்டார்கள். அவற்றில் சில வருமாறு:

பூனை = மார்ஜாலம்
கிணறு = கேணி
கீரி = நகுலம்

இவ்வாறு அர்த்தம் எழுதுவது. எவரேனும் என்னவென்று கேட்டால் பூனைக்கு மார்ஜாலம் என்னும் ஒருபேர் இருக்கிறதென்று பையன் தெரிந்து கொள்ளட்டுமே என்பார்கள். இப்படியே வினா விடையும்,

பூனைக்கு எத்தனை கால்?
நான்கு கால்

பூனைக்கு எத்தனை வால்?
ஒரு வால்

முதலிய கேள்விகளால் புஸ்தகம் நிறைந்திருக்கும். இது இப்படியிருக்க ஹைஸ்கூல், காலேஜ் வகுப்புகளுக்கு ஏற்படும் பாட புஸ்தகங்களுக்கும் வருஷா வருஷம் குறிப்புகள் பற்பல வெளியாவது நிற்பதில்லை. கணித புஸ்தகங்களுக்கும் குறிப்புப் புஸ்தகங்கள் வெளிவந்தன. பாட புஸ்தகம் ஒன்று விலையானால் குறிப்புப் புஸ்தகம் பத்து விலையாகத் தலைப்பட்டது.

இவ்விதக் குறிப்புப் புஸ்தகங்களால் உண்டாகும் தீமையையுணர்ந்த வித்யாதிகாரிகள், அவற்றை ஒழிக்கப் பலவகையினும் முயன்றனர். அவர்கள் முயற்சி ஒருவாறு முன்னுக்கு வந்தது. ஆயினும் மற்றொரு தீங்கு ஓங்குவதாயிற்று. அது என்னவெனில்:

அச்சிட்ட குறிப்புப் புஸ்தகங்கள் ஒழிந்தன. நோட்டுப் புஸ்தகங்கள் தலையெடுத்தன. இக்காலத்தே புதிய முறைகளை



அனுசரிக்கிறோமென்று பேர் வைத்துக் கொண்டு எடுத்ததற்கெல்லாம் நோட்டுப் புஸ்தகம் உபயோகிக்கத் தலைப்பட்டனர். இப்போது முதல் வகுப்புமுதல் காலேஜ் வகுப்புவரையில் கணக்கற்ற நோட்டுப் புஸ்தகங்கள் பெருகலாயின. இதைக் கவனிக்கும்போது முன் முறையே மோசமில்லை என்னலாம். முன்பு அச்சிட்ட குறிப்பு, இப்போது கையால் எழுதுங் குறிப்பு. ஆனால் முன்போல் பதவுரையும் பொழிப்புரையும் கருத்துரையும் வினாவிடையும் எழுதுவது இப்போதில்லை. இப்போது கொஞ்சம் திருத்தமான வேலைகளே நடை பெறுகின்றன. ஆயினும் நோட்டுப் புஸ்தகங்களின் கணக்கைப் பார்த்தால் ஆச்சரியமுண்டாகிறது. நோட்டுப் புஸ்தகம் இதற்குத்தான் உபயோகிப்பது என்னும் நியதியில்லை. எடுத்ததற்கெல்லாம் நோட்டுப் புஸ்தகம், நினைத்ததற்கெல்லாம் நோட்டுப் புஸ்தகம். ரூல் போட்ட நோட்டு, ரூல் போடாத நோட்டு, அறைகள் போட்ட நோட்டு, ஒருபக்கம் ரூல் போட்ட நோட்டு என்று இப்படியெல்லாம் ஒன்றைப் பலவாகப் பெருக்கி ஆசாரத்திற்குக் கொண்டு வருகின்றனர். மூன்றாம் வகுப்பில் வாசிக்கும் ஒரு பையனுக்கு 27 நோட்டுப் புஸ்தகம் வேண்டுமென்று ஓர் உபாத்தியாயர் எழுதிக் கொடுத்திருக்கிறார். இத்தனை நோட்டுப் புஸ்தகங்களில் உள்ள ஏடுகளையாவது திருப்பிப் பார்க்க இந்த உபாத்தியாயருக்கு அவகாசம் உண்டா? உள்ளபடியே அவர் அத்தனை புஸ்தகங்களுக்கும் வேலை கொடுத்து செய்யச்சொல்லி திருத்தி முடியுமா? தமது வகுப்பில் உள்ள நாற்பது பிள்ளைகளுக்கும் எத்தனை நோட்டுப் புஸ்தகமாகும்? இவற்றை எல்லாம் ஒரு வருஷத்தில் எத்தனை முறை திருத்தக்கூடும்? இப்படிப்பட்ட உபாத்தியாயர்களின் எண்ணமென்ன? பையனை ஹிம்ஸிக்க வேண்டுமென்பதா? பெற்றோர்க்கு அபராதம் விதிக்க வேண்டுமென்பதா? பள்ளிக்கூடத்திற்குக் கவுரவம் உண்டாக்க வேண்டுமென்பதா? கடைக்காரனுக்கு லாபம் வரட்டும் என்பதா? பார்ப்பவர்கள் பிரமிக்க வேண்டும் என்பதா? எமக்கு ஒன்றும் புலப்படவில்லை. பாடசாலை திறந்ததும் கணக்கு மிதமற்ற நோட்டுப் புஸ்தகங்களை வாங்கும்படி செய்து, இஷ்டமான போது ஏதோ ஓர் அப்பியாசம் கொடுத்து எழுதி வரும்படி சொல்லி, அதையும் பாராமல் விட்டுவிடுகின்றனர் பல உபாத்தியாயர்கள். நாம் பலமுறையும் பல இடங்களிலும் பார்த்த

மட்டும் நோட்டுப் புஸ்தகங்களில் நாலைந்து பக்கங்களை எழுதி யிருக்கக் கண்டிருக்கிறோம். மற்ற இடங்கள் எல்லாம் காலியாக இருக்கும். சில நாட்களில் பிள்ளைகளுக்கு ஊக்கங்குன்றி மீதியான பக்கங்களில் தமக்கு இஷ்டம்போல் ஏதோ கிறுக்கி வைக்கிறார்கள். அதிலும் இன்ஸ்பெக்டர் பரீக்ஷைக்கு வருங் காலத்தில் பின்னும் சில நோட்டுப் புஸ்தகங்கள் புதிதாக ஏற்படும். இப்படி யெல்லாம் செய்வதில் பயன் ஏற்படுமா? பெருமை யுண்டாகுமா? மதிப்பு உண்டாகுமா?

நண்பர்களே! இவை யனைத்தும் தாறுமாறான காரியங்கள். 'வளவனாயினும் அளவறிந் தழித்துண்' என்னும் வாக்கியப்படி எதையும் அளவுபடச் செய்ய வேண்டும். நல்ல அறிஞர்களான போதகாசிரியர்கள், கல்விமான்கள் முதலாயினோர் நல்ல நூல்களை பலமுறை படித்துத் தெளிந்து அரிய விஷயங்களைக் குறித்துக் கொள்வது வழக்கம். நல்ல நூல்களைப் பலமுறை படிப்பதனால் அநேக நன்மைகள் உண்டு. ஓர் ஆசிரியர் வகுப்பில் தாம் வாயிடடுச் சொல்லும் குறிப்பைவிட அச்சிட்ட பாட புஸ்தகங்கள் பாஷை நடை விஷயத்தில் மேலானவையாகும். அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று நினைப்பவர்கள் கொஞ்சம் யோசித்தே எழுதவேண்டி வரும். வகுப்பில் உபந்நியசிப்பவர் அவ்வளவு யோசிக்க இடமேது? குறிப்புப் புஸ்தகங்களின் உபயோகம் அதிகமாய் விட்டதென்று அதிகாரிகளும் அபிப்பிராயப்பட்டு அதைக் குறைக்கும் வழியை நாடுகின்றனர். அவர்கள் தண்டெடுத்தால்தான் நமக்கு அக்கரை யுண்டாவது வழக்கம்.

இக்காலத்தே பாடங்கள் எல்லாம் முறைப்பட்டு ஒவ்வொரு தொகுதியாக அமையப் பெற்றிருக்கின்றன. தொடர் முறைப் போதனையும் தொடர்ந்து வருகிறது. இவ்வகையை யோசித்து, நோட்டுப் புஸ்தகங்களையும் குறைத்து விடலாம் என்று தோன்றுகிறது. தமிழ்ப்பாடம் என்று எடுத்துக் கொண்டால் செய்யுள், வசனம், இலக்கணம் ஆகிய பாடங்களுக்குத் தனித்தனி நோட்டுப் புஸ்தகங்களை அமைப்பதைவிட ஒன்றே அமைக்கலாமன்றோ. இவ்வாறே பூகோளம் சரித்திரம் முதலிய பாடங்களைத் தொகைப்படுத்துவது நலம். இன்றேல் கூடியமட்டும் பிள்ளைகள் எவ்வளவு செய்யக்கூடும்



என்பதையும் உபாத்தியாயர் பார்க்கக்கூடும் என்பதையும் கவனித்து அமைக்கவேண்டும். நோட்டுப் புஸ்தகம் வாங்கினால் மட்டும் போதுமா — பிள்ளைகள் எழுதவேண்டாமா? உபாத்தியாயர் பார்க்க வேண்டாமா? இதைக் கவனித்தாவது நண்பர்கள் நோட்டுப் புஸ்தக உபயோகத்தைக் கூடியமட்டும் குறைப்பார்கள் என்று எண்ணுகின்றோம்.

பத்திராதிபா.

## BREATHING

## மூச்சு விடுதல்

ஒருவன் சௌக்கியமாய் இருக்கிறான் என்பதற்கு அடையாளம் அவன் வாயை மூடிக்கொண்டு மூக்கினால் மூச்சு விடுவதேயாம். அரை மணி நேரம் வாயை மூடிக்கொண்டு மூக்கினாலேயே மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படுவதா யிருந்தால் உடம்பு நோய்ப்பட் டிருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆரோக்கிய ஸ்திதியி லிருப்பவர் எவரும், குழந்தைகளாயினும் பெரியவர்களாயினும், மூக்கினாலே மூச்சு விடுவார்கள், மூக்கினாலேயே சுவாஸத்தை உட்கொள்ளுவார்கள்.

2. வாயினால் மூச்சு விடுவது சிலருடைய விஷயத்தில் தீவறான வழக்கத்தினால் ஏற்பட் டிருக்கலாம். வாயினால் மூச்சு விடுகிறவர்கள் பெரும்பாலாருக்கு, மூச்சு விடுவதற்காக மூக்கில் அமைந்திருக்கும் துவாரங்கள் அடைபட்டிருக்கும். அவை பூர்த்தியாய் அடைபட் டிராவிடினும், கொஞ்சமாகவாவது அடைபட் டிருக்கும்.

3. ஜலதோஷம் பிடித்திருக்கையில் மூக்குத் துவாரங்களின் உட்புறத்துச் சவ்வுகள் வீங்கிப் பருத்து அந்தத் துவாரங்களை அடைக்கின்றன. அப்பொழுது மூக்கின் வழியாய்ச் சாதாரணமாய் மூச்சு விடுவது கஷ்டமா யிருக்கும். ஜலதோஷம் கடுமையா யிருந்தால் மூக்குத் துவாரங்கள் அதிகமாய் அடைபடுமாதலின், இரண்டொரு நாள் வாயினாலே மூச்சு

விடவேண்டியது அவசியமாகும். அதன் பிறகு, முன்போல மூக்கினால் மூச்சு விடவேண்டுமே யல்லாமல் வாயினால் மூச்சு விடும் வழக்கத்தை வளர்க்கக் கூடாது.

4. வாயினால் மூச்சு விடுவதனால் வாய் உலர்ந்துபோம்; அது வறண்டு துன்பப் படுத்தும். அதுவல்லாமல் ஜலதோஷம், சளி ஜ்வரம், காச ரோகம் முதலிய பற்பல வியாதிகளுக்கு இடமுண்டாகும்.

5. தூங்கும்பொழுது வாயைத் திறந்துகொண்டு மூச்சுவிடுவது கூடாது. சிலர் வாயைக் கொஞ்சமாய்த் திறந்துகொள்ளுகிறார்கள், சிலர் அதிகமாய்த் திறந்து கொள்ளுகிறார்கள். கொஞ்சங்கூட வாயைத் திறவாமல் கெட்டியாய் மூடிக்கொண்டு மூக்கினால் மூச்சு விடுவதே உத்தமம். வாயைத் திறந்துகொண்டிருப்பதனால் காற்றிலடிபட்டு மிதந்து வரும் பலவிதமான அசுத்தங்களும் பூச்சிகளும் புழுக்களும் தாராளமாய் வாயின் வழியாய் வயிற்றுக்குள் சேர்ந்து நோய் விளைக்கும்.

6. வாயுவிலுள்ள அசுத்தங்களைக் கூடியமட்டும் வடிகட்டி வெளியே நிறுத்தி அகற்றுவதற் கேற்ற விதமாய் சுவாஸக் கருவியாகிய மூக்கு அமைக்கப்பட் டிருக்கின்றது. ஆதலால், அதன் வழியாகவே மூச்சை உட்கொள்ள வேண்டும். விழித்து நடமாடிக்கொண் டிருக்கையிலும் சிலர் வாயினால் மூச்சு விடுகிறார்கள். அதுவும் கெட்ட வழக்கமே; அதனால் விளையுந் தீமைகள் பல.

7. மூச்சு விடவேண்டியது அவசியமென்று எல்லாரும் சொல்லுவார்கள். மூச்சு விடாவிட்டால் என்ன தீமை விளையும், மூச்சு சரியாய் விடுவதனால் என்ன நன்மை விளையும் என்பதை விசாரிப்போம்.

8. மூச்சு என்பது பிராணன். ஆகையால், மூச்சு விடுவனவெல்லாம் பிராணிகள் எனப்படும். பிராணிகள் என்பவை மனிதன், மாடு முதலிய மிருகங்கள், ஊர்வன, பறப்பன முதலியவைகள் மாத்திரமேயல்ல; செடி, கொடி, மரம் முதலியனவும் பிராணி வர்க்கத்தைச் சேர்ந்தவைகளே; அவைகளும் நம்மைப்போல் வாயுவை உட்கொள்ளுகின்றன, வாயுவை வெளிவிடுகின்றன.



9. வெளியே மூச்சு விடாதிருந்தால் என்ன நேரிடும்? சிறிது நேரம் மூச்சு விடாதிருந்தால் ஒருவிதமான அசௌகரியம் ஏற்படுகின்றது. அந்த அசௌகரியம் மேலும் மேலும் அதிகரிக்கின்றது. முடிவில், பலாத்காரமாய் மூச்சு வெளிப்படுகின்றது.

10. உள்ளே இழுக்கும் மூச்சு நமது மார்புக்குள் இருக்கும் மூச்சுப் பைகளுக்கு (ச்வாஸாசயங்களுக்கு)ப் போய்ச் சேரவேண்டும். அப்படிப் போய்ச் சேருவதற்குத் தடை ஏற்பட்டால் திக்கு முக்காடிப் போவோம். அந்தத் தடை நீடிக்குமாயின், பிராணனுக்கு ஆனி வரும்.

11. மூச்சு விடுவதன் பயன் என்ன? நமது இரத்தத்தில் அசுத்த வஸ்துவொன்று கலந்திருக்கின்றது. அதற்குக் கரியமில வாயு என்று பெயர். அதனை அங்கிலத்தில் Carbonic-acid gas அல்லது Carbon dioxide என்பார்கள். அந்தக் கரியமில வாயுவைத் தேகத்தினின்றும் அகற்றிப் பிராணவாயுவைப் புகட்டுவதே மூச்சு விடுவதனால் ஏற்படும் நற்பயன். அப்படிப் பிராண வாயுவைப் புகட்டாவிடில், தேகம் நிலைக்காது.

12. 'சரீரம்' என்னும் சொல்லுக்கு 'நசிக்குந் தன்மையுடையது' என்று அர்த்தம். ஒவ்வொரு சரீரமும் ஒவ்வொரு நிமிஷமும் நசித்துக் கொண்டே யிருக்கின்றதென்பது அதனால் ஏற்படுகின்றது. அப்படி ஏற்படும் நாசத்திற்கு ஈடு செய்யும் பொருட்டே உணவு முதலியன உட்கொள்ளுகிறோம். இந்தக் காரணத்தினாலே சரீரத்திற்குத் 'தேகம்' என்னும் பெயர் கொடுக்கப்பட் டிருக்கிறது. 'தேகம்' என்னும் சொல்லுக்கு 'அன்ன ரஸாதிகளினால் விருத்தி செய்விக்கப்படுவது' என்று அர்த்தம்.

13. நிமிஷந்தோறும் சரீரம் நாசமடைந்துகொண் டிருக்கிறது என்று சொன்னோம். நாம் வேலை செய்வதனாலும், வேறு வகையில் உழைப்பதனாலும் சரீரம் மேற்சொல்லியபடி நாசமடையும், வேலையொன்றுஞ் செய்யாதிருந்தால் நாசமடையாதென்று சிலர் நினைக்கக்கூடும். அது தவறு. சரீரத்தினால் பிரயாசப்படா விட்டாலும், மனம் வேலை செய்துகொண்டே யிருக்கும். மனத்தினால் நினைப்பதும் வேலையே.

14. சரீரத்தினால் உழைக்காமலும், மனத்தினால் நினைக்காமலும் சும்மா இருக்கும்பொழுது, அதாவது தூங்கும்பொழுது, சரீரத்துக்கு நாசம் உண்டோவெனின், அந்த வேளையிலும், எந்த வேளையிலும் சரீரம் நசித்துக்கொண்டே யிருக்கின்றது. ஏனெனில், நாம் மனமார வேலை செய்யாவிட்டாலும் நமது சரீரத்திற்குள் இருக்கும் இருதயம் முதலிய உறுப்புகள் வேலை செய்து கொண்டே யிருக்கின்றன வல்லவா ?

15. இவ்வாறு இடைவிடாமல் சரீரம் நசித்துக்கொண்டே யிருப்பதனால் கரியமில வாயுவென்று 11-ஆம் பகுதியிற் கூறிய அசுத்த வஸ்து உண்டாகின்றது. அது இரத்தத்துடன் கலந்து நிற்கின்றது. அதைத் தேகத்துக்குள்ளேயே தங்க விட்டால் தீமை விளையும். ஆதலால், அதைத் தேகத்தினின்றும் அப்புறப்படுத்த வேண்டியது அவசியம். அதை அப்புறப் படுத்தும் பொருட்டே நாம் பிராணவாயுவை உட்கொள்ளுகிறோம்.

16. அதுவன்றி, நாம் விழித்துக்கொண் டிருக்கையில் சரீரத்தினால் வேலை செய்வதற்கும், மனத்தினால் நினைப்பதற்கும், நம்மை யறியாமல் நமது தேகத்துக்குள்ளிருக்கும் யந்திரங்கள் வேலை செய்துகொண்டே யிருப்பதற்கும் பிராணவாயுவின் உதவி வேண்டும். ஆகையாலும், பிராணவாயுவை உட்கொள்ளுகிறோம்.

17. அந்தப் பிராணவாயு நாம் உட்கொள்ளும் மூச்சுடன் தேகத்துக்குள் புகுகின்றது. அது புகுந்து இரத்தத்தில் கலந்து நிற்குங் கரியமில வாயுவை யப்புறப்படுத்தி, நாம் வேலை செய்வதற்குச் சக்தியையும் தேகத்துக்குள் ளிருக்கும் யந்திரங்கள் வேலை செய்வதற்குச் சக்தியையும் ஊட்டுகின்றது.

18. பிராணவாயு நமக்கு அவசியமென்று கண்டோம். அந்தப் பிராணவாயு, மூச்சை உட்கொண்டாலன்றித் தேகத்திற்குள் புகாது. ஆகையால், மூச்சை உட்கொள்வது அவசிய மென்றோம். கரியமில வாயுவை வெளிப்படுத்த வேண்டியது அவசியமென்று கண்டோம். மூச்சை வெளிவிட்டாலன்றி அது தேகத்தினின்றும் அகலாது. ஆகையால், மூச்சை வெளிவிட வேண்டுமென்றோம்.



19. உட்கொள்ளும் மூச்சில் பிராணவாயு நிரம்பி யிராவிட்டால் நமக்குக் குணமில்லை. சுத்தமான காற்றில் பிராண வாயு நிரம்பியிருக்கும். பிராண வாயுவை நாடுகிற நாம் சுத்தமான காற்றை உட்கொள்ள வேண்டுமென்பது இதனால் ஏற்பட்டது.

20. சுத்தமான காற்று வேண்டுமானால், நாம் இருக்கும் அறையில் நல்ல காற்றோட்டம் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் வெளிவிடும் மூச்சு விஷக்காற்றாகையால், அநேகர் ஒரு சிற்றறையில் தங்கி யிருந்தால அங்கு நிறைந்திருக்கும் காற்று அசுத்தமாகும். அந்த அசுத்தமான காற்றை உட்கொண்டால் தீமை விளையும். முகத்தை மூடிக்கொண்டு தூங்கக் கூடாது. இவை முதலான விதிகள் ஏற்பட்டது பிராண வாயுவை உட்கொள்ளும் பொருட்டேயாம்.

21. கரியமிலவாயுவை இரத்தத்தினின்றும் பிரித்து வெளிப்படுத்துவதற்குப் பிராணவாயுவையே உட்கொள்ள வேண்டுமோ ? வேறெந்த வாயுவையும் உட்கொள்ளக் கூடாதோ? கரியமில வாயுவை வெளிப்படுத்துவது மாத்திரமே நமது நோக்கமானால், வேறெந்த வாயுவையேனும் உட்கொள்ளலாம். ஆனால், கரியமில வாயுவை யப்புறப்படுத்துவ தல்லாமல், மேலே 17-ஆம் பகுதியிற் சொல்லியபடி நாம் வேலை செய்வதற்கு இன்றியமையாத சக்தியைப் பெறுவதும் நமது நோக்கமாகும். பிராண வாயுவைத் தவிர வேறெந்த வாயுவும் அந்தச் சக்தியைக் கொடுக்க மாட்டாது. இரண்டு நோக்கங்களையும் ஏக காலத்தில் சாதிக்கும் பொருட்டு நாம் பிராண வாயுவையே நாடுகின்றோம்.

22. பிராணவாயு தேகத்துக்குள் புகுவதனால், இரத்தத்திற் கலந்திருக்குங் கரியமிலவாயு எப்படி வெளிப்படுகின்றது ? இதயத்தினின்று பெரிய ரத்தக் குழல்கள் புறப்படுகின்றன; அவை பல கிளைகளாய்ப் பிரிந்து, முடிவில் மிகவும் நுட்பமானவைகளாகின்றன. அந்த நுட்பமான ரத்தக் குழல்கள் மெல்லிய சவ்வினால் அமைந்திருக்கின்றன.

23. அதுபோலவே, மூச்சுப் பைகளுக்குள் புகுங்காற்று பற்பல நுண்ணிய குழல்களின் வழியாய் வியாபித்து, முடிவில் மெல்லிய சவ்வினாலமைந்த அதிநுட்பமான குழல்களிற் செல்-

ஆகின்றது. நுண்ணிய ரத்தக் குழல்களும் நுண்ணிய மூச்சுக் குழல்களும் ஒன்றோடொன்று நெருங்கிப் பொருந்தி யிருக்கின்றன.

24. மூச்சை உட்கொண்டால் மூச்சுக் குழல்கள் கனத்து இரத்தக் குழல்களை அழுத்துகின்றன. அப்பொழுது, அந்தக் குழல்களிரண்டும் மெல்லிய சவ்வினால் அமைந்திருக்கின்றமையின், நுண்ணிய மூச்சுக் குழல்களிலுள்ள பிராணவாயு இரத்தக் குழலுக்குள் புகுகின்றது, இரத்தக் குழலிலுள்ள கரியமிலவாயு மூச்சுக் குழலிற் புகுகின்றது.

25. இவ்வாறு, இரத்தக்குழலில் பிராணவாயு நிறைகின்றது, மூச்சுக்குழலில் கரியமிலவாயு நிறைகின்றது. அந்தக் கரியமிலவாயுவே வெளிவிடும் மூச்சாகின்றது. மேற் சொல்லியபடி இரத்தக்குழலிலுள்ள கரியமிலவாயு மூச்சுக்குழலுக்கு வருவதற்கும், மூச்சுக்குழலிலுள்ள பிராணவாயு இரத்தக் குழலிற் புகுவதற்கும் அவகாசம் கொடுக்கும் பொருட்டே, உள்ளிழுத்த மூச்சைச் சிறிது நேரம் அடக்கி வைக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன.

26. அதற்கு அவகாசம் கொடாவிட்டால், நாம் உட்கொண்ட பிராணவாயுவையே உடனே திரும்பவும் வெளிவிடவேண்டியதாகும். இரத்தத்தில் போதுமான பிராணவாயு கலக்கா விட்டால் தேகம் நோய்ப்பட்டு நாசமடையும். ஆதலால், ஆரோக்கியம் வேண்டுமானால், சரியாக மூச்சுவிடப் பழகிக்கொள்ள வேண்டும்.

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of the 'Arya,' Madras.*

## THE HEDGEHOG

## முள்ளெலி

1. முள்ளெலி ஓர் ஆச்சரியகரமான ஜந்து. இது மற்ற எலிகளைப்போல் வளை தோண்டிக்கொண்டு வசியாமல், பிரண்டைப் புதர்களிலும் சிறு குன்றுகளிலுள்ள பொந்துகளிலும் வசிக்கின்றது. முள்ளம் பன்றியைப்போல் இதுவும் முள்ளுள்ள ஒருவகைப் பிராணி.



2. இதன் உடல் தடித்து, பெரும் பந்துபோல் உருண்டை வடிவமாயிருக்கும். தேகத்தின் மீது $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ அங்குல நீளமுள்ள முட்கள் ஏராளமாய் இருக்கும். முட்களின் நுனி கறுத்தும் அடியில் பழுப்பு நிறம் பொருந்தியு மிருக்கும், அது சுருண்டு கிடக்கும்போது பார்த்தால், ஒரு பனம் பழம் கிடப்பதுபோல் தோற்றும்.

அடிவயிற்றிலும் முகத்திலும் முட்கள் கிடையா, ஆனால் மெல்லிய மயிர் மூடியிருக்கும்.

3. கால்கள் சாதாரண எலிகளுக்கிருப்பது போலிராமல், குறுகியும் கனத்து மிருக்கும். கால்விரல்களின் நுனியில் கூர்மையான நகங்களிருக்கின்றன. அந்நகங்கள் பூமியில் வளை தோண்டுவதற்கு ஏற்றவையல்ல; முகம் மூஞ்சூறின் முகம்போலவும் காது கண் முதலியவைகள் ஏறத்தாழ வீட்டெலியைப் போலவு மிருக்கும், வால் கிடையாது.

4. வீட்டெலி குட்டிகள் போடுவதுபோல முள்ளெலியும் 5 அல்லது 6 குட்டிகள்வரை போடுவதாகவும், சிலர் ஒரு குட்டிக்குமேல் போடுவதில்லையென்றும் சொல்லுகிறார்கள். சில நாளைக்கு முன் ஒரு சந்தைச் சோதித்ததில், ஒரு குட்டிதானிருந்தது. இளங்குட்டிகளின் மீதிருக்கும் முட்கள், எப்படி வேண்டுமென்றாலும் வளைந்து துவளுகின்றன. ஆனால் ஒடிந்து போவதில்லை. குட்டிகள் வயதில் முதிர முதிர, முட்களும் முதிர்ந்து நாளடைவில் முதிர்ந்த முட்களாகின்றன. குட்டிகள் பெரிதாகும் வரையிலும் தாய் பால்கொடுத்து வளர்க்கிறது. வயது வந்து நடக்கும் பருவத்தை யடைந்ததும், தாயுடன் குட்டிகளும் இரைதேட வெளியே போகின்றன.

5. இவைகள் பகலெல்லாம் புதர்களில் படுத்துறங்கி, இரவு வந்ததும் இரைதேட வெளியே புறப்படும். நிலவு வெளிச்சத்தில் இரைதேட இவ்வெலிகளுக்கு வெகு பிரியம். இவைகள் மற்ற எலிகளைப்போல், மர முதலிய இடங்களில் ஏற முடியாது. மரத்தடியில் உதிர்ந்து கிடக்கும் பழங்களையும், காடுகளிலுண்டாகும் சில கிழங்குகள் தானியம் முதலியவைகளையும் எடுத்துத் தின்பதுண்டு.

6. இவைகள் தங்களுக்கு அபாயம் வருங்காலத்தில் பந்து போல் உருண்டு சுருண்டு படுத்துக்கொள்ளும். அப்போது தேகத்தின் மீதிருக்கும் முட்கள் விரிந்து நிற்பதால், அதன் சத்துருக்கள் அதை யொன்றும் செய்ய முடியாது. விரோதி தன்னை விட்டு அகன்றுபோய் விட்டதென்று தெரிந்தவுடன் நிமிர்ந்து சாதுவாய் நகர்ந்து செல்லும்.

7. அது இரை தேடித்திரியும் சமயத்தில் நாம் அதைப் பார்த்து விட்டால், சுருண்டு ஒரு பெரும்பந்துபோல் கிடக்கும், நாமும் அப்படியே நின்று கொண்டிருந்தால், 10 நாளான போதிலும், அதுவும் அதே இடத்தில்தான் கிடக்கும், அதை நாம் பந்தைப்போல் கையில் எடுக்கலாம், ஆனால் ஜாக்கிரதையாய் எடுக்கவேண்டும், இல்லாவிட்டால் அதன் முட்கள் கையில் தைத்து விடும். வலிவுள்ள ஒரு மனிதனும் அது சுருண்டிருப்பதை நிமிர்த்த முடியாது, இவ்வளவு சுலபமாய் கையில் கிடைக்கும் பிராணியாகிய இதற்கு இவ்வளவு பலம் கொடாவிட்டால் மனிதர்களும் மற்றப் பிராணிகளும் சுலபமாய்க் கொன்று விடுவார்களென்றுதான் கடவுள் இதற்கு அவ்வளவு பலம் கொடுத்தார்போலும்.

8. மற்ற எலிகளைப்போல் இது விரைவாயோட முடியாது, மெதுவாகத்தான் செல்லும், இது நடந்து வருவதைப் பார்த்தால் ஓர் உருண்டையான கருங்கல் நகர்ந்து வருவதுபோல் தோன்றும். இதன் உருவத்தை நன்றாய்ப் பார்க்கவேண்டுமாயின் ஒரு கண்ணாடி ஜாடியில் ஜலம்வார்த்து அதில் இந்த எலியைப்போட்டால், சுவாசிக்க யிடமில்லாமல் தண்ணீரில் ஒன்றாய் நீந்தும்; அப்போது அதின் உருவத்தை நன்றாய்ப் பார்க்கலாம்.

9 முள்ளெலிக்கு ஒருவித மோப்பம் பிடிக்கும் சக்தியிருப்பதாகத் தெரியவருகிறது. எப்படியெனில் மாடுஆடு முதலியவைகள் சந்தித்தால் அது சுருண்டுப்படுப்பதில்லை. மற்ற துஷ்ட மிருகங்களாகிய நாய், காட்டுப்பூனை, நரி முதலிய ஜந்துக்களைக் கண்டால் சுருண்டு படுத்துக்கொள்ளுகிறது.

10. முள்ளெலியை எல்லா விடங்களிலும் காண்பதரிது. பிரண்டைப் புதர்களிலும், குன்றுகள் செறிந்த காடுகளிலும்



இருக்கும். இவ்வெலிகள் மனிதனுக்குச் சுலபமாய்க் கிடைப்பதினால், அநேகமாய்த் தொலையுண்டு வர்க்க விர்த்தியாவதற்கிடமில்லாமற் போகிறது.

11. இது ஒருவிதமாகக் கத்தித் தன் இனங்களையும் குட்டிகளையும் அழைக்கிறது. இது மனிதனுக்கு யாதொரு தொந்தரவும் செய்வதில்லை.

12. முள்ளெலியின் மேல்தோல் தடிப்பானது. வயிற்றுப்பக்கத்தில் மெல்லிய தோலுடையதாக இருக்கிறது, இதைத் தோலுறித்துப் பார்த்தால் வீட்டெலியின் பருமன்தானிருக்கிறது.

13. இவ்வெலியின் மாமிசம் அதிக பிரயோஜனமுள்ளதெனச் சொல்லுகிறார்கள், மூலக்கிராணி வியாதி கொண்டவர்கள் இதன் மாமிசம் சாப்பிட்டால் சொஸ்தமாகி விடுகிறதாம், தோலை நெருப்பிலிட்டு அதன் புகையை மூலத்தின்மீது தாக்கும்படி செய்தால் வலி குறைந்து போகிறதாம். இதின் மாமிசம், பன்றி இறைச்சியைப்போல் தைலமிகுதியுள்ளதாம்.

N. CHIDAMBARAM,
*Teacher, Board Panchama Ely. School,*
*Perundurai, Erode Taluk.*

## ADVANTAGES OF ENGLISH EDUCATION IN INDIA

### ஆங்கிலக் கல்வியால் இந்துதேசத்தவர்க்கான நலம்

165408

கலிநிலைத்துறை

1. உலகம் எங்கணும் உள்ளவர் விரும்[illegible] கோதத்
த்லம தெங்கவர் செல்லினும் தாமவண் [illegible]
பலந லங்களும் மேன்மையும் பான்மையும் [illegible]
திலகம் என்னவும் வாழ்ந்திடச் செய்யும்ஆங் கிலமே.

2. எங்கும் உள்ளவர் கல்வியே பெரிதென இச்சை
தங்க வும்கலை பயிலவும் தராதரம் அறிந்து
இங்கி தம்பெறும் நடையுடை பாவனை யேற்று
மங்க ளம்பெற வாழவும் வைக்கும் ஆங் கிலமே.

3. ஆதி நாளினில் ஆரியம் பயின்றதால் ஆன
மேதி னிக்கணுள் ளோரெலாம் மெச்சும்நல் ஏற்றம்
தீதி லாவகை இந்தநாள் ஆங்கிலம் தெரிய
ஓது வாரெனில் உண்டென உணர்த்தும்ஆங் கிலமே.

4. திருவு லாவிய செல்வமும் ஒழுக்கமும் சீரும்
பெருமை சேர்புகழ் சுவேச்சைநா கரிகமும் பேரும்
தரும்அ தன்றியும் சமத்துவம் சகோதர பாவம்
அருமை யென்றவை அறியவும் பயிற்றும்ஆங் கிலமே.

5. ஞால மேல்பல ஜாதியர் நட்பினை நயந்து
சால வும்தமில் வேற்றுமை அற்றிடச் சார்ந்து
மேலும் மேலும்ஒற் றுமையினை அன்னவர் மேவக்
காலம் ஈதெனக் காட்டவும் நின்றதாங் கிலமே.

6. ஆதி நாள்முதல் இந்துதே யத்தினில் அமரும்
சாதி பேதமும் சமயவா சாரமும் தடித்துப்
பேத மேமனி தர்க்கிடை விளைப்பதைப் பெயர்த்து
வாது செய்பவர் வாயடைத் திடுவதாங் கிலமே.

7. கடல்க டந்துமேல் கீழ்த்திசை மற்றவும் கலந்திங்
கிடமு றக்கொள வந்ததும் அங்குளோர் இங்கு
படர நின்றதும் பாரெலாம் ஒன்றெனப் பயிற்றக்
கடமை பூண்டதும் கற்றவர் களிக்கும்ஆங் கிலமே.

8. ஒருவர் கொண்டுள கருத்தைமற் றொருவரும் உணரத்
தெரிய வைத்தவர் எண்ணமும் கொள்கையும் சிறக்க
உரிமை யுற்றொரு வர்க்கொரு வர்கலந் தொழுக
அரிய காரியம் புரியவும் நின்றதாங் கிலமே.

9. மன்ன ராகிய ஆங்கிலர் மகமதர் மருவ
கன்ன டத்தினர் ஆந்திரர் தமிழரும் கலக்க
சென்னை யோடுவங் காளமும் மற்றவும் சேர
அன்னி யர்பலர் உறவுறச் செய்வதாங் கிலமே,



10. முந்த நாளினில் நம்முனோர் நமக்கென மொழிந்து
தந்த நூல்திரா தரம்இவை யெனஉரை சாற்றி
இந்த நாளினில் இந்துதே யத்தவர்க் கினிப்ப
அந்தம் ஆதியாய் அவையெலாம் அறைவதாங் கிலமே.

11. நேத்தி ரங்களாய் விளங்கிய நிண்ணய நிபுண
சாத்தி ரங்களும் சகலதாத் பரியவே தாந்த
சூத்தி ரங்களும் உபநிட தங்களில் தொகுத்த
பாத்தி ரங்களும் பாத்திர மாக்கும்ஆங் கிலமே.

12. அருள்வி ளங்கிய மேலவர் பல்லவர் ஆய்ந்து
பொருள்வி ளங்கிய பற்பல பநுவல்முன் பொதித்தும்
இருள்வி ளங்கிய தேயம்ஆங் கிலவிளக் கேற்றத்
தெருள்வி ளங்கிய தென்னவும் தெரித்ததாங் கிலமே.

13. துட்ட ராணவர் தாரமே தொலைந்திடத் துரத்தி
விட்டு நாடெலாம் சுகமுற இந்தநாள் விளக்கித்
திட்ட மாய்உயிர் துறந்ததன் கணவனைத் தேவி
கட்டை ஏறலைக் கழித்ததும் கவின்கொள்ஆங் கிலமே.

14. குழந்தை யாயுள சிறுமியர் விவாகம்மேற் கொண்டு
விழுந்த தம்கண வர்க்கென விதித்தவை தவியத்
தழுந்தல் ஞாயமா காதென அதனைஇங் ககற்றக்
கொழுந்தெ ழுவரு யோசனை குயிற்றும்ஆங் கிலமே.

15. பற்ப லச்சிறு தேவதா ராதனம் பயிலல்
அற்பம் என்னவும் ஆடவர் அரிவையர் தம்மை
கற்ப ழித்தல்ஒக் கும்பல திருமணம் கழிக்கின்
நற்ப யன்தரும் என்னவும் நவிலும்ஆங் கிலமே.

16. வாஜ பேயமா தியபல யாகம்முன் வகுத்து
மேஜ னங்களைக் கொலநர மேதமும் இயற்றிப்
பூஜ னந்துய ருறுகொடுந் தொழிலெலாம் போக்கித்
தேஜ ரித்திடத் தேசம்ஆள் கின்றதாங் கிலமே.

17. வாயு வேகமாய்த் தூமிர சகடமும் வகுத்துப்
பாயும் நன்மனோ வேகமாய்த் தந்தியும் பதித்துப்
போயு லாவிட மனிதரும் செய்தியும் பொருத்தி
ஆயும் நன்னலம் இங்கிலத் தளித்ததாங் கிலமே.

18. நாச காரியம் செய்பவர் நானிலம் நசிக்கக்
கூசும் அடிமைகொள் கொடுமைசேர் கொள்கையும் குலைய
பேசி ஞாயமே தீர்த்திடும் அரண்களும் பிறங்க
ஆசி கூறிநல் வாழ்வுற அளிப்பதாங் கிலமே.

19. நோயி னல்நொறுக் குண்பவர் தம்மையோர் நொடியில்
காய சித்திசேர் வயித்தியம் வாழ்வுறக் காட்டித்
தேய வாணிபம் ஜலாசயம் விளைபொருள் செழிக்க
ஆய பாலமும் பாதையும் ஆக்கும்ஆங் கிலமே.

20. சகல லோகமும் மரக்கலம் சமுத்திரம் சரித்து
இகலும் மன்னவர் தமையெலாம் வெற்றிகொண் டிரித்துப்
பகலும் இரவெனத் தோன்றிடா துலகெலாம் பரித்து
அகிலம் எங்கணும் ஆளுகை செய்வதாங் கிலமே.

C. V. SHANMUGA MUDALIAR,
*Sessional School Master,*
*Thirukkalikundram Camp.*

---

இப்பாடல்கள் திருக்கழுக்குன்றம் எலிமெண்டரி உபாத்தியாய சங்கத்தின் ஏழாவது வருஷோற்சவத்தை 24—7—1915 தினத்தில் — ஸ்ரீமாந் ராவ் - பஹதூர் ஏ - வி. பிரணதார்த்திஹர ஐயர் பி - ஏ., எப் - எம் - யூ. ஐ - எஸ் - ஓ. அவர்கள் அக்கிராசனம் வகித்து நடத்திய காலத்தில் செங்கற்பட்டு ஜில்லா செஷனல் ஸ்கூல் மாஸ்ட்டர் ம-ா-ா-ஸ்ரீ சி - வே. சண்முக முதலியார் அவர்களால் இயற்றப்பட்டு ஷை தினத்தில் கூடிய உபாத்தியாய சங்கத்தில் கிராம உபாத்தியாயர்களின் கடமைகளைப்பற்றி அரிய விஷயங்களைத் தெரியப் பிரசங்கித்த ம-ா-ா-ஸ்ரீ, கா. நமச்சிவாய முதலியா ரவர்களால் உபாத்தியாயர்களுக்கென நடத்தி வரும் மாதாந்தப் புத்தகரூபத் தமிழ் பத்திரிகையில் பிரசுரிக்கப் பெற்றவை.



# FLOWERS

## புஷ்பங்கள்

சுந்தரம் என்பவன் தன் தோழனாகிய
மாணிக்கம் என்பவனோடு சம்பாஷிக்கிறான்.

சுந்தரம் — மாணிக்கம்! என்னோடு சற்றுநேரம் வெளியே வந்து உல்லாசமாய் உலாவிவர முடியுமா? உங்கள் பாடசாலைத் தோட்டத்தைப் பார்க்க எனக்கு ஆசையாயிருக்கிறது. தயவுடன் வந்து உங்கள் பள்ளிக்கூடத் தோட்டத்தைக் காண்பிப்பாயா?

மாணிக்கம் — நல்லது போகலாம் வா. (இருவரும் போகின்றனர். பாடசாலைத் தோட்டத்தை யடைந்ததும்) இதுவே எங்கள் சிங்காரத் தோட்டம் பார். என்ன அழகான மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசிக்கொண் டிருக்கின்றன. ஒவ்வொரு புஷ்பமும் அழகிலும் மணத்திலும் ஒன்றையொன்று வெல்லுந் தன்மை வாய்ந்திருக்கின்றது.

சுந்தரம் — ஆம். என்ன விந்தை! இவ்வளவு அழகிய புஷ்பங்களை நான் என்றும் கண்டதில்லை. இவற்றின் அழகைக் கண்டு, தேனீக்கள் ரீங்காரம் செய்து, பூக்கள்தோறும் சென்று அவற்றிலுள்ள தேனையுண்டு, ஆனந்தங் கொள்கின்றனவே. இம் மலர்களுக்கு அழகான நிறமும், நல்ல வாசனையு மில்லாவிட்டால், தேனீக்கள் இப் பூக்களைக் கவனியாமற்போகு மல்லவா?

மாணிக்கம் — புஷ்பங்களை நாடி வருவது தேனீக்களுக்கு எவ்வளவு அவசியமோ, தேனீக்கள் புஷ்பங்களின் தேனை யுண்ணுவது பூக்களுக்கும் (செடிக்கும்) அவ்வளவு அவசியமே. இல்லாவிடில் செடிகளின் பிரஜாவிர்த்தி யற்றுப்போம்.

சுந்தரம் — நீ சொல்வது முற்றும் மாறுபாடாக வன்றோ விருக்கின்றது.. இதை நான் நம்பமாட்டேன்.

மாணிக்கம் — மாறுபாடல்ல. தாவரங்கள் எவ்வாறு கருக் கொள்கின்றன வென்பதை நீ யறிந்திருந்தால், நான் சொன்னது உண்மையே யென நீ கண்டுணர்வாய்.

சுந்தரம் — அதெப்படி? இந்த அதிசயத்தை நீ எனக்கு சற்று விவரிக்க மாட்டாயா?

மாணிக்கம் — விவரிக்காமலென்ன. இந்த உண்மையை நீயே கண்டுகொள்வாய். முதலில் பூவானது எவ்விதம் அமைந்திருக்கிறதென்று, விவரித்துப் பின் நான் சொன்னதை ருஜுப்படுத்துகிறேன். (என்று சொல்லி ஒரு பூவைப் பறித்துக் காட்டுகிறான்.)

இதைப்பார். எவ்வளவோ அழகாயிருக்கிறது. (1) இது புஷ்பகோசம் (Calyx) (2) இப்பாகம் புறவிதழ் (Sepals) எனப்படும். இதை யொட்டி உள்ளிருப்பதே (3) தளவட்டம் (Corolla) இதன் பிரிவான இது (4) பூவிதழ் என்னப்படும் (Petals), இதே நீண்ட தாள்களாகத் தெரிகின்றதே அவைதான் (5) ஆண்பூ அல்லது கேசரம் (Stamens), அவற்றின் மத்தியிலுள்ள இதுவே (8) கர்ப்பகோசம் (Pistil) இதன் உச்சிக்கு (9) கிலாக்ரம் என்று பெயர் (Stigma), இது (7) கீலம் என்பது (Style), அடிப்பாகமான இதுவே (6) அண்டாசயம் (Overy) இங்கேதான் கருவளருவது.




பூவின் ஆண் பாகத்தின் உச்சியில் படிந்திருக்கும் தூசுதான் 'மகரந்தப் பொடி' (Pollen) என்பது. இதோ பெண் பூவில் கருவுற்பத்தி யுண்டாக்க வல்லது. இம் மகரந்தமானது மலரின் பெண் பாகத்தின் முக்கியமான 'அண்டாசயத்திற்' சென்று (கருதரித்தால்) தன்னிலிருந்துன் காய் உண்டாகும். காய்த்துப் பழுக்கா விட்டால் வித்தேது? வித்தில்லாவிடில் வேறு புதிய செடி எவ்வாறு உண்டாகும்?

சுந்தரம் — அப்படியா! சரிதான், இது வரையில் இந்த அதிசயமான விஷயம் எனக்குத் தெரியாதிருந்தது; இப்போது தெரிந்து கொண்டேன். ஆயினும் தேனீக்களின் உதவியால் இவ்-



வாச்சரியமான மாற்றம் உண்டாகிறதென்று நீ சொன்னது முற்றும் அசம்பாவிதமே யன்றோ?

மாணிக்கம் — பூவின் பல பாகங்களை உனக்குப் பிரஸ்தாபித்தேனே தவிர, 'மகரந்தம்' எவ்வாறு 'கர்ப்பகோசத்தை' யடைகிற தென்பதைக் கூறவில்லையே, அது எவ்வித மென்றுணராமல் நீ என் மீது குறை கூறியதேனோ?

சுந்தரம் — அதைத்தானே அறிய விரும்புகின்றேன். தேனீக்களால் ஒரு மலரிலுள்ள 'மகரந்தம்' மற்றொரு புஷ்பத்துக்கு எவ்வாறு கொண்டுபோகப் படுகிறது? அதை எனக்கு விவரமாகச் சொல்.

மாணிக்கம் — அப்படிக் கேள். இந்த உண்மையை நீயே கண்டு பிடிப்பாய். (பூவின் ஆண் பாகத்தின் உச்சியைக் காட்டி,) இதைத் தொட்டுப் பார்.

சுந்தரம் — (தொட்டுப் பார்த்து) என்ன, மாணிக்கம்! என் விரல்களில் ஒருவிதத் தூள் ஒட்டிக்கொண்டதே.- ஓஹோ, இதுதான் நீ முன் சொன்ன மகரந்தத் தூளோ?

மாணிக்கம் — ஆம், ஆம். உன் கையில் 'மகரந்தத் தூள்' எப்படி ஒட்டிக்கொண்டதோ, அப்படியே, ஒரு மலரிலுள்ள தேனை யருந்துவதற்காகத் தேனீ வந்து அப்புஷ்பத்திலுட்காருகையில் தேனீயின் கால்களிலும், சிறகு (இரக்கை)களிலும் ஒட்டிக்கொள்ளும். பின், அத் தேனீ வேறொரு பூவிலுள்ள தேனையுண்ணச் சென்று தேனருந்தும் போது, அந்தத் தேனீயின் கால்; இரக்கை இவைகளில் ஏற்கனவே ஒட்டியிருந்த 'மகரந்தத் தூள்' இந்தப் பூவின் பெண் பாகத்தின் உச்சியிலுள்ள கிலாக்ரத்தில் ஒட்டிக்கொண்டு, அதன் வழியே 'அண்டாசயத்துக்கு'ச் சென்று கருத் தரிக்கும்.

இவ் வேலை பெரும்பாலும் தேனீக்களால் நடக்க வேண்டியதாகையால் தேனீக்கள் புஷ்பங்களை நாடி வந்து, தேனுண்ணும்படி, பூக்களுக்கு தேனீக்களைக் கவரக்கூடிய அழகிய நிறத்தையும், இனிய மதுவையும் கடவுள் இயற்கையா யமைத்திருக்கின்றார்.

சுந்தரம் — தேனீக்களால் மாத்திரந்தான் இவ்வேலை முற்றுப் பெறுகின்றதோ?

மாணிக்கம் — இல்லை. பெரும்பான்மை அப்படித்தான் ஆயினும், காற்றின் உதவியாலும் இவ்வேலை நடக்கின்றது. ஆனால் இவ்விதம் கருதரிக்கும் செடியின் மலர்கள் அழகிய நிறமற்றதாயும் வாசனை யற்றதாயு மிருக்கும். (உ-ம். புல்லினக் கதிர்கள்.) உதியன் முதலிய மரங்களில் உள்ள இலைகள் காற்றினால் வரும் மகரந்தத்தை பூக்கள் கிரஹிக்க விக்கினமாயிருக்குமாதலால், பூப் பிடிக்குங் காலத்தில் அந்த இலைகள் உதிர்ந்து போய், மரம் மொட்டையாகவே நிற்கும். தேனீக்களின் உதவியால் கருத் தரிக்கும் தாவரங்களிலுள்ள புஷ்பங்களோவெனில் மிக்க அழகுடையனவா யிருக்கும் இவைகளையே தேனீக்களும் நாடும். இதுதான் நான் கூறுவதாயுரைத்த உண்மை.

சுந்தரம் — ஆஹா. இப்படியா! நன்றாய்க் கண்டுணர்ந்தேன். நீ கூறுகையில் உள்ளத்தில் எழுந்த பெரு மகிழ்வால் இடையிடையே தடுத்து வினவியதற்காக மன்னிக்க வேண்டும். இவ்வளவும் அறியாத எனக்கு அன்புடன் பகர்ந்ததற்காக அனந்த முறை வந்தனம்.

மாணிக்கம் — கண்குளிர இத் தடாகத்தைக் கண்டு களித்துச் செல்வோம். நேரமாகின்றது. போவோம் வா.

(இருவரும் செல்கின்றனர்.)

M. அடைக்கலசாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
திருநரையூர்.



# CIVICS
# சிவிக்ஸ்

## Famine — பஞ்சம்

மழையில்லாத காரணத்தினால் நிலங்கள் விளையாமலும் அதிக மழையினால் பயிர்கள் அழிந்துபோயும் ஜனங்கள் வயிற்றிற் கொன்றும் அகப்படாமல் கஷ்டப்படும் நிலைமைக்குப் பஞ்சம் என்று பெயர்.

**பஞ்சத்தின் காரணங்கள் —**

1. பருவக் காற்றின்மை (Failure of Monsoons) 2. விளைச்சலின்மை (Failure of Crops) 3. வேலையாட்களின் வேலையின்மை (Non-Employment of Labourers).

**பஞ்சத்தின் அறிகுறிகள் —**

1. மழை யில்லாவிட்டால் விளைச்சலில்லை. 2. சாமான் விலை கிராக்கியாகிறது. 3. ஜனங்கள் சாதாரண தர்மங்களையும் விட்டு விடுகிறார்கள். 4. ஜனங்கள் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். 5. கூலியாட்கள் கிராமங்களை விட்டு பட்டணங்களுக்கு கைத்தொழில் செய்யப்போய் விடுகிறார்கள். 6. திருட்டும் ஜாஸ்தியாகிறது. 7. வட்டி ஜாஸ்தியாகிறது.

**இந்தியாவில் நேரிட்ட பஞ்சம் —**

1. இந்தியாவில் 70% மேற்பட்ட ஜனங்கள் பயிர்த் தொழிலால் ஜீவனம் செய்கின்றார்கள். வேறு தொழில்களும் செய்யத் தெரியாது.. மழை தவறிவிட்டால் இவ்வளவு ஜனங்களும் கஷ்டப்பட வேண்டியதுதான். ஓரிடமிருந்து மற்றோரிடம்போய் பிழைக்கும் வழக்கமும் இவர்களுக்கு இல்லை.

2. ஜனத்தொகை எங்கும் ஓரே அளவாயில்லை. எங்கே வளப்பம் அதிகமோ அங்கேதான் ஜனத்தொகை ஜாஸ்தி. ஆகையால் திடீரென்று பஞ்சம் நேரிட்டால் அவ்வளவு ஜனங்களும் ஏககாலத்தில் கஷ்டப்படவேண்டி யிருக்கிறது.

3. இந்தியாவில் பருவக் காற்றுகளினால்தான் மழை உண்டாகிறது. காற்று அடிக்காமல் மழை பெய்யாவிட்டால் பயிர்ச்

செலவுசெய்ய முடியாமல் ஜனங்கள் பட்டினியாய் கிடக்க வேண்டியதுதான்.

4. சில சமயங்களில் வெள்ளத்தினாலும் வெட்டுக் கிளிகளினாலும் பயிர்கள் நாசமடைகின்றன.

5. நமது இந்தியாவின் பயிர்த்தொழிலாளிகள் மிகவும் ஏழைகளாயும் தானியக் களஞ்சியம் இல்லாதவர்களாயு மிருக்கிறார்கள். விசேஷமுதலுமில்லை பயிர்த்தொழில் ஆயுதங்களும் அவ்வளவு விலையுயர்ந்தவைகள் அல்ல.

6. பழைய காலங்களில் அரசர்கள் ஒருவர்க்கொருவர் சண்டையினாலும் படையெடுப்பினாலும் கொள்ளை கொலை முதலியவைகளினாலும் பஞ்சம் நேரிட்டதாகத் தெரிய வருகிறது.

7. முன் காலத்தில் நமது இந்திய ஜனங்கள் துணி நெய்தல் முதலிய கைத் தொழில்களாலும் ஜீவித்து வந்தார்கள். தற்காலத்திலோ தொழிற்சாலை ஏற்படவிட்டதால்கைத்தொழில் விட்டு எல்லா ஜனங்களும் பயிர்த் தொழிலிலேயே நம்பும்படியாயிற்று. ஆகையால் திடீரென்று பஞ்சம் நேரிட்டால் அவ்வளவு ஜனங்களும் கஷ்டப்பட வேண்டியதுதான்.

**இதர ஊர்களில் நேரிட்ட பஞ்சம் —**

பயிர்த் தொழில் மிகுதியாயுள்ள இந்தியாவில்தான் ஜனங்கள் பஞ்சத்தினால் கஷ்டப் பட்டார்களென்றால் கைத்தொழில் மிகுதியாயுள்ள ஐரோப்பாக் கண்டத்தில் பஞ்சம் நேரிட்டதாகத் தெரிய வருகிறது. ஜனங்களுக்கு கஷ்டம் என்பதே இன்னதென்று தெரியாமல் அமரிக்கையாய் அரசாண்ட Queen Elizabeth மகாராணியாரவர்கள் காலத்திலும்கூட பஞ்சமிருந்ததாகத் தெரிய வருகிறது. இதே மாதிரி பிரான்ஸ் முதலிய இடங்களிலும் ஜனங்கள் பஞ்சத்தினால் மிகவும் கஷ்டப்பட்டு தங்கள் குழந்தைகளை விற்றும் ஜீவித்து வந்ததாகத் தெரிய வருகிறது.

**ஆங்கிலேயர்களுக்கு முந்தி ஏற்பட்ட பஞ்சங்கள் —**

ருக்வேதம் புத்த ஆகமங்களிலும் பஞ்சமிருந்ததாகத் தெரிய வருகின்றன. 'பாளயன், ஹியூன்டராவ், அல்லாவுடீன், முகம்மது டோகலாக், ஷாஜஹான் இவர்கள் காலத்திலும் பஞ்சமிருந்ததாகத் தெரிய வருகிறது. ஆனால் ஒவ்வொரு அரசனும் அந்த சமயங்களில் பஞ்ச நிவர்த்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதாவது,



1. வருஷந்தோறும் தானியக்களஞ்சியம் ஏற்படுத்தி பஞ்ச காலங்களில் உதவி செய்தல்.

2. தானியங்களை ஓரிடமிருந்து மற்றோரிடம் கொண்டு போக ஏராளமான ஆடு மாடுகளை வளர்த்தல்.

3. தானியங்கள் சொற்ப விலைக்கோ அல்லது இனாமாகவோ கொடுக்கப்பட்டன.

4. ஆறுமாத சாப்பாட்டிற்குச் செலவுக்கு முன் பணம் கொடுத்தல்.

5. கிணறு குளம் முதலியவைகள் வெட்ட பஞ்சவேலைகள் செய்தல்.

6. கூலியாட்களுக்கு கூலிவேலை கொடுத்தல்.

**Feroz Tughlak காலத்தில் ஏற்பட்ட பஞ்சம் —**

1. யமுனைக்குக் கால்வாய் வெட்டி அதன் மூலமாய் ஜனங்களுக்கு கூலி கொடுத்தான்.

2. பஞ்ச நிவர்த்திக்கு வேண்டிய கிணறு குளம் முதலியவைகளை வெட்டச் செய்தான்.

**ஷாஜஹான் காலத்தில் ஏற்பட்ட பஞ்ச நிவர்த்தி —**

1. பஞ்சகாலத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் டில்லி ஆமத் நகர்போன்ற விடங்களில் ஏழைகட்கு 5000 ரூபாய் இனாம் கொடுத்தான்.

2. சத்திரங்களும் கஞ்சித் தொட்டிகளும் ஏற்படுத்தி ஜனங்களைக் காப்பாற்றினான்.

3. பஞ்சநிவர்த்திக்காக ஜனங்களுக்கு பல கட்டடவேலைகள்கொடுத்து அவைகள் மூலமாய் ஜனங்களைக் காப்பாற்றினான்.

4. ஜனங்களை காப்பாற்ற வேண்டியதின் நிமித்தம் சேனையை விருத்தி செய்தான்.

அவுரங்கஜீப் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்திற்கும் அரசன் வேண்டிய ஏற்பாடுகள் செய்ததாகத் தெரியவருகிறது East India Company யார்கள் காலத்தில் நேரிட்ட பஞ்சம் 1770 இந்தப் பஞ்சத்தில் வங்காளத்தில் 300 ஜனங்களிறந்தார்கள். அதற்காக அவர்கள் செய்த ஏற்பாடுகள்.

1. அதிகமான வரிகளைப்போட்டு ஏற்றுமதியைத் தடுத்தார்கள்.

2. இறக்குமதிகளை கொடுக்கவேண்டிய பணத்தின்மேல் அதிகம் கொடுத்து வரவழைத்தார்கள்.

3. தானியவிலை ஒரே விலையாகக் குறிக்கப்பட்டது.

4. நிலவரி குறைக்கப்படவில்லை.

1783ம் வருஷத்திலும் ஒரு பஞ்சம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

(இன்னும் வரும்.)

A. KRISHNASWAMI AIYAR,
*Board Muhamadan School,*
*Koothanalloor.*

---

## வித்தியா இலாகா அதிகாரிகட்கும் உபாத்தியாயர்கட்கும்

# ஓர் அறிக்கை

அடியிற் கண்ட நாங்கள் இதுகாறும் சென்னையிலுள்ள டிரெயினிங், ஸெகண்டரி, எலிமெண்ட்டரி பாடசாலைகட்கு நூதன போதனை முறைப்படி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் சப்ளை செய்துகொண்டு வருகிறோம். வெளியூரிலுள்ள பாடசாலை உபாத்தியாயர்கள், சயுன்ஸ், களிமண் உருக்கள், மியூசியத்திற்கு வேண்டிய பொருள்கள், க்ஷேத்திர கணிதமாதிரிகள், தச்சுவேலைக்குரிய கருவிகள், தோட்ட வேலைச் சாமான்கள் முதலிய எல்லாவித வகுப்புகளிலும், வேண்டிய சாமான்களுக்கு ஆர்டர் செய்தால் குறைந்த விலையில் உயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றைய விஷயங்கட்கு நேரில் எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

C. A. NATESA MUDALIAR & Co.,
*Govt. Contractors,*
*Mint Buildings, Madras. E.*

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 11 | 1915ஞ ஜூலைமீ | மாதம் 2

# PRAYER FOR THE SUCCESS OF THE BRITISH ARMS

## ஐரோப்பிய யுத்தத்தில் ஆங்கில அரசுக்கு வெற்றி யுண்டாக இறைவனை ஏத்துதல்

இக்காலத்தே, கேட்போர் மனமும் நடுங்குமாறு, ஐரோப்பா கண்டத்தில் நடக்கும் மகாயுத்தத்தைப் பற்றி நண்பர் அனைவரும் அறிவார்கள். பாரத ராமாயணங்களிலும் இத்தகைய யுத்தம் நடந்ததாகக் கேட்டறியோம். இதில் அவ்வப்போது நடக்கும் விஷயங்களை தினப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், புத்தகங்கள் முதலிய வற்றின் மூலமாக நேயர்கள் உணர்ந்திருப்பார்கள். யுத்தம் தொடங்கி ஒரு வருஷம் ஆகிறது. ஆகஸ்ட்டுமீ 4௳ சென்னை நகரவாசிகள் ஸெனேட் ஹவுஸ் என்னும் கட்டடத்தில் கூடினார்கள். நமது சென்னைக் கவர்னர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

புல அறிஞர்கள் யுத்த விஷயமாகப் பேசினர். நமது ஆங்கில அரசாட்சியார் இந்த மகா யுத்தத்தில் தலையிட்டுக் கொண்டதற்குக் காரணங்களை விவரமாக எடுத்துக் கூறினர். தீனர்களை ரக்ஷித்தல், அடைந்தோரை ஆதரித்தல் உற்றோர்க்கு உதவுதல் என்னும் நீதிகளை முன்னிட்டே நமது அரசாங்கத்தார் யுத்தத்தில் பிரவேசித்தனர் என்று மொழிந்தனர். அன்றி நமது அரசாங்கத்தார் நீதி ஒன்றையே தம் அரணாககொண் டிருக்கின்றனர். நீதியே வெல்லும். நியாயமே ஜயிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையே யன்றோ? நமது அரசுக்கு ஜயமுண்டாக நாம் மனோ வாக்கு காயங்களால் உதவி செய்ய வேண்டுவது நமது கடமையாகும். இனி, நமது ராஜ்யத்திற்கு ஜயமுண்டாக நாடோறும் பாடசாலை ஆரம்பிக்கும்போது கடவுளை வாழ்த்துவோமாக.

'முத்திநெறி யறியாத' — என்னும் மெட்டு.

உலகெங்கும் புகழ்பெருகும் உத்தமநல் லரசாட்சி
அலகில்பல நன்மைசெயும் ஆங்கிலநல் லரசாட்சி
இலகுறுசீர் பரம்பொருளே இங்கிலந்தின் அரசாட்சி
தலமதனில் இந்நாளில் ஜயமுறவே அருளுகவே.

படையாலும் அமைச்சாலும் பண்புடைய வரசாட்சி
இடையாத அரணாலும் எழிலுடைய அரசாட்சி
அடைவாரும் பரம்பொருளே ஆங்கிலநல் லரசாட்சி
தடையறவே இந்நாளில் ஜயமுறவே அருளுகவே.

பேரறிவும் பெரும்பொருளும் பெற்றிடுநல் லரசாட்சி
சீருறுநன் னீதியினால் சிறந்திடுநல் லரசாட்சி
ஆரருள்சேர் பரம்பொருளே ஆங்கிலநல் லரசாட்சி
தாருறவே இந்நாளில் ஜயமுறவே அருளுகவே.

வளமாரும் நீர்ப்படையால் வன்மையுறும் அரசாட்சி
இளையாத துணைப்படைகள் எங்குமுள அரசாட்சி
அளவில்லாப் பரம்பொருளே ஆங்கிலநல் லரசாட்சி
தளராமே இந்நாளில் ஜயமுறவே அருளுகவே.

சத்தியமே வெல்லுமெனும் சார்புடைய அரசாட்சி
நித்தியமாம் பரம்பொருளே நிலையான அரசாட்சி
எத்திசையும் மேன்மையுறும் இங்கிலந்தின் அரசாட்சி
இத்ததியில் ஜயமுற்றே யின்புறவே அருளுகவே.

பத்திராதிபர்.



# HON: MR. GOKHALE C. I. E.

## ஆனரபில் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் C. I. E.

(முன்தொடர்ச்சி வயது 10 — பக்கம் 225)

REGISTRAR OF ... UG 1915 MADRAS

'உரைசால் சிறப்பின் அரசு விழை திருவில்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்.'

என்ன விளங்கும் சென்னையம்பதிக்கு மிஸ்டர் கோகலே 1904-ஆம் வருஷத்தில் வந்தார். அவர் அப்போது இந்திய நாஷனல் காங்கிரேஸுக்கு உதவிப் பொதுக் காரியதரிசியாயிருந்தார். அக்காலத்தில், நம்மவர்கள் அவரது வரவை அன்புடன் ஏற்று, ராஜப் பிரதிநிதிச் சட்டசபையில் தம்முடைய இந்திய சகோதரர்களின் பொருட்டு அவர் வாதாடிய வீரப்பிரதாபத்தை நினைத்தவர்களாய் அவருக்குப் பூமாலைகள் பல புனைந்து இட்டனர்; பாமாலைகள் பல பரிந்து சொற்றனர். அவர் திருமயிலைக்கு எழுந்தருளித் தம்முடைய ஞானகுருவான ஸ்ரீ மஹாதேவ் கோவிந்த ரனடேயின் ஞாபகார்த்தம் ஏற்படுத்தப்பட்ட ஒரு புத்தகாலயத்திற்கு அஸ்திவாரம் நாட்டியது அக்காலமாம். மற்று, தட்சிண தேசத்தாருக்குத் தமது லட்சணத்தைத் தெரியப்படுத்தி அவர்களுடைய புகழ்ச்சிக்கு அஸ்திவாரம் நாட்டியதும் அக்காலமேயாம்.

1904-ஆம் வருஷத்தில் பொம்பாயில் காங்கிரெஸ் மகா கூட்டம் கூடியபோது இந்நாட்டாரின் விருப்புக்களையும் ஆழ்ந்தூன்றிய கருத்துக்களையும் அங்கிலப் பிரஜைகளின் முன்பு நன்கு விரித்து உரைத்தற் பொருட்டு இங்கிருந்து இங்கிலத்திற்குச் சில பிரதிநிதிகள் அனுப்பவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. 1905-ஆம் ஆண்டு பிறத்தலும் பொம்பாய் மாகாணத்திலிருந்து லாலா லஜபத்ராயும் கோகலேயும் அனுப்பப்பெற்றனர். இங்கிலாந்தையடைந்த இவர்கள் மேனாட்டார் முன் இந்தியாவின் குறைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று இனிது விளக்கி அவர்களுடைய மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியவைத்தார்கள். அங்கு இருந்த 50

நாட்களுக்குள் சுமார் 45 உபந்நியாசங்களுக்குக் குறையாமல் கல்லும் நெகிழ்ந்து கரைந்தோடுமாறு இனிமையான பாஷையில் மிஸ்டர் கோகலே பிரசங்கித்தார். அவர் திரும்பி இந்தியாவிற்கு வருவதற்குள் இந்திய நாஷனல் காங்கிரஸுக்கு அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்திலே நான்தோறும் இரண்டுமூன்று தடவைகளாகப் பெருங்கூட்டத்தார்களின் மத்தியில் பிரசங்கங்கள் புரிந்தமையாலும், பற்பல வாதங்கள் நடத்தினமையாலும் மிஸ்டர் கோகலேவுக்குத் தொண்டை நோய் ஏற்பட்டது. அதனை நீக்கும் பொருட்டு தொண்டைக்குள்ளே ரணவைத்தியம் செய்யும்படி நேரிட்டதால், பொம்பாய், புனா என்ற நகரங்களில் இவர் நன்றாய்ப் பேசக்கூடவில்லை. அந்த நோயையேனும் யாத்திரை செய்து வந்த களைப்பையேனும் இம்மியும் பொருட் செய்யாமல் நம் தேசபக்த சிகாமணி காசியில் காங்கிரெஸ் தலைமை வகித்து நடத்தியது என்றும் மறக்கற்பாலதன்று. 1905-ஆம் ஆண்டில் மகா கூட்டம் கூடியதும் மிஸ்டர் கோகலே செய்த பிரதமப் பிரசங்கத்தின் பொருளாழ்ச்சியையும், சொல்லழகையும், வியவகார ஞானவன்மையையும் இவரது எதிரிகளே தோத்திரம்செய்து அகமகிழ்ந்தனராயின் நாமென் னுரைப்பது? காங்கிரெஸ் முடிந்ததும் தமது வாணாளில் மூன்றாந் தடவையாக இங்கிலாந்திற்குச் சென்று இந்திய காரியதரிசியாய் விளங்கிய மார்லி பிரபுவிடம் இந்திய விஷயங்களைக் குறித்துச் சம்வாதிக்கச் சென்றார். 1908-ஆம் ஆண்டிலும், மின்டோ பிரபுவின் சீர்திருத்த ஆலோசனைகள் சம்பந்தமாக மற்றொருதடவை இங்கிலாந்திற்குப் பிரயாணஞ் செய்தார்.

நம் மதாசாரக் கொள்கைகளை யநுசரித்துப் பொது விஷயங்களில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சிற்சிலரேனும் ஒன்றுசேர்ந்து மனமொழி மெய்களால் உள்ளவாறு பிரதிபலனைக் கருதாது எப்பொழுதும் உழைக்கவேண்டுமென்று ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனையோ தடவைகளில் மிஸ்டர் கோகலே தெரிவித்திருக்கிறார். தேசத்திற்கு உழைப்பதென்ற கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கும் தேசபக்த சந்நியாசிகளை யொன்று கூட்டி வைக்கவேண்டுமென்று அவருக்கு வெகு காலமாகப் பெரியதோர் எண்ணமிருந்தது. கடைசி



யாக, 1905-ஆம் வருஷத்தில் பரதகண்ட சேவகர் சங்கம் (Servants of the India Society) என ஒன்று புனாவில் ஸ்தாபித்து, அதில் அநேக இளைஞர்கள் சேர்ந்து தமது சொற்படி உழைப்பதற்குரிய பற்பல ஏற்பாடுகள் செய்தார். அச்சங்கத்திற்கு அங்கத்தினரானோர் சொற்ப கைம்மாறு பெற்றுப்பின் மிஸ்டர் கோகலேயின் வாழ்க்கை முறையையே மாதிரியாகக் கொண்டு அவரது நல்ல உபதேசங்களுக்கிணங்க இந்நாடு சீர்மையடைவதற்குரிய முயற்சிகள் செய்து வருகின்றார்கள்.

மிஸ்டர் கோகலேயின் தேசபக்தியின் எல்லை இந்தியாவினுள் மாத்திரம் அடங்கி நில்லாது, விரிந்த கடலுக்கு அப்பால் விளங்கும் தென் ஆப்பிரிக்காவுக்கும் போகவே, அங்கு நம்மவர்கள் பட்ட பல கஷ்டங்களை அவர் கண்டு கேட்டதால் தம்மனம் சகியாது வருந்த நேர்ந்தது; உண்ணார் உறங்கார்; உயிர்ப்பார் நெடிது, வியர்ப்பார் கடிது. சில சமயங்களில் தம் விழி முளரிகளிலிருந்தும் வெண்முத்து உதிர்ப்பார். அங்குள்ள அதிபதி கட்டளைக்கு அடங்கிவாழும் இந்தியருக்கு நடந்த சதியாலோசனைகளைத் தொலைக்க எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏழை நெஞ்சம் புண்ணானார். தென் ஆப்பிரிக்கா இந்திய கஷ்ட நிவர்த்தி நிதி யென்பதை ஏற்படுத்தி ஏராளமான பணம் சேகரித்துத் தென் ஆப்பிரிக்காவிலிருந்த இந்திய சிங்கமாகிய காந்தியிடம் அனுப்பி அவ்விடத்திய கலகங்களைப் பொருள் செய்யாமல் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தை (Passive Resistance) மேற்கொண்டு தைரியத்துடன் நடத்தும்படி தூண்டினார். தென் ஆப்பிரிக்காவுக்குக் கூலிக்காக அனுப்பப்படும் ஆட்கள் பின்னும் இந்தியாவிலிருந்து போகக்கூடாதென்று ராஜப்பிரதிநிதியாகிய ஹார்டிஞ்ச் பிரபுவிடம் தெரிவித்ததுமன்றி அங்குள்ள பலவித தொந்தரவுகளையும் நீக்குமாறு அவரை வேண்டினார். தாம் அடைந்திருந்த தேக அசௌக்கியத்தைக் கருதாது 1911-ஆம் வருஷத்தில் தாமே நேரே தென் ஆப்பிரிக்காவிற்குப்போய் அங்குள்ள ராஜதந்திரிகளிடம் இந்திய விஷயங்களைக் குறித்துப்பேசிப் பிற்கு இங்கிலாந்திற்குச் சென்று வியக்கத்தக்க பலவேலைகளைச் செய்து இந்தியருக்குச் சாதகமாக யாவற்றையும் இனிது முடித்துக்கொண்டு திரும்பினார்.

1913-ஆம் வருஷத்தில் தமது உடம்பு மிகுந்த அசௌக்
கியத்தால் வருந்தியதாகலான், மிஸ்டர் கோகலே ராஜப் பிரதி
நிதி சட்ட நிர்மாண சபையில் அதிகமாக வேலை செய்யக்கூட
வில்லை அவ்வருஷம் மார்ச்சுமாதம் கூடிய சட்டச்சபையில்
ஹார்டிஞ்ச் பிரபுவின் அக்கிராசனத்தின் கீழ் வரவுசெலவு மெம்
பராக இருக்கும் ஆனரபில் ஸர் G. F. வில்சன் தாம் கொண்டு
வந்த பட்ஜட் கணக்கைப் படிப்பதற்குமுன், அங்கு மிஸ்டர்
கோகலே யில்லாததைக்கண்டு துன்பக் கடலிலாழ்ந்து, அச்
சபை, அரசன் இல்லாத நாடுபோலவும், நாயகமணியில்லாத
மதாணிப்பதக்கம் போலவும், மெய்ஞ்ஞானம் இல்லாதவர் கற்ற
கல்விபோலவும் பொலிவழிந்திருப்பதை யுணர்ந்து அங்கத்தின
ரைப்பார்த்து, 'உங்களை வெகு நேரம் இங்கு இருக்கச்செய்ய
எனக்கு மனமில்லை. இந்தியாவிற்கு மிகவும் அந்தரங்கமான
வரும், உவ்ளபடி சேவகம் செய்து உழைத்துப் புகழ்பெற்ற
வருமான மிஸ்டர் கோகலே இச்சபையிலில்லாததைக் காண
லும் நான் துக்கக்கடலி லாழ்ந்திருக்கிறேன். என்னைப்போ
லவே, நீங்களும் (சமமாக அடுத்த பொருளினுடைய நிறத்தைக்
காண்பிக்கிற பளிங்குபோல) வருத்த முறுவீர்கள் என்பதற்கு
ஐயமின்று. இதற்கு முன் கூடிய கவுன்ஸில்களில் அங்கத்-
தினரா யிருந்தவர்கள், இப்போது புதிதாய் வந்திருக்கும் அங்
கத்தினர்களுக்கு, மிஸ்டர் கோகலேயின் வரவின்மையால் இச்
சபையின் பொலிவழிவைக் கூறுவது அதிக கஷ்டமாகவே
யிருக்கும். அவரில்லாமல் இப்போது நடக்கப்போகும் வியவ
காரங்களை நோக்கினல் (ஷேக்ஸ்பியர் நாடக மொன்
றில் முக்கிய கதா நாயகனுகிய) ஹாம்லெத் இல்லாமல்
ஹாம்லெத் நாடகத்தை நடிப்பதற்குச் சமானமாகும்' என்று
கூறினர்.

மிஸ்டர் கோகலே அதிக வியாதியாயிருந்தும் இந்திய பப்
ளிக் ஸ்ர்விஸ் கமிஷனில் உழைத்துவந்த விதம் எந்நாளும்
பொன்னிலே செதுக்கி வைத்தற்குரியது.

ஆறுமாதங்களுக்கு முன்னர் ஜியார்ஜ் மன்னர்; நமது காரு
ண்ய வைஸிராயாகிய ஹார்டிஞ்ச் பிரபுவின் சிபார்ஸின்மீது
மிஸ்டர் கோகலேவுக்கு K. C. I. E. பட்டமொன்று கொடுக்க



விரும்புவதாகத் தெரிவித்தலும், அவர் மிகவும் தாழ்ந்து பணிந்து
அப்பட்டம் தமக்கு வேண்டாமெனக் கூறிச் சாமானிய மனுஷ்
யர்களின் மத்தியிலே தானும் ஒருவனுகக் கருதப்படவேண்டு
மென்று விரும்பினர்.

அந்தோ! பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ரிபோர்ட் வெளி
வருவதற்கு முன்னமே, இந்தியாவுக்கு நற்காலம் பிறக்கும்
என்று யாவரும் எதிர்பாரா நிற்கையிலே, இவரைப்போலும்
தேச பக்தசிரோமணிகளின் முயற்சியால் இங்கிலாந்திற்கும்
இந்தியாவிற்கும் நெருங்கிய சம்பந்தங்கள் ஏற்படும் என்றிருந்த
காலத்திலே, திடீரென 1915 ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 19உ
வெள்ளிக்கிழமை இவர் தேகவியோகமானது இந்தியாசெய்த
தௌர்ப் பாக்கியமென்றே அறுதியிட்டு உறுதிகூற வேண்டும்.
அவர் இறக்கும் காலத்தில் அவருக்கு வயது 49.

மிஸ்டர் கோகலேயின் முகவிலாசங் கண்டார் மனக்குமுத
மெல்லாம் மாண்பொடு மலரும்; உள்ளக் கவற்சிகளொழிந்து
பேருவகை பூப்பர். அவருடைய பரந்த விழிகளும், இள நகை
யும், மெல்லிய மேனியும், அகன்ற நெற்றியும், கருணையான
பார்வையும், சாந்தவடிவும் எவர் மனத்தையும் பிணிக்கத் தக்-
கன. அவரது அழகிற் கேற்றவாறு, அறிவும் ஒழுக்கமும் அன்
புஞ் சூழ்ச்சித் திறனும் பொறையும் மானமும் அவரிடம் குடி
கொண்டிருந்தன. அவருடன் இராஜாங்க விஷயங்களில் விளை-
யாடும் மக்கள் யாவரும் அவர் உவப்பன தாமும் உவப்பார்;
அவர் வெறுப்பன தாமும் வெறுப்பார். அவர் புன்முறுவல்
பூப்பதையே பெரும்பேறென மதியா நிற்பர்.

மிஸ்டர் கோகலேயின் ராஜசம்பந்தமான கோட்பாடுகளை
நோக்குமிடத்து முக்கியமானதொன்று அறியக் கிடக்கின்-
றது. பலவாறுகச் சின்னமுற்று, கேவலமான நிலைமையை
யடைந்து, அடியோடு நிலைதடுமாறிப் போகும் சமயத்திலே
யிருந்ததெனக் கருதப்பட்ட நம் இந்தியா தெய்விக வசத்தால்
அங்கில மன்னரின் கீழ்ப்பட்டு அவர்களுடைய நல்லரசாட்சி-
யின் சம்ரட்சணையைப் பெற்றதற்காக அவர்களிடம் மாறாத
ராஜபக்தியுடனிருந்து, நன்மதிப்பு, கர்வமின்மை, காரியத்
திறமை, தேசபக்தி முதலியன உள்ளூறப் பெற்றவர்களாய்

மதாபிமானத்தால் நிகழுறும் விரோதத்தை யறவே யொழித்துப் பிரிட்டிஷ் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்ட பல குடியேற்ற நாடுகளி லிருப்பதுபோல நம் தேசத்திற்கும் சுய ஆட்சி முறையை தேட வேண்டும் என்பதுவே மிஸ்டர் கோகலேயின் முக்கிய கோட்பாடாக இருந்தது.

பல்லோராலும் வியந்து கொண்டாடப் பெறும் நம் பரத கண்டத்தின் மேற்பாங்கரில் துவாரகையில் பல்லாயிர வருஷங்களுக்கு முன்னர் விஷ்ணு அமிசமாகிய கோபாலகிருஷ்ணன் என்றொரு மகான் அவதரித்திருந்தார். அவர் தம்முடைய பிரஜைகள் கொடிய மழைகளினின்றும் கடிய இடிகளினின்றும் தப்புவதன் பொருட்டுத் தம்முடைய திருவிரலிலே கோவர்த்தன கிரியை வானிற் றூக்கி நிறுத்தினர் என்று புராணங்கள் கூறும். தற்காலத்திலோ ஈடும் எடுப்பும் அற்ற அந்த மேற் கிந்தியாவிலேயே மற்றொரு கோபாலகிருஷ்ணன் பிறந்தார். இவர் அரிய தேசாபிமானம் என்னும் ஒடித்தற்கரிய விரலின் மீது தமது பேரறிவு என்னும் கிரியைத் தூக்கி நிறுத்தி நம்மீது கடைக்கண் பாலித்து அருள் புரிந்தார். முன்னாளிலே பிறந்த கோபாலகிருஷ்ணன் க்ஷத்திரிய வமிசத்தினன் ஆகவே தோள் வலிமை மிக்குற்று விளங்கினன். இந்நாளிலே தோன்றிய இக் கோபாலகிருஷ்ண கோகலே பிராமண குலத்தவர் ஆகவே தமது ஞான வலிமையாலே இராஜ காரிய சாதனங்களை ஒருங்கே நடத்தினர். துவாபர யுகத்துக் கிருஷ்ணனுக்கு சாந்தீப மகரிஷி பரம சற்குருவாய் விளங்கியவாறே, இவருக்கும் ரனடே விளக்கமுற்றார். அவர் கீதாசாரியராக இவர் போதகாசிரியரானர். ஒரு குடும்பத்தின் பிரிவினராய பஞ்சபாண்டவர்க்குத் தாயங் கொடோம் என்று வாதிட்ட துரியோதனனுதியரின் வன்மையை ஆயர்குடிப் பெருமான் அழித்தனனாக, இத் தூயகுடிப் பெருமான் அங்கிலேயரின்கீழ் ஒரு குடிப் பிரஜையாகிய இந்தியருக்குத் தாயங் கொடோமென்று எதிர்வாதாடிய தென் ஆப்பிரிக்கா கவர்மெண்டாரின் பிடிவாதத்தை யடக்கினர். இப் பூவுலகத்து மன்னரின் புகழ்ச்சிக்கு உறைவிடமாயிருந்த தளபமார்பனைப் போலவே, இவரும் மாணிக்கம் பொற்பதக்கத்தின் மத்தியில் துன்றுமாறு அறிவாதிய நிரம்பிய ஐரோப்பிய மன்னரின் இடையில் பொலிந்து விளங்கினர். மற்றைய பாகங்களிலே



இப்பெருமகன் அக்கிருஷ்ணனுக்கு ஒப்பின்றியவ ரெனினும், இவர் அப்பெருமானின் தலைமைச் சீடரெனச் சாற்றலாம். கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குப் போதித்த உபதேசத்தில் 'அர்ச்சுன! நிஷ்காமிய கர்மமே புரிவையாக! அதாவது, யாதொரு பலனையும் எதிர் பாராது நினது கடமையை நிறைவேற்றுவாயாக' என்பதைத் தமக்கே அக்கிருஷ்ணன் உபதேசித்ததாகக் கொண்டு இன்பத்தையேனும் நலத்தையேனும் புகழையேனும் சிறிதும் எதிர்பாராது தம் தேசத்திற்குப் பல இன்றியமையாத வுதவிகளைப் புரிந்து வந்த ஆனரபில் மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோகலே (C. I. E.) அவர்களின் வாழ்க்கை முறையையே உயரிய மாதிரியாகக் கொண்டு எவரும் பின்பற்றக் கடவர்.

சி. வே. விவேகாநந்தா.

## GENERAL CLEANLINESS

### சுசி

'சுசி' என்றால் பிரகாசமானது, வெண்மையானது, தெளிவானது, பவித்திரமானது, களங்கமற்றது, அசுத்தப்படாதது, நல்லொழுக்கம், திருத்தம், உண்மை, அமைதி, கபடமின்மை, பரிசுத்தம், நன்மை, தெய்வோபாசனை செய்யும் நிலைமை என்று பலவாறாகப் பொருள்படும்.

2. இத்தனை அர்த்தங்கள் பொருந்தியதாதலின் சுசி என்னும் பதம் தேகாரோக்கியத்திற்கு அனுகூலமான நிலைமையைக் குறிப்பதற்கும், தேகத்தின் பரிசுத்தத்தைக் குறிப்பதற்கும், தேகத்தைச் சூழ்ந்துள்ள இடங்களின் பரிசுத்தத்தைக் குறிப்பதற்கும் உபயோகிக்கப் படுகின்றது. இதைப் பற்றிய விவரங்களை யெல்லாம் அமெரிக்கா தேசத்திலுள்ள Dr. Kellogg என்னும் பிரபல வைத்திய சாஸ்திர பண்டிதர் எழுதியுள்ள 'Domestic Hygiene, Anatomy and Physiology' என்னும் கிரந்தத்தில் விரித்துரைத்திருக்கின்றார்.

3. அந்தப் புஸ்தகத்தைப் படித்துப் பார்த்தால், அது பரத கண்டத்து ஸநாதன தர்ம சாஸ்திரங்களின் விருத்தியுரை என்றே சொல்லலாகும். மேற்சொல்லிய வைத்திய சிரேஷ்டரும் மற்றுமுள்ள மருத்துநூற் புலவர்களும் தனித்தனியே வேறு வேறு தேசங்களில் உழைத்து, தங்கள் தங்களுடைய அனுபவத்திற்கு வந்த விஷயங்களை ஆய்ந்து ஓர்ந்து சிந்தித்து, இவர்களுக்கு எத்தனையோ சகாப்தங்களுக்குப் பூர்வமே இந்திய ரிஷிகள் தெரிந்து கூறியுள்ள சித்தாந்தங்களையே இப்பொழுது வற்புறுத்திக் கூறுகின்றார்கள்.

4. உடம்பைச் சுத்தமாய் வைத்துக் கொள்வது ஆரோக்கியத்தைக் காப்பதற்கு மூலசாதனமாயுள்ள அமிசம். கை விரல்களிலும் கால் விரல்களிலுமுள்ள நகங்களையுஞ் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும்; நகமூலங்களை அடிக்கடிச் சுத்தி செய்ய வேண்டும்; நகத்திற்கும் விரலிற்கும் இடையிலுள்ள அழுக்கை அப்போதைக் கப்போது களைய வேண்டும். அவ்விடத்தில் அழுக்குச் சேராதிருக்கும் பொருட்டே க்ஷௌரம் செய்து கொள்ளுந்தோறும் நகங்களை நறுக்க வேண்டியதாகின்றது. இந்த விதியின்படி நடக்காமல் அசிரத்தையாயிருந்தால் அந்த அழுக்கு நாம் உட்கொள்ளும் உணவுடன் தேகத்திற் சேர்ந்து அங்கே இடம் பெற்று வியாதிகளை வளர்க்கும்.

5. குதிக்கால்களைக் கல்லின்மீது நன்றாய்த் தேய்த்துக் கழுவவேண்டும்; இல்லாவிட்டால், குதிக்காலின் ஓரங்களில் பித்த வெடி வெடிக்கும். பித்தவெடியை ஆற்றுவதற்கு உத்தமமான மருந்து ஆலம் பால்; அது சருமத்தில் உண்டாயிருக்கும் சந்துகளை அடைத்துக் கொண்டு, மணல் முதலியன உள்ளே புகாமல் தடுப்பதன்றிப் புண்களையும் ஆற்றும்.

6. நாணத்தைப் பற்றி நாம் சில விஷயங்களில் மிகவும் தவறான கொள்கைகளை மேற்கொண்டு நடக்கிறோம். அதிக நாணங் கொண்டாடி அரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளுகிறோம். உண்மையாக எல்லாரும் நாணத்தைக் கொண்டாட வேண்டியது அவசியமே. ஆனால், தேகத்தை ஆரோக்கியமாய்க் காப்பாற்றி வைத்துக் கொள்வதற்கு மிகவும் முக்கியமாயுள்ள காரியங்களில் நாணங் கொண்டாடி ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வது



போலிநாணமேயல்லாமல் உண்மையான நாணமாகாது. அப்படிப்பட்ட போலிநாணத்தினால் நாம் நமது தேகத்திற் சிறிது பாகங்களை நன்றாய்ச் சுத்தி செய்யாமல் விட்டு விடுகிறோம். இது பெருந் தவறு.

7. ஜனங்களுக்கு ஏற்கெனவே யுள்ள மடமை அதிகமாயிருக்க, அதனோடு இந்தப் போலிநாணமும் சேர்வதனால் அந்தத் தேகபாகங்களைச் சுத்தியாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை முக்கியமாய்க் கொள்ளாமல் அநேக விதமான வியாதிகளை உண்டாக்கி வளர்த்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களைச் சாதாரணமாய்த் தண்ணீர் வார்த்துக் கழுவுவது போதாது; நன்றாய்த் தேய்த்து மிகவும் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும்.

8. ஸ்நானஞ் செய்யும் விஷயத்திலும் தேகத்தையும் ஆடையாபரணங்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளும் விஷயத்திலும் மலையாளிகளினுடைய ஆசாரத்தை மற்றத் தேசத்திலுள்ளவர்கள் மேற்கொள்வார்களானால், அவர்கள் எல்லாரும் ஆயுளும் ஆரோக்கியமும் அதிகரித்துச் சௌக்கியமாய் வாழ்வார்கள்.

9. கௌபீனம் அல்லது லங்கோட்டி முதலியவைகளை மாத்திரம் கட்டிக்கொண்டு ஒருவன் குளிக்குந் துறைகளுக்குப் போகக் கூடாது, வீதிகளில் நடக்கக் கூடாது, வெளிவரக் கூடாது. அப்படிப்பட்ட ஒழுக்கம் மிருகத் தன்மையான இழிவொழுக்கமாகும்.

10. நாட்டுப்பாங்கின்படி ஒழுங்கான ஆடையென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் விதமாக ஆடை அணியாமல் லௌகிக சபைகளுக்கும் வைதிக சபைகளுக்கும் போகக் கூடாது; ஒழுங்காய் ஆடை உடுக்காமல் மூத்தவர்களின் முன்னும், பெரியவர்களின் முன்னும், அன்னியர்களின் முன்னும், தம் வீட்டிலுள்ள ஸ்த்ரீகளின் முன்னுங் கூடத் தோன்றக் கூடாது.

11. தலைமயிரை நன்றாய்க் கழுவிச் சுத்தமாய் வைத்துக் கொள்ளாவிட்டால், தலையில் பேன் புழுக்கும். பேனைப் போக்குவதற்காகத் தலைமீது பாதரசத்தை வைத்துத் தேய்ப்பதும்,

குப்பைமேனிச் சாற்றை வைத்துத் தேய்ப்பதும் கண்ணுக்குத் தீமை பயக்கும். 'கெரோசின் ஆயில்' என வழங்கும் மண் எண்ணெயைத் தடவிச் சீப்பினால் தலைமயிரைச் சீவினால் அதன் வாசனை பட்டுப் பேனும் ஈரும் உதிர்ந்து போம். பிறகு, நல்லெண்ணெயும் வெற்றிலைச் சாறுமாவது, அல்லது புளித்த மோராவது தலை மயிரில் வார்த்துக் கசக்கிக் கழுவிச் சீக்காய் போட்டுத் தேய்த்துச் சுத்தமாக்கி விடலாம்.

12. ஆடையில் அழுக்குப் படிந்தால் சீலைப் பேன் புழுக்கும். அழுக்குத் துணிகளைச் சவர்க்காரம் போட்டுக் கழுவலாம், பூந்திக் கொட்டையை ஊறப் போட்ட ஜலத்திலாவது பச்சைப் பயறு அரைத்துக் கரைத்த ஜலத்திலாவது, சூடுள்ள கஞ்சியிலாவது, சுண்ணும்பு ஜலத்திலாவது ஊறவைத்துத் துவைக்கலாம். தேகத்தையும் ஆடையையும் சுத்தமாய் வைத்துக் கொள்ளுவது தனக்கும் பிறருக்கும் இனிமையா யிருப்பதன்றித் தெய்வத்திற்கும் பிரியமா யிருக்கும். நல்லாடை உடுத்திக்கொண் டிருக்கிறவர் சிலர் அதில் அழுக்குப் படியாதிருக்கும் பொருட்டு அதை ஒதுக்கிக் கொண்டு அழுக்கான இடங்களில் உட்காருவார்கள். ஆடையில் அழுக்கு ஒட்டாமல் காப்பதற்காகத் தேகத்தில் அழுக்கை அப்பிக் கொள்ளலாமோ? ஆடையிலும் அழுக்கு ஒட்டக்கூடாது, தேகத்திலும் அழுக்கு ஒட்டக் கூடாது.

13. 'கைகளையும் கால்களையும் தேகத்திலுள்ள சந்து பொந்துகளையும் அடிக்கடி கழுவி மிகவும் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதைக் கப்போது தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாய் உறிஞ்சிக் குடிக்க வேண்டும்; இதனால் இரைப்பைக்குப் பலமுண்டாகின்றது. சுவாஸ கோசங்கள் நிரம்பிப் பூரிக்கிற வரையில் வாயுவை மெதுவாய் உள்ளே இழுக்க வேண்டும்; பிறகு, அனுகூலமாய்த் தாங்க முடியும் வரையில் அந்த வாயுவை உள்ளே இருத்தி வைக்க வேண்டும்; முடிவில், அப்படி இருத்தி வைத்த வாயுவை மெதுவாய் வெளிவிட வேண்டும்' என்று ஆங்கில வைத்திய நூற் புலவராகிய Dr. Kellogg என்பவர் கூறுகின்றார்.

14. எந்தக் காரியம் செய்வதற்குத் தொடங்குகையிலும் கை கால்களைக் கழுவிக்கொண்டு, ஆசமனஞ் செய்து பிராணாயாமம் செய்ய வேண்டும் என்று ஆரியர்களுடைய சாஸ்திரங்களில் விதிக்கப்பட் டிருப்பதையும், மேற்றிசைப் புலவர்கள் கூறும் விதியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மேற் சொல்லிய பயிற்சி சுவாஸ கோசப் பயிற்சி எனப்படும். இந்தப் பயிற்சியினால் தேகத்தின் உள்ளும் புறமும் சுத்தப்படும், ஆரோக்கியம் வளரும். இந்தப் பயிற்சி தினந்தோறும் எத்தனை தடவை செய்வதற்கு இயலுமோ அத்தனை தடவை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட் டிருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் கொஞ்சம் அதிக நேரம் வாயுவை உள்ளே நிறுத்தி வைக்கப் பிரயத்தனப்பட வேண்டும்.



15. சோறு, கறி முதலியன சமைக்கையிலும் கலந்து வைக்கையிலும் சாத்தியமான வரையில் அவைகளில் நம்முடைய கை படாமல் காக்க வேண்டும்; முக்கியமாய், உப்பு புளி சம்பந்தமான ஜல பதார்த்தங்களிலும், சமைத்த உணவுப் பொருளிலும் கை படக் கூடாது.

16. புளியைக் கரைக்கும் பொழுதும், பச்சடிகள் செய்யும் பொழுதும், எலுமிச்சம் பழம் முதலியவைகளைப் பிழியும் பொழுதும், தேங்காய்ப் பால் பிழியும் பொழுதும், சித்திரான்னங்கள் செய்யும் பொழுதும் கரண்டிகள் முதலியவைகளைக் கூடியவரையில் உபயோகிக்க வேண்டும்; கை விரல்கள் அவைகளில் படாதிருப்பது நல்லது.

17. எதையும் உடனே கரைக்குந் தன்மை நீருக்கு இருப்பதனால், குடிக்கும் நீரில் விரல்களைத் தோய்க்கக் கூடாது. ஊறுகாய்ப் பானைகளில் கையைப் போட்டு ஊறுகாய்களை எடுக்கக் கூடாது. அதனால் பூச்சிகள் புழுக்கும். அந்தப் பானைகளை திறந்து வைப்பதனாலும் புழுக்கள் உண்டாகும். ஆகையால், ஊறுகாய்களைக் கல் பீங்கான் சாடிகளில் வைத்துக் காற்று நுழையாமல் இறுக மூடவேண்டும்; பானையில் வைக்க வேண்டுமானால் அந்தப் பானையின் வெளிப் புறத்தில் வெள்ளைக் குங்கிலியம், தேன்மெழுகு ஆகிய இரண்டையும் உருக்கிக் கொண்டு கற்பூரத்தையுங் கலந்து பூசவேண்டும்; மேலே மூடியிட்டு, அந்த மூடியின் மீது மேற் சொல்லிய மெழுக்குத் தடவிய சீலையைப் போட்டுக் கட்டி வைக்க வேண்டும்.

18. தீயில் பக்குவப் படுத்தப் படாத உணவுப் பொருள்களும், பழவகைகளும், நெய்யிலாவது எண்ணெயிலாவது வறுத்த பண்டங்களும் மாத்திரமே கையினால் எடுத்துப் பரிமாறுவதற்குத் தக்கவை. (அபக்வம் தைலபக்வஞ்ச ஹஸ்தேந பரிவேஷயேத்).

19. சமைத்த உணவுப் பொருளைப் பரிமாறுகையில், முக்கியமாய் அது ஈரமாயாவது, ஒட்டுந் தன்மையாகவாவது இருந்தால், அதைக் கரண்டியினால் எடுத்துப் பரிமாறவேண்டும்; கரண்டி யில்லாவிட்டால், அந்த உணவுப் பொருள் விரல்களில் படாதிருக்கும் பொருட்டு இலையைக் கையில் இடுக்கிக்கொண்டு பரிமாற வேண்டும். இந்த ஆரோக்கிய விதியின் கருத்தை உணராத மூடர்கள் அநேகர் அதன் உண்மையான உத்தேசத்தை நிறைவேற்றாமல், பரிமாறுகிறவர்களுடைய கையின் விரலில் ஓர் இலைத் துண்டையாவது சுற்றிக் கொள்ள வேண்டும் என்றும், தர்ப்பையையாவது வளையமாய்ப் போட்டுக் கொள்ள வேண்டும் என்றும், அதைப் போட்டுக்கொண்டு வெறுங் கையினாலே பரிமாறலாமென்றும், அப்படிச் செய்வது நல்ல ஆசாரமென்றும் நினைத்துச் செய்து வருகிறார்கள். மடமைக்கு மட்டுமில்லை, மருந்துமில்லை.

20. தர்ப்பையினால் செய்த பவித்திரத்தை விரலில் அணிந்துகொண்டு பரிமாறுவதும், இலைத் துண்டை விரலில் இடுக்கிக் கொண்டு பரிமாறுவதும், சாஸ்திரத்தின் கருத்தை நிறைவேற்றவில்லை என்று சொன்னோம். அது அனாசாரமென்றும் சொன்னோம். ஆனால், அந்த அனாசாரத்தை இகழ்வதுங் கூடாது, ஒழித்து விடுவதுங் கூடாது. ஏனெனில், அதன் உண்மையான கருத்து என்னவென்று எப்பொழுதேனும் ஒரு காலத்தில் விசாரித்து ஆராய்ந்து அறிவதற்கு அந்த அனாசாரம் வழக்கத்தில் இருந்தாலன்றிச் சமயம் வாய்க்காதல்லவா? அந்தச் சமயம் வாய்க்கும்போது அனாசாரம் ஒழிந்து சாஸ்திரத்தின் கருத்தை நிறைவேற்றத் தக்க உண்மையான ஆசாரம் வந்து எய்தும். உடலைக் காப்பாற்றி வைத்தால், உயிர் ஒரு காலத்தில் அந்த உடலில் வந்து புகுந்து கொள்ளும் என்பது போல, அந்த அனாசாரத்தையேனுங் காப்பாற்றி வைத்தால் சாஸ்திரத்தின் கருத்து இனியொரு காலத்தில் அதனில் வந்து புகுந்து காரியம் கிரமமாய் நடைபெறுவதற்காகும்.



21. ஆதலால், ஆராய்ந்து அறிந்தவர்களுடைய கடமையென்னவெனில், தம்மைவிட அறிவிற் குறைந்தவர்கள் வழக்கமாய் அநுசரித்து வரும் ஆசாரங்களின் உண்மையான கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டியதாம். ஆசாரமென விதிக்கப்பட்டு இருப்பது ஒவ்வொன்றும் ஆரோக்கியத்தின் பொருட்டே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதை உணர்ந்து, அர்த்தந் தெரியாத ஆசாரங்களை அநுசரிப்பது மடமை யென்றும் மூட பக்தியென்றும் இகழலாகாது. அந்த ஆசாரங்களின் கருத்து இப்பொழுது நமக்கு விளங்கா விட்டாலும், இனி அதிகப் படிப்பினாலும் ஆராய்ச்சியினாலும் ஆலோசனையினாலும் அவைகளின் உட்கருத்து விளங்கலாகும். ஆகையால், அர்த்தம் தெரியவில்லை யென்னுங் காரணத்தைக் கொண்டு மகாஞானிகளாகிய ரிஷிகள் விதித்துள்ள ஆசாரங்களைக் கைவிடக் கூடாது. அவைகளைக் காப்பாற்றி வைத்தால், பிறகு ஒரு காலத்தில் அவைகளின் பிரயோசனம் வெளிப்படுவதற்காகும்.

22. அழுக்குள்ள கையினால் எடுத்து எதையும் புசிக்கக் கூடாது; கையைக் கழுவிக் கொள்ளாமல் எதையும் எடுத்து உண்ணலாகாது. உணவு அருந்துவதற்கு முன்னால் தேகத்தில் ஐந்து அங்கங்களைக் கழுவிக் கொள்ள வேண்டுமென்று சாஸ்திரம் விதிக்கின்றது. அந்த ஐந்து அங்கங்களாவன,— இரண்டு கைகள், இரண்டு கால்கள், வாய்.

23. அன்னம் புசிக்கையில், குயவன் களிமண்ணைப் பிசைவது போல அதைப் பிசையக் கூடாது. குழம்பு முதலியவைகளை அன்னத்துடன் கலந்து உண்பதனால் அதை எளிதில் விழுங்குவதற் காகின்றது; அப்படி எளிதில் விழுங்குவதனால் வாயினால் மெல்வது குறைகின்றது; அதனால் ஜீர்ணம் தாமதப்படுகின்றது. நன்றாய் மென்று உண்பதனால் ஜீர்ணம் சீக்கிரமாயும் நன்றாயும் ஆகும்.

24. குழம்பு, ரசம், முதலியவைகளை அன்னத்துடன் கலந்து பிசைவதைவிட, அன்னத்தைத் தனியே உண்டு, இடையிடையே குழம்பு முதலியவைகளைக் கொஞ்சமெடுத்து நக்குவது அல்லது உறிஞ்சுவது நல்லது. அல்லமாலும், அவைகளை விரல்களினால்

அன்னத்துடன் உபாயமாய்க் கலந்து உண்ணலாம். உள்ளங் கையிற் பெரும்பாகம் அன்னத்துடன் சம்பந்தப்பட வேண்டிய ஆவசியகம் இல்லை. கையின் பாகங்கள் எவ்வளவு குறைவாக அன்னத்துடன் சம்பந்தப் படுகின்றனவோ அவ்வளவு நல்லது.

25. மண் சட்டியிற் சோறு சமைத்து, அப்போதைக்கப் போது புதிய இலையில் அதைப் பரிமாறிக் கொண்டு, கையினால் எடுத்துப் புசிப்பதே எளிதான உணவுமுறை. இதனால் செலவு மட்டு, சுத்தம் அதிகம். வேறு உபகரணங்களினால் அன்னமெடுத்துப் புசிப்பதும், அதற்காக வேறு பல சாமக்கிரிகளைத் தேடி வைத்துக் கொள்வதும் அதிகப் பிரயாசையான காரியம்; அதனால் அதிகச் செலவுமாகும். அப்படிப்பட்ட வழக்கங்கள் நமக்கு வேண்டா.

(இன்னும் வரும்.)

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of the 'Arya,' Madras*

## NATURE STUDY

## இயற்கைப் பொருட் பாடம்

### THE BUTTERFLY

### வண்ணாத்திப் பூச்சி

*ராமசாமி* — அதோ தோட்டத்தில் தும்பைச் செடியின் மீது உட்கார்ந்திருப்பது என்ன ?

*சாமிநாதன்* — வண்ணாத்திப் பூச்சி என்று சொல்லப் படுவது அதுதான்.

*ராமசாமி* — வண்ணாத்திப் பூச்சி என்று உனக்கு எப்படித் தெரியும் ?

*சாமிநாதன்* — சென்ற வெள்ளிக்கிழமை நமது மூன்றாவது வகுப்புக்கு பொருட் பாடங்கள் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர் இதைப் பற்றிய பாடம் சொல்லிக் கொடுத்தார்.



*ராமசாமி* — நான் அன்றையதினம் அயல் கிராமத்துக்குச் சென்றேன். தயவு செய்து அவற்றின் விருத்தாந்தத்தை எல்லாம் எனக்கு சொல்லிக் கொடு.

*சாமிநாதன்* — சரி, எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன்; நமது வகுப்புக்குப் போகலாம் வா. ஏனென்றால் இதை விவரிக்கச் சில சித்திரங்கள் எழுத வேண்டி யிருக்கும்.

பூச்சி என்பதற்கு அடையாளம் 6 கால்கள் 4 இறக்கைகள் 2 உணர்ச்சிக் கருவிகள் இருத்தல்.

### வண்ணாத்திப் பூச்சி

தேக அமைப்பு — தலை, மார்பு, வயிறு, உணர்ச்சிக் கருவிகள், இறக்கைகள் ஆகிய இவைகள் இருக்கின்றன.

இனம் — அந்துப் பூச்சி, முதலிய சில பூச்சிகள்.

உணர்ச்சிக்கருவி — தலை ஆரம்பத்தில் சிறியதா யிருந்து போகப் போக பெரிதாகி இருக்கும்.



ருச்சுமாதிரி யிருப்பது.

உணர்ச்சிக் கருவியின் உபயோகம் — தும்பிக்கைபோல இருக்கும் மிருதுவான குழாயைப் புஷ்பத்தில் வைத்து அதில் உள்ள தேனை உறிஞ்சும்.

கண்கள் 2, பல சிறிய கண்கள் சேர்ந்து ஒரு பெரிய கண் ஆகும்.

வாய் — தேன்போன்ற திரவபதார்த்தத்தை உறிஞ்சும் தன்மை யுள்ளது.

இறக்கைகள் 4 உண்டு. 2 மேலும் 2 கீழும் மிருதுவானவை. அவைகளின் மேல் ஒருவித பொடி இருக்கிறது. அது சூர்ய வெளிச்சத்தில் பல நிறங்களுடன் பிரகாசிக்கும்.

சுவாசிக்கும் விதம் — வயிற்றிலுள்ள சுவாசக் குழைகளின் வழியாய் சுவாசிக்கும்.

வசிக்கும் நேரம் — பகலில் புஷ்பிக்கும் செடிகளின் புஷ்பத்தி லிருக்கும் தேனைச் சாப்பிட்டு இரவில் தூங்கும்.

N. B. — ஆனால் இதற்கும் இதன் இனமாகிய அந்துப் பூச்சிக்கும் சில வித்யாசங்கள் உண்டு. அவைகளாவன ;

உணர்ச்சிக்கருவி — இதில் உள்ள முள் போன்ற பாகம் தலையில் பெரிதாகி, போகப் போக சிறுத்திருக்கும்; அல்லது பிலாறுபோல் இருக்கும்.

2. வசிக்கும் நேரம் — இரவில் புஷ்பிக்கும் செடியில் உள்ள புஷ்பத்தின் தேனைச்சாப்பிட்டு பகலில் தூங்கும்.



பிலாறு மாதிரி.

சாமிநாதன் — ராமசாமி! கவனித்துக்கொண்டாயா? இவ்வினத்தின் சந்ததி விருத்தி யாவது விநோதமா யிருக்கும். கவனித்துக்கொண்டுவா, சொல்லுகிறேன்.

1. வண்ணாத்திப் பூச்சி, தன் குஞ்சுகள் சாப்பிடப் பிரியப் படக் கூடியதும், சாப்பிட ஏதுவானதுமான மரத்தின் கொம்பு அல்லது இலைகளின் பின்புறத்தில் அநேக முட்டைகள் இடும்.



முட்டைகள்.

2. சூரிய வெளிச்சத்தின் உதவியால், 2, 3 தினங்களுக்குப் பிறகு முட்டையி லிருந்து பச்சைப் புழு வெளியே வரும். அதற்குத் தலை, கண், வாய், கால்கள் உண்டு. அந்தப் புழுவானது 13 துண்டுகளால் இயன்றிருக்கிறது. தலையும் அதற்கு அடுத்த துண்டும் தவிர 3வது துண்டு முதல் 5 வது துண்டு முடிய உள்ள 3 துண்டுகளில் 3 ஜோடி கால்களும், அப்புறம் 2 துண்டு விட்டு 8 முதல் 11 வது, துண்டு முடிய உள்ள 4 துண்டுகளில் 4 ஜோடி கால்களும், பிறகு ஒரு துண்டுவிட்டு 13வது, துண்டில் 1 ஜோடி கால்களும் உண்டு. அந்தக் குஞ்சுப் புழுவானது ஆகாரத்துக்கு இலைகளை அதிகமாகச் சாப்பிடும். அப்படி 10, 15 நாட்கள் சாப்பிட்டு தன் தேகத்தைப் பருக்கவைக்கும். சிலந்திக்கு பின்புறமிருந்து நூல் வருவதுபோல் இப் புழுவுக்கு தன் வாயிலிருந்து ஒருவித நூல் உற்பத்தியாகிறது.



பச்சைப் புழு.



N. B. — நூல் என்பது தேகத்தினின்று வெளியேறும் ஒருவித பசையுள்ள பதார்த்தம். அது காற்றுப் பட்டு உலர்ந்து போனால் நூல் ஆகும். தனக்குத் தூங்கும் காலம் நெருங்கின வுடன், அது பக்ஷிகளுக்கும், மற்ற ஜந்துக்களுக்கும் தப்பித்துக் கொள்ளத் தன்னிட மிருக்கும் நூலால் தன்னைச் சுற்றி கூடு கட்டிக்கொண்டு, 2 கொப்புகளுக்கு மத்தியில் தன் கூட்டையும் கொப்பையும் சுற்றி கட்டிக்கொண்டு தூங்கும். அப்போது அதற்கு ஆகாரம் தேவை இல்லை.



பூச்சி கூட்டுடன் புழு உள்ளிருப்பது.

N. B. — புழுக்கள் எல்லாம் இதன் இனம். இதன்மேல் விஷத்தன்மை யுள்ள முட்கள நிறைந்திருப்பதால் இதை மற்ற ஜந்துக்கள் தொடுவதில்லை.

3. இப்படிச் சில நாட்கள் சென்றதும், தூங்கும் புழுவின் மேல்தோல் வெடித்து அதிலிருந்து பூச்சி உண்டாகும். அப்போது அதற்கு கை, கால், வாய், கண் முதலிய அவயவங்கள் கிடையா. அதை அமுக்கினால் மஞ்சள் நிறமான தயிர்போன்றுள்ள கொழுப்பு ஜலம் காணும்.

4. கொஞ்ச நாள் அப்படியே பூச்சி ரூபமாக கூட்டிலிருக்கும் போது அதற்கு இறக்கை, கால்கள், உணர்ச்சிக் கருவிகள், கண்கள் உண்டாகின்றன. உடனே தான் இருந்த கூட்டை உடைத்துக்கொண்டு வண்ணாத்திப் பூச்சியாக வெளியேறுகிறது.



குளவி.

ராமசாமி — நீ சொல்லிய வற்றை யெல்லாம் நன்றாய் கவனித்தேன். இப்பொழுது முட்டை, புழு, பூச்சி என இவ்வாறு மாறுகிறதுபோ லிருக்கிறது. இது மிகவும் விநோதமா யிருக்கிறது. இதன் ஜீவிய சரித்திரத்தையும், ஒவ்வொரு மாறுதலின் உருவப் படத்தையும் வரைந்து காட்டியதற்கும் உனக்கு வந்தனம் செலுத்துகிறேன்.



வண்ணாத்தி பூச்சி.

S. V. KRISHNAN,
*Schoolmaster, Bodinayakanur, Periyakulam, Tq.*

# DUTIES OF A VILLAGE SCHOOLMASTER

## கிராம உபாத்தியாயரின் கடமை

### ENGLISH TEACHING IN ELEMENTARY SCHOOLS

### எலிமென்டரிப் பாடசாலைகளில் ஆங்கிலம் பயிற்றல்.

இங்கிலாந்து தேசபாஷையே ஆங்கிலம் என்பது. இப்பாஷை நமது தேசத்து இராஜாங்க பாஷையாய் இருக்கிறது. ஆகையால் இந்தப் பாஷையைக் கற்க இராஜ்யத்திலுள்ள அனைவரும் ஆசைப்படுகிறார்கள். கிராமாந்தர வாசிகளும் தம்மக்கள் ஆங்கிலம் பயிலல் அவசியம் என்றறிந்து அவர்களை அவ்வழியிற் பயிற்ற முயன்று வருகின்றனர். ஆனால் ஆங்கில பாஷை கிராம பாடசாலைகளிற் பயிற்ற இயலாமல் இருக்கிறது. சர்க்கார் தரப்பில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள போர்ட் முனிசிபல் பாடசாலைகளிலும் ஆங்கிலம் பயிற்றப் படுவதில்லை. உபாத்தியாயர்களுக்கே அந்தப் பாஷாஞானம் இல்லை. நமது தேச ஜனங்களில் பெரும்பாலார் கிராம பாடசாலைகளில் மூன்று அல்லது நான்கு வகுப்புகளோடு முடிகிற சொற்ப கல்வியறிவோடு தமது வாழ்நாள் முழுவதும் கழிக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர். இந்நிலையில் சிறுவர்கள் ஏதோ சற்று ஆங்கிலம் தாம் சிறு வயதில் கல்விபயிலும் கிராம பாடசாலைகளிலேயே பயிற்றப் படார்களாயின் அப்பால் அதைப்பயில அவர்களுக்கு அவகாசம் நேரிடாமற் போகிறது.

ஆங்கிலம் பயின்றவர்களுக்குள்ள மதிப்பு எனையோருக்கு இல்லாதொழியும் உலக நடையைப் பிரத்தியக்ஷானுபவத்தில் உணர்ந்த பெற்றோர்கள் தம்மக்களை அப்பாஷையிற் பயிற்ற முயல்வது அப்பிள்ளைகளுக்கு அது நன்மை தரற்பாலதே யாகும். கிராமாந்தரங்களிலும் தம்மக்களை ஆங்கிலத்திற் பயிற்ற ஆசை கொள்ளாத பெற்றோர்கள் இல்லை. இப்படி அனைவரும் ஆசைப்படுவதும் ஞாயமேயாகும். 'யதாராஜா ததா ப்ராஜா' — அரசனெவ்வழி குடிகளவ்வழி — என்பதற்கேற்ப அவர்கள் ஆங்கிலத்தை அவாவுதல் தப்பிதமாகாது. உடையும் நடையும் ஆங்கிலத்துரை (அரசாட்சி)யின் கீழ் மாறுவ-



தான இக்காலத்தில் அரசாட்சியின் வழியே பாஷை நடையும் பயில்வது ஞாயமாகக் கொள்ளற் பாலதேயன்றி குறை கூறி தள்ளற் பாலதன்று. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே' என்பதற்கேற்ப இக்காலத்தில் யாவராலும் விரும்பப்படும் ஆங்கிலமொழி எவ்வகையிலும் பயிற்றுவதற்கான முயற்சி அறிவாளிகளான உபாத்தியாயர்கள் தேடுவது அத்யாவசியமேயாகும். இயன்ற மட்டும் முயன்று பாடு படுவார்களாயின் லோகோபகாரமாக இருக்கும்.

இனி உபாத்தியாயர்கள் தம் பாடசாலைகளில் ஆங்கிலம் பயிற்றற்கான வசதியைத் தேடிக் கொள்ளும் வகையைக் குறித்துச் சிறிது ஆராய்வோம். இதற்காக உபாத்தியாயர்கள் தாமே முந்தி அப்பாஷையைப் பழக்கிக்கொள்ள முயலவேண்டும். தமக்குரிய தாய்ப் பாஷையான தமிழோ, தெலுங்கோ ஒன்றில் கல்வி பயிற்றப்போதுமான அளவில் தாம் பயின்றிருக்கும் உபாத்தியாயர்கள் மற்றொன்றான ஆங்கில பாஷையிலும் சற்று தம்மைப் பழக்கிக் கொள்வது முடியாத காரியமன்று. சிரத்தை மட்டும் வேண்டும். முயற்சி செய்தால் முடியாத காரியமில்லை. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பர் 'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' எனவும் தமிழ்மறை கூறும். சிறுவர்களுக்குக் கிராமபாடசாலைகளில் போதிப்பதான ஆங்கிலம் இவ்வகையால் ஒருவாறு ஒழுங்குபடவேண்டுமேயன்றி வேறு வகையால் சரிகட்டிவராது. போர்ட்டு பாடசாலைகளில் சாதாரணமாய் உபாத்தியாயர்கள் ஒருவருக்கதிகப்பட்டே இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலும் ஒருவரேனும் ஆங்கிலம் இயன்றமட்டும் பயின்றவராக இருக்கக்கூடும். அந்நகையோர் ஆங்கிலபாடத்தைப் பாடசாலையிலேயே பயிற்றலாகும். பாடசாலையில் ஆங்கிலபாஷையும் பாடங்களில் ஒன்றாகப் பாடப்பட்டியில் (Time Table) ஏற்படுத்திக் கொள்ளலாகும். சென்னைபட்டணத்திலுள்ள கல்விச்சாலைகளில் இப்பாடம் முதல் வகுப்பிலிருந்தே போதிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம் பயிற்றாத பாடசாலைகள் இக்காலத்தில் எங்கும் மதிக்கப்பட மார்க்கமில்லை.

வித்தியாதிகாரிகளிடம் எலிமென்டரிப் பாடசாலைகளில் ஆங்கிலம் பயிற்றுவதைக் குறித்துப் பிரஸ்தாபித்து இதற்கொரு வழி தேடும்படி சொல்லப் புகின் அவர்கள் அடியிற்குறித்த அநேகமான அசந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். அவை யெவை யெனின் — கிராமாந்தரங்களில் உபாத்தியாயர்கள் ஆங்கில பாஷையிற் பயின்றவரன் றென்கின்றனர். ஏதோ சிலர் அப்பயிற்சி யுடையவரேனும் தம்மிடம் கல்விபயிலும் பிள்ளைகளுக்கு அதனைப் போதிக்கத்தக்க அளவினதாய் ஆங்கிலம் அவர்பால் எதிர்பார்ப்பதற் கில்லை யென்கின்றனர். ஒருகால் அப்பயிற்சி அளவுள்ளதாகக் காணப்படினும் அவர்கள் அப்பாஷையைக் கற்பிக்கும் முறையறியாதவர்களா யிருக்கின்றனராம். ஆங்கிலபாஷை அரை குறையாய்ப் பயிற்றப்படும் பாடமன்றென்றும், அதை அவ்வாறு போதிப்பதினும் போதிக்காமலிருப்பது நன்றென்றும் மொழிகின்றனர். ஆங்கில பாஷையின் உச்சரிப்பே அருமையானதாம்; அதை அறிந்து போதிக்கும் உபாத்தியாயர்கள் கிராமாந்தரங்களில் கிடைப்பதில்லையாம். 'அபத்த பஞ்சாங்கத்திற் கல்லும் பகலும் தியாஜ்ஜியம்' என்பார்போல பாலியத்தில் அரை குறையாய்ப் போதிக்கப்படும் ஆங்கிலத்தின் உச்சரிப்பு அப்பால் திருத்தப்படுவதென்றால் கூத்துப்பாட்டில் பழகின கூத்தாடி சங்கீதவழியில் வழிபடாதொழிவது போலாகு மென்றும் விடையளிக்கின்றனர். மற்றும் அவ்வதிகாரிகள் சொல்வதாவது.

எலிமென்டரிப் பாடசாலைகளில் ஆங்கிலம் பயிற்றுவதாயின் உபாத்தியாயர் மெட்ரிகுலேஷன் அல்லது ஸ்கூல் பைனல் பரீட்சையில் (School Final Examination) தேறினவராயிருக்கவேண்டும்; குறைந்தபட்சம் அவர் பழைய மிடில் ஸ்கூல் (Middle School) அல்லது லோயர் செகண்டரி பரீட்சையில் தேர்ந்து தொழில் முறையில் பழகின (Trained) வராகவாவது இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட உபாத்தியாயர்கள் போர்ட்டு முனிசிபல் பாடசாலைகளுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் 10-12 ரூபாய் சம்பளம்பெற இசையமாட்டார்கள். இசையினும் அவர்களுக்குக் கிராமாந்தர வாசம் சரிப்படுவதில்லை. அவர்கள் பெரும்பாலும் ஷகரான இடத்திலேயே வசிக்க விரும்புவார்கள். அப்படி அவர்கள் தமக்கேற்ற



இடம் தேடிக்கொள்ளாராயின் அவர்களின் ஆங்கில பாஷாபிவிருத்திக்கு வழியேற்படாதொழியும். நாட்டுப் புறங்களில் ஆங்கிலபர்ஷா வர்த்தமான பத்திரிகைகள் பார்க்கவும் அவர்களுக்குக் கிடைக்கமாட்டா. ஆங்கிலம் பேசவும் அவர்களுக்கு மனிதர் ஏற்படமாட்டார்கள். இத்தகை பல காரணங்களை முன்னிட்டு சர்க்கார் பள்ளிக்கூடங்களாக ஏற்பட்டிருக்கும் போர்ட் முனிசிபல் ஸ்கூல்களிலும் ஆங்கிலம் பயிற்றற்கான ஏற்பாடுகள் செய்ய இயலாமலிருக்கிறது. இரண்டொரு போர்ட், முனிசிபல் பாடசாலைகளிலாயினும் ஏற்படுத்தலாமெனினும் அப்பாடசாலைகளின் ஆங்கிலம் பயின்ற உபாத்தியாயர்களை மாற்ற வேண்டிய சமயம் நேர்ந்தபோது அவர்களுக்குப் பதிலாக அத்தகை ஆங்கிலப்பயிற்சி யுடையவர்கள் அகப்படுவதும் கஷ்டமாய் முடிகின்றது என்கின்றனர். ஆயினும் இப்போது எலிமென்டெரிப் போர்ட்டு பாடசாலை உபாத்தியாயர்களின் சம்பளம் 20 ரூபா வரையில் உயர்த்தப்படும் நற்காலம் பிறந்திருப்பதால் ஆங்கிலம் பயிற்றவும் அப்பாடசாலைகளில் வழியேற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருக்கழுக்குன்றம் முகாம்
2—8—1915.

சி. வே. சண்முக முதலியார்,
சேஷனல் ஸ்கூல் மாஸ்டர்.

# MORAL TEACHING

## நீதி போதனை

## 'UNION IS STRENGTH'

'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை'

(கும்மி மெட்டு)

1. ஓர்புலந் தன்னிலே நாலெரு தாமவை
ஒன்றாகக் கூடிப்புல் மேய்ந்திடு மாம்
யார்வரினு மவை யஞ்சாவாம் சிங்கம்
அவைகட் கஞ்சி யிருந்தது வாம்.

2. இப்படி யிருக்கும் நாளிலொருநா ளவ்
வெருதுகள் நான்கும் சண்டை யிட்டுத்
தப்பென் றறியாமல் ஒன்றைவிட் டொன்று
தனித்தனியே சென்று மேய்ந்தன வாம்.

3. இதனை யறிந்த சிங்கம் சுலபமாய்
எருதுகள் நான்கை தனித்தனி யாய்
வதைத்துத் தின்ற தாகையினாலே சேர்ந்து
வாழ்வதே சிறந்த வன்மை யாகும்.

M. ஐயாவு நாயகர்,
இடையார்பாளயம்.

---

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| வயது 11 | 1915ஞ ஜூன் மீ | மாதம் 1 |

# OUR ELEVENTH YEAR

## பதினொன்றாம் வருஷம்

நமது நல்லாசிரியன் பதினொன்றாம் பிராயத்தை யடைந்தான்; இவன் சென்ற பத்து வருஷகாலமாக யாதொரு நோய் நொடியும் இல்லாமல் செவ்வனே உலவிவந்த விஷயம் நமது ஆசிரிய நேயர்கள் நன்கு உணர்வார்கள்.

நமது நல்லாசிரியன் அவ்வக் காலத்திற்கு வேண்டிய விஷயங்களைப் பேசிக்கொண்டு, ஆசிரியர்களிடம் நண்பு பாராட்டி, அவர்களுக்கு ஊக்கங் கொடுத்துக் கொண்டு வருகின்றான் என்பதை ஒருவரும் மறுக்க வொண்ணாதன்றோ?

நமது நல்லாசிரியன் வரவர அரிய விஷயங்களையும் பெரிய பாலபோதகாசிரியர்களுடைய சரிதங்களையும் அவர்கள்

மேற்கொண்ட முறைகளையும், சித்தாந்தங்களையும் தொடர்ச்சியாகக் கொண்டு வருகின்றான். இவனை ஆதரிப்பது ஆசிரிய நண்பர்களுக்கு உற்ற கடமையன்றோ?

நமது நல்லாசிரியன் சிற்சில சமயங்களில் மிகச் சாதாரண விஷயங்களையும் கொண்டு வருகின்றான் என்பது மெய்யே. உபாத்தியாயர்களுக்கு ஊக்கங் கொடுக்கவேண்டும் என்னும் நோக்கத்தினால் தனக்கு அனுப்பப்படும் அநேக விஷயங்களில் சிலவற்றையேனும் வெளியிட வேண்டும் என்னும் கருத்துக் கொண்டு அவ்வாறு செய்து வந்தான். ஆயினும், இனி அத்தகைய விஷயங்களை நீக்கிவிடவேண்டுமென்று உறுதிகொண்டிருக்கின்றான்.

நமது நல்லாசிரியன் வழக்கமேபோல் இவ் வருஷமும் தன்னை அழையார் வீட்டிலும் நுழைந்து நுழைந்து வருகின்றான். ஆசிரிய நண்பர்கள் அவனை அன்புகொண்டு ஏற்று ஆதரிப்பாராக.

நமது நல்லாசிரியன் சென்ற வருஷத்தில் விஷய தானஞ் செய்த நண்பர்களுக்கும் மாற்றுப் பத்திரிகை யனுப்பிய சகோதர பத்திராதிபர்களுக்கும் மனமுவந்த வந்தனம் புரிகின்றான்.

விஷய தானம் செய்யும் நண்பர்களுக்கு விண்ணப்பம் — இப் பத்திரிகை எலிமென்டெரிப் பாடசாலைகளுக்கே உபயோகமானதாகையால், அப் பாடசாலைகளின் உபாத்தியாயர்களுக்கு உற்சாகம் உண்டாக்குமாறு, அவர்களில் சிலர் எழுதும் சாமானிய விஷயங்களையும் அவ்வப்போது பதித்து வந்தோம். அவற்றைக் கண்டு அறிஞர் பலர் அருவருப்புக் கொள்கின்றனர். ஆதலின் நமது நல்லாசிரியனுக்கு விஷய தானஞ் செய்யும் நண்பர்கள் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை இங்கே வரைகின்றோம்.

மிகச் சாமானிய கதைகளை எழுதுவதும், அக் கதைகளையே தம் மனம் போனவாறு நாடகமாகச் சேர்ப்பதுமான விஷயங்கள் எண்ணிறந்தன வருகின்றன. பிள்ளைகளுக்கு இன்பமுண்டாகக் கதைகளைக் கூறுவதும், நாடகமாகத் தொடுப்பதும்



அதற்கான எளிய பாடல்கள் இயற்றுவதும் சிலருக்கே யமையும் அருங்குண மாகையால் இவ்வகையில் பயிற்சி யில்லாதவர்கள் இதில் தலையிட்டுக் கொள்ளுதல் ஏற்றதன்று. மற்றும் ஒரே விஷயத்தைக் குறிக்கும்படி பலபேர் பாடல் இயற்றல் எதற்கோ? சில உபாத்தியாயர்கள் தாம் இயற்றிய பாடல்களையே தம் பாடசாலையில் பாடமாக நடத்த வேண்டும் என்னும் எண்ணங் கொண்டு தமக்குத் தோன்றியவாறெல்லாம் பாடல் இயற்றுகின்றனர். இவற்றை யெல்லாம் நமது நல்லாசிரியன் எவ்வாறு ஏற்றுக்கொள்வான். தாம் அனுப்பிய பாட்டை பதிக்கா விட்டால், சிலர் அது முதல் பத்திரிகையும் வாங்குவதில்லை. இதுவும் ஒரு வைராக்கியமா?

2. சிலர் 'ராஜ வாழ்த்து' என்று தலைப் பெயரிட்டு ஏதோ ஒருவர்ணமெட்டில தம் பாடசாலை யிருக்கும் ஊர், சர்கிள் இன்ஸ்பெக்டர், அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர், சப் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர், சூபெர்வைஸர், மானேஜர் முதலியோர் பேர்களை அமைத்துப் பாடி அனுப்பி விடுகின்றனர். இதற்கு ஒருகாலம் என்பதும் கிடையாது. மன்னர் பிறந்தநாள் கொண்டாட்டம், மகுடாபிஷேக நாள் கொண்டாட்டம் முதலிய காலங்கள் இத்தகைய பாடல்களை இயற்ற ஏற்றதாகும்.

3. சிலர் 'ஸிவிக்ஸ்' பாடம் எழுதுவதாக முன்வந்து, கிராம முனிசீப்பு அல்லது தபாலாபீசைப்பற்றி நீண்ட சம்பாஷணை எழுதி விடுகின்றனர். இப்படிப்பட்ட விஷயங்களை எத்தனை முறை பதிக்கலாம்? இவர்களுக்கு வேறு விஷயம் அகப்படுவதில்லையா? தாவர சாஸ்திரம், தேக தத்துவ சாஸ்திரம் எழுதுவோரும் இவ்வாறே வெகு சாமானிய விஷயத்தை அடிக்கடி எழுதுகின்றனர்.

4. சிலர், உபாத்தியாய சங்கங்களில் நடக்கும் தீர்மானங்களை எல்லாம் வரிசைப்பட எழுதிவிடுகின்றனர். இன்று மீட்டிங்கு நடந்தது, பாடல் நடத்தினோம், சங்கத்திற்கு இன்னின்ன பொருள்கள் வாங்க வேண்டுமென்று தீர்மானித்தோம், சபா நாயகருக்கு வந்தனமளித்தோம், சபை கலைந்தது என்ற விஷயத்தை நெடுக எழுதி யனுப்பிவிடுகிறார்கள். இதையும் பதிக்க வேண்டியதுதானோ!

இவ்வாறெல்லாம் அசந்தர்ப்பமான விஷயங்களையும் அதிக சாதாரணமான விஷயங்களையும், கட்டுக்கடங்காத பாடல்களையும் எழுதுவதை நிறுத்தி, உபாத்தியாயர்கள் தம் அனுபவத்தில் காணும் விஷயங்களையும், போதனை முறைகளையும், பலருக்கும் பயன்படும் பாடங்களையும் தேர்ந்து ஆராய்ந்து தெளிவான வசன நடையில் எழுதுவார்களாயின் லோகோபகாரமாக இருக்கும். செய்யுள் செய்யும் திறமுடையோர் எளிய நடையில் செப்பமாக எழுதினால் பெரும் பயன் விளைவிக்கும்.

பத்திராதிபர்.

## SLEEP

### நித்திரை

(முன்றொடர்ச்சி 280 ஆம் பக்கம்)

19. ஓய்வுகொண்டு உறங்கும் நேரம் முழுதும் ஒரே நிலையாய்க் கிடப்பது அருவருப்பாய் இருக்கும். ஆகையால், சிறிது சிறிது நிலை மாறிக் கிடப்பது இயற்கையாகவும் விரும்பத் தக்கதாகவும் தோற்றுகின்றது.

20. மல்லாந்து கண்ணை மூடிக்கொண்டு படுத்திருப்பதனால் இதயத்துக்குப் போதுமான ஓய்வு கிடைக்கும்; அதனால், தேகம் முழுதும் ஒருவாறு ஓய்வு பெற்றதென்றே சொல்லலாம். நல்ல தூக்கம் தூங்குவதற்குத் தடைகள் அநேகம் ஏற்பட்ட போதிலும், அல்லது நல்ல தூக்கத்தைக் குலைப்பதற்குச் சந்தர்ப்பங்கள் நேர்ந்த போதிலும், அந்த நிலைமையில் படுத்திருப்பதனால் தேகம் ஒருவாறு ஓய்வு பெற்றதென்றே சொல்லலாம்.

21. தரையின்மீதேனும் நாற்காலியின்மீதேனும் உட்கார்ந்த நிலைமையில் உறங்குவது ஆறுதல் உண்டாக்கத் தக்க உறக்கமாகாது. அந்த நிலைமையில் தூங்கின போதிலும் அது தூக்கமெனக் கொள்ளத் தகாது.

22. லௌஞ்சு (Lounge) அல்லது ஈசிச் சேர் (Easy Chair) நான்னும் நாற்காலியிற் படுத்துச் சிலர் உறங்குகிறார்கள். அந்த



நன்மையன்று. முக்கியமாய், கால்களைத் தூக்கிப் போட்டுக் கொள்ளத் தக்கவாறு அந்த நாற்காலியின் கைகள் நீண்டிருந்தால் தீமை அதிகமாகும். அந்த நிலையில் தேகம் வளைந்து கிண்ணம் போலாகின்றது; தாராளமாய் மூச்சு விடமுடியாது; தேகத்துக்குள் பற்பல இடங்களில் அடைத்துக்கொண்டிருக்கும் அசுத்தங்களை யெல்லாம் இரத்த ஓட்டம் அடித்துக்கொண்டு வந்து அடியில சேர்க்கும; அந்த அசுத்தங்கள் அதிகமாய்ச் சேரச் சேரக் கீல் வாயு (Rheumatism), இடுப்புப் பிடிப்பு (Lumbago), திமிர் வாயு (Gout), மூலவியாதி (Piles), புண் புரை (Fistula) முதலிய பீடையான வியாதிகள் உண்டாகும்.

23. வில் வைத்த கட்டில்களிலும், கயிற்றுக் கட்டில்களிலும் இரவு முழுவதும் படுத்து உறங்குவது பிசகு; அவைகளைப் போட்டுக்கொண்டு வெளி நிலங்களில் ஆயாசந் தீரச் சிறிது நேரம் படுத்திருக்கலாம். அசைவுக்குக் காரணம் சிறிது உண்டாயினும் அந்தக் கட்டில்கள் உடம்பை அனுவசியமாய்க் குலுக்கி அயர்ந்த நித்திரையைக் கெடுக்கின்றன.

24. வெறுந் தரையில் படுப்பது ஆரோக்கியத்திற்கு அடாது. தேகத்திலுள்ள ஈரத்தைத் தரை உறுஞ்சிவிடும் தரையினின்று சிறிது உயரமான படுக்கையில் படுப்பது உத்தமம். சாதாரணமான உயரம் வைத்துச் செய்த பலகைமஞ்சத்தில் படுப்பது சிறந்தது. அந்தப் பலகைமஞ்சத்தை அடிக்கடி நன்றாய்க் கழுவி வைக்க வேண்டும்.

25. கெட்டியான படுக்கையில் படுப்பதனால், உரமான வஸ்துவின் தாக்கம் ஏற்படுகின்றது. அதனால் தேகத்தின் தசை நார்கள் கெட்டிப் படுகின்றன, நரம்புகள் பலப்படுகின்றன. அதை விட்டு, மெதுவான படுக்கையில் படுப்பதனால், மிருதுவான வஸ்துவின் பரிசம் ஏற்படுகின்றது. அதனால் தசை நார்கள் மெதுப்படுகின்றன நரம்புகள் தளர்வுறுகின்றன.

26. மெதுவாயும், கண்ணறைகள் நிறைந்ததாயுமுள்ள படுக்கைகள் தேகத்தினின்று கெட்டியாயும் திரவமாயும் வெளிப்படும் அசுத்தங்களை உறிஞ்சி ஏற்றுக்கொண்டு, அவை தங்கி அழுகிக் கெடுவதற்கு இடங் கொடுக்கின்றன. மறுமுறை அந்தப் படுக்

கையில் நாம் படுக்கும் பொழுது ஏற்கெனவே அதனில் அழுகிக் கெட்டுக் கிடக்கும் அசுத்தங்களை நம் உடம்பில் தேய்த்துப் பூசிக் கொள்ள வேண்டியதாகின்றது.

27. அப்படிப்பட்ட படுக்கையிலே அடிக்கடி படுத்துக் கொண்டால், அதன் மீது துர்க்கந்தம் வீசும் பூஞ்சு போன்ற படலம் ஒன்று படிந்து தடித்து நிற்கும்; தவளையைப் போலச் சீதளம் மிகுந்து காட்டும்; வியாதிகளை வளர்க்கும் பூச்சிகளின் அங்குரங்கள் உற்பத்தியாகிப் பெருகும்.

28. மெதுவான படுக்கையில் தேகம் அதனுடன் ஒட்டிக் கொள்கின்றது; தேகமும் படுக்கையும் மிகவும் நெருக்கமாய் இணைந்து பொருந்துகின்றன; அதனால், தேகத்தில் உஷ்ணம் அதிகமாய் ஏறுகின்றது, கனவுகள் தோன்றுகின்றன. மெதுவான படுக்கைகளை எளிதில் கழுவிச் சுத்தி செய்ய முடியாது. இது ஒரு பெரிய அனனுகூலம். கஷ்டப்பட்டு ஒரு முறை அதைத் தண்ணீரில் தோய்த்தாலும், அது எளிதில் காய்வதில்லை.

29 மேற் சொல்லியபடி ஜனிக்கிற சூடு, ஈரம், படுக்கிறவனுடைய தேகத்தின் பாரம் ஆகிய இவை மூன்றுஞ் சேர்ந்து மெத்தைக்குள் அடைத்திருக்கும் பஞ்சைப் பொடியாக்கி நசுக்கி நண்டு வண்டலாக்கி விடுகின்றன. இப்படிப் பொடியாக்கப்பட்ட அணுக்கள் படுக்கைத் துணிகளிலுள்ள கண்ணறைகளின் வழியாய் வெளிப்போந்து வாயுவுடன் கலந்து மூச்சின் மூலமாகத் தேகத்திற்குள் புகுந்து சுவாஸகோச வியாதிகளை உண்டாக்குகின்றன.

30. எல்லா விதப்படுக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பலகைமஞ்சத்தின் மீது சமுக்காளத்தை விரித்துக் கொண்டு படுப்பதே உத்தமமான படுக்கை யென்று தெளிவாகும். அதன் முக்கியமான சிறப்பு என்னவெனில், அது எளிதில் கழுவக் கூடியதா யிருக்கிறது என்பதாம். பனைமட்டையின் அணிகளினாலும், வைக்கோல்களினாலும், கோரைகளினாலும், பிரம்புகளினாலும், ஈச்சந்தழைகளினாலும் முடையப்பட்ட பாய்களும் உத்தமமானவைகளே. இவைகளை யெல்லாம் வாரத்திற்கு ஒரு முறையேனும் வெயிலிற் காய வைக்கவேண்டும், பக்ஷத்திற்கு ஒரு முறை யேனும், மாதத்திற்கு ஒரு முறையேனும் தண்ணீரிற் கழுவவேண்டும்.



31. படுக்கையை விட்டு எழுந்தவுடனே படுக்கையைச் சுருட்டிக் கட்டிவைத்து விடக்கூடாது; சிறிது நேரம் அது காற்றினால் ஆறும்படி விட்டுவைக்க வேண்டும். காற்றோட்டத்தினால் அது ஆறும்; அதில் ஈரம் படிந்திருந்தாலும் அந்த ஈரம் காய்ந்து ஆவியாய்ப் பறந்துபோம்.

32. இந்தியாரப்பரினால் மெத்தையும் தலையணிகளும் தைத்து, அவைகளுக்குள் காற்றைப் புகட்டிப் படுக்கையாய் உபயோகிப்பதும் உண்டு. அது நல்ல மாதிரியான படுக்கையே. ஆனால், அவை பெருவாழ்வுக்குரிய விலையுயர்ந்த பண்டங்களாதலால் எல்லாருக்கும் கிட்டா. அந்தப் படுக்கை மிருதுவாய் இருப்பதும், தூக்கிப் போடும் வில்விசைத் தன்மை பொருந்தியிருப்பதும் அந்தப் படுக்கைக்குள்ள தோஷங்களென்றே சொல்லவேண்டும்.

33. இலவம் பஞ்சடைத்த மெத்தைகளினின்றும் தலையணைகளினின்றும் பஞ்சுத் தூள்கள் வெளிப்பட்டு வாயுவுடன் கலந்து தேகத்திற்குள் புகாமல் தடுக்கும்பொருட்டும், தேகத்தினின்று வெளிப்படும் மலங்களினால் பஞ்சு கெடாமல் காக்கும்பொருட்டும் படுக்கையின்மீது பதனிட்ட தோலாவது, மெழுக்குத் துணியாவது பரப்பிக் கொள்ளலாம்.

34. தலையணைகளுக்குள் அடைப்பதற்கு இலவம் பஞ்சைவிடப் பருத்திப் பஞ்சே நல்லதென்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. அழுந்தப் பெறுவதனால் பருத்திப் பஞ்சு சீக்கிரத்தில் உருண்டு திரண்டு கெட்டிப்பட்டுக் கட்டியாய் விடும். இலவம் பஞ்சு அப்படி ஆகாது. தலையணைக்குள் பஞ்சை அதிகமாய்த் திணித்து அதைக் கெட்டியான மரவுருளையைப்போலச் செய்வது நன்றன்று; மூங்கில் உருளையைத் தலையணையாய் வைத்துக் கொள்வதற்கும் அதற்கும் வித்தியாசமில்லை. சீன தேசத்து ஸ்திரீகள் தங்களுடைய ஜடை குலையாதிருக்கும் பொருட்டு மூங்கில் உருளைகளை வைத்துக் கொள்ளுவார்கள். தலையணை கல்லைப்போல் இருக்கக் கூடாது; மெதுவாய் இருக்க வேண்டும்.

35. மரத் தலையணைகளுள் இலவ மரக் கட்டையே மிகவும் மிருதுவானது. வழிப் போக்கர்களுக்கு உபகாரமாய் இருக்கும் பொருட்டு வீட்டுத் திண்ணைகளில் சுவர்களின் ஓரமாய்க் கல்லி-

னாலும் மண்ணினாலும் சாந்தினாலும் தலையணைகள் கட்டி வைப்பதுண்டு. வேறு தலையணை இல்லாவிடத்து ஆந்தக் கல் கட்டடம் தலையணையாக உபயோகிக்கத் தக்கதே.

36. பட்டுத் துணி போட்டுத் தைத்த மெத்தைகளும் தலையணைகளும் நல்லதல்ல. ஏனெனில், வியர்வை, எண்ணெய்ப் பசை முதலாக தேகத்தினின்று வெளிப்படும் மலங்கள் படிவதனால் பட்டுத் துணிகள் சீக்கிரத்தில் மக்குப் பிடித்து நாற்றம் வீசும். பட்டுத் துணியை உபயோகிப்பது அனாரோக்கிய கரமான பெருவாழ்வுக்குரிய வீண் செலவு.

37. ஈச்சு மூச்சென்று கத்தும் தலையணையை உபயோகிப்பது மிகவும் அநாகரிகமானது. அதை உபயோகிப்பது மடமை, உடம்பைத் திருப்புந்தோறும் அசைக்குந்தோறும் அது ஈச்சென்னச் சத்தித்துத் தூக்கத்தைக் குலைக்கும்.

38. பள்ளியறையில் இருள் நிறைந்திருக்க வேண்டும், சத்தம் சிறிதும் இருக்கக்கூடாது. காந்தி மிகுந்த விளக்குகளையும், டிக் டிக் என்று ஒலித்துக்கொண்டிருக்கும் சிறு கடிகாரங்களையும், மணியடிக்கும் பெரிய கடிகாரங்களையும் படுக்கையறையில் வைத்திருப்பது நல்லதன்று. தீபத்தின் பிரகாசத்தையும், கடிகாரங்களின் சத்தத்தையும் தவிர்க்க வேண்டுமானால், பள்ளியறைக்கெனச் செய்யப்பட்டிருக்கும் விளக்குகளையும், கடிகாரங்களையும் உபயோகிக்கலாம்.

39. தூங்கும்பொழுது காற்று உடம்பின்மீது நேரே வீசித்தாக்காதிருக்கும் பொருட்டு உடம்பை இலகுவாய்ப் போர்த்துக் கொள்ள வேண்டும்; படுக்கையறையில் காற்றோட்டம் தாராளமாய் இருக்கும்படி படுக்கையறையை அமைத்துக் கொள்ள வேண்டும். தூங்கும்பொழுது முகத்தை மூடிக்கொள்வது கெட்ட வழக்கம்; அதனால், தாராளமாய் மூச்சு விடுவதற்கு இடமில்லாமற் போகின்றது. ஆகையால், முகத்தை மூடிக்கொள்ளக்கூடாது.

40. சிறிய அறையில் அதிகமான ஜனங்கள் ஏககாலத்தில் படுத்து உறங்கக் கூடாது. அவர்கள் விடும் மூச்சினால் வாதாவரணம் கெட்டுப்போம்; அவர்களுக்கு அநேக வியாதிகள் உண்டாகும். உடனே வியாதிகள் தோன்றா விடினும் அவர்களுடைய



ஆரோக்கியம் கெட்டுப்போமென்பது திண்ணம். தாயும் குழந்தையும் பக்கத்தில் படுத்து உறங்கக் கூடாது. ஏனெனில், அவள் அதிகமான பிராணவாயுவை இழுத்துக் கொண்டு விடுவாளாதலால், குழந்தைக்குப் பிராணவாயுவு குறைந்துபோம்.

41. அவரவர் தூங்குங்காலமும், வயதுக்கும், தொழிலுக்கும், உணவுக்கும், மற்றுமுள்ள சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி மாற வேண்டியதாகும். பெரியவர்களைவிடக் குழந்தைகளுக்கு அதிகத் தூக்கம் வேண்டும். பெரியவர்களுக்கு ஏறக்குறைய 6 மணி நேரத் தூக்கம் போதுமானதாகும். அதைவிட அதிகமாகத் தூங்குவதனால் கனவுகள் தோன்றுவதன்றி, சோம்பற்றனமும் வளரும்.

42. தூங்குகையில் மலர்களை அணிந்துகொண்டிருக்கக் கூடாது. முன்னும் பின்னும் திரும்பும்பொழுது மலர்கள் நசுங்கி அழுகித் தலைமயிரின் வேர்களைக் கெடுத்து விடுவதன்றிப் பேன் முதலிய பூச்சிகளை உண்டாக்கும். தலையில் மலர் அணிந்து படுப்பதனால் அந்த வாசனையைப் பிடித்துச் சில சமயங்களில் பாம்புகள் வருவதும், அதனால் ஆபத்துக்கள் நேருவதும் உண்டு. இப்படிப்பட்ட விபத்துக்கள் அங்கங்கே நேர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

43. அன்னம் புசித்தவுடனே படுத்து உறங்கக் கூடாது. தூங்குவதற்கு முன்னால் பலகாரங்கள் தின்பதும், பால் குடிப்பதும், வெற்றிலை போட்டு மெல்வதுங்கூடக் கெட்ட வழக்கம். தூங்குகிறவர்களை எழுப்பிச் சாப்பிடச் சொல்வதும், பால் குடிக்கச் சொல்வதும் கூடாதென்று இது வரையிலே சொல்லியிருக்கிறோமல்லவா? பாதித் தூக்கத்தில் உட்கொள்ளும் வஸ்துக்களுள் மிகுந்த தீமை பயக்கத் தக்கது பால்; ஏனெனில், அது மிகவும் எளிதில் புளித்துக் கெடக் கூடியது. தூங்குவதற்கு முன்னால் பால் வயிற்றில் நன்றாய் ஜீர்ணமாகா விட்டால், அது வயிற்றில் பல விதமான தீமைகள் செய்யும், கெட்ட வாயுக்களை உண்டாக்கும், பொதுவாய் தேகத்தின் ஆரோக்கியத்தைப் பெரும்பாலும் கெடுத்து விடும்.

44. அநேகருடைய உடம்பு மிகப் பருமனாய் இருப்பதைக் காண்கிறோம். அவர்களுக்குச் செல்வத் தொந்தி அமைந்திருக்கிறதென்று சொல்லுகிறோம் அப்படிப்பட்ட பருமனுக்கு

உண்மையான காரணம் பெரும்பாலும் மேற்சொல்லிய மாதிரி பாலைக் குடித்து, உடனே உறங்குவதனால் நேர்ந்திருக்கக்கூடும். தேகத்துக்குள் உற்பவித்த கெட்ட வாயுக்கள் தேகத்தைத் துருத்தியைப்போல் உப்பச் செய்கின்றன; அப்படிப் பருத்த தேகமுடையவர்கள் தாராளமாய்க் கைகால்களை உபயோகித்துக் காரியஞ் செய்யச் சக்தியற்றவர்களாகிறார்கள். ஒரு சிறிய பையைக் கையிலெடுத்துக்கொண்டு போகமாட்டாமல், அதைத் தூக்கிக்கொண்டு வருவதற்கு கூலிக்காரனைத் தேடிப் பிடிப்பவர்கள் இவ்வளவு மிகுதியான தேக பாரத்தை மனமொத்துச் சுமக்கிறார்களே! இந்த சுமை பற்பல உணவுப் பொருள்களின் திரிபாகிய சதையேயன்றோ?

45. எதையேனும் வாயிற் போட்டுக் கடித்துத் தின்ற பிறகு வாயை நன்றாய்க் கழுவ வேண்டும்; மிட்டாய் முதலியன தின்றபோதிலும் வாயில் நீரை வார்த்துக் கொப்பளிக்க வேண்டியதே; நீரைத் தவிர வேறு என்ன பானம் செய்தபோதிலும், பிறகு வாயை நன்றாய்க் கழுவ வேண்டியதே.

46. இரவில் வெகுநேரம் விழிக்கவேண்டியிருந்தாலும், வேடிக்கை பார்த்துக் காலங் கழித்தாலும், நாடகம் முதலியன பார்க்கப் போய்த் திரும்பி வந்தாலும், ஆழ்ந்த ஆலோசனையிலேனும் படிப்பிலேனும் அமர்ந்திருந்தாலும், அந்தக் காரியங்களுக்குப் பிறகு தண்ணீரினால் தலையைத் துடைத்துக் குளிரச் செய்ய வேண்டும்; பிறகு கொஞ்சம் தண்ணீர் குடித்து உடம்பைக் குளிரச் செய்து கொண்டால் எளிதில் தூக்கம் வரும்.

47. உடம்பிலுள்ள உபாதியினால் எளிதில் தூக்கம்வராவிடில், வெந்நீரினால் காலைக் கழுவலாம், ஈரத் துணியை அடி வயிற்றின் மீது சிறிதுநேரம் போட்டு வைக்கலாம், அல்லது இடுப்பை மாத்திரம் சிறிது நேரம் தண்ணீரில் நனைத்து வைக்கலாம்.

48. தூக்கம் வருவிப்பதற்காக மருந்துகள் சாப்பிடும் வழக்கம் மிகக் கெட்டது. உறங்குவதற்கு முன்னால் அயிஷ்டமான விஷயங்களின்மீது மனத்தைச் செலுத்தக்கூடாது; அப்படிப்பட்ட விஷயங்களை நினைத்துக்கொண்டிருந்தால் அருவருப்புக் கிடமான கனவுகள் தோன்றும். திடமான மனமும், உறுதியான தெய்வ பக்தியும் உண்டானால் கெட்ட எண்ணங்கள் மனத்தை அணுகா.



49. இரவில் நேரஞ் சென்று அன்னம் புசிக்கவேண்டி நேரிட்டால், மிகவும் சொற்பமாகப் புசிக்க வேண்டும்; அப்படிப் புசிக்கும் உணவு நன்றாய்ச் சீரணம் ஆகுமுன் தூக்கத்திற்கு இடங் கொடுக்கக்கூடாது. வயிறு நிரம்பச் சோறு உண்ட உடனே உறங்குவதனாலே கனவுகள் முக்கியமாய்த் தோன்றுகின்றன, இரைப்பையில் வாயுவு தங்குகின்றது, மறுநாட்காலையில் மலம் இளகலாய் கழிகின்றது, இன்னும் பலவகையான தொந்தரவுகள் உண்டாகின்றன.

50. இயற்கையாக அயர்ந்து நித்திரை செய்வது தீர்க்கமான ஆரோக்கியத்தின் அறிகுறியாம். தூக்கம் வரவில்லையென்று குறை கூறுகிறவர்களுக்கும், அற்பமான சத்தத்தினாலும் தூக்கம் குலைந்து போகிறதென்று முறையிடுகிறவர்களுக்கும் ஆரோக்கியம் குறைவுபட்டிருக்கிறதென்று உடனே சொல்லிவிடலாம்.

51. தூங்குகிறவனை அனாவசியமாய் எழுப்பக் கூடாது. தூக்கத்தில் பிரக்ஞையில்லாமல் எழுந்து நடப்பதும் காரியங்கள் செய்வதும் ஒருவிதமான நோய். அது மூளைக் கொதிப்பினால் உண்டாகத் தக்கது. அந்த நோய் கண்டவுடனே அதைத் தீர்த்துக்கொள்வதற்கு வகை தேடவேண்டும்.

52. இயற்கையில் எல்லாக் காரியங்களும் ஒழுங்காயும் காலந் தவறாமலும் நடப்பதை நாம் காண்கிறோமல்லவா? அந்த இயற்கையை அனுசரித்து நாமும் நம்முடைய காரியங்களிலெல்லாம் ஒழுங்காயும் காலந் தவறாமலும் இருக்க வேண்டும். குளித்தல், புசித்தல், வேலை செய்தல், உறங்குதல், மலஜலங் கழித்தல் முதலிய காரியம் ஒவ்வொன்றையும் குறிப்பிட்ட காலத்தில் தவறாமல் செய்வதே நம்முடைய கடமையாகும்.

53. மேற்சொல்லிய காரியங்களில் நாம் ஒழுங்குத் தவறாய் நடந்தால் இயற்கையென்னும் தாய் நம்மைச் சும்மா விடுவளோ? அன்புக்குரிய அருமைக் குழந்தை தப்பிதஞ் செய்யுமிடத்து இனிய தாய் அந்தக் குழந்தையைக் கண்டித்துத் தண்டிக்காமல் விடுவளோ? அதுபோலவே, இயற்கையும் நாம் ஒழுங்குத் தவறாய் நடந்தால் நம்மைப் பற்பல வியாதிகளின் ரூபமாகத் தண்டிக்கின்றது.

T. A. SWAMINATHA AIYAR,
*Retired Editor of 'the Arya,' Madras.*

# CO-OPERATIVE SOCIETIES

## ஐக்கிய நாணயச் சங்கம்.

சென்னை ராஜதானியின் மேல்கோடியிலிருக்கும் மங்களூரில் ஐக்கிய நாணயச் சங்கங்களின் பரியாலோசனைக் கூட்டமொன்று சமீபத்தில் நடை பெற்றது. அதில் சென்னைக் கவர்ன்மெண்டு மெம்பராகிய ஆனரபில் கார்டியு துரை சில விஷயங்கள் பேசியிருந்தார். அவை நம் நாட்டு ஜனங்களுக்கு அறிவை யூட்டுவனவாயிருப்பதோடு கிராமங்களில் ஐக்கிய நாணயச் சங்கத்தால் ஏழை ஜனங்கள் அடையக் கூடிய நன்மைகளையும் எடுத்துக் காட்டுவனவாக இருப்பதால் உபாத்தியாயர்கள் மூலமாக இக்கருத்துக்கள் பரவக்கூடுமென்னு மெண்ணத்தோடு நல்லாசிரியனில் வரையலானோம்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள் பரவுவதற்காகச் செய்யு முயற்சியைப் பரிசுத்த முயற்சி யென்று சிலர் சொல்லுகிறார்கள். இம்முயற்சி நாளும் வளர்ந்து பெரும் பலனளிப்பதற்கு உற்சாகம் முதலில் வேண்டியிருக்கிறது. எந்தக் காரியத்தையும் உற்சாகத்தோடு செய்தால் அனுகூலமாக முடியுமென்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய நாணயச் சங்கங்கள் பல்கிப் பெருகிப் பெரும் பலன் கொடுக்கவேண்டுமானால் அதில் ஈடுபடுகிறவர்கள் வெகு உற்சாகத்தோடு உழைக்கவேண்டும். இதன் சிறப்புக்கு உற்சாகமே இன்றியமையாதது. இப்போதுதான் இம்முயற்சி இந்தியாவில் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. ஆரம்பத்திலே தோன்றும் கஷ்டங்களையும், அவநம்பிக்கைகளையும், தவறுகளையும் அப்புறப்படுத்தி இதை நல்ல நிலையில் நிலைப்பிக்க உற்சாகமே தக்க மருந்து. வறிதே உற்சாகமாத்திரம் பாராட்டினாற் போதாது; இது சம்பந்தமான விஷய முற்றும் தெரிந்து கொள்வதோடு சங்கம் அமைந்திருக்கும் இடம், இனி யமைக்கவேண்டிய இடம் ஆகிய இவற்றின் தன்மைகளைச் செவ்வனே ஆராய்ந்தறிந்து அவைகளுக்கேற்ப வேலை செய்யவேண்டும்! இது பெரும்பாலும் பிழைப்பூட்டும் மார்க்கத்தைக் காட்டுதற்காகவே அமைக்கப்படுதலால் தொழின்முறை கைவரக் கூடியவகையில் நடத்தப்படவேண்டும். மங்களூர் புறத்தில் இத் துறையில் வேலை செய்ய முன்வந்த



கனவான்கள் தொழின்முறை கைவந்தவர்களாயிருப்பவர்களாயிருத்தலால் அவர்கள் பிரவேசித்துச் செய்யும் இக்காரியமும் பலன் கொடுப்பதாயுணர்ந்து சந்தோஷமடைய வேண்டியதாகிறது. ஏனைய பாகத்தாரும் இதனை உணர்ந்து பின் பற்றுவது உசிதமாகுமல்லவா?

இந்த இராஜதானியில் ஐக்கியச் சங்க விஷயமாகச் செய்யும் முயற்சி யெல்லாம் எளிதில் கடன் பெறக்கூடிய வசதியையுண்டாக்குவதிலேயே கட்டுப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் லேவாதேவித் தொழில் எப்போதும் மட்டுப்பட்டே இருந்து வந்திருக்கிறது. ஜனங்கள் யாவரும் பெருமுதல் ஒன்று சேர்த்து கொடுக்கல் வாங்கல் வியாபாரம் மேல் நாடுகளைப்போல் செய்வதில்லை. இப்படிப்பட்ட விஷயத்தில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் லேவாதேவித் துறையில் உழைத்து இம்மட்டிற்குக் கொண்டுவந்து விட்டது விசேஷமல்லவா? இம் முறை சில்லரைக் கைத்தொழிலுக்கும், விவசாயத்திற்கும் எவ்வளவோ சகாயத்தைச் செய்திருக்கிறது. கடந்த ஐம்பது வருஷத்திற்குள் இந்தியாவில் பொருளாதார நிலை யதிகப்பட்டிருக்கிறது என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. இதனால் கிடைத்திருக்கும் அதிகப் பொருள் பொதுக் காரியங்களுக்கு உபயோகமாக வேண்டியது அவசியமே. இதல்லாமல் எவ்வளவு பொருள் அதிகப்படி கிடைப்பதாயினும் அவை யெல்லாம் இந்தியாவின் தொழிலாதாரத்தை உயர்த்துவதில் உபயோகப்பட வேண்டியதே. இங்கிலாந்திலிருந்து அதிக பணம் இந்தியாவுக்குக் கடனாக் கொடுக்கப்பட்டவரினும் அவை எந்த மூலைக்குப் போதும்? இப்போது கிடைத்துவரும் அளவு போதாது. பெருவாரியாய்ப் பொருட் சகாய மிருந்தால்தான் தொழில் விருத்திக்கு ஏது உண்டாகும். ஆயினும் இந்தியர் இங்கிலாந்துப் பண உதவியையே நாடி யிருக்கலாகாது. இந்தியாவிற் பொருளில்லாது போகவில்லை, இவ்விடத்துத் தொழிலை யதிகரிப்பிக்க இங்கு பொதிந்து கிடக்கும் பொருளே போதுமானது இந்தியாவில் பொருள் உபயோகமற்ற வகையில் புதைத்து வைக்கப்பட்டும், நகையாக மாற்றப்பட்டும் போயிருக்கிறது. இதற்குப் பூர்வகாலத்தில் தக்க காரண மிருக்கலாம். இக் காலத்தில் சகல சவுகரிய மிருக்கும்போது புராதன வழக்கத்தையே

கொண்டு ஜனங்கள் கவனியாது நடப்பதற்குக் காரணமில்லை. இந்தப் பொருளை ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு உபயோகமாகும்படி திருப்பப்படுமானால் பொருட் சகாயம் வேறிடத்தினின்று நாடவேண்டியதில்லை. எளிய வட்டியில் ஜனங்களுக்குப் பொருட் சகாய முண்டுபண்ணுவதுதான் ஐக்கிய நாணயச் சங்கங்களின் தொழிலென்று கருதலாகாது. இதுவே கருத்தானால் இதை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாம். சாதாரணமாய் வட்டிக்குப் பணங் கொடுக்கும் பாங்கிகளின் முறையைப் பல இடங்களுக்கும் பரப்பி கூட்டுக்கம்பெனிகளைப் பலக்கவைக்கலாம். சில வருஷங்களில் முன்பு இங்கிலாந்திலுள்ள சில பணக்காரர்கள் இம்மாதிரியான யோசனையில் இந்திய ஜனங்களுக்கு எளிய வட்டியில் பண உதவிசெய்ய ஒரு சாதன முண்டாக்கக் கவர்ன்மெண்டாருக்கே யோசனை சொல்ல வந்தார்கள். இம்முறை கூடா தென்பதற்குப் பல காரணங்கள் காட்டப்பட்டன. அவை யெல்லாம் ஒரு புறமிருக்க முக்கியமாய் முன்னின்றது எளிய வட்டிக்குக் கடன் கொடுப்பதால் உண்டாகக் கூடிய நன்மை எதுவாயினும் எந்தக் காரியத்திற்காக இக்கடன் வாங்கப்பட்டதோ அக்காரியத்திற்காக அப்பண முதவப்படாமற் போயின் அதனாலாகும் தீங்கு பெரிதாயிருக்குமென்று காட்டப்பட்டது. நிலவிருத்திக்காக வாங்கப்பட்ட தொகை நிலத்தில் செலவிடப்படாமல் குடும்ப காரியாதிகளில் அழியுமானால் பின்னால் அதைச் செலுத்த தங்களாலுண்டாகும் துன்பம் பெரிதாயிருக்குமல்லவா? தனக்குண்டான சங்கடத்தை விலக்குவதற்காகக் கடன் வாங்கிய குடியானவன் அப்பணத்தை யடைந்ததும் அதனை வேறு வகையில் உபயோகித்து அப்போதைக்குச் சிறிது கஷ்ட நிவர்த்தியடைந்தவனாகத் தோற்றப்படினும் பிற்பாடு பெரு மூட்டை கட்டிக் கொண்டவனாகிறான். இதனால் கடன் வாங்க வழியிருந்தும் துன்பத்தை விலக்கு வாங்கும் வழியாக முடிகிறது.

பு. வே. சபாபதி முதலியார்.



# TALKS TO ELEMENTARY TEACHERS

## பிரதம உபாத்தியாயருக்குறிய சில வார்த்தைகள்

1. காலத்தை வீணாக்காதே. வீண்வம்பு பேசாதே. "காலமோ குறைவு. கற்கவேண்டியவையோ அபரிமிதம்" சோம்பேறிகள்தாம் காலமில்லை என்பார்கள். சிறு குழந்தைகளைப்போல் ஊக்கத்துடன் அறிவை விருத்தி செய்து கொண்டேயிரு.

2. கெட்ட எண்ணங்களையும் கெட்ட உணர்ச்சிகளையும் வேரோடுகளை; துர் அபிப்ராயங்களை மனத்தில் பதிந்து வைத்துக் கொள்ளாதே. பக்ஷபாதமில்லாமல் கபடமின்றி உனது கல்வியறிவை மாணவர்களுக்குக் கற்பி. என்ன கோபம் வந்தபோதிலும் கெட்ட பாஷையையும் கெட்ட நடத்தையையும் விருத்திசெய்யவே செய்யாதே. சிறுவர்களுக்குப் புத்திமதி சொல். திருந்தாவிடில் சாமதான பேத தண்ட முதலிய நான்கு உபாயங்களைக் கிரமமாய் உபயோகி.

3. நீ இல்லாத வேளையில் மாணவர்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதைக் கவனி. கோட் சொல்லுதலையும் குறைகூறுவதையும் நீக்கி நல் விஷயங்களைச் சொல்லக் கேள்.

4. நீர் பிள்ளைகளைக் கண்ணியமாய் நடத்தினால் அவர்களும் உம்மைக் கண்ணியப்படுத்துவார்கள். உங்கள் மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து உண்மையாய் உனது வேலையைச் செய்.

5. யோசனையின்றி கட்டளையிடாதே. கட்டளையிடுமுன் இரண்டுதரம் யோசி. கீழ்ப்படியத் தெரிந்தவர்களே உத்தரவளிக்கத் தகுந்தவர்கள்.

6. கற்பிக்கையில் தெரிந்த விஷயங்களிலிருந்து தெரியாத விஷயங்களைக் கற்பி. ஆராயுந்தன்மையை விருத்தி செய். பிள்ளைகள் கேள்விகேட்டால் கோபிக்காமல் அவைகளுக்குத் தகுந்த விடையளி. ஏனெனில் பிள்ளைகளின் அஞ்ஞானமாகிய இருளை நீக்க உன் அறிவைப் பிரயோகிக்க வேண்டும்.

7. பிள்ளைகளை யோக்கியர்களாகவும் நன்னடக்கை இராஜ விசுவாஸமுள்ளவர்களாக இருக்கும்படி தூண்டு.

8. மாணவர்களின் முன்னிலையில் வீண் வம்பு வளர்க்காதே. காலத்தை வீணாக்க வம்புதான் அஸ்திவாரக்கல். ஆனால் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை மற்றவர்களுடன் கலந்து சம்பாஷித்து தெரிந்துகொள்.

9. சிறு பிள்ளைகளைப் பரிகாசம் செய்யாதே. அப்படி செய்யின் அவர்களும் உம்மைப் பரிகாசம் செய்வார்கள்.

10. உபாத்தியாயர் முன்னிலையில் அமைதியாயிருப்பதுபோல் குருவில்லாத காலத்திலும் மாணவர்களும் நடந்துகொள்ளும்படி பிள்ளைகளுக்கு வற்புறுத்து.

11. பிள்ளைகள் விளையாட்டுக் கருவிகளென்று நினையாதே. இன்றைக்குச் சிறு பிள்ளைகளானவர்கள்; நாளைக்கு அவர்களே தகப்பன்மார்கள் —

12. பரிசுத்தமும் கண்ணியமும் அதிகாரமும் உள்ள உன் நிலைமையைப்பற்றி, ஆலோசித்து பிள்ளைகளின் நல்லெண்ணங்களை விருத்திசெய். கெட்ட எண்ணங்களை வேரோடு களை. சுத்த வீரர்களின் கதைகளையும் கற்புடைய ஸ்திரீகளின் கதைகளையும் இளமையிலேயே புகட்டு. நல்ல புத்தகங்களைப் படிக்கும்படி தூண்டு.

13. மாணவர்களுக்குப் பரிசு கொடுப்பதில் கவனிக்க வேண்டியவை யாதெனில் — மிட்டாய்களையும் பொம்மைகளையும் பரிசளிப்பதற்குப் பதிலாக பிள்ளைகளின் நோக்கத்திற்குத் தக்கவாறு நல்ல கதைப் புத்தகங்களை வாங்கி பரிசளி இது தான் மேலோர் கைகண்டமுறை.

14. உன் வேலையை நீயே செய். பிறரை நம்பாதே. ஆஜர் பட்டியை நீயே கூப்பிடு. மாணவர்களிடத்தில் அந்த வேலையை ஒப்பியாதே. தண்டிக்கவேண்டிய காலங்களில் தண்டிக்கத் தவறாதே. தவறினால் மாணவர்கள் சீர் கெட்டுப் போவார்கள்.

15. மனோ தத்துவ சாஸ்திரத்தின் நுட்பங்களை அறிந்து கொள். சரியான கால நிர்ணயப்பட்டி தயார்செய்து வைத்துக் கொள். அதன்படி நட. மூளைக்குச் சிறுகச் சிறுக அறிவை ஊட்டு.

16. பிறக்கும் போதே நல்ல ஆசிரியராக ஒருவனும் பிறப்பதில்லை. ஆயினும் பயிற்சி அனுபவம் ஊக்கம் முதலியவைகளைக் கொண்டு ஒருவன் நல்லாசிரியராகலாம்.



17. பூசனிக்காய் அளவு கற்றுக் கொண்டிருந்தால்தான் கடுகளவு போதிக்க முடியும். சந்தோஷமாய் கற்று உள்ளக் கிளர்ச்சியுடன் கற்பி.

18. காலத்தை அதிகமாய் மதி. காலதாமதமின்றி பள்ளிக்குச் செல். நீ சரியாய் இருந்தால்தான் மாணவர்களும் சரியாய் இருக்க முடியும். கிரம சிக்ஷைதான் படிப்பிற்கு அஸ்திவாரக் கல்.

19. ஒற்றுமையையும் அந்யோன்ய விஸ்வாஸத்தையும் விருத்தி செய்யும்படி பிள்ளைகளுக்குத் தூண்டு.

20. கற்பிக்கையில் முழு வகுப்பையும் கவனி. உற்சாகமாய் கற்பி. பிள்ளைகளும் உற்சாகமாய்க் கற்றுக் கொள்வார்கள். பிள்ளைகள் சில வேலைகளில் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள உபாத்தியாயரைக் கேள்விக் கேட்பார்கள். அப்பொழுது மாணாக்கர்களைக் கோபியாதே. கேள்விக்குத் தகுந்த விடையை அளி. உபாத்தியாயரும் மனிதராகையால் தவறுதலும் இயல்பானது.

21. சரியாய் கற்பிக்க வழி தெரியாத ஆசான்கள் மாணவர்களை அடிக்கடித் தண்டித்துக் கொண்டும் கோபித்துக் கொண்டும் பிழை கண்டு பிடித்துக்கொண்டும் இருப்பார்கள். பிள்ளைகளின் தாரதம்மிய மறிந்து கற்பி. உபாத்தியாயர் சரிவர கற்பித்தால் மாணவர்கள் அறிந்து கொள்வார்கள். படிப்பில் ஆசையும் ஊக்கமும் உண்டாகும்படியான வழிகளை உபாத்தியாயர்கள் கையாட வேண்டும்.

பிள்ளைகளை அவர்களின் கெட்ட நடத்தைக்காகவும் துச்சகவாஸத்திற்காகவும் கட்டாயம் தண்டிக்க வேண்டும். தவறினால் அவர்கள் பெரிய பிசகு செய்தவராவார்கள்.

22. நீ மாணவர்களுக்கு தோழனைப் போலும், தகப்பனைப் போலும் வழித்துணைபோலும் இருப்பதுதான் உன்னுடைய முக்கிய நோக்கமாய் இருக்க வேண்டும்.

23. உபாத்தியாயர் பிரசங்கியாமல் கற்பிக்க வேண்டும். விடைகளை பிள்ளைகளிட மிருந்து வருவிப்பது சாலவும் சிறப்பானது. அவர்கள் யோசிக்க அவகாசம் தரவேண்டும். மாணாக்கர்கள் அதிசீக்கிரத்தில் மிகவும் கெட்டிக்காரர்களாக

வேண்டும் என்கிற நோக்கத்துடன் அளவுக்கு மிஞ்சி கற்பிக்கலாகாது. அப்படிச் செய்யின் அது ஒரு குழந்தை சீக்கிரம் பெரிதாக வேண்டும் என்று ஒரு தாய் அதற்கு அதிக சாப்பாட்டை வாயில்போட்டு அடைத்து சாப்பிடும்படி கட்டாயப் படுத்தினால் குழந்தை சோற்றைச் சாப்பிடச் சக்தியின்றி அவஸ்தைப்பட்டு மரிப்பதை ஒக்கும். அதுபோல மாணாக்கர்களும் அவர்களின் மூளையும் எல்லா விஷயங்களைக் கிரகிக்க சக்தியின்றி அறிந்த விஷயங்களையும் மறந்து விடுவார்களென்பதில் என்ன ஐயம்?

24. உபாத்தியாயர் கையாடும் நன்முறை விசேஷமேயொழிய அதிக விஷயம் சீக்கிரத்தில் கற்பித்தார் என்பது அவருக்கு பெருந்தன்மையைத் தராது. சிறுகச் சிறுக நற்விஷயங்களை மாணாக்கர்களுக்கு கற்பின் அவை நீண்ட காலம் அவர்களின் இளம் மனத்தில் நிலைபெறும். உபாத்தியாயரும் சரிவரக் கற்பிக்க இயலும்.

25. உபாத்தியாயர் பதின்மடங்கு அதிக கவனமாய் இருக்கவேண்டும். இல்லாவிடில் மாணவர்கள் குருவை ஏமாற்றி விடுவார்கள். பிள்ளைகளிடத்தில் உபாத்தியாயரைத் தாங்கள் ஏமாற்றி விடலாம் என்னும் எண்ணம் உதிக்க கிஞ்சித்தேனும் சவகாசம் தரலாகாது. அவர் தன் காது, கண், வாய், உடம்பு, புத்தி முதலியவைகளைச் சதா காலம் சிதற விடாமல் அதிக விழிப்பினராய் இருக்க வேண்டும்.

26. உபாத்தியாயர் கற்பிப்பது ஒன்றாயும் பேசுவது ஒன்றாயும் நடப்பது ஒன்றாயும் இருக்கக் கூடாது.

உபாத்தியாயர் பரிசுத்தராயும், மிதமுள்ளவராயும், கம்பீரமுள்ளவராயும், தயை, சுறுசுறுப்பு, தம் தொழிலில் ஊக்கம், கற்கவேண்டிய விஷயங்களைக் கற்க ஆசை, கெட்ட வழக்கங்கள் முதலிய இல்லாதவராயும் இருக்கவேண்டும். பாடகாலங்களில் பாடத்தின் உள்நோக்கத்துடன் நின்றுகொண்டே கற்பிக்க வேண்டும். நல்ல குணம், நன்னடக்கை, பரிசுத்தம், கல்வியறிவு முதலியவைகளை ஆபரணங்களாக அணிவதே உபாத்தியாயருக்கு அழகு. ஸத்சங்கம், நற்புத்தகங்களை வாசித்தறிந்துகொள்ளல், நற்புத்தி புகட்டல், ஜீவகாருண்யம் முதலிய



விஷயங்களில் ஒவ்வொரு ஆசானும் அக்கரையா யிருக்க வேண்டும்.

27. உபாத்தியாயர் தங்கள் மாணாக்கர்களை சரீரப் பயிற்சியிலும் மனப் பயிற்சியிலும் ஆத்ம சுத்தியிலும் நன்னடத்தை முதலிய சத் விஷயங்களிலும் விருத்தி செய்யத் தூண்ட வேண்டும். உபாத்தியாயர் தெய்வபக்தி சம்பந்தமான பாடங்களையும் ~~தொஞ்சம்~~ கொஞ்சமாய் பிள்ளைகளுக்குத் தகுந்தபடி கற்பிக்க வேண்டும்.

28. உபாத்தியாயர் தங்கள் நடக்கையாலும், போதனையாலும் சிறுவர்களுக்கு நல்லொழுக்கத்தைக் காட்டவேண்டும். பிள்ளைகள் தங்கள் அரசனுக்கும், பெற்றோர் பெரியோர் முதலியவர்களுக்கும், ஆசான்களுக்கும் தங்கள் நாட்டுக்கும், நகரத்தாருக்கும், ராஜாங்கத்தாருக்கும் கடமைப் பட்டவாறு தாங்கள் செய்யவேண்டிய காரியங்களை அறியுமாறு அவர்களுக்கு அவசியம் போதிக்கவேண்டும். இக்கடமைகளை உபாத்தியாயரே உணர்ந்து அனுஷ்டிக்காவிடில் சிறுவர்களுக்குச் செய்த போதனை சிறிதும் பயன்படாது. மரியாதையும், கீழ்ப்படிதலும், நீதிபோதனையும், தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் பாடசாலையில் கற்பிக்க வேண்டிய விஷயங்களில் அதிக முதன்மையானது.

29. உமது வகுப்பில் பிரவேசிக்கையில் சுறுசுறுப்பாயும் சந்தோஷமாயும் ஊக்கமாயும் இரும். உமது தொழிலில் கவனமாயும் இரும். பிள்ளைகளும் அப்படியே யாவார்கள். சந்தோஷம், கவலை, சுறுசுறுப்பு, சோம்பல், கவனமின்மை தொத்து வியாதி-களைப்போல் தொத்துந் தன்மை வாய்ந்தவை. அவைகளை அகற்றவேண்டும். பரிசுத்தமான மனத்துடன் கல்வியாகிய ஆகாரத்தை பிள்ளைகளுக்கு ஊட்டுகிற காலத்தில் மற்ற வீட்டுத் தொல்லைகளை மறந்து சந்தோஷமாய் பாடங்களைக் கற்பிக்க வேண்டும். உமது தொழிலோ மிகவும் பொறுப்பானதும் கஷ்டமானதும் கண்ணியமானதுமாயினும் ஊதியம் குறைவுள்ளது. ஊதியங் குறைவு என்று நினைத்துக்கொண்டே உமது தொழிலில் அசிரத்தையா யிராதேயும். உனக்கு கடவுள் அருள் புரிவார். யாரிடத்திலும் அன்னியோன்ய விஸ்வாஸமாயிரும்.

30. சுருங்கச் சொல்லின் உபாத்தியாயர் சிறுவர்களுடைய புத்தியையும் குணங்களையும் சரியான வழியில் விருத்தியாக்குபவர். "தொட்டிற்பழக்கம் சுடுகாட்டு மட்டும்" என்பதற்கிணங்க சிறுவர்கள் பாலியத்தில் அடைந்த கல்வியறிவு, நற்பழக்கம் முதுமையில் பிரயோஜனமாயிருக்கும். படிப்பின் நோக்கம் யாதெனில், புருஷர்களையும் ஸ்திரீகளையும் நற்குண நற்செய்கைகளில் சிறப்புள்ளவர்களாக்குதல் என்று கூறலாம். சிறுவர்களுடைய திறமை பல வழிகளில் பெருகும்படியாய் உபாத்தியாயர் கற்பிக்கவேண்டும். உபாத்தியாயர் கற்பித்தவாறு நடக்கவேண்டும்.

S. BHASHYAM AIYENGAR,
*Teacher, Madras Corporation*
*Model School, Chetpat.*



## BAT

## வௌவால்

மிருக ஜாதியில் வியக்கத்தக்க தேக அமைப்போடுகூடியவைகளில் வௌவாலும் ஒன்றாகும். நாற்கால் பிராணியாக ஓடியாடித் திரிந்து ஜீவிக்கு மிருகமுமன்று; மீனைப்போல் தேக மாறுபாட்டுடன் நீரிற் பிறந்து ஜீவிக்கும் திமிங்கிலத்தின் தன்மையுடையதுமன்று. தரையையும் துறந்து நீரையும் விட்டு ஆகாரத்தையே உறைவிடமாகத் தேடினாற்போற் பறந்து ஜீவிக்கும் விந்தையான மிருகமாயிருப்பது வௌவால்.

பக்ஷிகளுக்குப் பறக்க இறகுகள் உண்டு. வௌவாலுக்கு இறக்கைகள் இருக்கின்றன. ஆனால் இவைகளுக்கு இறகு



ளில்லை. கைகளுக்கும் கால்களுக்கும் இடையே பரவி விரிந்துள்ள மெல்லிய தோலே இறக்கைகளாக உபயோகப்படுகின்றன. பறக்கும் தொழிலை செவ்வனே நடத்தும் பொருட்டு இயற்கையிலேயே உடம்பும் கைகால்களும் அநேகவிதமான மாறுபாடுகளை அடைந்திருக்கின்றன.

உடம்பு சாதாரணமாய் ஒரு சுண்டெலியின் தேகத்திற்கு மேல் இல்லை. கைகளின் எலும்புகள் மெலிந்து நீண்டுள்ளன; கட்டைவிரல் மாத்திரம் வளைந்த நகத்துடன் காணும்.

கால்கள் குட்டையாய் ஐந்து விரல்களைக் கொண்டிருக்கின்றன. இந்த ஐந்துக்கும் வளைந்த நகங்கள் ஐந்து உண்டு. இந்த நகங்களின் உதவியால் முகட்டிலோ, மரத்தின் கிளைகளிலோ தொத்தித் தொங்குகிறது. தேகத்தையும் முகத்தையும் மூடிக்கொண்டிருக்கும் தோலில் மெல்லிய ரோமங்களுண்டு. வௌவாலுக்கு இரவில்தான் நன்றாய்க் கண் தெரியும்.

வாசனையறிய நாசித்துவாரங்களும் எலிக்கிருப்பதுபோலக் காதுகளும் உண்டு. இரவில் இரை தேடப் புறப்படுகையில் வௌவாலில் பெரிய இனமாகிய பழந்தின்னும் வௌவால் பழுத்திருக்கும் மரங்களைத் தேடி வெகு தூரஞ் சென்று பிறகு திரும்பி இருப்பிடம் வந்து சேரும். வௌவால் கூட்டங் கூட்டமாகத்தான் வசிக்கும். இவைகளின் பற்கள் பிடிக்கவும் கடிக்கவும் உதவுமே தவிர அரைக்க உதவா. வௌவாலில் சிற்றினங்கள் பெரும்பாலும் பூச்சிகளை உண்டு ஜீவிக்கின்றன. அஸ்தமித்தவுடன் வெகு உல்லாசமாய் வீட்டுப் பக்கங்களில் பறந்து திரியும். அப்போது வௌவால் விளையாடுகிறதென நினைப்பது நமது பார்வைக் குறைவு எனக் கொள்ளல் வேண்டும். அக்காலத்தில் பறந்து திரியும் கொசுக்களை வெகு ஆத்திரத்துடன் பிடித்துத் தின்ன முயல்கிறது. பொழுது விடிய அவைகள் தங்கள் உறைவிடந் தேடி உறங்க ஆரம்பித்துவிடும். மத்தியான வேளைகளில் நாம் பார்க்கும் காலமெல்லாம் தலை கீழாகத் தொங்கும். தவசிகளைப்போல் தொங்குவதைப் பார்த்து பலர் இவ்வினம் வாயினாலேயே உண்டு வாயினாலேயே மலத்தையும் கழிக்கும் விசித்திரம் பொருந்திய பிராணியென்று சொல்ல நீங்களும் கேட்டிருக்கலாம். அது-

வும் பார்வைக் குறைவினால் ஏற்பட்ட தப்பபிப்பிராயமே; மற்ற பிராணிகளுக்கிருப்பதுபோல் வௌவாலுக்கும் பின்புறத்தில் ஆசனமிருக்கிறது. அதன் மூலமாக மலத்தைக் கழிக்கிறது. பெண் வௌவால் குறைந்தது இரண்டு குட்டிபோடும், குட்டிகளுக்குப் பால் கொடுக்கும். தாய்க்கு குட்டிகளின்மேல் பிரியம் அதிகம். இரைக்காக வெகுதூரஞ் சென்று பறக்கும் காலத்திலும் குரங்குக் குட்டியைப்போல் வௌவால் குட்டிகள் தாயின் மார்பிலிருக்கும் மெல்லிய ரோமத்தை இறுகப் பிடித்துத் தொத்திக்கொண்டு செல்லும்.

K. விஜயகிரி வேலாயுத சாமி மணியக்காரர்,
போர்டு ஹிந்து எலிமெண்ட்டரி பாடசாலை,
ஆயக்குடி.

# LESSONS FROM SIMPLE NATURAL PHENOMENA

## மின்னலும் இடியும்

I. பீடிகை — (a) ஒரு மேகத்தினின்றும் சடுதியிற்றோன்றி மற்றொரு மேகத்தின் மேலாவது பூமியின்மேலாவது பாய்ந்து உடனே மறைந்து போகும் ஒளியே மின்னல் எனப்படும். (b) மின்சாரம் ஒரு மேகத்திலிருந்து மற்றொரு மேகத்திற்காயினும் பூமிக்காயினும் பாயும்பொழுது உண்டாகும் சப்தமே இடி எனப்படும்.

II. **உண்டாகும் காலம்**—(a) வெய்யில் காயாமலிருப்பதும் அதிக தாபமாயிருக்கிறதும், இருக்கம் மிகவும் அதிகமாயிருக்கிறதும், காற்று அசையாமலிருப்பதும், சிறு இலையும் ஆடாமலிருப்பதும், ஆகாயம் கருத்திருப்பதுமான சமயத்தில் மின்னல் உண்டாகும். (b) மின்னலுண்டான சிறிது நேரத்திற்கெல்லாம் இடி உண்டாகும்.

III. **உண்டாவது** — (a) எல்லாப் பொருள்களிலுமிருக்கிறதும், ஒருவருடைய அறிவுக்கும் எட்டாததுவும், ஒரு இயந்திரத்திற்கும் புலப்படாததுவுமான திரவத்தை யொத்த ஒரு



சத்துப்பொருள் அல்லது மின்சாரம் பூமியின்மீதுள்ள ஜலம் ஆவியாக மாறி ஆகாயத்தில் எழும்போது அதிகமாகி, சில பொருள்களில் குறைவாயும் சில பொருள்களில் மிகுதியாயும் பலவாறு சேர்ந்திருக்கும். அப்படி மிகுதியாய்ச் சேர்ந்திருக்கும் ஒரு பொருளும், குறைந்திருக்கும் மற்றொரு பொருளும் ஒன்றுக்கொன்று சமீபிக்கும் போதாவது, அவ்விரண்டும் மின்சாரத்தை வாங்கத்தக்க சில பொருள்களால் ஒன்றாய்ச் சேர்க்கப்படும்போதாவது அதிகமாயுள்ள பொருளினின்றும் குறைந்திருக்கும் பொருளுக்கு உஷ்ணத்தோடு நெருப்புத் தோற்றமாய் பளிச்சென்று மின்சாரம் பாய்கிறது. இப்படியே மின்சாரம் மிகுதியாயிருக்கும் மேகத்தினின்றும் குறைவாகயிருக்கும் மேகத்திற்காயினும் குறைவாகயிருக்கும் பூமிக்காயினும் பாய மின்னலுண்டாகிறது. (b) மேகத்தினின்றும் மேகத்திற்கு மின்னல் விரைவுடன் பாய்கிற வெற்றொலியும், வேறு மேகத்திலாயினும் அல்லது பூமியிலாயினும் தாக்கி உண்டாகிற எதிரொலியும் கூடுகிறதினால் இடி உண்டாகிறது.

IV. விழ அறிகுறி — குறுக்கும் நெடுக்கும் கோணலாய் மின்னல் தோன்றுமாயின் இடி விழும். மின்னல் இடைவிட்டு இடி இடிக்காமல் உடனே முழங்குமாயின் மின்னல் நிறைந்த மேகங்கள் அடுத்திருக்கின்றனவென்றும், மின்னல் விழும் என்பதற்கும் அடையாளம்.

V. விழுமிடங்கள் — (1) சாதாரணமாய் உயரமாயிருக்கும் கோபுரம், மரம் முதலிய வஸ்துக்களின் மீதும்; (2) கோபுரம், உயர்ந்த வீடு, மரம் முதலிய உயரமான பொருள்கள் எதுவு[illegible]த மைதானங்களிலும் விழும்.

VI. நன்மையும் தீமையும் — (a) மின்னி இடியிடிக்குமானால் மழை பெய்யும், அதனால் வாயுமண்டலம் குளிர்ந்து சுத்தமாகும். (b) வீடு, மரம், கோபுரம் முதலிய எப்பொருளின்மீது விழுகிறதோ அப்பொருளை அழித்துவிடும்.

VII. கெடுதியைத் தடுக்க உபாயம் — வீடு, கோபுரம் முதலிய உன்னதக் கட்டடங்களில் மின்சாரத்தைச் சுலபமாய் ஆகர்ஷிக்கும் சக்தியையுடைய ஏதேனும் ஓர் உலோகக் கம்பியை அல்லது மின்கம்பியை கட்டடத்தில் சேர்ந்திருக்கும்படி

அடிவரை கொண்டுவந்து ஜலமுள்ள ஒரு கிணற்றில் விட்டுவைத்தால், கம்பி மேகம் வரும்போது அதனின்றும் மின்சாரத்தை ஆகர்ஷித்து கிணற்றின் ஜலத்திற்குள் கொண்டுவிட்டுக் காக்கும். மின்னி யிடி யிடித்து மழை எவ்வளவு பெய்தாலும் அதை சஹித்துச் செல்லும் மனிதர் வீதியின் மத்தியாகச் செல்லுவதாலும், வீட்டில் தங்குகிறவர்கள் கூடியவரையில் மத்தியில் தங்குவதாலும், மரத்தண்டை ஒதுங்காமலிருப்பதாலும் தடுக்கலாம்.

**VIII.** தன்மை — எதையும் எரிக்கக் கூடிய உஷ்ணமுள்ளதும், வெகு தூரம் பிரகாசிக்கத் தக்கதும், உலோகங்களால் இழுக்கத்தக்கது மானது.

T. A. EGYAMIAR,
*Headmaster, Board School,*
*and Secretary, Teachers' Association, Kalugumalai.*

165408

JL

Tm211,N03